# பேசும் பொம்மைகள்



சுஜாதா

இந்தக் கதையின் ஆதாரக் கருத்தான "டவுன் லோடிங்" (Downloading) என்பதின் சாத்தியத்தைப் பற்றிப் பலர் என்னிடம் சந்தேகம் கேட்டார்கள். ஒரு மனித மனத்தின் அத்தனை எண்ணங்களையும் ஓர் இயந்திரத்துக்கு மாற்றிப் புகட்ட முடியுமா என்று பலர் வியந்து இது சாத்தியமே இல்லை என்றார்கள். இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையில் இது சாத்தியமில்லைதான். ஆனால் இன்று அமெரிக்கா போன்ற முன்னேற்ற நாடுகளின் முற்போக்கு ஆராய்ச்சி நிலையங்களில் 'செயற்கை அறிவு' என்ற இயலின் ஒரு பிரிவாக இத்தகைய மூளைச் செய்தி மாற்றும் ஆராய்ச்சிகள் செய்து சிறிதளவு வெற்றி கண்டும் இருக்கிறார்கள். இந்த வெற்றியின் ஒரு கற்பனை விரிவாக்கம்தான் 'பேசும் பொம்மைகள்.'



உயிர்மை
பதிப்பகம்

Rs.125

ISBN 81-88641-

# பேசும் பொம்மைகள்

சுஜாதா

உயிர்மை
பதிப்பகம்

விலை 125 ரூபாய்

உயிர்மை பதிப்பக வெளியீடு : 38

பேசும் பொம்மைகள் ❖ நாவல் ❖ ஆசிரியர் : சுஜாதா ❖ © சுஜாதா ❖ முதல் பதிப்பு : 1991, இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2004 ❖ வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை 600 018, தொலைபேசி : 91-44-24993448, மின்னஞ்சல் : uyirmmai@yahoo.co.in ❖ வடிவமைப்பு : இமேஜ் & இம்ப்ரஷன் ❖ அச்சாக்கம் : பாவனா பிரிண்டர்ஸ், சென்னை – 600 079.

**Pesum Pommaigal** ❖ Novel ❖ Author : Sujatha ❖ © Sujatha ❖ Tamil ❖ First Edition: 1991, Second Edition : Dec. 2004 ❖ Demy 1x8 ❖ Paper : 18.6 kg Maplitho ❖ Pages : 232 ❖ Published by Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai 600 018, India. Tele/Fax : 91-44-24993448, e-mail : uyirmmai@yahoo.co.in ❖ Designed by Image & Impression ❖ Printed at Bhawana Printers, Chennai 600 005 ❖ Price Rs. 125

ISBN : 81-88641-37-5

## முன்னுரை

குங்குமம் வார இதழில் தொடர்ந்து வந்தபோது இந்தக் கதையின் ஆதாரக்கருத்தான "டவுன் லோடிங்" (Down loading) என்பதின் சாத்தியத்தைப் பற்றிப் பலர் என்னிடம் சந்தேகம் கேட்டார்கள். ஒரு மனித மனத்தின் அத்தனை எண்ணங் களையும் ஓர் இயந்திரத்துக்கு மாற்றிப் புகட்ட முடியுமா என்று பலர் வியந்து இது சாத்தியமே இல்லை என்றார்கள்.

இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையில் இது சாத்தியமில்லைதான். ஆனால் இன்று அமெரிக்கா போன்ற முன்னேற்ற நாடுகளின் முற்போக்கு ஆராய்ச்சி நிலையங் களில் 'செயற்கை அறிவு' என்ற இயலின் ஒரு பிரிவாக இத்தகைய மூளைச் செய்தி மாற்றும் ஆராய்ச்சிகள் செய்து சிறிதளவு வெற்றி கண்டும் இருக்கிறார்கள். இந்த வெற்றியின் ஒரு கற்பனை விரிவாக்கம்தான் 'பேசும் பொம்மைகள்.'

1991க்குப் பிறகு நீண்ட காலம் மறுபதிப்புக்காகக் காத்திருந்த இந்த நாவலை ஏழிரண்டாண்டுக்காலம் கழித்துப் படித்தாலும் இதன் சுவாரஸ்யம் குறையாமல் இருப்பதன் காரணம் இதில் கூறப்பட்டுள்ள மருத்துவ அறிவியல் சாத்தியங்கள் இன்னும் நடைமுறைக்கு வராததே. சைன்ஸ்ஃபிக்ஷன் என்னும் அறிவியல் புனைகதை எழுதும்போது இந்த சௌகரியம் முக்கியமானது. விருப்பப்படி எதிர்காலத்தைத் தேர்ந்தெடுக்க லாம். ஒரேயொரு தேவை அதன் ஆரம்பங்கள் நிகழ் காலத்தில் இருந்தாக வேண்டும்.

இப்புத்தகத்தை சிறப்பாக வெளியிடும் உயிர்மை பதிப்பகத்தாருக்கு நன்றி.

**சுஜாதா**

சென்னை
டிசம்பர் 2004

# 1

ஆட்டோவுக்குக் கொடுத்துவிட்டுக் கலைந்த கூந்தலைச் சரி செய்துகொண்டு வளாகத்துக்குள் நுழைந்தாள். கான்க்ரீட் வட்டத்தில் கொடிக் கம்பத்தில் காற்றில்லாமல் கொடி துவண்டிருக்க, புல்வெளி சுத்தமாகக் கொறிக்கப்பட்டு நடுவே பதிந்த கூழாங்கற்கள் ஜேடிஎச். என்று ஆங்கிலத்தில் பகர்ந்தன. கட்டிடம், கவிழ்ந்த 'ப' வடிவத்தில், அவளைக் கட்டிக்கொள்ளக் கூப்பிடுவதுபோல தோன்றியது. அவள் உள்ளே நுழைந்ததும் மூச்சுத் திணற அணைத்துக்கொள்ளப் போகிறது என்ற பதற்றம் ஒரு கணம் அவள் மனத்தில் மின் வெட்டியது.

கட்டிடத்தின் இடக்கையருகில் கார்கள் நின்றுகொண்டிருந்தன. குறுக்கே நடந்தவரை அணுகி, இந்த அலுவலகம் எங்கே இருக்கிறது என்று அழைப்புக் கடிதத்தைக் காட்டினாள்.

அந்த ஆசாமி பையிலிருந்து கண்ணாடி எடுத்து மாட்டிக் கொண்டு கடிதத்தைப் பார்த்து "ஸி.எம்.ஆர்... ஓ! இப்படியே போறது. லிஃப்ட் தெரியறது. அதில் மூணாமத்து மாடிக்குப் போய்க் கேக்கறது."

"தாங்க்ஸ்" என்றாள்.

"வேலைக்கு இண்டர்வ்யுவா?" 'ட' உடைந்துவிடும்போல உச்சரித்தார் மலையாளத்துக்காரர்.

"ஆமாம்."

"பெஸ்ட் ஆஃப் லக்!"

இதற்குள் சுனில் வருவதைப் பார்த்து முகமலர்ந்தாள். "ஸாரி, ஸாரி, லேட்டாயிடுச்சு! தாங்க்ஸ் ஸார்! ஐ'ல் டேக் கேர் ஆஃப் ஹர்" என்று அவளை லேசாக அணைத்துக்கொண்டு லிஃப்ட் பக்கம் அழைத்துச் சென்றான். "எப்டி இருக்கே!"

"பதற்றம்!"

"ரிலாக்ஸ்! வேலை கிடைக்காட்டி என்ன? வேற வேலை! இல்லை வேலையே வேண்டாம்!"

"ஏன்?"

"இப்படி நீ அழகா இருந்தாலே மதி!"

அவனை ஆயாசத்துடன் பார்த்து "இந்தப் போக்கே சரியில்லை. நான் என்ன கடை பொம்மையா?"

"பின்ன?"

தன் கைப்பையால் அவனை மண்டையில் நெத்தினாள். லிஃப்ட்டில் கிடைத்த தனிமையில் அவளை இரண்டாம் மாடிக்குள் முத்தமிட முயன்று தோற்றான். கதவு திறந்ததும் "இப்படியே நேராப் போ. பச்சை போர்டு தெரியறது பாரு. அதில நுழைஞ்சா கோம்ஸ்னு பயங்கரமா ஓர் அம்மா உக்காந்திருப்பாங்க. அவங்ககிட்ட கடிதத்தைக் காட்டு."

அவள் சுற்றிலும் பார்த்து "ஆஸ்பத்திரி மாதிரி இருக்கு?"

"ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஆராய்ச்சி கேந்திரம்."

"ஸி.எம்.ஆர்னா?"

"ஸெண்டர் ஃபர் மைண்ட் ரிஸர்ச்! நெட்டுரு பண்ணிடு!"

கதவு சார்த்துமுன் புன்னகையை உடன் அனுப்பினான் சுனில்.

உள்ளே பதினைந்து பெண்கள் வீற்றிருந்தவர்கள் ஒரே சமயத்தில் இவளை விரோதமாகப் பார்த்தனர். பதினைந்து தினுசில் பெண்கள். நீளக்கூந்தல், வெட்டுக் கூந்தல், ஸாரி, ஸல்வார், பெரிய பொட்டு, சின்னப் பொட்டு... பொதுவாக அனைவர்க்கும் மேலுதட்டில் வியர்வை... ஒரே ஒரு புராதன மின்விசிறி அந்த கோம்ஸ் என்கிற அ இந்தியப் பெண்மணிக்கு மட்டும் விசுவாசமாக இருந்தது. அவளிடம் கடிதத்தைக் கொடுக்க, அவள் அதை அடியோ அடியில் சொருகிவிட்டு "உட்கார் கூப்பிடுவார்கள்."

எதிர்க்கதவு திறந்து ஒரு பெண் வெளிவர, ஒரு பெண் உள்ளே சென்றாள். அனைவரும் பெண்கள். விளம்பரத்தில் அப்படிக் குறிப்பிட்டதாக நினைவில்லை. காலி இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

'அக்கா இங்கேயா வேலை பார்த்தாள்?'

அக்கா!

தடாலடி பண்ணிவிட்டுப் போய்விட்டாள் அந்த தினம் தெளிவாக ஞாபகம் வந்தது.

"மாயா நான் மேனகா பேசறேன்."

"என்னக்கா! எங்க நீ?"

"மாயா எனக்குக் கல்யாணம் ஆய்டுத்து."

"எங்கருந்து பேசறே? யாரு...?"



"பம்பாய்லருந்து பேசறேன். அமெரிக்கா போயிண்டிருக்கேன். மாயா, நான் விவரமா எல்லாம் கடுதாசில எழுதறேன். நீ அப்பா அம்மாவைத் தேடச் சொல்லாதே!"

"யாரைக்கா கல்யாணம் பண்ணிண்டே?"

"எல்லாம் விவரமா எழுதறேன். நீ எப்படியாவது அப்பாவைக் கவலைப்பட வேண்டாம்னு சொல்லிடு."

"அக்கா நீயே பேசிடு அக்கா. போனைக் கொடுக்கறேன்!"

"இல்லை, ப்ளேன் புறப்படப்போறது..." பின்னணியில் ஜெட் விசில் கேட்டது. "மாயா குட்பை மாயா! Love you Maya!"

கதவைத் திறந்ததும் திடுக்கிட்டாள். உள்ளே பெரிய மேசைக்கு அந்தப் பக்கத்தில் ஆறு பெரிய மனிதர்கள் அமர்ந்திருந்தார்கள். அனைவரும் அவளையே பார்த்துக்கொண்டிருக்க, மேசை மேல் ஒரு ப்ளாஸ்டிக் தலை வைத்திருந்தது. மெல்ல அவர்களை அணுகினாள்.

"உக்காருங்க. உங்க பேரு?" என்று கேட்டது ஒரு திசை.

"மாயா."

"ஜஸ்ட் மாயா? கூட ஏதும் பேர் இல்லையா?"

"மாயா ரங்கநாத். எங்கப்பா பேர் ரங்கநாத்."

மாயா இயந்திரத்தனமாகத் தன் சான்றிதழ்களையும், பட்டங்களையும் பையிலிருந்து விடுவித்து நடுங்கும் கரங்களால் அவர்களிடம் தந்தாள்.

"அதுக்கெல்லாம் இப்ப தேவையில்லை. ரிலாக்ஸ் மாயா!" குரல் வந்த திசையில் அவருக்கு நாற்பத்தைந்து வயது இருக்கும். பற்ற வைக்காத பைப், வாராத கிராப், திருத்தாத மீசை, பொருந்தாத குரல். "எங்க கேந்திரத்தில் என்ன ஆராய்ச்சி செய்யறோம் தெரியுமா?"

மாயா தயக்கத்துடன் "தெரியாது" என்றாள்.

"அது எங்களுக்கே தெரியாதே!" என்று அட்டகாசமாகச் சிரித்தார், கேள்வி கேட்டவருக்கு அருகில் இருந்தவர்.

"கமான் சாரங்கபாணி! நோ ஜோக்ஸ் ப்ளீஸ். மிஸ். மாயா... ஸி.எம்.ஆர்னா என்ன தெரியுமா?"

"ஸென்டர் ஃபர் மைண்ட் ரிஸர்ச்."

"வெரிகுட், எப்படி தெரிஞ்சுது?"

"உள்ள வரப்போ வெளியில போர்டு மாட்டியிருந்தது" என்றார் சாரங்கபாணி.

"அதான் ஸார் உண்மை. மன்னிச்சுருங்க. எனக்கு இந்த இடத்தைப் பற்றி ஏதும் தெரியாது."

"வர்ட் ப்ராஸஸிங் தெரியுமா?"

"தெரியாது."

"டைப்பிங்?" என்று விரலால் அந்தரத்தில் டைப் அடித்தார். அவர்தான் சாரங்கபாணி என்று அழைக்கப்பட்டவர்.

"தெரியும் ஸார்."

"அது போதும்!"

"மைண்ட் ரிஸர்ச்னா என்ன?"

"மனசுக்குள்ள ஆராய்ச்சி பண்றது" என்று சாரங்கபாணி சொல்லி கார் கிளம்புவதுபோல் சிரித்தார்.

"சாரு! ப்ளீஸ்!"

"மனசைப்பத்தி ரிஸர்ச் பண்றதுன்னு" என்றாள் மாயா.

"குட்! மனசு எங்க இருக்கு?"

அவள் மலங்க மலங்கப் பார்த்துவிட்டு "மூளைக்குள்ளன்னு நினைக்கிறேன்."

அவர் தன் எதிரே இருந்த ப்ளாஸ்டிக் தலையைப் பிளந்து திறந்தார். உள்ளே ரோஜா நிறத்தில் மடிப்பாக இருந்ததைக் காட்டி "இது என்ன?"

"இதான் வந்து மூளையோட..."

"மூளையுடைய..."

"மாடல் மாதிரி தெரியுது!"

"உன்னை நான் எங்கயோ பார்த்திருக்கேன். இதுக்கு முன்னாடி இந்த இண்டர்வ்யுவுக்கு வந்திருந்தியா மாயா?"

"இல்லை ஸார்."

"பின்ன நான் உன்னை எங்கே பார்த்திருக்கேன்?"

மாயா சற்றுத் தயங்கி, "என் சிஸ்டர் மேனகா இங்க வேலை பார்த்துக்கிட்டு இருந்தா ஸார்."

"அப்படிச் சொல்லு! மேனகா சிஸ்டரா நீ? அவ இப்ப எங்கே இருக்கா?"

"அமெரிக்காவில ஸார்."

"சட்டுன்னு சொல்லிக்காம கொள்ளாம விட்டுட்டுப் போயிட்டாளே. அது நியாயமான்னு அவளைக் கடுதாசி எழுதுனா கேளு! கல்யாணம் ஆயிருச்சா உன் சிஸ்டருக்கு?"

"ஆச்சு ஸார். ப்ரதர் இன்லாதான் ஸ்டேட்ஸ்ல வேலையா இருக்கார்."

"உனக்கு?"

"இல்லை ஸார். ஆகப்போறது."

"ஹூ இஸ் தி லக்கி மேன்?"



"இந்த ஆபீஸ்லதான் ஸார்."

"அட கிட்ட கிட்ட வரியே, யாரு?"

"சுனில்னு ரிஸர்ச் அசிஸ்டண்டா..."

"அட சுனிலா..! அடி சக்கை! பின்ன என்ன, நம்ம குடும்பத்தைச் சேர்ந்தவ நீ.. உனக்கு வேலையில்லாமலா? எப்ப ஜாய்ன் பண்ணுவே?"

"இப்பவே ஸார்!"

சாரங்கபாணி குறுக்கிட்டு, "அப்படி ஒண்ணும் ரிஷிகர்ப்பம் இல்லை! நீ ஒண்ணாம் தேதி வந்தா போதும். என்ன நிரு?"

நிரு என்று அழைக்கப்பட்டவர் "ஏன், நாளைக்கு ஜாய்ன் பண்ணா கம்ப்யூட்டர் வேண்டாம்னு சொல்லுமா!"

"ஆபீஸ்ல சில விதிமுறைகள் இருக்கு இல்லை. மாயா, நீ ஒண்ணாம் தேதி வந்தாப் போதும்!"

"தாங்க்ஸ் ஸார்!"

"சர்ட்டிஃபிக்கேட் எல்லாம் அட்மினிஸ்ட்ரேஷன் செக்ஷன்ல காமி."

"சரி ஸார்!"

அவள் விலகிச் செல்ல, டாக்டர் நரேந்திரநாத் "மேனகாவுடைய சிஸ்டரா! வி ஆர் லக்கி. மேனகா ஒரு பெரிய அஸ்ஸட்!"

"திடீர்னு விட்டுப்போனதுதான்... சரியில்லை. அது மாதிரி இந்தப் பொண்ணும்..."

"இதுதான் உள்ளே கல்யாணம் செய்துக்கப் போறதே, யாருப்பா சுனில்?"

"மாலிக்யுலர் லாப்ல ஒரு பையன். கொஞ்சம் மீடியாக்கர்தான். கொடுத்த வேலையைச் செய்வான்!"

"இந்தப் பொண்ணும் கொஞ்சம் டல்லு மாதிரிதான் தோணுது."

"மேனகா ரொம்ப கெட்டிக்காரப் பொண்ணு. அதுல கால்வாசி இருந்தாப் போதும்!"

மாயா வெளியே வந்தபோது சுனில் காத்திருந்தான்! "என்ன ஆச்சு!"

"சுனில் கை குடு. ஐ காட் இட்!"

"க்ரேட்."

"எங்க அக்கா தயவால! அவளுக்கு ஒரு கடுதாசி எழுதணும். மேனகா சிஸ்டர்னா உடனே கொடுக்கலாம்னு அத்தனை மரியாதை அவளுக்கு. சுனில்! எனக்குத் தேன் குடிச்சா மாதிரி இருக்கு. வா போய் ஐஸ் க்ரீம் சாப்பிடலாம்."

சின்னாரி என்று ஏதோ பேர் படைத்த ஐஸ் க்ரீம் பார்லரில் எதிர் எதிர் உட்கார்ந்துகொண்டு ஒரே கோப்பையிலிருந்து விழுது

விழுதாக ஐஸ் க்ரீம் எடுத்துச் சாப்பிட்டார்கள். வெயில் தார்ச் சாலையில் கண்ணாடி நடனமிட பஸ், கார், பஸ், ஆட்டோ, பஸ், லாரி, பஸ், என்று இரைச்சல் பொட்டலங்கள் அவர்களைக் கடந்து செல்ல, உச்ச குரலில் 'ஹவா ஹவா' என்று லவுட்ஸ்பீக்கர் இரைய, பொருட்படுத்தாமல் சுனிலும் மாயாவும் ஓ.ஓ பார்த்துக்கொண்டு அவ்வப்போது காரணமில்லாமல் சிரித்துக்கொண்டு இருந்தார்கள். பரவசத்தின் எல்லையில் அவர்கள் இப்போது இருக்கக் காரணம் சொல்லத் தேவையில்லை. இரண்டுபேரும் விரும்பி இருவரும் ஒத்துப்போய், ஒரே ஆபீசில் வேலை கிடைத்து... இதற்கு மேல் என்ன வேண்டும்?

"சொர்க்கம்னா இதான்! டெலிபோன் ஏதாவது இருந்தா இப்பவே கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணி அனிமூன் காட்டேஜ"க்கு ரிஸர்வ் பண்ணி... ஏஸியை ஃபுல்லா போட்டுண்டு போர்த்திண்டு..."

"நாட் ஸோ ஃபாஸ்ட்!"

"இனிமே என்ன கல்யாணம்தானே! ரெண்டு பேருக்கும் வயசாயிண்டு வருது... உனக்கு என்ன வயசு மாயா! இருபத்து..?"

அவர்கள் வீற்றிருக்கையில் ஒருவன் வந்து "ஸார் இடி. உங்களை கூப்ட்டனுப்ச்சார்ங்க."

சுனில் பில் கொடுத்துவிட்டு "நீ வீட்டுக்குப் போ மாயா. நான் சாயங்காலம் உங்கம்மாவை வந்து சந்திக்கிறேன்" என்றான்.

மாயா அங்கிருந்து புறப்பட்டு, அந்த அலுவலகத்தின் அட்மினிஸ்ட்ரேஷன் செக்ஷனுக்கு வந்து ஆர். நாராயணன் என்பவரைச் சந்தித்தாள். அவர் பல விண்ணப்பங்களில் கையெழுத்து வாங்கி ஒரு மெடிக்கல் ரிப்போர்ட் பாரம் கொடுத்து "இதை மூணாவது மாடியில் மெடிக்கல் செக்ஷன்னு இருக்கு, அங்க போய் கொடுத்துட்டா ஒரு செக்அப் பண்ணிடுவா, இப்பவே போனா இருப்பா!"

மூன்றாவது மாடியில் செருப்பைக் கழற்றிவிட்டு கண்ணாடிக் கதவுகளைக் கடந்து, ஏஸி அறைக்குள் நுழைந்தபோது வெள்ளை ஓவர் ஆல் அணிந்தவர் "அந்த ரூம்ல மூணாம் நம்பர் பாட்டில்ல யூரின் போங்கம்மா. உங்க ப்ளட் க்ரூப் என்னன்னு தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாது ஸார்."

"அப்ப ப்ளட் ஸாம்பிள் எடுக்க வேண்டி வரும்" என்று அவள் கையை வாங்கி ஒரு ப்ளாஸ்டிக் சிரிஞ்சைப் புதுசாகத் திறந்து "விரலை மூடிக்கங்கம்மா. முஷ்டி பண்ணுங்கம்மா!"

ரத்தக் குழாயை நிரடித் தேடி அதற்குள் ஊசி செலுத்தும் போது அவள் கண்களை மூடிக்கொண்டாள். திறந்தபோது கரும் சிவப்பாக இரண்டு இஞ்ச் ரத்தம் உறிஞ்சியிருந்தார். அதை நான்கு தனித்தனி பாட்டில்களில் பீச்சி "கையைச் சித்தநாழி மடக்கிக்கங்கம்மா!



இப்படியே போனிங்கன்னா லேப்னு போட்டிருக்கும். அங்க போனா ஒரு எக்ஸ்ரே எடுத்துருவாங்க..."

"இத்தனை டெஸ்ட்டா?"

"ஆமாம்மா, எங்க லாப்ல சேர்றதுக்கு முன்னாடி யாராயிருந்தாலும் இந்த டெஸ்ட் எடுத்துக்கணும். டைரக்டர் உட்பட!"

"டைரக்டர் பேர் என்ன?"

"நரேந்திரநாத். தெரியாது?"

"இன்னிக்குத்தான் ஸார் இன்டர்வ்யு."

"அப்படியா வேலை கிடைச்சுதா?"

"குடுத்துட்டாங்க."

"யு'ர் லக்கி."

நகைகளைக் கழற்றிக் கைகளைப் பின் இடுப்பில் கட்டிக்கொள்ளச் சொல்லிவிட்டு எக்ஸ்ரே எடுத்தார்கள். ஒரு பெண்மணி அவளை மார்புச் சட்டையை நீக்கி மார்பகங்களைப் பிடித்துப் பார்த்தபோது சிரிப்பு வந்தது. "கல்யாணம் ஆய்டுச்சாம்மா?"

"இல்லைங்க."

"எனி ப்ரெக்னன்ஸி?"

"ஜோக் அடிக்கிறீங்களா?"

அவள் அதை மதிக்காமல், "உங்க வீட்டில் யாருக்கும் காக்கா வலிப்பு, ஆஸ்துமா, இஸ்கிமிக் ஹார்ட் டிஸீஸ், டயபடிஸ், மெனின் ஜெட்டிஸ், மாங்கோலாய்டிஸம், பார்க்கின்ஸன் டிஸீஸ்..."

பட்டியலாகச் சொல்லச் சொல்ல "இல்லை, இல்லை" என்று சொல்லிக்கொண்டே வந்தாள்.

"அவ்வளவுதானே!"

"இல்லைம்மா. கைனகாலஜிஸ்ட் சைக்கியாட்ரிஸ்ட், என்டாக்ரினாலஜிஸ்ட்டுனு டெஸ்ட் பாக்கியிருக்கு இஇஜி, இசிஜி..."

"எதுக்குங்க இத்தனை டெஸ்ட்?"

"எல்லாமே மாமூல் ரூட்டின். பயப்படாதே. என்ட்ரி லெவல்ல எல்லாருக்குமே இது உண்டு. உக்காரும்மா. சுனில் சொன்ன பெண் நீதானே!"

"ஆமாம்."

"சுனில் நல்லவரு. எல்லாருக்கும் உதவுவாரு."

"ஆமாம்!"

வீட்டுக்குப் போய் அம்மாவிடம் சொன்னபோது "ரொம்ப சந்தோஷம். மேனுவுக்கு லெட்டர் போடு."

அப்பா, "எத்தனை சம்பளமாம்?" என்றார்.

"கேட்டு வெச்சுக்கலைப்பா!"

"வாட் ஸார்ட் ஆஃப் எ கர்ல் யு ஆர்? கம்பெனி பேர் என்ன சொன்னே?"

"கம்பெனி இல்லைப்பா ஒரு லாப், ஆராய்ச்சி சாலை அக்கா இருந்தாளே."

"கவர்மென்ட்டா!"

"செமி கவர்மென்ட்பா!"

"சம்பளம்?"

"சொன்னேனேப்பா, இன்னும் சரியா தெரியலை."

"அப்பா! எத்தனை இன்டர்வ்யு, உங்க அக்காவுக்கு ஒரே சமயத்தில ஒன்பது வேலை கிடைச்சது! பாவிப் பொண்ணு ஓசைப்படாம... புறப்பட்டுப் போய்ட்டா!"

"மறுபடியும் ஆரம்பிக்காதிங்கப்பா!"

"என்ன இருந்தாலும் அவ பண்ணது தப்புத்தாம்மா."

மாயா சற்றுக் கலவரப்பட்டாள். சுனிலைப் பற்றி எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது!

அப்பா அவளருகே வந்து "அதே ஆபீசுக்குப் போறே. ஏதோ நீயாவது உங்க அக்கா மாதிரி பைத்தியக்கார காரியம் பண்ணாம... அமெரிக்கால இருக்கிறதில யாருக்குத் திருப்தி..."

"புலம்பாதிங்கப்பா!"

"அவளை மன்னிக்கவே முடியாது... நீயும் அந்த மாதிரி ஏதாவது மனசில வெச்சிண்டிருந்தா உடனே சொல்லிடும்மா. திடுதிப்புன்னு உங்கக்கா மாதிரி ஷாக் கொடுக்காதே!"

"சொல்லிடறேம்பா!"

கதவு மணி பொத்தான் அழுத்தப்பட "வாசல்ல யார் பாரு." மாயா வாசலுக்கு வந்தாள்.

"சுனில், நான் என்ன சொல்லியிருக்கேன்."

"கெட்ட சேதி மாயா!"

"என்ன?"

"எனக்கு கல்கத்தாவுக்கு மாற்றல் ஆகியிருக்கு!"



# 2

சுனிலின் முகத்தில் ஏமாற்றமிருந்தது.

"கல்கத்தாவில் என்ன?"

"எங்க பிராஞ்ச் ஒண்ணு இருக்கு. ரொம்ப சொங்கி ப்ராஞ்ச்! மாயா, நான் வேலையை ரிசைன் பண்ணிடறேன்."

"அப்ப நாம எப்படி கல்யாணம் செய்துக்க முடியும்? எங்கப்பா சம்மதிக்கமாட்டார்."

"சிக்கல்..! நேத்து வரைக்கும் இதைப்பத்தி பேச்சே இல்லை. டாக்டர் சாரங்கபாணிதான் வத்தி வெச்சிருக்கணும். கிராதகன், கில்ஜாய்!"

"இண்டர்வ்யுவில நக்கலாவே கேட்டுட்டிருந்தார்."

"அவன்தான்!"

"டாக்டர் நரேந்திரநாத் எப்படி?"

"அவர் ஜெம்! ஜென்டில்மேன்!"

"அவருக்கு அக்காவைத் தெரிஞ்சிருக்கு."

"உங்க அக்காவை 'லாபி'ல எல்லோருக்கும் நல்லாவே தெரியும். அத்தனை பாப்புலர். உன்கிட்ட அதனால எதிர்பார்ப்பு அதிகமாவே இருக்கும். அக்காவை வெச்சுத்தான் உனக்கே வேலை."

"என்ன வேலைன்னு சரியாத் தெரியலையே சுனில்!"

"சொல்வாங்க. அப்ப நான் ஒண்ணு செய்யறேன். கல்கத்தா போய் சார்ஜ் வாங்கிண்டு உடனே லீவு போட்டுட்டு ஒரு வாரத்தில் வந்துர்றேன். வந்து வேட்டையாடறேன்."

"வேற வேலை கிடைக்குமா?"

"கிடைக்கணும்! கிடைச்சே ஆகணும். அமெரிக்காலகூட ஒரு

எம்.எஸ்க்குப் போட்டிருக்கேன்."

அப்பா வாசலில் வந்து, "யாரு?" என்றார். அவர் பார்வையில் உடனே விரோதமிருந்தது.

"அப்பா இவர்தான் சுனில். எங்க ஆபீஸ். நிறைய ஹெல்ப் பண்ணிருக்கார்."

"வணக்கம் ஸார். உங்க மற்றொரு டாட்டர் மேனகா எங்க ஆபீஸ்ல . . ."

"மேனகாவைப்பத்தி பேச்சு வேண்டாம். ஷி இஸ் என் அன்கிரேட்ஃபுல் டாட்டர்..! இவளாவது அந்த மாதிரி யாரையோ இழுத்துண்டு ஓடாம இருந்தா சரி."

சுனிலும் மாயாவும் ஒருவரை ஒருவர் பதற்றத்துடன் பார்த்துக்கொள்ள மாயா "அப்புறம் பார்க்கலாம் மிஸ்டர் சுனில்!" என்று விரட்டினாள்.

அவன் போனதும் மாயாவிடம் அப்பா, "இவர் யாரும்மா?"

"சொன்னேனப்பா. ஆபீஸ்ல சினேகிதம்!"

"இன்னும் ஆபீஸ்லல சேரவே இல்லை. முதல் நாளே சினேகிதமா? பேஷ்!"

மாயாவின் முகம் மாறியது.

"பாரு, உங்கக்கா மாதிரி ஷாக் கொடுக்கறதா இருந்தா இப்பவே சொல்லிரு."

"என்ன?"

"இந்த வேலையில ஸ்திரமா இருக்கப் போறியா? இல்லை எவனையாவது இழுத்துண்டு ஓ...டப் போறியா?"

"அப்பா நீங்க அக்காவை இன்னும் மன்னிக்கலைன்னு . . ."

"துரோகி."

"அவ என்னப்பா தப்பு செஞ்சா? உங்களுக்குச் செலவு வைக்காம அமெரிக்காவில் மாப்பிள்ளை தேடிண்டா."

"என்ன பிரயோசனம்? ஒரு பைசாவுக்குப் பிரயோசனமுண்டா? மாப்பிள்ளைங்கறவன் முகத்தைக்கூட பார்த்ததில்லை. ஒரு போட்டோ இல்லை. ஒரு போன் கால் இல்லை."

"கடிதம் எழுதறானே."

"என்ன கடிதம்! நீ சௌக்கியம். நான் சௌக்கியம்."

"உங்களுக்கு என்ன வேணும்? பணமா? அதான் நான் வேலைல சேர்ந்துட்டேனே!"

"பணம் இல்லை பெண்ணே. பணம் இல்லை."

"பின்ன வேற என்ன?"

"எனக்கு இந்த வீட்டில சந்தோஷப்படவோ துக்கப்படவோ



உரிமை இருக்கா என்ன?"

பாத்ரூமுக்குப் போய் தன் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்துக் கொண்டு கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். கன்னம் சிவந்திருந்தது. கழுத்துவரை நனைந்திருந்தாள். மனத்தில் அடித்தளத்தில் ஒரு பய வரம்பு! ஏன் இது? சுனிலுக்கு மாற்றலாலா, இல்லை அந்த லாபில் பரிசோதனைகளாலா? இல்லை அந்த 'ப' வடிவக் கட்டடம் அவளை வாவென்று கூப்பிட்டது போன்று ஏற்படுத்திய பிரமையாலா? ஏன் சோகம்?

குளிக்குமுன் தன் உடைகளை நீக்கிச் சுருட்டிப் போடும்போது நெஞ்சில் ஒரு சிறிய கருநீலப் பொட்டுபோல் பார்த்தாள்.

"இது எதுக்குங்க?"

"டிஷ்யு கல்ச்சர்னு ஒரு டெஸ்ட். பயப்படாதே!"

ஒரு சாதாரண வேலைக்கு இத்தனை பரிசோதனைகளா! அக்காவுக்கு எழுதிக் கேட்க வேண்டும்.

திங்கள் கிழமை முதன் முதலாக வேலைக்குப் போவதால் சாமி கும்பிட்டுவிட்டு, நெற்றியில் மெலிதாகக் குங்குமம் இட்டுக்கொண்டு, அப்பா சகுனம் பார்க்கப் புறப்பட்டாள். தெருக் கோடியில் சுனில் நின்றுகொண்டிருந்தான். "வா மோட்டார் சைக்கிள்ல போயிரலாம்."

"சுனில், நீ கல்கத்தா போகலியா?"

"பதினஞ்சு நாளைக்கு ஹவ்ரா மெயில் புக் ஆகியிருக்கு. 'பை-ஏர்'ல போக கேட்டிருக்கேன். அனுமதி தந்தா போவேன். அதுவரைக்கும் ஜாய்னிங் டைம்தான்! லீவ்தான். உன்னையே பார்த்துக்கிட்டு இருந்தா பொழுது போகும்." அவன் பின்னால் உட்கார லாரி தோதுபட வில்லை. அவளுக்கு ஜீன்ஸ் போன்றவை அணிவதில் தயக்கம், வெட்கம். அக்கா எது வேண்டுமானாலும் அணிவாள். ஸ்விம் ஸூட்கூட வைத்திருந்தாள்.

"இது எதுக்கு அக்கா?"

"அப்பாகிட்ட சொல்லாதே. நான் நீச்சல் கத்துக்கறேன்!"

"இதைப் போட்டுண்டா?"

"ஆமாம்."

"தொலைல மார் எல்லாம் தெரிய?"

"தெரிஞ்சா என்ன?"

மவுண்ட் ரோடில் அவன் வேகமாகப் போக ஒரு ட்ராஃபிக் கான்ஸ்டபிள் விசில் ஊதி நிறுத்த, விர்னு...

"சலான் வரதுக்குள்ள கல்கத்தா போயிருவேன். சரியா கட்டிக்கயேன். என்ன வெக்கம்? உன் சிஸ்டர் என்னா ஃபோர்வர்ட்

தெரியுமா?"

"அவளை இந்த மாதிரி கூட்டிப்போயிருக்கியா?"

"பல தடவை!"

முதல் நாளானதால் டாக்டர் நரேந்திரநாத் எல்லோருக்கும் அவளை அறிமுகப்படுத்தினார்.

"இது மிஸ் கோம்ஸ், என் செக்ரட்டரி. இது அருணா, இது சீதா, இது காவேரி, ம்ருணாளினி..."

அனைவரும் பொம்மைகள் மாதிரி சிரித்து "ஹாய்! வெல்கம்!" என்றனர்.

"இது ஸ்ரீதர். லாப் அஸிஸ்டெண்ட். டாக்டர் சாரங்கபாணி."

"இன்டர்வ்யுவில சந்திச்சோம். உனக்குக் குடுத்துட்டாங்களா?"

"ஆமாம். எனி அப்ஜெக்ஷன் சாரு?"

"நான் தேறாதுன்னு நினைச்சேன் வெல். வாட்ஸ் யுர் இம்ப்ரெஷன் எபவுட் திஸ் ப்ளேஸ்?"

"கன்ஃப்யூஸிங்" என்றாள்.

"ஒண்ணு கவனிச்சியா?" என்றான் சுனில் மத்தியானம் கான்டீனில்.

"நிறைய பெண்கள். டாக்டர் நரேந்திரநாத்துக்கு பெண்கள்னா பிடிக்கும்."

"என்ன அர்த்தத்தில்?"

"அவங்கதான் லாப் ஓர்க் பண்ண நிறையப் பொறுமை உள்ளவங்க. இப்பவாவது பரவால்லை. முன்பெல்லாம் நந்தகோகுலம் மாதிரி இருக்கும். ரெண்டே ரெண்டு கிருஷ்ணர்! அதுக்கப்புறம்தான் நானும் ஸ்ரீதரும் வந்தோம்."

"ஸ்ரீதர் எப்படி?"

"அப்பிராணி... வேலை ஏதாவது தந்தாங்களா?"

"நாக்காலியில உக்காத்தி வெச்சு எதுத்தாப்பல டிவி மாதிரி, இருந்ததே அது என்ன?"

"டெர்மினல்."

பிற்பகலில் டாக்டர் நரேந்திரநாத் அவளை அறைக்கு அழைத்தார். "முதல் நாள் எதும் வேலை செய்ய வேண்டாம். டெல் மி, மேனகா எப்படி இருக்கா?"

"சௌக்கியம்தான் சார்."

"லெட்டர் போடறாளா?"

"அப்பப்ப எனக்குத்தான் எழுதுவா?"

"அமெரிக்காவில எங்க இருக்கா?"

"நியூயார்க்."



"போன் நம்பர் ஏதாவது?"

"இல்லை சார்."

"அடுத்த தடவை எழுதறபோது போன் நம்பர் கொடுக்கச் சொல்லு. ஐ வாண்ட் டு டாக் டு ஹர். ஜஸ்ட் டு சே ஹலோ!"

"சரி ஸார்."

"நீ அவமாதிரியே இருக்கே." ரிப்போர்ட்டைப் பார்த்து "அதே ரத்தம் ஏ பாஸிட்டிவ். குணம்கூட அதே மாதிரியா!"

"இல்லை ஸார். நாங்க ரெண்டுபேரும் ஆப்போஸிட்."

"குரல்கூட ஒற்றுமை இருக்கு."

"கையெழுத்து ஒரே மாதிரி இருக்குன்னு சொல்வா!"

"தப்பிப்போய் மேனகான்னு கூப்ட்டா கோவிச்சுக்காதே!"

இல்லை என்று சிரித்து ஒருமுறை அவரை நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கண்களை நேராகச் சந்திக்க முடியவில்லை. அத்தனை கூர்மையான பார்வை. அவளுள் புகுந்து ஏதோ ஒருவிதத்தில் அவள் பாசாங்குகளைத் துகிலுரித்துவிடுமோ என்கிற ஊடுருவல் பார்வை. தலை மயிரில் நரைக்கீற்றுகள் தென்பட்டாலும் மூக்குக் கண்ணாடியை நீக்கியபோது அந்த முகம் சற்று அபத்திரமானதாக, சற்று நிர்வாணமாகத் தோன்றியது. பற்கள் வரிசையாக இருந்தன. அடர்ந்த புருவங்கள். புத்திசாலித்தனம் என்பது முகத்தில் பூசியிருந்தது. இண்டர்வ்யு தினத்துக்கப்புறம் எப்படி மாறியிருந்தார் என்று யோசித்ததில் மீசையை நீக்கியிருந்தார்.

"என்ன மீசையைப் பார்க்கறே. ட்ரிம் பண்றப்ப தப்பாயிடுத்து."

சுற்றிலும் பார்க்க அலமாரி நிறையப் புத்தகங்கள்.

"இதெல்லாம் படிப்பீங்களா?"

"பாதி நான் எழுதினது."

அவள் வியப்பில் மௌனமாக, "இப்பக்கூட Downloadingனு ஒரு புஸ்தகம் எழுதிட்டிருக்கேன். முதல்ல வர்ட் ப்ராஸஸர் பழகிக்க. அப்புறம் நீ என்ட்ரி பண்ணலாம். கோம்ஸ்க்கு உதவி பண்ணணும்."

"சரி."

"வேற ஏதாவது கேட்கணுமா?"

"எதுக்கு ஸார் ஒரு ஸ்டெனோவுக்கு அத்தனை மெடிக்கல் டெஸ்ட்?"

"நீ ஸ்டெனோ இல்லை. அதனால்."

"பின்ன?"

"சில ஆராய்ச்சிகள்ளாம் சிம்பிள். ஒரு புஸ்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்வோம். படிக்கறப்பா சில பிம்பங்கள் எல்லாம் ஃப்ளாஷ் பண்ணுவோம்... அப்ப உன் ஈ.ஸி.ஜி., எண்டாக்ரினல்

டெஸ்ட் இப்படி. அதனால் உன் டெஸிக்னேஷன் ரிஸர்ச் ஸ்டாஃப்!"

"என்ன ரிஸர்ச்?"

"சொன்னாப் புரியாது. சமயம் வரும்போது சொல்வேன். ரொம்ப சுவாரஸ்யமான ஆராய்ச்சி."

வெளியே வரக் கதவைத் திறந்தபோது ஸ்ரீதர்மேல் இடித்துக் கொண்டாள். ஸ்ரீதர் நெற்றியைச் சுருக்கிக்கொண்டு "பார்த்து வரக்கூடாதா, ஸாரி அடிபட்டதா!"

"இல்லை ஸார்."

"நீதானே புதுசா சேர்ந்தவ... மேனகாஸ் ஸிஸ்டர்?"

"ஆமா ஸார்."

"ஐ'ம் ஸ்ரீதர். நாளைக்குக் காலையில ப்ரெக்ஃபாஸ்ட் எதும் எடுக்காம வந்துரு. ஒரு ஸ்ட்ரெஸ் டெஸ்ட் பண்ணிட்டு ஹோல்ட்டர் மானிட்டர்ல போட்டுருவம்."

"சரி" என்றாள்.

"இஸ் தி ஒல்ட் மான் இன்?"

"யாரு?"

"டாக்டர் நரு!"

கையைத் தட்டிக்கொண்டு உள்ளே செல்கையில் ஸ்ரீதரின் இடது கை சற்று சின்னதாக இருந்ததைக் கவனித்தாள்.

தன் இருக்கைக்குச் சென்றதும் அந்தப் பெண்கள் எழுதிக் கொண்டிருந்தவர்கள் நிமிர்ந்து பார்த்து எழுத்தைத் தொடர்ந்தார்கள்.

தன் மேசையில் அந்த டெர்மினலை வெறித்துப் பார்த்தபோது சட்டென்று அவளுக்கு ஏதோ ஒன்று உறுத்தியது.

அருகில் உட்கார்ந்திருந்த மிருணாளினிக்கும் இடது கை வலது கையைவிடச் சின்னதாக இருந்தது.



# 3

தன் கையை மாயா விநோதமாகப் பார்ப்பதை உணர்ந்து அந்தப் பெண் மிருணாளினி சட்டென்று அதை உள்வாங்கிக்கொண்டாள். தலைப்பால் மறைத்துக்கொண்டாள். அப்போது டாக்டர் நரேந்திரநாத் மறுபடி அழைப்பதாகச் செய்தி வந்தது. அறையிலிருந்த அத்தனை பெண்களும் மாயாவை ஒரே மாதிரியான 'ஒரு மாதிரி' யாகப் பார்த்தார்கள். டாக்டர் நரேந்திரனின் அறை வெளிச்சமாக இருந்தது. பல சன்னல்கள் திரை நீக்கப்பட்டு தாராளமாக சூரிய வெளிச்சத்தை அனுமதித்தன. நரேந்திரநாத்தின் தேசம் கடந்த தகுதிகளைச் சுவர்ச் சான்றிதழ்கள் அலங்காரமாக அறிவித்தன.

மேசை மேல் Silicon Neural Networks என்று ஒரு புத்தகம் மட்டும் இருந்தது. சர்வதேசக் கடிகாரம் ஒன்றும் ஜப்பானிய பொம்மையும்தான் மேசையின் மற்ற அலங்காரங்கள். சுவர் முழுவதும் பரவிய புத்தக அலமாரி நிரம்பி வழிந்தது. விசிட்டர்களுக்குத் தனிப்பட்ட சொகுசு இருக்கைகளின் அருகில் புதிய மலர்கள் செருகிய பீங்கான் மலர்ச் சாடிகள் இருந்தன.

"உட்கார், நோட்டு புஸ்தகம் ஏதும் எடுத்து வரலை?"

"இல்லை ஸார். ஸாரி."

"எப்பவும் என்னைப் பார்க்க வர்றப்ப கைல நோட்டுப் புஸ்தகம் எடுத்து வரணும். இந்த ஆபீஸ்ல எந்த அலமாரியைத் திறந்தாலும் ஸி.எம்.ஆர்.ஐ. போட்டு நோட்டு புஸ்தகங்கள் ஏராளமா இருக்கும். சாரங்கபாணி பண்ண உருப்படியான வேலை அது ஒண்ணு. அதில ஒண்ணை பொறுக்கிக்க, என்ன."

"சரி."

"எழுது."

"சரி."

“டியர் ஃபிலிப்...”

நிதானமான குரலில் அவர் அந்தக் கடிதத்தை ஆங்கிலத்தில் சொல்லச் சொல்ல எழுதிக்கொண்டாள். சில வார்த்தைகள் புரிந்தன. சில சுத்தமாகப் புரியவில்லை.

“ ‘பெர்ஸப்ட்ரான்’தான் நியூரல் வலைப்பின்னலில் மிகவும் பழமையானது. என் அபிப்ராயத்தில் போல்ட்ஸ்மன் இயந்திரம் ரேடார் ஸோனார் போன்ற வடிவங்களுக்கு மட்டும்தான் சரிப்படும். நான் ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருப்பது ‘பேக் ப்ராபகேஷன்’ முறையில் உருவாகிறது ...”

“ஏன் நிறுத்திட்டே?”

“ரொம்ப வேகம் ஸார். நீங்க சொல்றதில பாதி எனக்குப் புரியாத வார்த்தைகள். ஸ்பெல்லிங் தெரியாது மேலும்.”

“ரிஸர்ச் ஸ்டாஃப்னா எல்லா வேலையும் செய்யக் கத்துக்கணும் இங்க, தெரியுமில்ல?”

“முதல்ல எனக்கு என்ன வேலை, யார் ‘பாஸ்’னே இன்னும் தெரியாது. யாரும் சொல்லலை.”

“நான் சொல்றேன், நீ எனக்கு மட்டும்தான் அஸிஸ்டண்ட். சாரங்கபாணி கூப்பிட்டானா?”

“இல்லை.”

“அவன் கூப்பிட்டாப் போகாதே. என்ன? ட்ராஃப்ட் எடுத்துக் கிட்டு வா. பழைய லெட்டர்ங்களையெல்லாம் பாரு புரியும். ரிஸர்ச்சில, சில வார்த்தைகள் திரும்பத் திரும்ப வரும்.‘பர்ஸப்ட்ரான், நியூரல் நெட்வொர்க்’ இப்படின்னு. சீக்ரமே பழகிடும். உன் அக்கா மேனகா இருந்தா பாரு, அவ இதில எல்லாம் கெட்டிக்காரி. எப்படி இருக்கா? சமீபத்தில் போன் பேசினியா?”

“இல்லை ஸார். லெட்டர் போட்டிருந்தா.”

“அவ விட்டுட்டு போயிட்டது லாபுக்கு பெரிய இழப்பு.”

“குடும்பத்துக்கும்தான் ஸார். அப்பா எவ்வளவோ ஹோப் வெச்சிருந்தார்.”

“எல்லாம் இந்த ‘லவ்’வுன்னு நான்சென்ஸ்! எஸ்ட்ரெஜென்ஸ் ஆண்ட்ரொஜென்ஸ் பண்ற வேலை. நீ கூட யாரையோ பிடிச்சிருக்கே போலிருக்கே. யாரு, சுனிலா?”

அவள் மௌனமாக இருக்க,

“காதல்ங்கறதே புல்ஷிட். பரவால்லை இருக்கட்டும். அக்காகூட அடுத்த முறை பேசறப்பவோ, லெட்டர் எழுதறப்பவோ விசாரிச்ச தாச் சொல்லு. அப்புறம் பாரு, நீ என் ஆபீஸ், என் அஸிஸ்டண்ட், என் க்ராண்ட்லதான் ரெக்ரூட் ஆகியிருக்கே. அதனால இந்த சாரங்கபாணி கூப்பிட்டா போகவே கூடாது.”



“சரி ஸார்” என்று தலையாட்டினாள் புரியாமல்.

“அவன்கிட்ட ஜாக்கிரதையாவே இரு. லெச்சரஸ் பாஸ்டர்ட். நாளைக்கு ஆபீஸ் வர்றப்ப கொஞ்சம் டீஸண்டா ட்ரஸ் பண்ணிக்கிட்டு வா. உன் புடவை டிஸ்ட்ராக்டிங்.”

கன்னத்தில் வெட்க ரத்தம் பாய ஏறக்குறைய அழும் நிலையில் அறையைவிட்டு வெளிவந்தபோது கோம்ஸ் அவளைக் கூப்பிட்டு,

“இந்தக் காகிதங்களில் கையெழுத்துப் போடு. அப்புறம் சாரங்க பாணி ஸார் உன்னைக் கூப்பிட்டு அனுப்பினார்.”

“சாரங்கா... அது வந்து... அது வந்து...”

“டாக்டர் நரேன் போகவேண்டாம்னு சொன்னார், அதானே.”

“ஆமாம் மிஸ் கோம்ஸ்... எனக்கு இந்த ஆபீஸ்ல எதுமே புரியலை, நடுக்கமா இருக்குது.”

“எல்லாம் பழகிரும்.”

“இப்ப அவர் கூப்பிட்டதுக்கு நான் போகணுமா வேண்டாமா?”

“உன் இஷ்டம். பெரியவர் என்ன சொன்னார்?”

“என் அஸிஸ்டண்ட் நீ. யார் கூப்பிட்டாலும் போகக் கூடாதுன்னார்.”

“என்னவோ குதிரை வியாபாரமா இது. ரூல் எப்படின்னா, நீங்க எல்லாம் ரிஸர்ச் ஸ்டாப் பூல்னு பேரு. எல்லா டிரக்டருக்கும் பொது. யார் கூப்பிட்டாலும் போகணும், என்ன?”

“ஏதோ க்ராண்ட்டுன்னு.”

“சாரங்கபாணி கூடத்தான் க்ராண்டிலிருந்து பணம் கொடுத்திருக்காரு.”

“இப்ப நான் என்ன செய்யறது?”

“வந்த உடனே ஆபீஸ் பாலிடிக்ஸ்ல மாட்டிக்காதே. எல்லார்கிட்டயும் சுமுகமா இரு. அடுத்த எச்.ஓ.டி. யார் வேணா வரலாம். டென்யர் போஸ்ட்...”

ப்யூன் வந்து, “மிஸ் மாயா, உங்களைச் சாரங்கபாணி டாக்டர் கூப்பிடறாரு” என்றான்.

கோம்ஸ் “போ” என்றாள் கண்களாலேயே. அவள் தலைமயிரை வெட்டி நாற்பது வயசுக்கு இரண்டு பெண்மணிகளுக்குண்டான மார்பகங்களுடன் சரக்குக் கப்பல்போல இருந்தாள். அவளைக் கேலி கலந்த புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருக்க, மற்ற பெண்களும் அர்த்த பாவத்தோடு சிரித்தது விளங்கவில்லை.

சாரங்கபாணியின் அறை நரேந்திரநாத்தின் அறைக்குப் பக்கத்திலேயே இருந்தது. ஆனால் முற்றிலும் மாறுதலாக இருந்தது

மேசை எங்கே என்று தெரியாமல் புத்தகங்களும் காகிதங்களும் பரத்தியிருக்க, சிகரெட் துண்டுகள் திணிக்கப்பட்டு வழிந்த ஆஷ்ட்ரேயும் தரையில் கிடந்த காப்பிக் கோப்பையும் யுத்தகளம் போல இருந்தது.

“உக்காரு. இந்த முட்டாத்தனமான இடத்தில் எங்கேயாவது ஏதாவது நாற்காலி இருக்கும். நரேந்திரனைப் பார்த்தாயா?”

“ஆமாம்.”

“என்ன சொன்னான் கிழ போல்ட்டு?”

அவள் தயங்க, “நான் சொல்கிறேன். ‘நீ என் அசிஸ்டண்ட். சாரங்கபாணி கூப்பிட்டா போகாதே.’ அதுதானே?”

“ஆம்.”

சாரங்கபாணி, “இந்த லாப் ஒண்ணும் அவன் தாத்தா வீட்டுச் சொத்தில்லை என்று சொல்லு” என்றான்.

சாரங்கபாணியை முதலில் கிட்டத்தில் பார்க்க அத்தனை வயசான வரில்லை என்று புலப்பட்டது. கொஞ்சம் துடைத்து தலைசீவி விட்டால் சுனிலின் வயதுதான் இருக்கும்போல இருந்தது. கண்ணாடியைக் கழற்றிவிட்டுத் துடைத்துக்கொண்டபோது அவர் நிஜ வயசு புலப்பட்டது.

“உக்கார். முதல் தினம்தானே? அதனால குழம்பிப் போயிருப்பே. பார் நீங்கல்லாம் ரிஸர்ச் ஸ்டாப். பொதுவா பூல்னு வெச்சிருக்கோம்...”

“கோம்ஸ் சொன்னாங்க.”

“அந்த பசு மாடா. அவளை நம்பாதே. எமகாதகி! உன் வேலை என்னன்னு முதல்ல தெரிஞ்சுக்க. ரிப்போர்ட் எழுதறதுக்கும் ரிஸர்ச்சில உதவறதுக்கும்தான் நீ. ஏர்லைன்ஸ் டிக்கெட் புக் பண்ணவோ, ரேஷன்கார்டு, பள்ளிக்கூடத்தில் பணம் கட்ட, எலக்ட்ரிஸிட்டி பில் கட்ட இதுக்கெல்லாம் யாரும் உன்னைப் பயன்படுத்த முடியாது. தெரியுமா?”

“சரி சார்.”

“அப்படி யாராவது உனக்கு வேலை தந்தா எங்கிட்ட வந்து சொல்லு. கவுன்ஸில்ல உலுக்கிடறேன்.”

“சரி ஸார்.”

“உன் அக்கா எங்க இருக்கா? அவ அட்ரஸ் வேணும் எனக்கு? அல்லது டெலிபோன் பேசறப்ப நம்பர்.”

“கொடுக்கறேன்.”

“இப்ப சொல்லு.”



“இப்ப இல்லை ஸார்.”

“நியூயார்க் ஏரியாவா?”

“ஆமாம்.”

“இப்பக் கூப்பிட்டுப் பேசலாமா. நம்பர் தெரியுமா?” போனை எடுத்தார்.

“இப்ப நடு ராத்திரி. தூங்கிட்டு இருப்பா.”

“ஒண்ணு பண்ணு. சாயங்காலம் ஆறு மணிக்கு வா. போன் பண்ணலாம்.”

“நம்பர் இல்லை ஸார்.”

“நாளைக்குக் காலையில ஆரம்பிச்சுரலாம் புது வேலையை.”

“சரி ஸார்.”

வெளியே வந்தபோது மகா குழப்பமாக இருந்தது. சுனிலைப் பார்த்து முதன் முதலாக இதைப் பற்றிக் கேட்டுவிட வேண்டும்...

தன் இருப்பிடம் எது என்று தெரியவில்லை. அவள் முன் உட்கார்ந்திருந்த இடத்தில் வேறு பெண் வீற்றிருந்தாள்.

ஏதோ ஒரு காலி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள்.

அத்தனை பெண்களும் அவளை மௌனமாக விரோதத்துடன் தான் பார்த்தார்கள். யாரும் அவளுடன் சிநேகம் கொள்ள விருப்பமாகத் தெரியவில்லை. தானே அருகிலிருந்தவளிடம், “ஹாய், ஐ’ம் மாயா.”

“ஐ’ம் அருணா.”

“எனக்கு சுனிலின் செக்ஷனுக்குப் போக வேண்டும்.”

“சுனிலை மாற்றிவிட்டார்களே.”

“தெரியும்.”

அந்தப் பெண் உள்தொடர்பு போனில் மூன்று எண்களை ஒத்தி “ஸ்வேதா, அங்க சுனில் வந்தாரா?”

போனை வைத்ததும், “சுனில் வந்திருந்தாராம். போய்ட்டாராம். கல்கத்தாவுக்கு மாத்தியிருக்கு அவரை.”

“தெரியும் அருணா. உங்களை ஒண்ணு கேக்கலாமா?”

“என்ன?”

“எத்தனை டைரக்டர்ங்க இருக்காங்க இந்த லாப்ல?”

“ஆறு பேர். முக்கியமானவங்க நரேனும் சாரங்கபாணியும்தான்.”

“எதுக்குக் கேக்கறேன்னா...”

"ரெண்டு பேர்ல யார் சொல்றதை கேக்கறது... அதுதானே? எங்க எல்லாருக்கும் அதுதான் ப்ரச்னை. அவங்க போடற சண்டையில நம்ம பேரும் அடிபடும். ரெண்டு பேரும் சொல்றதைக் கேட்டு, கேட்டு வெச்சுக்க. டு நாட் டேக் ஸைட்ஸ்."

"கோம்ஸ் வந்து..."

"கோம்ஸை நம்பவே நம்பாதே. அவ ஸ்ட்ராங்கா நரேந்திரனை சப்போர்ட் பண்றவ. அவர்கிட்ட எல்லாம் வத்தி வெச்சுருவா. ஆனா வெளிய பாக்கறதுக்கு சாரங்கபாணியை சப்போர்ட் பண்ணுவா."

"எனக்கு ஒண்ணுமே புரியலை."

"இதுதானே முதல் நாள்! போகப் போக இருக்கு உனக்கு" என்றாள் அருணா.

தன் ஸீட்டுக்குத் திரும்பி வந்தபோது முதன்முதல் மாயா அந்தச் சப்தத்தைக் கேட்டாள்.



# 4

மாயா அந்த ஒலியை எங்கே கேட்டிருக்கிறாள் என்பது சரியாக நினைவில் இல்லை. காதுக்கருகே பறவைகள் சிறகடிப்பதுபோலச் சப்தம் கேட்டது. கூடவே மந்த ஸ்தாயியில் ஒரு விர்ர் கேட்டது. மூக்குக்குள் பழவாசனை அடித்தது. நாக்கு உலர்ந்துபோய் சற்று நேரம்... அது ஒரு செகண்டா, ஒரு மணியா தெரியவில்லை. ஞாபகம் பிசகியது.

நினைவு திரும்பியபோது அந்த அருணா அவளை ஒரு மாதிரி பார்த்துக்கொண்டு "என்ன ஆச்சு?" என்றாள்.

"என்ன?"

"சிலை மாதிரி நின்னுட்டிங்க."

"அப்படியா! எத்தனை நேரம்?"

"என்ன ஒரு பத்து செகண்டு இருக்கும்."

ஏதோ அசதி அல்லது களைப்புபோல இருக்க வேண்டும். தன் இருக்கைக்கு வந்து தண்ணீர் அருந்தினாள். இது மாதிரி வந்ததே இல்லை. டாக்டரிடம் காட்ட வேண்டும். முதல் தினமே உடம்பு சரியில்லை என்று காட்டிக்கொள்ள வேண்டாம்.

மிருணாளினி அவளிடம் வந்து "உங்ககிட்ட டாக்டர் நரேந்தர் டிக்டேஷன் கொடுத்திருக்காரா?"

"ஆமாம் ஒரு லெட்டர். டைப் மிஷின் எங்க இருக்கு?"

"டைப் மிஷின் கிடையாது. எல்லாமே வர்ட் ப்ராஸஸர்தான்."

"அப்படின்னா."

"சரிதான். மேனகாவுடைய தங்கைங்கற? வா என் பின்னாடி" என்று கம்ப்யூட்டர் டெர்மினலின் அருகே அழைத்துச் சென்று அதன் விசைப் பலகையில் விரல்களால் நடனமாடி, அதன் பச்சை வண்ணத்திரையை உயிர்ப்பித்து "இந்த ப்ரொக்ராம் சொல்றதை

யெல்லாம் செய். நாலு நாள்ல கத்துக்கலாம்."

அது சுலபமாகத்தான் இருந்தது. முதலில் அவளுக்கு டைப் அடிக்கத் தெரியுமா என்று கேட்டது, திரை. தெரியும் என்றதற்கு 'இந்த வாக்கியத்தை டைப் அடி' என்றது. அவள் அடிக்க 'உன் வேகம் இருபத்தைந்து வார்த்தை. மொத்தம் தப்புகள் மூன்று' என்று ஒரு மெடல் வரைந்து 'முதல் நாளைக்குப் பரவாயில்லை' என்று செய்தி காட்டியது.

தப்புத்தப்பாக அந்தக் கடிதத்தை அவள் அடித்தாலும் சுலபமாகப் பிழை திருத்த முடிந்தது. மிருணாளினி அதை லேசர் ப்ரிண்டரில் அச்சடித்துக் கொடுத்தபோது அவளுக்கு நாமா இதை அமைத்தோம் என்று ஆச்சரியமாக இருந்தது.

டைரக்டரிடம் அதில் கையெழுத்து வாங்க கோம்ஸிடம் கொடுத்தபோது அவர் அவளை உள்ளே கூப்பிட்டு "நல்லா செய்திருக்கே" என்றார்.

"மிருணாளினி சொல்லிக்கொடுத்தாங்க டாக்டர்."

டாக்டர் அவளைப் பார்த்து, "சில வேளையில மேனகாவே திரும்பி வந்துட்டாப்பல இருக்கு" என்றார்.

சாயங்காலம் சுனில் கட்டட வளாகத்தின் முன்வாசலில் மோட்டார் சைக்கிளில் காத்திருந்தான். "கல்கத்தா ட்ரான்ஸ்பருக்கு எதிரா அப்பீல் பண்ணி ஒரு மனு கொடுத்திருக்கேன். நான் போகலை கல்கத்தா" என்றான்.

"ஏன்?"

"உன்னைவிட்டுப் போக விருப்பமில்லை. ராஜினாமா கொடுக்கப் போறேன்."

"சே, நல்ல வேலையை விட வேண்டாம்" என்றாள்.

"மாயா, ஏன் ஒரு மாதிரி இருக்கே? களைப்பா?"

"சுனில், மத்யானம் ஒண்ணு நடந்தது..."

"என்ன?"

"டாக்டர் அறையிலிருந்து வெளியே வர்றப்ப ஒரு நிமிஷம் மயக்கம் மாதிரி, இல்லை அதை என்ன சொல்றதுன்னே தெரியலை. அப்டியே எல்லாம்..."

"உஷ்ணம், அஜீரணம், தண்ணி சாப்ட்டியா?"

சுனில் அவளை ஒரு கூட்டமுள்ள ஓட்டலுக்குள் அழைத்துச் சென்றான்.

"இத்தனை கூட்டமா இருக்கே" என்றாள்.

"இங்க மசால் தோசை நல்லா இருக்கும்."

"யாராவது பார்த்து அப்பாகிட்ட வத்தி வெக்கப்போறா."

"உங்கப்பாவுக்குத் தெரியாதா? என்ன விளையாடறே."

"தெரியும்தான். ஆனா விவரமாச் சொல்லலை."



"கவலைப்படாதே உன் வாழ்க்கை உன்னது தெரியுமா? உன் அக்கா எவ்வளவு தைரியம் தெரியுமா? யாராவது முறைச்சுப் பார்த்தா செருப்பை எடுத்துருவா. போல்ட் கர்ள். அவளுக்கு அப்படியே எதிர்மறையா அமைஞ்சிருக்கே. அதுதான் ஆச்சரியம். சரி முதல் நாள் என்னென்ன கவனிச்சே சொல்லு."

"மிருணாளினி இருக்காளே அவளுக்கு..."

"கன்னத்தில் மச்சமா?"

"இல்லை, ஒரு கை சின்னதா இருக்காப்பல இருக்கு. மற்ற கையைவிட. இன்னொருத்தர் லாப் அஸிஸ்டண்ட் இருந்தாரே, அவர் பேர் என்னவோ தெரியலை. அவர் கையும் அப்படி இருந்தது. ஏதாவது ஸ்பெஷலா செலக்ட் பண்ணியிருக்காளா?"

"ஒரு கை மற்ற கையைவிடச் சின்னதா?"

"ஆமாம்."

"நான் கவனிக்கவே இல்லையே."

"கவனிக்கும்படியா அத்தனை வித்தியாசம் இல்லை."

"சரி சரி. என் கை நார்மலாத்தான் இருக்கு. என்ன வேணும்?"

அவன் பேசிக்கொண்டிருக்க மறுபடி அவள் மண்டைக்குள் அந்தச் சப்தம் கேட்டது. நிச்சயமாகப் பறவைகள் சிறகடிப்புபோல, தேனியின் அருகாமை விர்ர், குழந்தை அழுகை எல்லாம் கலந்தது போல, அதை என்னவென்று சொல்வது. ஓசையா, ஓலமா?

"என்ன ஆச்சு?" என்று அவளை உலுக்கினான்.

"மறுபடி வந்தது அது."

"என்ன?"

"அந்த மாதிரி சப்தம். அதை எப்படிச் சொல்றது சுனில்" என்று அவன் கையைப் பிடித்து "எனக்கு பயமா இருக்கு" என்றாள்.

"நாளைக்கு டாக்டரைப் பார்த்துரலாம்."

"இல்லை. இப்பவே பார்த்துரலாம் சுனில்."

சுனில் அழைத்துச் சென்ற கிளினிக்கின் லேடி டாக்டர் அவளைப் பார்த்துப் புன்னகைத்து "வாட்ஸ் த ப்ராப்ளம்" என்றாள்.

டாக்டர் வயசை மறைக்க என்னென்னவோ பிரயத்தனங்கள் செய்திருந்தாள். கன்னங்கரேல் என்ற விக். உதட்டில் சாயம். வரிசையாகப் பொய்ப்பற்கள். குரல் ஒன்றுதான் அவள் முகத்தில் அவளுடையதுபோல இருந்தது.

அந்தக் குரல் இனிமையாக இருந்தது. "மை சைல்ட், வாட்ஸ் தி ப்ராப்ளம்?"

மாயா தன் மண்டைக்குள் கேட்கும் சப்தத்தை விவரித்தாள்.

டாக்டர் அவளைத் தனியிடத்துக்கு அழைத்துச் சென்று முதலில் ஸ்டெத் ஒத்திப் பார்த்தாள். "அந்த ஆசாமி உன் புருஷனா?"

"இல்லை."

"நீங்கள் இருவரும் ஏதாவது கெட்ட காரியம் செய்தீர்களா?"

"நோ" என்றாள் ஆணித்தரமாக.

"ஷ்யூர்! டாக்டர்கிட்ட பொய் சொல்லக்கூடாது."

"வெரி ஷ்யூர்! டாக்டர்."

"ராத்திரி சரியாகத் தூங்குகிறாயா?"

"தூங்கினேன்."

"அண்மையில் ஏதாவது விசேஷமாக நடந்ததா, வாக்ஸினேஷன், இன்ஜெக்ஷன்?"

"வேலைக்கு மருத்துவப் பரிசோதனை செய்தார்கள்."

"எங்கே ?"

"ஸி.எம்.ஆர்.ஐ."

"என்ன பரிசோதனை?"

"ரத்தம், யூரின், ஈ.ஸி.ஜி."

"அதெல்லாம் சாதாரணப் பரிசோதனைகள். எதற்கும் இந்த மாத்திரையைச் சாப்பிடு. நாளை மாலை வா. ஞாயிறு காலை வா. பரிசோதனைகள் செய். மறுபடி அந்த மாதிரி ஏற்பட்டால் உடனே உட்கார்ந்துவிடு."

"அது என்ன டாக்டர்?"

"நீ சொல்வதைப் பார்த்தால் ஆரா என்பார்கள். அதுபோலத் தோன்றுகிறது. உங்கள் வீட்டில் யாருக்காவது காக்கை வலிப்பு உண்டா? எபிலெப்ஸி?"

"இல்லை."

"இதற்கு முன் உனக்கு ஏற்பட்டதே இல்லை? நீ வயசுக்கு வந்தபோது எப்போதாவது?".

"இல்லை."

"கவலைப்படாதே. ஞாயிற்றுக்கிழமை என்னிடம் வா" என்றாள்.

சுனில் வெளியே காத்திருந்தான். "எனிதிங் சீரியஸ் டாக்டர்."

"நத்திங். நத்திங்" என்றாள். "இப்போது பணம் வேண்டாம்" என்றாள், அவன் பர்ஸைப் பிரிக்க.

"நத்திங்னா எதுக்கு ஞாயிற்றுக் கிழமை வரணும்?"

"சும்மா குழப்பிக்கொள்ளாதே. உனக்கு உடம்புக்கு ஏதும் இல்லை. முதல்நாள் படபடப்பு அதுதான்."

இரண்டாவது தினம் ஆபீசுக்குப் போனதுமே அவளுக்கு போன் வந்தது. தன்னை அந்த நேரத்தில் கூப்பிடுவது சுனிலாகத்தான் இருக்க முடியும் என்று 'எஸ் சுனில்' என்றாள்.

"மாயா, மாயா, ப்ளீஸ் கால் மாயா ரங்கநாத்."



"மாயாதான் பேசறேன்" என்றாள். அவள் உள்ளத்தில் படபடப்பு அதிகமாகியது.

அலையோசைபோலக் கேட்டது. "மாயா, நான் மேனகா பேசறேன்."

சமுத்திரங்கள் தாண்டி வந்தாலும் திருத்தமாக அவள் அக்காவின் குரலை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

"மேனகா எப்டி இருக்கே?"

"எப்டி இருக்கே மாயா? அப்பா எப்படி இருக்கார்? அம்மா எப்படி?"

"எல்லோரும் சௌக்கியம். மேனகா, நீ எப்ப வரே?"

"இன்னும் ரெண்டு மாசத்தில் வரேன். மாயா சி.எம்.ஆர்.ஐல சேர்ந்துட்டியா?"

"ஆமாம். உன் வேலையில்தான். எல்லாம் உன்னைப் பத்தியே பேசறாங்க."

"சந்தோஷம் மாயா. டாக்டர் நரேந்திரநாத் ரொம்ப நல்லவர். சாரங்கபாணிட்டதான் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துக்கோ. மிருணாளினி, அருணா எல்லாரையும் கேட்டதா சொல்லு. சுனில் எப்படி இருக்கான். மாயா, ஐ மிஸ் ஆல் ஆஃப் யூ மாயா. அப்பாட்ட சொல்லு. கூடிய சீக்கிரம் உங்களையெல்லாம் வந்து பார்க்கறேன்னு சொல்லு. மாயா, பணம் ட்ராப்ட் அனுப்பறேன்னு சொல். அப்பா இன்னும் கோபமாக இருக்காரா?"

"நீ வந்தா சமாதானமாயிடுவார்" என்றாள் மாயா. போனை வைத்ததும் பிரமிப்பாக இருந்தது.

கொஞ்ச நேரத்தில் மறுபடி ஒலித்தது.

"மாயா இருக்காங்களா?" – சுனில்.

"சுனில்! இப்பதான் பேசினேன் மேனகாகூட."

"டெலிபோன் நம்பராவது கேட்டு வெச்சுக்கிட்டியா."

"இல்லை."

"அடுத்த முறை கேட்டு வெச்சுக்க. நான் போன் பண்ணது வேற விஷயத்துக்கு. ரிஸைன் பண்ணிட்டேன். அமெரிக்கா போகப் போறேன்!"

"அமெரிக்காவா!"

"எனக்கு அட்மிஷன் கிடைச்சிருக்கு. ட்யூஷன் ஃபீஸ் வெய்வரோட உடனே ஜாய்ன் பண்ணணும் மாயா. எனக்கு என்ன தீர்மானிக்கிறதுன்னே தெரியலை."

"ஏன்?"

"உன்னை விட்டுட்டுப் போக விருப்பமே இல்லை மாயா."

மாயாவுக்குத் திடீர் என்று அந்தப் பய அலை நெஞ்சில் மோதியது.

# 5

“சுனில் எனக்குப் பயமா இருக்கு.”

“என்ன பயம்?”

“என்னைத் தனியா விட்டுட்டுப் போறியே.”

“நீயும் வந்துரேன்.”

“அமெரிக்காவுக்கா? அது எப்படி சாத்தியம்?”

“டூரிஸ்ட் விசாவில் வந்துரு. பார்த்துக்கலாம். உங்க அக்கா இருக்கா. மேலும் நான் இப்பவே போகப் போறதில்லை. செப்டம்பர்ல தான். இன்னும் கொஞ்ச நாள் இருக்கில்லை. கல்கத்தாவில் போய் ஜாய்ன் பண்றாப்பல பாவலாக் காட்டலாம்னு பார்த்தேன். அவங்க ஒத்துக்கலை. அதனால ரிஸைன் பண்ணிட்டேன்.”

மாயா அவன் கையைப் பற்றினாள்.

“பயப்படாதே. உங்க அக்கா டெலிபோன் நம்பர், விலாசம் கேட்டு வெச்சுக்க. அமெரிக்க போன உடனே சந்திக்கணும்.”

மாயாவுக்குக் கொஞ்சம் பொறாமையாக இருந்தது.

“சும்மா அக்காகூட சுத்த வேண்டாம். போன காரியத்தை, படிப்பை முடிச்சிட்டு திரும்பிரணும்.”

சுனில் சிரித்து “அப்படியே ஆகட்டும் மகாராணி” என்றான்.

“கல்யாணத்தை பத்தி அப்பா – அம்மாகிட்ட எதும் இப்ப பேச்சை எடுக்க வேண்டாம்.”

“மாயா, எனக்காகக் காத்திருப்பியா?”

“காத்திருக்கேன் சுனில்.”



வாரக் கடைசியில் அவளை ஆடியோ லாப் என்கிற இடத்துக்கு அழைத்துச் சென்று ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள்.

“இதைப் படி.”

ஒரு மைக் முன்னால் படிக்கச் சொன்னாள், அந்தப் பெண்மணி.

“இது என்ன சிஸ்டர்?”

“வாய்ஸ் ப்ரிண்ட் எடுக்கணும்.”

“அது எதுக்கு?”

“எல்லோருக்கும் லாப்ல வாய்ஸ் எடுக்கணும்னு சாரங்கபாணி சார் உத்தரவு.”

“எதுக்கு?”

“அவங்க கேக்கறாங்க. நாங்க எங்க கடமையைச் செய்யறோம். அதிகம் கேள்வி கேட்கக்கூடாது. பதில் கிடைக்காது. அவங்கவங்க காரியத்தைப் பாத்துக்கிட்டு போயிக்கிட்டே இருக்கணும். சம்பளம் வாங்கற இல்ல? படி” என்றாள்.

“ஒவ்வொரு நூலும் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்டு பத்து பகுதிகளாக உள்ளது. இவற்றுள் ஒவ்வொன்றும் பத்து என்று குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு பத்தும் தனித்தனியான கட்டுக்கோப்பை உடையது. இது பொருளமைப்பினாலேயோ இதனுள் அமைந்த பத்துப் பாடல்களில் ஆட்சி பெறும் ஏதேனும் ஒரு சொல்லினாலேயோ பெயரிடப்பட்டிருக்கின்றது...”

மாயாவுக்கு எதற்காக ஒரு மைக்கின் முன்னால் ‘ஐங்குறுநூறு’ பற்றிய கட்டுரையைப் படிக்கிறோம் என்று புரியவே இல்லை. அங்கிருந்து அவளை அழைத்துச் சென்று அடுத்த அறையில் பலவித கோணங்களில் போட்டோ எடுத்தார்கள். நேர்ப்பார்வை, பக்கவாட்டுப் பார்வை, பாதி உடல், முழு உடல்.

“இத்தனை போட்டோவா?”

“பைல் கம்ப்ளீட் ஆகுமில்ல.”

“இன்னும் என்ன என்ன டெஸ்ட் பாக்கியிருக்கு?”

“எனக்குத் தெரியாது” என்றார் போட்டோக்காரர். அந்த ஆசாமிக்கும் காமிராவை அட்ஜஸ்ட் பண்ணும் கை சின்னதாக இருந்தாற்போலத் தோன்றியது மாயாவுக்கு. இது என்ன இந்த லாபில் எல்லாருமே அப்படியா என்பதற்குள் போட்டோக்காரர் பைக்குள் கை போட்டுக்கொண்டு, காமிரா கழுத்தில் திருகி இருந்த லென்ஸைக் கழற்றி பைகளில் போட்டுக்கொண்டு “நாளைக்கு பிரிண்ட் எடுத்தப்புறம் காட்டறேன்” என்றார். வெளியே வந்தபோது சாரங்கபாணி எதிர்ப்பட்டார்.

“மாயாதானே?”

"ஆமா சார்."

"மேனகா சிஸ்டர்?"

"ஆமா சார்."

"ஏதாவது உதவி வேணும்னா என்ன வந்து பாரு. எதாவது, எப்பவாவது, நரேந்திரன் என்னைப்பத்தி இல்லாததும், பொல்லாததும் சொல்லியிருப்பான். எதையும் நம்பாதே."

அவர் கையில் சிறிய இன்ஜெக்ஷன் பாட்டில் அளவுக்குச் சிவப்பாக ரத்தம் வைத்திருந்தார். "என்ன பார்க்கறே? முயல் ரத்தம். மனுஷா ரத்தம் இல்லை. பயப்படாதே."

அவர் சென்ற பிறகு மிருணாளினி மாயாவைக் கண்டு கொள்ளாமல் அன்னியத்தனமாகக் கடந்து சென்றாள். மாயாவுக்கு மேனகா போனில் சாரங்கபாணியிடம் ஜாக்கிரதையாக இருக்கும்படி சொன்னது ஞாபகம் வந்தது.

நரேந்திரநாத்தின் அறைக்குள் அவள் அடிக்கடி வேலை நிமித்தமாகச் செல்ல வேண்டியிருந்தது. மெல்ல மெல்ல அவரிடம் பழகப் பழக ரொம்ப விஷயம் தெரிந்தவர், தன் துறையில் மட்டுமின்றி பரந்த உலகியல் அறிவும் உள்ளவர் என்பது புரிந்தது. தீர்க்கமான நாசி, தீர்க்கமான குரல். கொஞ்சம் கொஞ்சமாக அவர் குரல் நடையுடை பாவனைகள் எல்லாவற்றிலும் லேசான வசீகரம் இருப்பதைக் கவனிக்கத் தொடங்கினாள். அவர் அவள் மேசையைக் கடந்து செல்லும்போது நின்று ஏதாவது கேள்வி கேட்பார். அப்படிக் கேட்கும்போது ஒரு படபடப்பும், தன் உடலைப் பற்றியும், தோற்றத்தைப் பற்றியும் அதிகப்படியான ப்ரக்ஞையும் தனக்கு ஏற்படுவது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை. டாக்டரின் கையெழுத்தை அடிக்கடிப் பார்த்தாள். வலது பக்கம் சாய்ந்த தெளிவான கையெழுத்து. அந்த ஆராய்ச்சி நிலையமே அவரைச் சுற்றித்தான் இயங்குவதை அவளால் பத்து நாட்களில் தெரிந்து கொள்ள முடிந்தது. எதற்கெடுத்தாலும் 'நரு ஸார்ட்ட ஒரு வார்த்தை கேட்டுடுங்க. அவர் ஓக்கே சொல்லிட்டார்னா போர்டில பாஸ் ஆயிடும்.' சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் யாரும் முடிவெடுக்காமல் நருவின் ஒரு வார்த்தைக்குக் காத்திருப்பது விநோதமாகப் பட்டது.

இது சாரங்கபாணிக்குப் பிடிக்கவில்லை என்பதும் தெளிவாயிற்று. 'அவனும் டைரக்டர். நானும் டைரக்டர். ஏன் ஜனங்க என்னைக் கேக்கமாட்டேங்குது?' என்று மிருணாளினியிடம் அடிக்கடி சொல்வாராம் சாரங்கபாணி. இரண்டு கோஷ்டி இருப்பதைக் கவனித்தாள். சாரங்கபாணி கும்பல் – நரு கும்பல் என்று.

"நீ எதிலயும் சேராதே. அடுத்த சேர்மன் யாருன்னு தெரியாது. ரெண்டு பேருக்கும் சான்ஸ் இருக்கு. கவர்னிங் கவுன்ஸில்தான் டிஸைட் பண்ணணும்" என்றான் சுனில்.



"நரேந்திரநாத் வருவார்ங்கறாங்க."

"நியாயமா பார்க்கப் போனா அவர்தான் வரணும். ஆனா சாரங்கபாணி டார்க் ஹார்ஸ். சொல்லவே முடியாது. ரெண்டு பேர்க்கும் ப்ரீதியா இரு."

"கஷ்டம். சாரங்கபாணி ரூமுக்கே போகக்கூடாதுங்கறார்."

"சிக்கல்தான்."

சனிக்கிழமை வீடு திரும்பியபோது அப்பா, "மேனகா போன் பண்ணியிருந்தாளா உனக்கு?"

"ஆமாம்ப்பா ஆபீஸ்ல."

"அதை ஏன் என்கிட்ட சொல்லவே இல்லை."

"ஒண்ணும் பெரிசா விஷயமில்லை. ஆபீஸ் விஷயம்தான் பேசினா."

"எங்களைப்பத்தி ஏதும் சொல்லலை?"

"சொன்னாப்பா. அப்பா இன்னும் கோபமா இருக்காரான்னு கேட்டா. கோபமில்லை. .. நீ வந்தா சமாதானமாய்டும்னேன்."

"என்ன சொன்னா?"

"வரேன்னா. செப்டம்பர்லேயோ எப்பவோ. அவ போன் பண்ணது எப்படி தெரியும்?"

"லெட்டர் எழுதியிருக்கா பாரு" என்று காட்டினார்.

அதிகம் செய்தியில்லாமல் வாத்சல்யம் கலந்த கடிதம். சின்னச் சின்ன தகவல்கள். பக்கத்திலே 'மால்' என்று பெரிய ஷாப்பிங் சென்டர் இருப்பது, தமிழர்கள் சேர்ந்து முருகன் கோயில் அமைப்பது எல்லாம் எழுதியிருந்தாள். எல்லாரையும் பற்றி அடிக்கடி ஞாபகம் வருவதாகவும் கூடிய விரைவிலேயே வருவதாகவும் மாயாவுக்கு போன் பண்ணுவதாகவும் எழுதியிருந்தாள். அவள் வீட்டின் போட்டோவும், சமையல் அறைக்குள் ஜீன்ஸ் போட்டுக் கொண்டு அவள் நிற்கும் போட்டோவும் அனுப்பியிருந்தாள்.

"பெருத்திருக்கா. உண்டாயிருக்காளா?" என்றாள் அம்மா.

"அதைப்பத்தி ஒண்ணுமே எழுதலையே அம்மா."

"எழுதுவா, அடுத்த கடுதாசியில. மாயா உன்னை ஒண்ணு கேக்கணும்" என்றாள் அம்மா தனியாக இருக்கும்போது.

"என்னம்மா?"

"எங்களை விட்டுப் போய்டுவியா?" அம்மா அவள் இரு கரங்களையும் பற்றிக்கொண்டாள்.

"ஏம்மா?"

"அந்தப் பையன் அமெரிக்கா போகப் போறானாமே."

"யாரு?"

"அதான் அந்த சுனில்."

"அவனை எப்பப் பார்த்தே?"

"போன் பண்ணியிருந்தான். ஏதோ சௌக்கியமா இருக்கியாப் பான்னு கேட்டேன். அமெரிக்கா போகப் போறேன் மாமின்னான். எனக்கு நீயும் கூட போய்டுவியோன்னு பயமா இருக்கு. மாயா, எங்களை விட்டுப் போய்டாதே வயசான காலத்தில."

"போறதா இருந்தா உங்களையும் கூட்டிண்டுதான் போவேன்ம்மா" என்றாள்.

"அப்பா வரமாட்டார். அதுக்குத்தான் வேற வழி இருக்கு."

"என்னம்மா?"

"உள்ளூர்லயே யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிறதுதான். இந்த சுனில் வேண்டாம்."

ஏனோ அந்த வாக்கியம் அவளுக்குக் கோபமோ, அதிர்ச்சியோ தரவில்லை. "பார்க்கலாம்" என்றாள்.

திங்கள் ராத்திரி ஏழு. டாக்டர் தரு கொடுத்த தீஸிஸ் அனைத்தும் அச்சடித்துக்கொடுக்க ஏழு மணியாகிவிட்டது. அவர் 'அவுட் ட்ரே'யில் வைத்தபோது ஆபீசில் மற்ற எல்லோரும் போய்விட்டார்கள். அவர் அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அனைக்காமல் போய்விட்டாரோ என்று அறைக்குள் நுழைந்தபோது திடுக்கிட்டாள். டாக்டர் தீவிரமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். இங்கிருந்து அவர் முதுகு தெரிந்தது. அவர் முன்னே ஒரு டேப்ரிக்கார்டின் சக்கரம் சுழன்றுகொண்டிருக்க அதிலிருந்து வரும் குரலைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஒவ்வொரு நூலும் பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளாக உள்ளது..."

திரும்பத் திரும்ப அந்த இடத்திலேயே நிறுத்தி திரும்பத் திரும்ப போட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார். "ஒவ்வொரு நூலும் பத்துப் பகுதிகளாக உள்ளது. ஒவ்வொரு நூலும் பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளாக உள்ளது."

அவள் செய்வதறியாமல் நைசாகத் திரும்பிச் செல்ல அவர் அங்கிருந்தே "வா மாயா" என்றார்.

திடுக்கிட்டு நின்றாள். "உன் குரல் நல்லாவே இருக்கு. ரொம்ப சுலபம்" என்றார்.

மாயா தன்னையறியாமல் அவரை நோக்கி நடந்தாள்.



# 6

மாயா டாக்டர் நரேந்திரனை மெல்ல அணுகும்போது தன்னிச்சை யில்லாமல் நடத்தப்படுவதுபோல உணர்ந்தாள். இருந்தும் அவரை நோக்கிப் போக வேண்டியது ஒரு கட்டாயமாகவும் இருந்தது.

"வா மாயா, உன் குரலைத்தான் அலசிக்கிட்டு இருக்கேன். ஃபண்டமெண்டல் ஃப்ரீக்வன்ஸி..."

அவர் தன் மேசையருகிலிருந்த கம்ப்யூட்டர் டெர்மினலின் பச்சைத் திரையை உசுப்பிக் கேட்க...

"512 'மிடில் ஸி'க்கு அருகிலே நல்லா பாடுவியா நீ"

"இல்லை டாக்டர். அக்காதான் அதெல்லாம் பாட்டு டான்ஸ் எல்லாம். அவ தொடாதது எதுவும் இல்லை."

"உன் பேச்சிலகூட அவ சாயல் இருக்கு. ஆச்சரியம்தான்! மறுபடி மேனகா வேலைக்கு சேர்ந்துட்டாப்பல. நீ மாயாதானே?"

"ஆமாம்" என்றாள் சிரித்துக்கொண்டு. சன்னல்திரைகளை அவர் விலக்க சென்னையின் ராத்திரி சௌந்தர்யங்கள் ஓசைகள் வடிகட்டப் பட்டு வெறும் வெளிச்சங்களாகத் தெரிய, "எத்தனை கார்!" என்றாள்.

"நியூயார்க்கில அப்படியே மாலை கோத்தாப்பல இருக்கும். பம்பாய் மரீன் ட்ரைவிலயும்." அவளருகில் வந்து நின்றார்.

"மாயா, வேலை பிடிச்சிருக்கா?"

"அபிப்ராயம் சொல்ல அத்தனை நாளாகலை."

"இங்க என்ன ஆராய்ச்சி பண்றோம்னு தெரியுமில்லை?"

"யாரும் சொல்லவே இல்லை ஸார்."

"மனசில இருக்கற எண்ணங்களுக்கெல்லாம் ஒரு பிரதி எடுக்கறோம். அவ்வளவுதான். சிம்பிள்!"

"புரியலை."

"டவுன் லோடிங்னு பேரு அதுக்கு. இப்ப நீ யாரு?"

"மாயா."

"இந்த மாயாங்கறது ஒரு மன பிம்பம். உன் ஞாபகங்கள். சின்ன வயசிலிருந்து சேர்த்து வைத்த வார்த்தைகள், அனுபவங்கள், பார்த்த கண்ணாடிகள் எல்லாமே உன் மூளைக்குள்ள மின்ரசாயன மாறுதல்களாக, சின்ன மின் துணுக்குகளாக இருக்குது. பார்க்கப் போனா உன் உருவம் உள்ளடக்கம் எல்லாமே மூளைக்குள்ள இருக்கிற கெமிஸ்ட்ரிதான். அதை அப்படியே பிரதியெடுக்க ஆராய்ச்சிகள் பண்ணிக்கொண்டிருக்கிறோம்."

"பிரதியெடுத்து . . .?"

"ஒரு கம்ப்யூட்டருக்கு அந்தப் பிம்பத்தை மாற்றிவிடவும் முயற்சிக்கிறோம்."

"மாற்றி?"

"உனக்கு அப்பாலும் ஒருத்தியை உருவாக்க முடியும்! இப்ப உன் குரலை அலசி ஒரு கம்ப்யூட்டரைக் கொண்டு மறு உருவாக்க முடியும். அதுபோல உன் மனத்தையும்!"

"அப்படியா!"

"பத்து நாள்ல பாரு நீயே உன்னுடன் பேசமுடியும்."

"விந்தைதான்" என்றாள். உள் மனத்தில் இடத்தை விட்டு விலக வேண்டும் என்று உறுத்தியது.

"மாயா!" அவள் காதருகில் கேட்க திடுக்கிட்டாள்.

நரேந்திரநாத் அவளருகில் மிக அருகில் நின்றுகொண்டிருந்தார். "மேனகாவே தான் நீ. அவ என்கிட்ட... என்கிட்ட" தயக்கத்துக்குப் பின் தொடர்ந்தார். "பரிவா இருந்தா, ஒரு விதத்தில் அவளை ரொம்ப ரொம்ப, அது என்ன வார்த்தை, விரும்பினேன். ஒருமுறை அவகிட்ட என்னைக் கல்யாணம் செய்துக்கறியான்னுகூட அபத்தமா கேட்டிருக்கேன். அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா?"

மாயா காத்திருக்க,

"டாக்டர், யு ஆர் லைக் மை ஃபாதர். எனக்கு நிஜ அப்பாவைப் பிடிக்காது. அவருக்கும் என்னைப் பிடிக்காது. இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் வெறுத்தோம். அதனால ஒரு ஆதர்ச அப்பாவா உங்களை நினைச்சுக்கிட்டு வாத்சல்யத்திலதான் உங்ககிட்ட பழகினேன். அந்த ஆதர்சத்தைக் கலைக்க விருப்பமில்லைன்னா. தப்பா எடை போட்டுட்டேன் அவளை. இப்ப உன்னைப் பார்த்ததும் என் மகள் திரும்பக் கிடைச்சாப்பலதான். அதனாலதான் உன்னை அடிக்கடி கூப்பிடறேன். உன்னோட பேசறேன். உன்னைப் பொறாமையா அடை காக்கறேன்! என்னைத் தப்பா நினைச்சுக்கக் கூடாது நீ."

"சரி" என்றாள்.



"கை குடு. வி ஆர் ஃப்ரண்ட்ஸ்" என்று அவள் கையைப் பற்றினார்.

இறுக்கத்தில் விருப்பம்தான் இருந்தது.

மாயா ஒருவாறு தன்னை உதறிக்கொண்டுதான் அந்த இடத்தை விட்டு விலக வேண்டியிருந்தது.

போனைப் பார்த்து, "போன் பண்ணிக்கலாமா?" என்றாள்.

"தாராளமா."

"சுனில், மாயா பேசறேன்."

"என்ன?"

"என்னை வந்து பிக் அப் பண்ணிக்க முடியுமா?"

"எங்க?"

"ஆபீஸ்ல."

அவள் பேசுவதையே பார்த்துக்கொண்டிருந்தார்.

"அவன் எதுக்கு, நான் ட்ராப் பண்றேனே?"

"இல்லை ஸார், எதுக்குத் தொந்தரவு."

"நோ ப்ராப்ளம் அட் ஆல்."

"இல்லை ஸார், சுனிலை வரச்சொல்லிட்டேன்."

"அவனுக்கு மெஸேஜ் கொடுத்துரலாம்."

"இல்லை ஸார். வேண்டாம்."

"ஏன் வேண்டாம்?

"எனக்கு வந்து..."

"என்ன?"

"என்னமோ பொருத்தமா படலை!"

"ஆல்ரைட் ஆல்ரைட்" அவர் முகம் சுருங்கி, "உங்ககூட சகவாசம் வெச்சுக்க விரும்பலைங்கற. பரவால்லை."

"அய்யோ! அந்த அர்த்தத்தில சொல்லலை ஸார். வாங்க உங்க கார்லயே போகலாம்."

"வேண்டாம், சுனில் பின்னால மோட்டார் சைக்கிள்ல போறதுதான் உனக்கும் உன் வயசுக்கும் பொருத்தம்."

சுனிலிடம் சொன்னபோது, "முணுக்குன்னா கோவிச்சுப்பாரு ஆனா நல்ல மனுஷன்" என்றான்.

"எதுமே புரியலை. குழப்பமா இருக்கு சுனில்" என்றாள்.

மோட்டார் சைக்கிள் பின்னால் ராத்திரி வேளையில் அவன்

தோளைத் தொட்டுக்கொண்டு, சற்றே அபாயகரமாகப் போக்குவரத்தில் ஊடாடிப் பயணம் செய்வது, இதயத் துடிப்பை அதிகரித்தது.

"ரூமுக்கு வரியா?"

"எதுக்கு?"

"சும்மாதான்."

"சும்மா எதுக்கு உன் ரூமுக்கு நான் வரது?"

"அமெரிக்கா போயிடறேன். அப்பறம் சந்தர்ப்பமே கிடைக்காதே."

"எதுக்கு?"

"சந்திக்கிறதுக்கு."

"சந்திச்சாச்சே."

"உதடுகள் சந்திக்கலையே."

"போ. வேற வேலை இல்லை."

லேசாகத்தான் தடுத்தாள். பாதை மாற்றி வாகனத்தை அவன் அறை இருக்கும் திருவல்லிக்கேணிப் பக்கம் செலுத்தினான்.

தையல் கடையிலிருந்து சாவி வாங்கிக்கொண்டபோது . . .

"நல்லவேளை, என் பார்ட்னர் இல்லை. சினிமா போயிருக்கான்."

தெரு இரைச்சல்களைச் சன்னல் கதவுகளால் மழுப்ப முடியவில்லை. மேல் சன்னல் வழியாகப் பக்கத்து புடவைக் கடை நியான் கசிந்தது.

"இந்த ரூம்ல எப்டி இருக்க முடியறது?"

"பழகிப்போச்சு."

"உக்காரு" என்று நாற்காலியைத் தட்டினான். சுவரில் ஒரு பெரிய 'ராக்' பாடகனின் படம் ஒட்டியிருந்தது. டைம்பீஸ் நாலு அம்பதில் நின்று போயிருந்தது. "எதாவது சாப்ட வாங்கிட்டு வரட்டுமா?"

"இல்லை சுனில், போகலாம். உன் ரூமைப் பாத்தாச்சில்லை. மேனகா இங்க வந்திருக்காளா?"

"ஓ."

"எதுக்கு வந்தா?"

"ஜெராக்ஸ் பண்ணறதுக்கு."

மறுபடி அந்தப் பொறாமை உணர்வு!

"உங்கக்கா ரொம்ப ரொம்ப அழுத்தம். யாருக்கும் சொல்லாம கல்யாணம் பண்ணிட்டு போயிட்டா பாரு. அதுதான் வருத்தம். அமெரிக்கா போனதும் முதல்ல கேக்கத்தான் போறேன். இப்டி எங்களைத் தவிக்க விட்டு திடுதிப்புன்னு புறப்பட்டது, ஷாக் கொடுத்தது ஞாயமான்னு. உக்காரு. ஏன் ஒரு மாதிரியா தவிக்கிற?



கற்பழிப்பேன்னு பயப்படறியா."

"அதுக்கு உண்டான சாமக்கிரியைகள் இல்லையே!"

"டோண்ட் பி ஸில்லி."

சுனில் தோளில் கை வைக்க, அதை அகற்றினாள்.

"தொடக்கூடாதா?"

"கூடாது."

"ஆல்ரைட். உன்ன தொடாது முத்தம் கொடுக்கலாமில்லையா? அதுக்கு ஒரு முறை இருக்கு" என்று குனிந்து உதடுகளில் உதடுகளால் லேசாக ஒத்தி, "இதுக்குப் பேர் உமார்கய்யாம் முத்தம்."

அவள் விலகிக்கொள்ள கையைப் பிடித்தான். முதலில் திமிறினாள். கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் திமிறலின் உத்வேகம் குறைந்து "சுனில் வேண்டாம் வேண்டாம்" என்ற வார்த்தை எதிர்ப்பு களுக்கு வந்து அதுவும் மழுப்பப்பட்டு, அப்படியே நாற்காலியிலிருந்து இருவரும் விழுந்தார்கள்.

நியான் வெளிச்சம் போட்டுப் போட்டு அணைக்க, அவன் கைகள் அவள் முதுகை வளைக்க, தன்னுடன் ஒட்ட வைத்துக் கொள்ள, நெஞ்செல்லாம் அவனை நிரப்பினாற்போல மூச்சு திணறிய போது, "சுனில் ப்ளீஸ் வேண்டாம்."

"என்ன பயமா?"

"ஆமாம். எதாவது எசகுபிசகா ஆய்டும்னு."

"ஆகாது. என்ன தொட்டுப் பார்க்கறேன். அவ்வளவுதானே?"

இப்போது அவன் அவளிடம் என்னவெல்லாம் சுதந்திரம் எடுத்துக் கொள்கிறான் என்று தெரியாமல் அப்படியே அவளை நாடாக் கட்டிலில் பெயர்த்தெடுத்து வைத்தான். இருவரிடமும் ஒருவித பிரளய கால அவசரம் வந்துவிட அவன் மூச்சுக் காற்றும் வியர்வையும் அவள் மேல் பரவ, "சுனில், வேண்டாம், ப்ளீஸ் இதுக்கு மேல வேண்டாம்."

"சரி சரி" என்று சொல்லிக்கொண்டே அவன் மேலும் அந்தப் புதிய புத்தகத்தின் அடுத்த பக்கங்களைப் புரட்டினான்.

மூச்சுத் திணற மலையுச்சியில் கான்கிரீட் உச்சத்தை நோக்கி வண்ணப்படிகள் கொண்ட ஏணி வைத்திருக்க, படியேறிக்கொண்டே போனான். கடைசிப்படி வந்து குதித்தான்.

மாயாவுக்கு மறுபடி காதில் அந்தப் பேரிரைச்சல் கேட்க, மயக்கம் அவளைச் சூழ்ந்துகொண்டது.

# 7

கண் விழித்தபோது ஆஸ்பத்திரியின் அசெப்டிக் துல்லியம். வெள்ளைத் திரையை விலக்கி எட்டிப்பார்க்க சுனில் தெரிந்தான். எத்தனை நேரம், எத்தனை நாள் கழித்து அது என்று புரியவில்லை. தலைவலி பிளந்தது.

சுனில் கவலையுடன், "எப்டி இருக்கே?"

"என்ன ஆச்சு?"

"என் ரூமுக்கு வந்தே." யோசித்தாள்.

"ஞாபகம் இருக்கா?"

"இல்லை."

"போச்சுரா, எதுவரை ஞாபகம் இருக்கு?"

"பழ வாசனை."

"பழ வாசனையா?" என்றான் புரியாமல்.

'இதற்குள் டாக்டர் உள்ளே வந்து "கண்விழிச்சுட்டாங்களா?" என்றான். அந்த டாக்டரை முன்பே பார்த்தது லேசாக நினைவலையில் புலம்பியது.

"மிஸ் மாயா இந்த மாதிரி மயக்கம் வர்றது எத்தனாவது முறை?"

மாயா யோசித்துப் பார்க்க, சூழ்நிலை புரிந்தது. சுனிலுடன் ஒட்டிக்கொண்டு கட்டில் ஓரம் நினைவுக்கு வந்து அவனை அதட்டலாகப் பார்த்தாள்.

அவன் புரிந்துகொண்டு, " ஸாரி இத்தனை தொட்டாச் சுருங்கியா இருப்பன்னு தெரிஞ்சா ஒன்னைத் தொட்டிருக்கவே மாட்டேன்."

"மூன்றாவது முறைன்னு நினைக்கிறேன் டாக்டர். இரண்டு நாள்ல."

"ஷ்யுர் இதுக்கு முன்னாடி இந்த மாதிரி வாழ்க்கையில் வந்ததே



இல்லை?"

"நிச்சயம் இல்லை டாக்டர்."

சுனில் "தலைவலிக்குதா கண்ணு" என்று கேட்டான்.

"ஆமாம் ரொம்ப."

சுனிலை டாக்டர் பார்த்து "நாளைக்கு ஒரு ஸ்கேன் எடுத்துரலாம்" என்றான்.

"எங்க லாப்ல எடுத்துட்டாங்க டாக்டர்."

"எந்த லாப்ல?"

"ஸி.எம்.ஆர்.ஐல."

"நான் அல்ட்ரா சவுண்டை சொல்லலை. ஸி.டி.ஸ்கான்."

"அது எடுத்ததா தெரியலை டாக்டர். ஏதாவது சந்தேகப்படறிங்களா?"

"மண்டைக்குள்ள கட்டி மாதிரி இருந்தாக்கூட இர்ரிடேட் ஆச்சுன்னா இந்த மாதிரி 'ஆரா' ஏற்படும். சாதாரணமா இது எபிலெப்ஸியோட அறிகுறிகள்தாம். ஆனா சில மருந்துகள் இந்த மாதிரி எபிலெப்டிக் ஸீஷர் மாதிரி விளைவுகளை ஏற்படுத்தும். எனக்கு ஒண்ணும் புரியலை. உங்க லாப்ல இவ என்ன வேலை செய்யறா?"

"ரிஸர்ச் அஸிஸ்டெண்ட்."

"அதுக்கா இத்தனை டெஸ்ட் எடுத்தாங்க?"

"ஆமா."

"வேடிக்கை."

"அது எங்க லாப்ல தொன்று தொட்ட வழக்கம். இந்த மாதிரி பலவித பரிசோதனைகள் செய்யறதால ஏதாவது எக்கச்சக்கமா நேர்ந்துட்டா உடனே சிகிச்சை தர ரத்த க்ரூப், அலர்ஜி எல்லாம் தெரியணுமில்லையா?"

"மாயா! உன் மேல டெஸ்ட் எடுக்கறப்ப ஏதாவது டிஷ்யு டெஸ்ட் அல்லது அலர்ஜி டெஸ்ட்டுன்னு எடுத்தாங்களா? வெஜைனல் ஸ்வாப்?"

"புரியலை" என்றாள் மாயா.

"ஏதாவது டெஸ்ட் இன்ஜெக்ஷன் மாதிரி போட்டாங்களா ஸப் க்யுட் டேனியஸ்ஸா, தோல் மேல."

"ஒரு முறை செய்தாங்க."

"யாரு?" என்றான் சுனில்.

"மலையாளத்துக்காரப் பொண்ணு."

"விசாரிக்கறேன்" என்றான் சுனில்.

"டாக்டர்! இது என்னவா இருக்கும்?"

"ஏதோ மருந்தினுடைய ரியாக்ஷனாத்தான் இருக்கும்னு நம்பறேன். மத்தபடி எல்லாம் நார்மலா இருக்கு. ஏதோ ஒத்துக்கலை. ஒரு வாரம் பைனாப்பிள், வாழைப்பழம் இதெல்லாம் சாப்பிடாம இருந்து பாரு. தினம் நெய் சேர்க்காம மட்டா சாப்பிடு ராத்திரி. டியாஸிபாம் எப்பவாவது சாப்ட்டிருக்கியா, காம்போஸ்னு கேள்விப்பட்டிருக்கிறயா?"

"சாப்ட்டிருக்கேன் டாக்டர்!"

"அது ஒண்ணு எழுதித் தரேன் போட்டுக்க. நிம்மதியா சீக்கிரமே தூங்கிடுவ. மோட்டார் சைக்கிள், சைக்கிள்ல போகாதே. ஸ்விம்மிங் பண்ணாதே. கூட்டமா இருக்கிற இடத்துக்கும் போகாதே."

"மத்யானம் அந்த ரெஸ்டாரண்டுக்கு அழைச்சுப் போனது தப்பாப் போச்சு."

"ஒரு வாரம் ஜாக்கிரதையா இருந்தா அலர்ஜெண்டைக் கண்டுபிடிச்சுரலாம்."

"ஆபீஸ் போகலாமா டாக்டர்."

"போகலாம். அசதியா இல்லைன்னா போகலாம். தனியாகப் போக வேண்டாம். உங்க பேரு என்ன சொன்னீங்க?"

"சுனில்."

"சுனில் அழைச்சுட்டுப் போகட்டும். ஆனா மோட்டார் சைக்கிள்ல இல்லை."

மாத்திரை சாப்பிட்டதில் மறுதினம் காலை அம்மா இருமுறை எழுப்பியும் தூக்கம் கண்ணைக் கவ்வியது. ஆபீஸ் போக பிரயத்தனமாக எழுந்ததும் சுறுசுறுப்பாகிவிட்டாள். அவசரமாகக் குளித்து, உடை உடுத்திக்கொண்டு, டிபன் சாப்பிட்டுவிட்டு, இரண்டாவது பஸ்ஸைப் பிடித்துவிட்டாள். சுனில் பஸ்ஸின் பின்னாலேயே வந்தான்.

மேசை மேல் சாரங்கபாணி கூப்பிடுகிறார் என்று குறிப்பு இருந்தது. அதை அவள் கோம்ஸ் மேசைக்கு அனுப்பினாள். கோம்ஸ், "இந்த சீட்டு உனக்காக" என்றாள். செய்வதறியாமல் திகைத்து மிருணாளினியைப் பார்த்தாள்.

"ஆபீஸ் பாலிடிக்ஸ்ல நாமல்லாம் மாட்டிக்கக் கூடாது. உயர் அதிகாரி யார் கூப்பிட்டாலும் போகணும்."

"அவர் வேண்டாங்கறாரே."

"கண்டுக்காதே கண்ணு" என்றாள்.

மிருணாளினி அன்று ஒரு மாதிரியாக டிரஸ் பண்ணியிருந்தாள் சற்றே மார்பு தெரியும்படியாக. ஆபீசில் எப்படி அனுமதிக்கிறார்கள் என்பது வியப்பாக இருந்தது. அவள் கையை எப்போதும் சட்டையில் பக்கவாட்டுப் பைக்குள் போட்டுக்கொள்வதைக் கவனித்தாள்.



சாரங்கபாணி போனில் பேசிக்கொண்டிருந்தவர், பென்சிலால் அவளை உட்காரு என்று சாடை காட்டினார். போனை வைத்ததும், 'ரிப்போர்ட் ஏன் இன்னும் தயாராகலை?"

"எந்த ரிப்போர்ட் ஸார்?" என்றாள். அவளை அறியாமல் கைகள் நடுங்கின.

"வெள்ளிக்கிழமை... வெள்ளிக்கிழமை கோம்ஸ் கிழவி உனக்கு ரிப்போர்ட் தட்ட கொடுக்கலை?"

"இல்லை ஸார்."

"நாசமாப் போச்சு. இந்த ஆபீஸ்ல என்ன வேலை நடக்குது? எல்லாம் நரேந்திரநாத் கிழவாடி கொடுக்கிற இடம். உன்னையும் கணக்கு பண்றான் போலிருக்கே?"

"ஸார்?"

"ராத்திரி ரொம்ப லேட்டாமே?"

அவள் பதில் சொல்லாமல் நிற்க,

"என்ன பார்க்கறே? இந்த ஆபீஸ்ல நடக்கிறது அத்தனையும் எனக்குத் தெரியும். புதுசா வந்திருக்கே. யார் கட்சியும் சேராதே. நருகிட்ட ஜாக்கிரதையா இரு. ராவேளை தனியா அவன் ரூமுக்குப் போகாதே. இப்ப சொல்றேன், உங்க அக்காகிட்ட அவன் மிஸ் பிஹேவ் பண்ணிட்டு செமத்தியா வாங்கிட்டான் தெரியுமில்லை."

அவள் மௌனமாக இருந்தாள்.

"பாத்தா சாது பொண்ணா இருக்கே. ஆபீஸ்ல யார் நல்லவங்க, யார் பொல்லாதவங்கங்கறது சீக்கிரமே தெரிஞ்சிரும், என்ன?" என்று அருகில் வந்து தோளில் தட்டி, 'பி சியர்ஃபுல். உனக்கு என்ன வேணும்னாலும் கேளு' என்றார்.

அறைக்குள் புத்தகங்கள் கண்ட மாதிரி இறைந்து கிடக்க அதை ஒவ்வொன்றாக எடுத்து வைத்தவர், 'ஒரு ஹெல்ப்' என்றார்.

"என்ன ஹெல்ப் ஸார்?"

தனக்கு அருகே இருந்த புத்தகங்களையெல்லாம் காட்டி, 'அலமாரியில அடுக்கி வெச்சுரு. என் பேப்பர் எழுதியாச்சு.'

அவள் புத்தகங்களைப் பொறுக்க, சிகரெட் பற்ற வைத்து ஊதினார். ஏர்கண்டிஷன் நெருக்கத்தில் அறையில் காற்று கெட்டியாக இருக்க புகை மெல்லத்தான் தப்பித்தது. அவர், அவள் புத்தகங்களைப் பொறுக்குவதைத் தன் இருப்பிடத்தில் இருந்து பார்த்துக்கொண்டே, ஒரு புத்தகத்தைப் பொறுக்கும்போது 'இது மட்டும் என் மேசைல இருக்கட்டும்' என்று அதை வாங்கிக்கொள்கிற சாக்கில் அவள் மார்பின்மேல் பட்டார் வேண்டுமென்றே!

மாயாவுக்குப் பயமாக, விரசமாக இருந்தது. சட்டென்று மறுபடி அந்த சப்தம் வரும்போல ஒரு கணம் பய அலை அடித்து உடனே ஓய்ந்தது.

"யூ ஆர் மோர் பியுட்டிஃபுல். உன் சிஸ்டரைவிட நீ அழகு."

"நான் போகலாமா ஸார்?"

"ஒரே ஒரு வேலை. அந்த பாத்ரூமில என் பென்செட் வெச்சிருக்கேன். அதை எடுத்து வந்துரு!"

அவள் திரும்பிப் பார்த்தபோது அவர் அறையுடன் அட்டாச் பண்ணியிருந்த தனிப்பட்ட பாத்ரூம் அது. உள்ளுணர்வு, 'அங்கே போகாதே' என்றது.

"ஸாரி ஸார். இது என் வேலையில்லை" என்று சொல்லிவிட்டு இடத்தைவிட்டு உடனே வந்துவிட்டாள்.

சீட்டுக்கு வந்ததும் அவளுக்கு நெஞ்சு படபடத்தது.

கூலரில் போய் தண்ணீர் எடுத்துக்கொண்டாள். பியூன் ராமசாமி மறுபடி, 'அம்மா, சாரங்கபாணி ஸார் கூப்பிடறாருங்க' என்றான்.

என்ன செய்வது என்ற குழப்பம். அக்கா போன் போட்டு சொல்லியிருக்கிறாள் சாரங்கபாணியிடம் ஜாக்கிரதையாக இருக்கும்படி.

"வரேன்னு சொல்லு" என்றாள், ஆனால் போகவில்லை.

சுனிலைக் கேட்கலாம் என்றால் மதிய இடைவேளையின்போது அவன் ரிஸர்வ் பாங்க் போயிருந்தான். அருணா டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். மற்ற பெண்கள் எல்லாரும் இரைச்சலாக மேசையில் இருக்க, அருணா மட்டும் தனியாகத்தான் இருந்தாள்.

"அருணா! உன்னை ஒண்ணு கேக்கணும்."

"சாரங்கபாணி ஒரு மாதிரி நடந்துகிட்டார். அதானே?"

"ஆமாம். உனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"புக்ஸ் பொறுக்கச் சொன்னாரில்லை? அப்பறம் பாத்ரூமுக்குக் கூப்பிட்டாரா?"

"ஆமா" என்றாள் சற்றே வெட்கத்துடன்.

"இந்த ஆபீஸ்ல பெண்கள்கிட்ட எல்லா சைன்டிஸ்டும் ஃப்ரீயா பழகுவாங்க. கண்டுக்கவே கூடாது. சென்ஸிட்டிவா இருக்கவே கூடாது. திடீர்னு தொடுவாங்க. ப்ரஸ்ட் எல்லாம் பிடிச்சு பார்ப்பாங்க!"

"எனக்கு என்னவோ கூச்சமா இருக்குது அருணா."

"பழகிரும்."

"எதற்காக எல்லாரும் இப்படி இருந்தும் இத்தனை பெண்கள் தொடர்ந்து இருக்காங்க."

"விடமுடியாது."

"ஏன்?"

"சம்பளம்! உனக்கு எத்தனை சம்பளம் தெரியுமா?"



"தெரியாது."

"மொத்தம் எல்லாமா சேர்ந்து பத்தாயிரம் ரூபாய் தருவாங்க! நீ அன்னிக்கு ஓவர்டைம் பண்ண பாரு டாக்டர் நருட்ட, அதுக்கு எவ்வளவு வவுச்சர் போட்டிருக்கார் தெரியுமா?"

"எவ்வளவு?"

"நாத்தம்பது! ஒரு மணி நேரத்துக்கு நல்ல ரேட்டு இல்லை?"

அருணா லேசாகக் கண்ணடித்தாள்.

# 8

அடுத்த மாதம் முதல் வாரத்தில் சுனில் அமெரிக்கா போனான். ஏர்போர்ட்டுக்கு வந்திருந்த அவன் தங்கைகளையும் வயசான அம்மாவையும் அறிமுகப்படுத்தி வைத்தான். 'அம்மா! இதான் நான் சொன்ன மாயா.'

அவர்கள் அவளை விரோதமாகப் பார்த்தார்கள். ஒரு தங்கை மட்டும், சுனில் போலவே இருந்தாள், அவளருகில் வந்து சிநேகமாகப் பேசி, 'கல்யாணம் பண்ணிட்டுப் போயிருந்தா நல்லா இருந்திருக்கும் இல்லை?' என்றாள். அனைவருக்கும் ஏர்போர்ட் வாசலில் பஃப் எல்லாம் வாங்கிக் கொடுத்தாள். எல்லோரும் தயக்கத்துடன் வாங்கிக்கொண்டு பாதிதான் சாப்பிட்டார்கள்.

சுனில்தான் மாற்றி மாற்றிப் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தான். அவனைத் தனியாக அழைத்து மூச்சு முட்ட அணைத்துக்கொள்ள வேண்டும்போல இருந்தது மாயாவுக்கு. அவள் வயிற்றில் இப்போது ஸ்திரமாக பயம் இருந்தது.

சொல்லிவிட்டாள்.

"சுனில்! நீ திரும்ப வர எத்தனை நாளாகும்?"

"ரெண்டு வருஷம், நடுவில கல்யாணத்துக்கு வரப் போறேனே."

"வர முடியுமா?"

"தாராளமா. முதல்ல அதுக்குத்தானே பணம் சேர்க்கப் போறேன். ரிட்டன் டிக்கெட் வாங்கித் திரும்பி வர்றதுக்கு."

"சுனில், நீ மேனகாவைப் பார்ப்பியா?"

"நிச்சயம். போன உடனே அதானே முதல் காரியம். போன் நம்பர் பைக்குள்ளயே ரெடியா வெச்சிருக்கேன்."

"அவகிட்ட என் ப்ராப்ளம் பத்தி சொல்லாதே."



"என்ன ப்ராப்ளம்... ஓ, அந்த மயக்கமா? சேச்சே. அதான் சரியாப் போச்சோல்லியோ. இப்ப எதும் இல்லைதானே?"

"ஒரு வாரமா இல்லை."

"அவ்ளவ்தான். சரியாப் போச்சு" என்று அவள் கன்னத்தை லேசாகத் தொட்டான். அதுவே கிறக்கமாக இருந்தது.

"உனக்கு என்ன டெஸ்ட் கொடுத்தாங்கன்னு விசாரிக்கப் பார்த்தேன். எல்லாமே சாதாரண டெஸ்ட்டுதான். 'சைக்னோஸ் போரின்'னு ஏதாவது பேசிக்கிட்டாங்களா?"

"ஞாபகம் இல்லை. ஏன்?"

"சும்மா கேட்டு வெச்சேன் மாயா. உன்னை அப்படியே கட்டிக்கிட்டு முத்தம் கொடுக்கணும்போல இருக்கு. பிரிவின்போது இன்னமும் அழகா இருக்கே. கருநீலத்திலே இனிமே புடவை உடுத்தாதே. மத்தவங்க உன்னை இத்தனை அழகா பார்க்கறதை நான் விரும்பலை. ஏர்போர்ட்டுன்னு பாக்கறேன். எல்லாரும் இருக்காங்களேன்னு தயக்கம். இல்லாட்டா உன் உதடுகளை அப்படியே சாப்பிட்டிருப்பேன்" என்றான்.

இமிக்ரேஷன், கஸ்டம்ஸ் எல்லாம் முடிந்தபின் அவன் சரிவுப்படிகளில் மேலே போய் மறையும்வரை டாட்டா காட்டினான். ஒரு கணம் அவனை இனிப் பார்க்க மாட்டோமா என்ற அச்சம் ஏற்பட்டது.

ப்ளேன் புறப்பட இன்னும் நேரமாகும்போல இருந்தது. புறப்படும் ப்ளேனைப் பார்த்து அதுவரை காத்திருக்கலாமா என்று யோசித்தாள். சுனிலின் தங்கைகள் அவளிடம் வர, அவன் அம்மா கடிந்து, 'வாங்கடி போகலாம்' என்று அவர்களை அழைத்தாள்.

"இருங்க. உங்க அட்ரஸ் கொடுத்துட்டுப் போங்க."

"சுனில் சொல்லலை?"

"இல்லையே."

"ரொம்ப ஆச்சரியமாத்தான் இருக்கு. கேக்கலை நீ?"

"அவன்கிட்டயே கேட்டு எழுதிக்கோ. தனியா உனக்குத்தானே போன் பண்ணப் போறான். கடுதாசி எழுதப் போறான்" என்றாள்.

அவளுக்கு அழுகை வந்தது. வானத்தில் அந்தப் பெரிய ப்ளேன் சப்தம் போட்டுக்கொண்டு மேலேறும்போது அவளுள் ஏதோ அறுந்ததுபோல உணர்ந்து, ஒரு கணம் சுனிலை நாம் இனிமேல் பார்க்கப் போவதில்லை என்கிற அச்சம் மறுபடி தோன்ற, அவசரமாக அந்த எண்ணத்தைப் புறக்கணித்தாள்.

சுனிலின் மோட்டார் சைக்கிளின் பின்னால் தலை பறக்க பிரயாணம் செய்த உற்சாக மாலை நேரங்களை யோசித்துப் பார்த்தாள். மேனகாவைச் சந்திக்கப் போகிறான் என்பதில் அவளுக்குக் கொஞ்சம் பொறாமை இருந்தது.

எதற்காகப் பொறாமை? அவள் கல்யாணமானவள். மேனகாவைப் போல நாமும் அமெரிக்கா போய் அவளுக்கு ஈடாக வாழ்ந்து காட்ட வேண்டும். வேலைக்கு ஒழுங்காகப் போய் பணம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆட்டோ ரிக்ஷாக்கள் சவாரி தாகத்துடன் நின்றுகொண்டிருக்க சுனிலின் அந்த தங்கை ஓடி வந்து அவசர அவசரமாக, 'ஸாரி, அவங்களுக்கெல்லாம் உம்மேல கோபம். எனக்குக் கோபம் இல்லை. எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. அம்மாவை நான் சமாதானப்படுத்தி வெக்கறேன். எங்க வீட்டு விலாசம் இது. வீட்டுக்கு வா. கவலையே படாதே. போன் பண்றேன்' என்றாள்.

மாயாவுக்கு ஆறுதலாக இருந்தது.

அலுவலகத்தில் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வேலை பழகி வந்தது. பெரும்பாலும் 'வர்ட் ஸ்டா'ரில் டாக்டர் நரேந்திரநாத்தின் கட்டுரை ஒன்றை அடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஏறக்குறைய ஒரு புத்தக அளவுக்குப் போல இருந்தது கட்டுரை. 'ந்யுரல்நெட், பாரலலிஸம், டவுன் லோடிங்' போன்ற திரும்பத் திரும்ப வரும் வார்த்தைகள் அவளுக்கு அர்த்தம் புரியாத விதத்திலும் அத்துப்படியாகிவிட்டன.

மிருணாளினி ஒருமுறை அவளிடம் சாரங்கபாணிதான் அடுத்த டைரக்டராக வரப் போவதாகவும், வந்த முதல் கணம் நரேந்திரநாத்தை ஒழித்துக் கட்டிவிடுவார் என்றும் சொன்னாள்.

"சாரங்கபாணி கூப்பிட்டாப் போகமாட்டேன்னு சொல்லாதே."

"அவர் கூப்பிடறதில்லையே."

"டில்லி போயிருக்கார். கூப்பிடுவார்."

டாக்டர் நருவின் அறைக்கு ஒரு முறை கூப்பிட்டனுப்பினார்.

"சுனில் சொன்னான், உனக்கு உடம்பு சரியில்லாம மயக்கம் மாதிரி வந்ததா?"

"ஆமா ஸார். இப்பப் பரவால்லை."

"என்ன ஆச்சு?"

"மயக்கம்தான். டாக்டர் பரிசோதனைகள் பண்ணிப் பார்த்துட்டு எதும் இல்லைன்னு சொன்னா."

"ரீஸன் ஏதாவது சொன்னாளா. சுனில் சொன்னான். வந்து இந்த லாப்ல கொடுத்த மெடிஸின் ரியாக்ஷன் ஏதாவது இருக்கலாம்னு."

"அப்படித்தான் டாக்டரும் அபிப்ராயப்பட்டார்."

"உனக்கு எல்லா டெஸ்ட்டும் எடுத்தாச்சா?"

"எடுத்துட்டாங்க."

"சைக்ளோஸ்போரின் ரியாக்ஷன் பார்த்தாங்களா,"



"தெரியாது ஸார்."

"இம்யுனோ சப்ரஸ்ஸண்ட் அதை ஏதாவது கொடுத்தாங்களான்னு தெரியணும்." இன்டர்காமில், "கோம்ஸ் மாயாவோட பர்ஸனல் மெடிக்கல் ஃபைல் கொண்டு வா."

அவர் காத்திருக்கும்போது, "ஒண்ணுமிருக்காது. சில வேளையில ஸ்ட்ரெய்ன் அதிகமா இருந்தா பெய்ன் ஏற்படும்!"

"பயம்மா இருக்கு ஸார்."

"எதுக்குப் பயப்படணும்?"

"தெரியலை."

"மாயா! நான் இருக்கறவரை எதுக்கும் நீ பயப்பட வேண்டாம். சாரங்கபாணி உன்னை ரூமுக்குக் கூப்பிட்டதும் அங்க நடந்ததும் எனக்குத் தெரியும்."

"அதே மாதிரி அவரும் சொன்னார் ஸார்."

"என்னவாம்?"

"அன்னிக்கு ராத்திரி லேட்டா உங்க ரூம் வந்ததைச் சொன்னார்."

"இந்த ஆபீஸ் முழுக்க இந்த மாதிரி சதிதான். இங்க நடக்கிறதை அங்க சொல்லறது, அங்க நடக்கிறதை இங்க சொல்லறது. இங்க ரிஸர்ச் ஒர்க்ங்கறது பத்து சதவிகிதம்தான் நடக்குது. மத்ததெல்லாம் அக்கப்போர்."

கோம்ஸ் கொண்டுவந்த, ப்ளாஸ்டிக் பைக்குள் பலவிதக் காகிதங்கள் இருந்தன. பலவிதமான வரைபடங்கள், ரிப்போர்ட்கள்.

"எல்லாம் உன்னைப் பத்தினது. உன் மெடிகல் ஹிஸ்டரியே இருக்கு. லெட் மி ஸீ. லெட் மி ஸீ. ஆமா! உனக்கு சைக்ளோஸ் போரின் ரியாக்ஷன் டெஸ்ட் எடுத்திருக்காங்க. அதான்."

"புரியலை ஸார்."

"ஒரு மருந்தை உன் பாடி ஒப்புத்துக்குதான்னு பார்க்கறதுக்கு ஒரு ரூட்டின் டெஸ்ட் சைக்ளோஸ்போரின். வேடிக்கை என்னன்னா அந்த மருந்தே ரியாக்ஷன் சப்ரஸ் பண்றதுக்குத்தான், உனக்கு நம்ம இம்யுன் சிஸ்டம் பற்றித் தெரியுமில்லே? அதான் நம்முடைய உடம்பினுடைய மகா ஆச்சரியம். மெடிக்கல் சயன்ஸின் மிகப் பெரிய புதிர். இந்த இம்யுன் சிஸ்டத்தை இஷ்டப்படி கட்டுப்படுத்த முடிஞ்சா மாற்று இதயம், ஏன், மாற்று மூளைகூட நம்மால பொருத்த முடியும்" என்று அவன் தோளைத் தட்டினபோது ஏனோ வித்தியாசமாகப் படவில்லை.

"இந்த டெஸ்ட் எடுக்கறபோது மருந்து ஒத்துக்காததால அந்த மாதிரி ஃபிட்ஸ் மாதிரி ரேர் கேஸ்ல வரும். இப்ப சரியாப் போச்சோல்லியோ."

"ஒரு வாரமா இல்லை ஸார்" என்றவள் தொடர்ந்து, "எனக்கு

சந்தேகம். இந்த டெஸ்ட் எல்லாம் அனுமதி இல்லாம செய்யலாமா ஸார்?" என்றாள்.

"செய்யக் கூடாதுதான். உம்மேல அந்த டெஸ்ட் எடுத்தது தப்பு. சாரங்கபாணி இதுக்கெல்லாம் இன்சார்ஜ். இதை கவுன்ஸில்ல கொண்டுவரவே போறேன். நீ சொல்றது சரிதான். உம்மேல அந்த டெஸ்ட் செய்திருக்கக் கூடாது. இட்ஸ் ராங்."

அந்த நீலநிற ஃபோல்டரை அவளிடம் கொடுத்துவிட்டு, "கோம்ஸ்கிட்ட கொடு" என்றார்.

அவள் திரும்ப, 'ஒன் மினிட்' என்றார்.

"என்ன ஸார்?"

"உங்க அக்காகிட்டருந்து எதும் போன்கால் வந்ததா?"

"இல்லை ஸார்." என்ன இது! தினம் பத்துமுறை அக்காவைப் பற்றிக் கேட்கிறார்கள். "சுனில் நியுயார்க் போயிருக்கானில்லை. அவளைச் சந்திக்கச் சொல்லியிருக்கேன்."

"சுனில் நியுயார்க் போயாச்சா?" என்றார் ஆச்சரியத்துடன், "பய பாத்தியா எங்கிட்ட போய்ட்டு வரேன்னுகூடச் சொல்லிக்கலை."

"ரொம்ப பிஸியா இருந்தான் ஸார்."

"போயாச்சா?"

"ஆமா ஸார்."

"அவன்கிட்ட உங்க அக்கா நம்பர் கொடுத்திருக்கியா?"

"ஆமா ஸார்."

"சரி. ஏதாவது போன் பண்ணா விசாரிச்சதா சொல்லு. எனக்கு சொல்லாம போனதில ரொம்பக் கோபம்னு சொல்லு."

வெளியே வந்தபோது, கோம்ஸ் மேசைமேல் வைத்திருந்த டெலிபோன், ரிசீவர் பிரிக்கப்பட்டு காத்திருந்தது. "மாயா! உனக்குத்தான் டெலிபோன். லாங் டிஸ்டன்ஸ் கால். இனிமே சுனிலை இந்தப் போன்ல கூப்பிடச் சொல்லாதே."

மார்பு படபடக்க போனை எடுத்து, "ஹலோ யாரு" என்றாள்.

"மாயா, நான் சுனில் பேசறேன்." லேசாக எதிரொலி இருந்தது.

"சுனில்! சௌக்கியமா போய்ச் சேர்ந்தியா? எங்கிருந்து பேசறே?"

"டார்மிட்டரியிலிருந்து யுனிவர்ஸிட்டி வந்து சேர்ந்துட்டேன். நியுயார்க்ல ஒரு நாள் ஹெக்ட்டிக்கா இருந்தது மாயா. ஆனா உன்னையே நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஒரு சமயம் எதுக்குடா வந்தோம்னு வருத்தமா இருக்குது!"

"மேனகாவைப் பாத்தியா?"

"அதையேன் கேக்கறே. எல்லாமே தப்பு."



# 9

சுனிலின் கடல் கடந்த குரல் தெளிவாகவே ஒலித்தது. "ஒண்ணு நீ கொடுத்த நம்பர் தப்பு. அல்லது உன் அக்காவுக்கு என்னோட பேச விருப்பமில்லை."

"ஏன் அப்படிச் சொல்ற சுனில்?"

"நியூயார்க் கென்னடில இறங்கின உடனே முதல் காரியமா காசு போட்டு மேனகாவுக்கு போன் பேசினேன். ரொம்ப நேரம் அடிச்சுக்கிட்டே இருந்தது. அதுக்கப்புறம் ஒரு குரல் 'யார் வேணும்'னு கேட்க மேனகான்னதும் 'மேனகா... யார் மேனகா? மேனகான்னு யாரும் இங்க இல்லை'ன்னதும் அந்த இடம் என்னன்னு கேட்டேன். பதில் சொல்லாம வெட்டிட்டாங்க! நீ என்ன பண்றே, அடுத்த முறை மேனகா உனக்கு போன் பண்றப்ப சரியா நம்பர் கேட்டு வெச்சுக்கோ! என்ன?"

"அட்ரஸ் இருக்கே கொடுத்திருந்தேனே. அங்க போய் பார்க்கக் கூடாதா?"

"பார்த்திருப்பேன். ஃப்ளைட் ரொம்ப லேட். பாம் ஸ்கேர்! கனெக்டிங் ஃபைளட்டுக்கு அரை மணிதான் இருந்தது. நகரத்துக்கு உள்ள போக சமயம் பத்தலை. கவலைப்படாதே. மேனகாவை அடுத்த 'வீக் எண்டு'க்குள்ள எப்படியாவது கான்டாக்ட் பண்ணி பேசிர்றேன்."

போனை வைத்து நிமிர்ந்தபோது சாரங்கபாணி மேசையருகில் நின்றுகொண்டிருந்தார். சிகரெட் புகை அவள் முகத்தருகில் உலவியது. "ஆபீஸ் வேலையைத் தவிர எல்லாம் செய். யாரு ஃபோன்?"

"சுனில் ஸார்" என்றாள் பயத்துடன்.

"தட் பாஸ்டர்ட்! தட் டெஸர்ட்டர்! அந்த எலி! எதுக்கு ஃபோன் செய்தான்? உன்னையும் அமெரிக்காவுக்குக் கூப்ட்டு

வெச்சுக்கவா?"

"இல்லை ஸார். எங்கக்கா மேனகா அமெரிக்காவில இருக்கா. அவளை கான்டாக்ட் பண்ணச் சொல்லியிருந்தேன்!"

அவர் நெற்றிப் புருவங்கள் சுருங்கின. மறுபடி ஒரு சிகரெட் இழுப்பு, புகை மேகம், பட்டை பிரேம் கண்ணாடியை ஒரு நெற்றி அழுத்தல்.

"அவளோட பேசினானா?"

"இல்லை. நம்பர் தப்பு."

"போய்ப் பார்த்தானா?"

"இன்னும் இல்லை. பார்க்கச் சொல்லியிருக்கிறேன்!"

"இன்னும் பார்க்கலை?"

"இல்லை."

"நியூயார்க்கிலதான் இருக்கானா?"

"இல்லை. அவன் யுனிவர்ஸிட்டிக்குப் போய்ட்டான்."

"எந்த யுனிவர்ஸிட்டி?"

"பிட்ஸ்பர்க்."

"இப்ப நியூயார்க்கில இல்லை?"

"இல்லை."

சரி என்று புறப்பட்டுச் சென்றவர் சட்டென்று நின்று திரும்பி, "என்ன நீ என் ரூமுக்கு வரவேமாட்டியா? நரு தடுக்கறானா? கடுப்பாயிடறானா?"

"இல்லை... இல்லை... ஸார்."

"பின்ன ஏன் வரதே இல்லை?"

"காரணமில்லாம... எதுக்கு வரணும்!"

"காரணமே தேவையில்லை. எப்ப வேணா வா! நான் உனக்கு அண்ணா மாதிரி! நான் யாரு? உனக்கு அண்ணா" என்று சிரித்துவிட்டு முதுகில் தட்டிவிட்டுச் சென்றார்.

அவர் சென்றதும் மிருணாளினி, "எல்லார்கிட்டயும் இதேதான் சொல்வார். 'நான் உனக்கு அண்ணா மாதிரி!'"

"மிருணா, எனக்கு எதுவுமே புரியலை."

"உடம்பு எப்படி இருக்கு?" என்றாள் அருணா.

"அதுக்கப்புறம் அந்த மயக்கம் வரலை. ஏதோ அலர்ஜிதான்!"

"எனக்கு சாரங்கபாணிதான் அலர்ஜி. அந்த மனுஷனைப் பார்த்துமே எனக்குத் தலை வலிக்க ஆரம்பிச்சுடுது."

டாக்டர் நரேந்திரநாத்தின் ஆராய்ச்சிக் கட்டுரை முடிந்து விட்டது. அவர் அதைப் படித்துக் காட்ட டில்லி போனார். அந்த தினம்



சென்னையில் நிறைய மழை பெய்து ரோடெல்லாம் குளமாகிவிட்டது. ஜன்னல் கண்ணாடிகளில் பிடிவாதமாக மழைத்துளிகள் மோதிக்கொண்டிருந்தன. மாயா குடை கொண்டு வராததால் ஆபீஸ் வாசலில் மழை நிற்க காத்திருந்தாள். மிருணாளினி அவளிடம் நானூறு ரூபாய் கடன் கேட்டிருந்தாள். மாயா தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னபோது அவள் ஒரு மாதிரி பார்த்த பார்வை சற்றே அச்சமளித்தது.

மாயாவுக்கு அந்த அலுவலகத்தில் யாரை நம்புவது, யாருடன் அந்தரங்கமான சிநேகம் வைத்துக்கொள்வது என்று சரியாகப் புரியவில்லை. சுனில் போனதும், ஒரு மாதிரி வெறுமையை உணர்ந்தாள். அது உடல் சம்பந்தப்பட்டதா, மனம் சம்பந்தப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால் சில மாறுதல்களை உணர்ந்தாள். வீட்டில் முன்பெல்லாம் சுவாரஸ்யமாகப் பார்த்த டிவி. நிகழ்ச்சிகள் இப்போது 'போர்' அடித்தன. பிடித்தமான திரைப்படப் பாடல்கள் கூட அலுத்துவிட்டன. சரியாக உடை உடுத்திக்கொள்வதிலோ, அலங்காரத்திலோ அக்கறை ஏதும் இல்லாமலிருந்தாள்.

"என்ன ஆய்டுத்து உனக்கு? சரியா பவுடர்கூட போட்டுக்காம இந்தப் பழைய புடவையை உடுத்திண்டு கழுத்தில நகை இல்லாம ஆபீசுக்குப் போறியே. யாரும் கவனிக்க மாட்டாளா?" என்று அம்மா கேட்டாள்.

"இதெல்லாம் பிடிக்காம போய்டுத்தும்மா!"

"மாயா இப்படி வா!" என்றாள் அம்மா. அருகில் வந்தவள் கண் இரப்பையை உயர்த்திக் கிட்டத்தில் பார்த்தாள். "ரத்தமே இல்லையே? என்னடி ஆச்சு உனக்கு?"

"ஒண்ணுமில்லைம்மா."

"கடைசியா எப்ப ஆச்சு?"

"எல்லாம் சரியாத்தாம்மா இருக்கு" என்று நெஞ்சைத் தொட்டுக் கொண்டாள். அம்மா கேட்டதும்தான் சுருக்கென்றது. வந்திருக்க வேண்டுமே! நாள் தள்ளிப் போகிறதே! இல்லை, இல்லை; ஏதும் நடக்கவில்லை.

அலுவலகம் சென்றபோது டாக்டர் நரேந்திரநாத் ஆபீஸ் அறையிலிருந்து கோம்ஸ் அழைத்தாள். "மாயா! யு'ர் ஸிஸ்டர். எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன். இந்த போனில் கூப்பிடாதே என்று மறுக்காமல் சொல்லிவிடு."

மேனகாவின் குரல் ஒலித்தது. "மாயா, எப்படி இருக்கே?"

"மேனு, சுனில் அங்க வந்திருக்கான், நீ கொடுத்த நம்பர்ல கான்டாக்ட் பண்ணிப் பார்த்தானாம். தப்பு நம்பராம்."

"அவன்கிட்ட நம்பர் என்ன கொடுத்தே?"

சொன்னாள்.

"ஸாரி... மாறிடுத்து. இவர் புது அஸைன்மெண்ட் எடுத்திருக்கா
ஸாஃப்ட் ஆப்ஷன் என்கிற கம்பெனில. நம்பர் எழுதிக்கோ!"

"மேனகா உன் அட்ரஸ் வேணும். அட்ரஸ் சொல்லு! சுனில் வந்து பார்க்கணும்கிறான்."

"சுனில் வர வேண்டாம்னு சொல்லு."

"ஏன் மேனு?"

"என் அஸ்பெண்ட் கொஞ்சம் ஜெலஸ் டைப்! நீ அவன் நம்பர் கொடு. நானே போன் பேசறேன்."

அவள் கொடுத்த பத்து இலக்க எண்ணைக் குறித்து வைத்துக் கொண்டாள்.

"எப்ப வர மேனகா?"

"செப்டம்பர்ல வர்றதா இருந்தேன் மாயா. ஆனா இப்ப இவருக்கு புது ஜாப் ஆனதால லீவு கிடைக்கலை. அப்பாகிட்ட சொல்லு."

"அப்ப இந்த வருஷம் வரலியா நீ?"

"இல்லை."

"மேனகா! நீ வருவேன்னு ரொம்ப எதிர்பார்த்தேன்."

"ஸாரிம்மா! நீ வாயேன் இங்கே."

"அப்பா, அம்மாவைத் தனியா விட்டுட்டா?"

"கஷ்டம்தான். ஒண்ணு பண்ணு, மாடி வீட்டு நம்பர் கொடு. அங்க போன் பண்றேன்."

"அப்பாவுக்கு அது பிடிக்காது. லெட்டர் போடு போதும். அப்புறம் இந்த நம்பர்ல இனி போன் பண்ணாதே. பாஸ் நம்பர் இது."

"டாக்டர் நரு கோவிக்க மாட்டாரே! எப்டி இருக்கார்?"

"அவர் பி.ஏ. அப்ஜெக்ட் பண்றாங்க."

"கோம்ஸா?"

"ஆமா!"

"அவ கிடக்கா!"

கலவரத்துடன் கோம்ஸைப் பார்த்தாள்.

போனை வைத்ததும் தன் சீட்டுக்கு வந்து டிராயரைத் திறந்து முன்பே வாங்கி வைத்திருந்த ஏரோகிராம் கடிதத்தில்,

"அன்புள்ள சுனில்

நீ போனதும் உலகமே வெறிச்சென்று ஆகிவிட்டது. எதற்காக என்னை விட்டுப் போனாய்? இங்கு எனக்கு யாரும் நண்பர்கள் இல்லை. ஒவ்வொருவரும் தத்தம் சுயநல வட்டங்களில் இயங்கு கிறார்கள். ஆத்மார்த்தமாக யாருமே இல்லை. எதிலும் பிடிப்பு இல்லை. முன்பு போல் உற்சாகமே இல்லை. சுனில், something is happening to me. நீ எப்போது வருவாய்? எப்போது மறுபடி பார்ப்பேன்



என பிரமிப்பாக இருக்கிறது.

மேனகாவின் சரியான டெலிபோன் இலக்கம் கீழே குறிப்பிட்டிருக் கிறேன். 718.554–3435. வீட்டு விலாசம் கேட்டதில் கொடுக்கவில்லை. அதற்கு விநோதமான காரணம் கொடுத்தாள். அவள் கணவர் பொறாமைக்காரராம்!"

வெள்ளிக்கிழமை அவள் லாபுக்கு அழைக்கப்பட்டாள்.

அவள் கைவிரல் நுனியில் டிங்ச்சர் தேய்த்து சட்டென்று ஓர் ஊசிக் குத்தில் ரத்த முத்து எடுத்து அது காயும் நேரம் பார்த்தார்கள்.

"இந்த டெஸ்ட் எதற்கு?"

"சர்ஜரிக்கு முன் சாதாரணமாக எடுக்கப்படும் பரிசோதனை."

"சர்ஜரியா! யாருக்கு?"

டெஸ்ட் எடுத்தவள், சிறு கண்ணாடித் துண்டத்தில் அவள் ரத்தத்தைத் தேய்த்து எடுத்துச் சென்றபோது கருமையான விழிகளால் அவளை அலட்சியமாகப் பார்த்தாள்.

"ஆஸ்க் டாக்டர் சாரங்கபாணி."

டாக்டர் சாரங்கபாணியின் அறைக்குள் சென்றபோது அவர் அறை வாசலில் ஒரு ரிஸர்ச் அஸிஸ்டண்ட் காத்திருந்தான்.

"நான்தான் முதலில் வந்தேன்" என்றான்.

அரைமணிக்கு அப்புறம் அவள் அழைக்கப்பட்டாள். உள்ளே சென்றதும் டாக்டர் சாரங்கபாணி அவளை உட்காரச் சொன்னார். "நீ கொடுத்திருந்த ஸ்லைடுகள் அபாரம்" என்றார். "உக்காரு. கடைசியா என் ரூமுக்கு வழி தெரிஞ்சுதா?"

"டாக்டர் எனக்கு ஒரு சந்தேகம்."

"என்ன?"

"ஏதோ சர்ஜரி என்கிறார்கள். எதற்கென்றே புரியாமல் ஒரு டெஸ்ட் எடுத்தார்கள். கேட்டால் சரியான பதில் இல்லை. என்ன நடக்கிறது இந்த இடத்தில் என்பதே எனக்குச் சரியாகப் புரியவில்லை."

"சொல்லலை? டவுன் லோடிங்னு ஒரு பரிசோதனை."

"என்ன அது? அதன் நோக்கம். என்ன?"

"எட்டிப் பார்க்கப் போகிறோம்!" என்றார் டாக்டர் சாரங்கபாணி சிகரெட் எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு.

"எங்கே?"

"உன் மூளைக்குள்ளே!" அவர் தன் பைக்குள்ளிருந்து ப்ளாஸ்கையும், ஒரு மெலமின் தட்டையும் எடுத்து வைத்து, அருகே டிபன் பாக்ஸைத் திறந்து, மேல் தட்டிலிருந்து ஒரு வாழைப்பழத்தை எடுத்து வைத்தார். அதைச் சுத்தமான கத்தியால் மெல்ல இரண்டாக வெட்டினார். "ரொம்ப சுலபம். த்ரி.டி ந்யுக்ளியர் மாக்னட்டிக் ரெஸனன்ஸ் ஹோலோ கிராஃபின்னு ஒரு பரிசோதனை இருக்கு. அது செய்யப்

போறோம்!"

"அப்படின்னா..!"

டாக்டர் சாரங்கபாணி உற்சாகமாக விவரித்தார்.

"வலிக்கவே வலிக்காது. தலையில் மண்டையோட்டில சின்னதா ஒரு ஜன்னலைத் திறந்து உள்ள எட்டிப் பார்க்கப் போறோம்."

"யாருக்கு இந்த ஆபரேஷன்?"

"சொல்லலை?"

"என்ன?"

"யாரும் சொல்லலை? உனக்குத்தான் இந்த ஆபரேஷன்! வலியே கிடையாது. உன் மூளையில இருக்கிற அத்தனை செய்திகளையும் காப்பி எடுக்கப் போறோம். அவ்வளவுதான்" என்றார் டாக்டர் சாரு சிரித்துக்கொண்டே.



# 10

சாரங்கபாணி அலட்சியமாகப் பார்த்து, "என்ன பார்க்கறே? இதுகூட உன் வேலையில் ஒரு பகுதிதான்."

மாயாவின் முகம் வெளிறி கண்கள் சற்றே இருண்ட மாதிரி உணர்ந்தாள். லேசாகச் சிரித்து "யு மஸ்ட் பி ஜோக்கிங்" என்றாள்.

"இல்லை, ஐ'ம் சீரியஸ்."

"எப்படி ஸார் என் அனுமதியில்லாம நீங்க பரிசோதனையெல்லாம் செய்ய முடியும்?"

"அனுமதிதான் கொடுத்தாச்சே நீ."

"யார் சொன்னா? எப்பக் கொடுத்தேன்?"

"வேலைக்கு அப்பாயிண்ட்மெண்ட் லெட்டரை நீ சரியா வீட்டுக்குப் போய்ப் படிச்சுப் பாரு."

"அதில இந்த மாதிரி ஆப்ரேஷன் பரிசோதனைகள் எல்லாம் பண்ணலாம்னு எழுதவே இல்லை ஸார்."

"நீ என்ன பண்றே, வீட்டுக்குப் போய்ப் படிச்சுப் பாரு. பாத்துட்டு அப்புறம் வந்து சொல்லு."

"ம்ஹூம், நான் மாட்டேன். எனக்குச் சம்மதமில்லை."

"அது எப்படி? சம்மதம் பண்ண வெச்சுட்டாப் போச்சு" என்று அவர் அவளைப் பார்த்துக் கண்கள் ஒத்துழைக்காமல் சிரித்தார்.

மாயாவுக்கு நிஜமாகவே வெலவெலத்துப் போய்விட்டது. வீட்டுக்கு வந்து ஒரு முழுங்கு குளிர் நீர் அருந்தியதும்தான் அவளுக்குக் கை உதறல் நின்றது.

தைரியப்படுத்திக்கொள். எப்படி அவர்கள் உன்னை இம்மாதிரி பரிசோதனைகளுக்கு உன் இஷ்டமில்லாமல் ஆளாக்க முடியும்?

சாரங்கபாணி சும்மா பயப்படுத்துகிறார். உன் வேலை என்ன? ரிப்போர்ட் அடிப்பது, வந்த கடிதங்களை ரிஜிஸ்தரில் பதிவிப்பது. அவ்வளவுதான். அதுதான் உன் வேலை.

மிருணாளினியின் கையைப் பார்த்தாள். ஒரு வேளை அந்தப் பரிசோதனைகளால்தான் அப்படி ஆகியிருக்குமோ.

"மிருணா, உங்களை ஒண்ணு கேக்கணும்."

"சொல்லு."

"டாக்டர் சாரங்கபாணி ஒரு மாதிரி பயப்படுத்தறார் மிருணா."

"என்ன?"

"ஏதோ பரிசோதனையாம். மூளையாம், ப்ரதி பிம்பமாம். இதெல்லாம் என்ன மிருணா?"

"அவரையே கேக்கறதுதானே."

"எனக்குப் புரியவே இல்லை மிருணா. உங்களை அந்த மாதிரி பரிசோதனைக்கு உள்ளாக்கினாங்களோ!"

"ஓ."

"அப்டின்னா!"

"வலிக்கவே வலிக்காது. அவங்க லோக்கல் அனஸ்திஸியா போட்டு..."

"யூ மீன் மண்டைல ஒரு பாகத்தில..."

"என்ன கொஞ்சம் பின் மண்டையில சின்னதா ஒரு பாட்ச் எடுப்பாங்க. முடி சீக்கிரமே வளர்ந்துரும்."

"என்ன மிருணா இப்படிச் சொல்றீங்க, உங்களை வெச்சு பரிசோதனை பண்றதை எப்படி அனுமதிப்பீங்க?"

"இங்க எல்லாருக்குமே அது உண்டே, உனக்குத் தெரியாது?"

"எது?"

"டவுன் லோடிங். அதுதானே இந்த லாபினுடைய ப்ரதான பரிசோதனை. நாமெல்லாம்தானே வாலண்டியர்ஸ், அதுக்குத்தானே நமக்கெல்லாம் சம்பளம்."

மாயாவுக்கு மிகவும் பயமாக இருந்தது.

"மிருணா, உங்களை ஒண்ணு கேக்கணும். கோவிச்சுக்க மாட்டீங்களே."

"என்ன கேளு."

"உங்க ஒரு கை சின்னதா இருக்கே. பர்ஸனலா நினைச்சுக்..."

அவள் சொல்லி முடிப்பதற்குள் மிருணாளினி ஆவேசம் வந்தவள் போல அவளைக் கன்னத்தில் பட்டென்று அறைந்தாள். "கையைப் பத்தி மட்டும் பேசாதே!" என்றாள்.



அடியைவிட அதன் எதிர்பாராத தன்மை அதிகம் வலித்தது. அந்தச் செயலுள் பொதிந்திருந்த எச்சரிக்கை விநோதம், அது அளித்த பயம்! இந்த இடத்தில ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். யார் எப்படி எதைச் செய்வார்கள் என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. டைரக்டர்கள் சகஜமாகப் பெண்களைத் தொடுபவர்கள். 'டவுன் லோடிங்' போன்ற புரியா வார்த்தைகளில ரத்தத் துளிகள் சேகரிப்பார்கள். இதர பெண்கள் கோபம் கொண்டு கன்னத்தில் அறைவார்கள். முதல் காரியமாக இந்த இடத்தை விட்டு விலக வேண்டும். தப்பித்துக்கொள்ள வேண்டும். வேண்டாம் இந்த வேலை.

வீட்டுக்குப் போனபோது அப்பாவும் அம்மாவும் விசுவாசமாக 'உலா வரும் ஒளிக் கதிர்' பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"அப்பா நான் வேலைய விட்டுரலாம்னு யோசிக்கிறேன்."

"என்ன?" என்றார் அப்பா அதிர்ச்சியுடன்.

"ஆமாப்பா, எனக்கு அந்த இடம் பிடிக்கலை."

"ஏன்?"

"ஏனோ?"

"என்ன மாயா இப்படிச் சொல்றே? எத்தனை சம்பளம் தராங்க?"

"அந்த ஆபீஸ்ல என்னவோ சரியில்லப்பா."

"எல்லா ஆபீசும் அப்படித்தான் இருக்கும். மேனு இருந்த ஆபீஸ்தானே. போன மாதம்தானே எல்லாம் நல்லாருக்கு, எல்லாரும் நல்லா பழகறாங்கன்னு சொன்னே!"

"இந்த மாசம் கொஞ்சம் அதிகம் அந்த இடத்தைப் பத்தி தெரிஞ்சு போச்சுப்பா."

"என்ன சொல்லு, நான் வந்து நாளைக்கு அந்த டாக்டர் நரேந்திரநாத்ட்ட கேக்கறேன். தயங்காமச் சொல்லு."

"அம்மாடி! இப்பதான் நம்ம கஷ்டகாலம் தீர்ந்திருக்கு. கொஞ்சம் வசதியா பணம் கிடைச்சிருக்குன்னு சந்தோஷப்பட்டுண்டு உங்கப்பாவும் நானும் பேசிண்டிருந்தோம். இப்படி ஓர் அதிர்ச்சியைக் கொடுக்கறியே."

"பாரும்மா, அவசரப்பட்டு முடிவு பண்ணிடாதே. இந்த மாதிரி வேலை கிடைக்கிறது எத்தனை கஷ்டம் தெரியுமா? உங்க அக்காவுக்காகக் கொடுத்திருக்கா உனக்கு. எந்த முடிவெடுத்தாலும் அவளைக் கேட்டுண்டு முடிவு பண்ணு."

"அவகிட்டருந்து போனே இல்லை. அவ கொடுத்த நம்பர் மாறி இருக்கு போல."

"இல்லையே. நம்பர் மாறியிருக்கிறதாச் சொல்லலையே."

"அவ உங்ககூட பேசினாளா?"

"ஆமா. தாமு வீட்டு டெலிபோன்ல கூப்பிட்டிருந்தா. அமெரிக்காவிலருந்து தெளிவா கேட்டுது. ரொம்ப சந்தோஷமா இருக்காளாம். எங்க ரெண்டு பேரையும் கூப்பிட்டிருக்கா. அவளால வர முடியலையாம். நாங்க எங்க போறது?"

இரவு விளக்கைப் போட்டுக்கொண்டு தூங்கினாள். அவளை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து சிறிய ரேஸரால் தலை மயிரை ஒரே ஓர் இடத்தில் சிரைத்தார்கள். டாக்டர் சாரங்கபாணி அப்பா பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "வலிக்காது, சின்ன ஆபரேஷன் தானே" என்றார். அருகில் இருந்த டெலிபோன் ஒலித்து, "மாயா! நான் மேனகா பேசறேன். சௌக்கியமா இருக்கேன். நீ சௌக்கியமா இருக்கியா? எல்லாரும் சௌக்கியமா? செப்டம்பரில் வர முடியலை" என்று பேசினாள்.

"மேனகா! ஏன் உன் குரல் மாறிப் போயிருக்கு? ஒரு மாதிரி கம்மினாப்போல."

"அதுவா... வந்து, அது வந்து சின்தஸ்ஸர் போட்டிருக்கேனோல்லியோ." ஒரு குழப்ப சாகரத்தில் குழந்தை அழுவதும், கோயில் மணியும், 'அஞ்சலி' பாட்டும் கேட்டது.

மறுதினம் அலுவலகத்தில் மிருணாளினி அருகில் வந்து அவள் கையைப் பற்றியபோது தூக்கிவாரிப்போட்டது. திடுக்கிட்டு விலகிக் கொண்டாள்.

"ஸாரி. ஸாரி உங்கிட்ட மன்னிப்புக் கேக்கறதுக்குத்தான் வந்தேன்."

"எதுக்கு?"

"நேத்திக்குக் கன்னத்தில அடிச்சதுக்கு."

"நான் மறந்துபோய்ட்டேன்."

"ஸாரி. என்னவோ தெரியலை. இப்பல்லாம் திடீர்னு ஒரு கோப அலை மாதிரி என்னையே கட்டுப்படுத்த முடியாம வர்றது. டாக்டர்கிட்டக் காட்டணும். தப்பா நினைச்சுக்காதே. என்ன, உன் சினேகிதத்தை நான் ரொம்ப விரும்பறேன். ஆனா அந்த சுனிலை மட்டும் நம்பாதே. அவனைப் பத்தி எனக்கு நிறையவே தெரியும்."

"சரி, தாங்க்ஸ்" என்றாள்.

"உனக்குச் சமாதானமாகல்லை போலருக்கு. ஒரு நா போட்டோக் காட்டறேன்."

"கொஞ்ச நாளாகும்... நான் சொன்னதும் தப்புத்தான். அந்த மாதிரி பர்ஸனலாக் கேட்டிருக்கக் கூடாது."

"கேட்டாப் பரவால்லை. இப்ப நான் காமா இருக்கறப்பச் சொல்றேன்." அவள் கைகள் இரண்டையும் நீட்டிக் காட்டினாள்,



"ஒரு கை சின்னதா இருக்கில்லை. அது வந்து ஓர் இம்யுனோ ஸப்ரஸண்ட் மருந்தோட ரியாக்ஷன்னு டாக்டர் சாரங்கபாணி சொல்லியிருக்கார். போன் நாட்யுல்ஸ்ல கொஞ்சம் முழங்கைக்கு அருகில் சதை இறுகிப் போனதினால வர்றதாம். மருந்து கொடுத்திருக்காங்க. ஒரு வருஷத்தில க்யுர் ஆகலைன்னா ஒரு லட்சம் ரூபா காம்பன்ஸேஷன் கொடுக்கறதாச் சொல்லியிருக்காங்க."

"இந்த மாதிரி இந்த லாப்ல ரெண்டு மூணு பேருக்குப் பார்த்தேனே."

"ஆமா, எங்க பாட்சில, நாலு பேருக்கு வந்தது, ரெண்டு பேர் அப்பவே விட்டுப் போய்ட்டா. நானும் விஜியும் பாக்கியிருக்கோம்."

"இதனால தொந்தரவு இருக்கா?"

"கையை ஒரு லெவலுக்கு மேல மடக்க முடியலை. பிஸியோதெரப்பி எக்ஸர்ஸைஸ் பண்ணிக்கிட்டு இருக்கேன்."

கையை தோள் வரைதான் மடக்கிக் காட்டினாள்.

"அப்படியா! எனக்குப் பயமா இருக்கு, மிருணாளினி!"

"இப்பல்லாம் இது நடக்காது. பயப்படாதே. அந்த மருந்தை லாப்ல தடை பண்ணிட்டாங்க. வாங்கறதே இல்லை."

"இந்த மாதிரி விஷப் பரீட்சைங்கள்ளாம் இங்க நிறைய பண்ணுவாங்களா?"

"சயன்ஸ்னா அப்படித்தான். இந்த லாபுக்கு இருக்கற பேரு, புகழ், டிசம்பர்ல ஒரு ஆன்யுவல் கன்வென்ஷன் நடக்கும் பாரு. ஒரு ரூம் பூரா நோபல் பரிசு ஆசாமிங்க இருப்பாங்க. அத்தனை பெரிய ஆசாமிங்கள்ளாம் வருவாங்க." மிருணாளினியின் குரலில் கற்பித்தத் தன்மை தொனித்தது. "அதும் இந்த முறை டவுன் லோடிங்ல ரொம்ப புரட்சிகரமாக் காட்டப் போறாங்க. யாருக்கும் விவரம் தெரியாது."

"டவுன் லோடிங்னா என்னன்னு சரியாவே யாரும் சொல்ல மாட்டேங்கறா."

"ஒண்ணுமில்லை. உன் மூளையில இருக்கற அத்தனை சமாச்சாரங்களையும் ஒரு கம்ப்யூட்டருக்குக் கொடுத்துர்றது. அவ்வளவுதான்."

"கொடுத்து?"

"அதை 'ஆர்க்கைவிங்'ன்னு சொல்றாங்க. அதில உபத்திரவம் எதும் இல்லை. ஒரு வ்ாரத்துக்கு லேசா தலைவலிக்குமாம்."

"எப்படி பண்ணுவாங்க அதை?"

"ஒரு என்.எம்.ஆர்.ஓல கிராபின்னு ஒரு ஊசி நிரடல் மூலம். அதுக்குத்தான் ஸ்கல்ல சின்ன ஓட்டை போடுவாங்க. உங்க அக்காவுக்குக் கூடப் போட்டாங்களே!"

"அப்படியா..?"

"பிரமாதமா அந்தப் பரிசோதனை திரண்டு வர்ற சமயத்தில

அமெரிக்கா போய்ட்டா. அதான் அவங்களுக்கு வருத்தம். ஒரு ரகசியம் சொல்லட்டுமா."

"என்ன?"

"உன்னைத் தேர்ந்தெடுத்ததுக்குக் காரணம் நீ மேனகாவுடைய தங்கைங்கறதால சில சௌகரியங்கள் இருக்கிறதாலே..."

"என்ன சௌகரியங்கள்?"

"உன் அக்காவுடன் செய்த பரிசோதனைகளைத் தொடர்ந்து உன்கிட்டச் செய்யப் போறாங்க."



# 11

"அதெப்படி என்கிட்டச் சம்மதமில்லாம என்மேல பரிசோதனை செய்ய முடியும் அவங்களால?"

"சம்மதம் கொடுத்துருவே."

"என்ன மிருணா சொல்றீங்க? போய் இப்பவே டாக்டர்கிட்ட சொல்லிர்றேன் முடியாது, மாட்டேன்னு" என்றாள் கலவரத்துடன்.

"சொல்லிப் பாரு" என்று புன்னகைத்தாள் மிருணாளினி.

அவள் குழப்பத்துடன் தன் கைவிரல்களைப் பிசைந்துகொள்ள,

"மாயா! என்னிக்கு இந்த வாசல் வழியா உள்ளே வந்தியோ, அன்னிக்கே நீ இவங்க பேச்சைக் கேக்க ஆரம்பிச்சுட்டே. கேக்காம இருக்கவே முடியாது. கொஞ்சம் கொஞ்சமா உன் மனசில அந்த விரோதம், எதிர்ப்பு கரைஞ்சு போயிடும். ஒரு சின்னப் பரிசோதனைக்கு சம்மதிச்சா பதினஞ்சாயிரம் ரூபா தர்றாங்க. பத்து நிமிஷ உபத்திரவம். வேற எங்கேயாவது இது நடக்குமா?"

மாயாவுக்குப் பயத்தில் நாக்கு உலர்ந்து போய் அந்த எண்ணம் புதுசாகப் புறப்பட்டது. 'இந்த இடத்தில் யாருமே பரிசோதனைகளை எதிர்த்துப் பேசுவதில்லை. எல்லாரும் பொம்மைகள்போலச் செயல்படுகிறார்கள். சொன்னதைக் கேட்கிறார்கள். எதிர்ப்பே இல்லை. ஒரு வேளை ஏதாவது மருந்து மாயத்தைக் கொடுத்து உடன்பட வைத்திருக்கிறார்களோ? அதற்குள் தப்பிக்க வேண்டும்.'

நேராகத் தன் மேசைக்குப் போய்க் காகிதத்தில் எழுதினாள்.

"டு தி டைரக்டர் இன்சார்ஜ்...

டியர் ஸார்...

இன்றிலிருந்து என் ரிஸர்ச் அசிஸ்டண்ட் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன். எனக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையைக்

கிழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் நிறுவனத்தில் பணிபுரிய எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு மிகவும் நன்றி.

இப்படிக்கு...”

டாக்டர், நரேந்திரநாத் அவள் கடிதத்தைப் படித்துவிட்டு,

“என்ன ஆச்சு உனக்கு?”

“டாக்டர்! எனக்கு இந்த லாப்ல வேலை செய்ய இஷ்டமே இல்லை. பயமா இருக்கு.”

“எதுக்குப் பயம்?”

“என்மேல என் அனுமதியில்லாம பரிசோதனைங்க நடத்தப் போறீங்கன்னு தெரியறது.”

“யாரு சொன்னா?”

“எல்லாரும் அப்படிச் சொன்னாங்க. ஏதோ ‘டவுன் லோடிங்காம்.”

சிரித்தார். “டவுன் லோடிங்கெல்லாம் சாரங்கபாணி டிபார்ட்மெண்ட். நீ எனக்குத்தான் அசிஸ்டண்ட். என் அனுமதியில்லாம எதும் நடக்காது.”

“என் வேலை என்ன? தீர்மானமாகச் சொல்லிடுங்க.”

“சொன்னேனே. என் ரிப்போர்ட்டுங்கள எழுதறது, என் கடிதங்களைப் பார்த்துக்கறது. யாரு உன்னை இந்த மாதிரி பயமுறுத்திவிருக்காங்க? பாரு. வேணா வேற ரூமுக்கு மாத்திரட்டுமா? இல்லை கோம்ஸ் பக்கத்தில உக்காரு.”

“எங்க அக்கா பேர்லயும் அந்த மாதிரி ஏதோ பரிசோதனை செய்ததால், அவ பாதியில விட்டுப் போனதினால தங்கையான என்கிட்ட அந்தப் பரிசோதனையைத் தொடரப் போறீங்களாம்.”

நரேந்திரநாத் வசீகரமாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் கபடமே இல்லை.

“இந்த இடத்துல வம்பு ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. வம்பு மிகைப்படுத்தறது. பாரும்மா. உன் அக்கா பேர்ல செய்ததெல்லாம் வாலண்டியரியா செய்தது. அவ அமெரிக்கா போறதுக்குப் பணம் வேணும்னா... டிக்கட் பணம். அதுக்கு ஒரு டம்மி வாலண்டியரா அவளை உபயோகித்தோம். ஒரு வாரம் ராத்திரி இங்க வந்து தூங்கச் சொன்னோம். தூங்கறப்ப ஈ.ஈ.ஜி. எடுத்தோம். தூங்கி எழுந்தவுடனே காலையில ஞாபகமிருக்கிற கனவுகளை நோட்டு புஸ்தகத்திலே எழுதச் சொன்னோம். அது பெரிய எக்ஸ்பெரிமெண்டா, சொல்லு?”

“அவ்வளவுதானா?”

“அவ்வளவுதான்.”

“...”



“சாரங்கபாணியைப் பத்தி பல வதந்திகள் இருக்கலாம். பல பேர் பலது சொல்லலாம். அதையெல்லாம் பத்தி நீ கவலைப்பட வேண்டியதில்லை. சாரங்கபாணிக்கும், உனக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. நான் பரிசோதனை எதும் செய்யறதே இல்லை. போதுமா? போ...” என்று அந்தக் கடிதத்தைக் கிழித்து, குப்பைக் கூடையில் போட்டார்.

மாயா தெளிவுடன் வெளியே வந்தாலும், ‘இந்தப் பாழாய்ப்போன சுனில், சரியான சமயத்தில அமெரிக்கா என்ன அமெரிக்கா’ என்று கோபம் வந்தது.

டாக்டர் நரேந்திரநாத் தேனொழுகப் பேசினாலும் சாரங்க பாணியின் பரிசோதனைகளில் என்னைப் பயன்படுத்த மாட்டார்கள் என்று என்ன உத்தரவாதம்?

மேனகாவுடன் தொடர்பு கொண்டு கேட்டுவிட்டால் என்ன? சாயங்காலம் நாலரை மணிக்கு அங்கே காலை சுமார் ஆறு மணி இருக்கும். எழுந்துவிடுவாள். அல்லது எழுப்பிவிடலாம்.

ரிக்கார்டு ரூமில் போய்ப் பழைய ரிப்போர்ட் எடுத்து வரச் சென்றபோது ஆபீஸ் சிப்பந்திகளைப் பற்றிய குறிப்புகளும் ஃபைல்களும் அகர வரிசைப்படுத்தி வைத்திருப்பது தெரிந்தது.

அவள் அந்த அறையில் தனியாக இருந்தாள். ‘மாயா’ என்று தன் பெயரைப் பார்த்தாள். நாற்பத்தொன்பதாம் பக்கம் என்று இருந்தது. அந்தப் பக்கத்தில் அவளைப் பற்றிய குறிப்புகள் இருந்தன. அவளுடைய முழு மெடிக்கல் ரிப்போர்ட் இருந்தது. “ஸ்லைட்லி ரிலக்டண்ட் எஸ்” என்று ஒரு குறிப்பு விநோதமாக இருந்தது. மேலும் பற்பல எண்களாக இருந்தன. ‘வாய்ஸ் ப்ரிண்ட் ரெஃபரன்ஸ்’ என்று போட்டு அதன்பின் ஓர் உறைக்குள் அவளைப் பல்வேறு கோணங்களில் எடுத்த போட்டோக்கள் இருந்தன. அதே வரிசையில் ‘மேனகா’ இருக்கிறதா என்று பார்த்தாள். இருந்தது. பக்கம் ஐம்பத்தாறு. நெஞ்சு படபடக்க அந்தப் பக்கத்தைப் புரட்டியபோது, அது நீக்கப்பட்டிருந்தது. ‘ரிக்கார்ட் ரிமூவ்ட்’ என்று சாரங்கபாணி கையெழுத்துப் போட்டிருந்தார்.

“என்ன பார்க்கிறே? என் கையெழுத்துதான் அது.”

திடுக்கிட்டு நிமிர, டாக்டர் சாரங்கபாணி அவளுக்கு மிக அருகே நின்றுகொண்டிருந்தார்.

“இந்த ரிக்கார்டை புரட்டறதே இந்த ஆபீஸ் நியதிப்படி தப்பு தெரியுமோல்லியோ? எப்படி, யாரு உன்னை அனுமதிச்சான்னே ஆச்சரியமா இருக்கு. டைரக்டர்ங்க மட்டும்தான் இங்க வரலாம்.”

மாயா மௌனமாக இருந்தாள்.

“எப்ப வரப்போறே?”

“என்ன ஸார்?”

"டெஸ்ட்டுக்கு நருகிட்ட ரிக்வெஸ்ட் அனுப்பியிருக்கேனே. உனக்காக எத்தனை நாள் காத்திருக்கிறது?"

பயத்துடன் சிரித்தாள்.

"உன் வாய்ஸ் ப்ரிண்டைப் பாத்த இல்ல. பியூட்டிஃபுலா வந்திருக்கு. லாபுக்கு வந்தா போட்டுக் காட்டறேன். ஃப்ராக்ட்டல்ஸ் எல்லாம் என்ன கச்சிதமா இருக்கு தெரியுமா?"

மாயா அந்த இடத்தைவிட்டு விலக, டாக்டர் சாரங்கபாணி அவள் புஜத்தைப் பிடித்து "லாபை விட்டுப் போகப் போறியாமே. ராஜிநாமா கடிதம் கொடுத்தியாமே அக்கா மாதிரி."

"இஇ... இல்லை... சார்."

"இங்க வந்தாச்சுன்னா பரிசோதனை முடியும்வரை உன்னை விடறதா இல்லை. நாங்க எத்தனை பணம் செலவழிச்சாச்சு. அவ்வளவு சுலபமா போய்டலாமா! பாண்டு எழுதிக் கொடுத்திருக்கயில்ல?"

"என்ன சார் மிரட்டறீங்க?" என்றாள் அதட்டலில்லாமல்.

"மிரட்டல. உண்மையைச் சொல்றேன். அவ்வளவுதான். ஒத்துழைச்சாதான் சர்வைவ் பண்ண முடியும். அப்புறம் உங்க அக்கா மாதிரி ஆயிடக் கூடாது பாரு."

"என்ன ஆச்சு சார்?"

"கடைசி நாட்கள்ல அமெரிக்கா போறதுக்கு முந்தி ரொம்ப தகராறு பண்ணா. நரு சொன்னானோ?"

"சொல்லலை."

"அதெல்லாம் எங்க சொல்லப் போறான்? சரி. சரி. அதைப்பற்றி என்ன பேச்சு இப்ப? நீதான் வந்தாச்சே."

சாரங்கபாணி அறையைவிட்டு விலகினார்.

குழப்பத்தில் வெளியே வந்தபோது கோம்ஸ் வீட்டுக்குப் போயிருந்தாள். 'டெஸ்க்' காலியாக இருந்தது. தன் டயரியில் மேனகாவின் நம்பரைக் குறித்து வைத்திருந்தாள். அதை மெல்ல மெல்ல எடுத்து, நடுங்கும் விரல்களில் அந்த எண்களை டெலிபோனில் சுற்றினாள்.

பத்து இலக்கங்களும் போய்ச் சேர்ந்து கொஞ்ச நேரம் மௌனம். அப்புறம் அமெரிக்க வகையில் தொடர்ந்து விர்ர்ர் கொஞ்ச நேரம் அடித்ததும் 'பிப்' என்று சப்தம் கேட்டதும், "அலாவ்."

"மேனகா!"

"யா."

"மேனகா, நான் மாயா பேசறேன்."

"மாயா, எப்படி இருக்கே? அப்பா எப்படி இருக்கார்?"

"மேனகா! உன்கிட்ட முக்கியமா ஒரு விஷயம் பேசணும்."

"என்ன?"



"நீ இங்கே வேலை செய்யறப்ப எதாவது பரிசோதனை பண்ணாங்களா உன்மேல?"

"ஆமா. ரொம்ப லைட் எக்ஸ்பரிமெண்ட். பணம் நிறையக் கொடுப்பாங்க. சும்மா தூங்கச் சொல்லுவாங்க. அவ்ளவ்தான். ஏன் கேக்கறே?"

"இல்லை. அதே மாதிரி..."

"எல்லாமே ஹார்ம்லஸ். ஒப்புத்துக்க. டாக்டர் சாரங்கபாணிக்குன்னா ஒப்புத்துக்காதே. அது கொஞ்சம் பயங்கரமா எதாவது மருந்தைக் கொடுத்துப் பார்க்கும். நரு சார் சொன்னா ஒப்புத்துக்க. அவர் எந்தவித அபாயமுமில்ல. அப்புறம் அப்பா எப்படியிருக்கார்? அம்மா எப்படி இருக்கா?"

"சுனில் உன்னைக் கான்டாக்ட் பண்ணானா மேனகா?"

"இல்லையே. இங்க வந்திருக்கானா என்ன?"

"ஆமா. பிட்ஸ்பர்க்ல எங்கயோ அட்மிஷன் கிடைச்சிருக்கு."

"கார்னகியிலயா?"

"இல்லை. யுனிவர்சிடி ஆஃப் பிட்ஸ்பர்க்."

"நான் கான்டாக்ட் பண்றேன்."

"அவனே உன்னைக் கான்டாக்ட் பண்ணுவான்."

போனை வைத்தபோது அவளுக்குச் சட்டென்று ஒரு சந்தேகம் வந்தது. இதுவரை நான் பேசியது உள்தொடர்புக்கான இன்டர்காம் போனில் அல்லவோ? எப்படி மேனகாவுடன் அமெரிக்காவுக்குப் பேச முடிந்தது?"

# 12

மாயாவுக்கு டெலிபோன் போன்ற டெக்னிக்கல் சமாச்சாரங்கள் எல்லாம் அதிகம் பரிச்சயமில்லை. "நாளை மிருணாளினியைக் கேட்டுக்கொள்ளலாம். மிருணாளினி சுனிலைப் பற்றி ஏதோ சொல்கிறேன் என்றாளே, அதையும் கேட்டு வைத்துக்கொள்ள வேண்டும். அதெல்லாம் எதற்கு? முதலில் இந்த இடத்தைவிட்டு விலகுவதுதான் உசிதம்." என்னதான் மேனகா சொன்னாலும் ஏதோ ஒருவிதத்தில் மாயாவுக்கு உள்ளுணர்வில்... நரம்புகளின் இறுதியில்... வியர்வைத் துளிகளில்... மீள முடியாமல் மாட்டிக் கொண்டுவிட்டோம் என்கிற ஒரு பயம் நிரந்தமாகிவிட்டது.

உதவிக்கு யார் வருவார்? யார் நண்பர், யார் எதிரி என்று புரியாத விஞ்ஞான வேட்கைப் பிரதேசம். இவர்களுக்கெல்லாம் சயன்ஸ்தான் முக்கியம். மனித ஆசாபாசங்கள் முக்கியமல்ல. ஒரு பரிசோதனை விளைவின் எதிர்பாராத் தன்மையைப் பற்றிக் கவலையே இல்லை இவர்களுக்கு. 'மாயா, வேண்டவே வேண்டாம், விட்டுவிடு.'

ராத்திரி ஒன்பதரை மணிக்கு வீடு திரும்பியபோது அம்மா கவலையுடன் காத்திருந்தாள். "வந்தியா, ஏம்மா இத்தனை நேரம்? ஆபீஸ்ல ரொம்ப வேலையா? உனக்கு ரெண்டு தடவை சுனில் மேலாத்துக்குப் போன் பண்ணியிருந்தான். ஏதோ அவசரமா பேசணும்னான். மறுபடி அரைமணியில போன் பண்றேன்னான்."

'அப்படியா! என்னவாயிருக்கும்' என்ற வியப்புடன், யோசனையுடன் மேசைமேல் மூடி வைத்திருந்த சாப்பாட்டை எடுத்துப் போட்டுக்கொண்டபோது அப்பா எழுந்து வந்து, "என்ன, எதும் பைத்தியக்காரத்தனமா வேலையை விடறதாத் தீர்மானிக்கலை தானே? நான் இன்னைக்கு உன் பாஸ் சாரங்கபாணிகூடப் பேசினனே. சம்பளத்தை ஜாஸ்தி பண்ணப் போறாராம்."



"அவர் ஒன்னும் என் 'பாஸ்' இல்லை. டாக்டர் நரேந்திரநாத்தான்."

மாடி வீட்டு சரிதா "மாயா, உனக்கு போன். சுனில்ங்கறவர் மூணாவது தடவை."

"ஸாரி சரிதா, உங்களை இந்த வேளையிலே டிஸ்டர்ப் பண்றோம்."

"ஓர் அப்ளிகேஷன் போட்டுருங்க மாயா! உங்களுக்குத்தான் அதிகமா எங்க போன்ல கால் வரது" என்றாள்.

படுக்கைகளையும் உறங்கும் குழந்தைகளையும் தாண்டிக் கொண்டு ஹாலின் ஓரத்தில் பிரத்தியேக ஸ்தானம் கொடுத்து வைக்கப்பட்டிருந்த போனின் அருகில் சென்று அதையெடுத்து லேசாக "ஹலோ" என்றாள்.

"மாயா?"

"ஆமாம். மாயாதான் பேசறேன்."

"நான் சுனில் பேசறேன். உங்க அக்கா மேனகாவோட நம்பர்–எனக்கு லெட்டர் எழுதியிருந்தியே, 718–554–3435தானே?"

"சரியா ஞாபகம் இல்லை. டைரில இருக்கு. ஏன்?"

"சரி, நான் சொல்றேன். நம்பர் எழுதிக்கோ. அதுதானா பாரு. ஏன்னா எனக்கு வினோதமா இருக்கு. அந்த நம்பர் தப்பு. அந்த விலாசமும் தப்பு. இன்னைக்கு நியூயார்க் வந்திருக்கேன். மேனகாவை நேர்ல பார்க்கலாம்னுட்டு. அது என்ன விலாசம்–எய்ட்டி செவன்த் ஸ்ட்ரீட் என் ஒய் நம்பர் கொடுத்து? ஸ்டாட்டன் ஐலண்ட்ல அதுமாதிரி விலாசமே கிடையாதாம். அந்த மாதிரி தெருவே கிடையாதாம். மேலும்..."

"இல்லையே. அந்த விலாசத்துக்கு லெட்டர் எழுதிப் பதில் வந்திண்டிருக்கே?"

"டெலிபோன் நம்பர்லயும் ஏதோ தப்பு. ஓர் இத்தாலியன் பதில் சொல்றான், அட்ரசுக்கும், போன் நம்பருக்கும் சம்பந்தமே இல்லை."

"அப்படியா? ஸாஃப்ட் ஆப்ஷன்னு கம்பெனி பேர் கொடுத்திருந்தேனே."

"ஃபெடரல் போஸ்ட் ஆபீஸ்லயும் விசாரித்துப் பார்த்துட்டேன். நான் பிட்ஸ்பர்க் வந்ததிலிருந்து தினம் மேனகாவோட காண்டாக்ட் பண்ண முயற்சி செய்து பார்த்தாச்சு. முடியலை. ஸம்திங் ராங். விலாசம் தப்பு. நம்பர் தப்பு மாயா."

"இல்லையே. இதே நம்பர்ல இன்னைக்குச் சாயங்காலம் பேசினேனே."

"இதே நம்பரா பாரு" என்று அந்தப் பத்து எண் இலக்கத்தைக் கூறினான்.

அவள் எழுதிக்கொண்டாள். "இதுதான் டயல் பண்ணேன்.

எனக்குக் கிடைச்சதே ஒருவேளை இந்தியாவிலிருந்து டயல் பண்ணா கிடைக்கிறதா?"

"எதுக்கும் இதைத் தீர விசாரிக்கிறேன். எனக்கு என்னவோ இதில மர்மம் ஏதோ இருக்கற மாதிரிப்படுது."

"சுனில்! நீ எப்ப வரே?"

"இப்போதைக்கு இல்லை. ஏன்?"

"சுனில்! எனக்கு வேலை பிடிக்கலை. விட்டுரப் போறேன்."

"பிடிக்கலன்னா விட்டுரு."

"விடமாட்டாங்கபோல இருக்கு."

"அதெல்லாம் இல்லை. ஒரு கால் கடுதாசி. அவ்வளவ்தான். உன்னை விட்டு வந்தது பெரிய தப்பு. இந்த முட்டாள் தேசத்தில பணத்துக்குதான் மதிப்பு. எல்லாரும் அரைகுறைப் பசங்க. பாதில விட்டு வந்துரலாமான்னு இருக்கு. மேனகாவைப் பார்த்து ஆறுதலா இருக்கலாம்ன்னா எனக்கு ரொம்ப அதிர்ச்சி. எதுக்காக இப்படித் தப்பு அட்ரஸ், தப்பு நம்பர் கொடுக்கணும்."

"நான் மறுபடி மேனகாவோட பேசறப்ப கேட்கறேன். அந்தப் பெரிய தேசத்தில் இந்த மாதிரிக் குழப்பம் வரலாம் இல்லையா?"

அனைவரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற ஞாபகம் வந்ததும் "சுனில், அப்புறம் பேசலாம்" என்று வைத்துவிட்டாள். சரிதாவிடம் நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது "என்னவாம்... மேனுவைப் பத்தி ஏதோ பேசினாப்பல இருந்ததே" என்றாள் அம்மா.

மாடிப்படியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்திருக்கிறாள்.

"அட்ரஸ் நாம கொடுத்தது தப்பாம். வேற எடம் மாத்திருக்காளோ என்னவோ."

"இவன் ஏன் அவளைப் போய்ப் பார்க்கணும்?"

"ஏதோ நம்ம மனுஷாளைப் போய்ப் பார்க்கறதுக்கும்மா."

படுக்கையில் படுத்து ராத்திரி பத்தரை, பதினொன்று, பதினொன்றரை, பன்னிரண்டு என்று அடுத்தடுத்துக் கடிகாரம் அடிப்பதைக் கேட்டுக்கொண்டே இருந்தாள். தூக்கம் வரவில்லை. புரண்டு படுத்துக் கொஞ்சம் கண்ணைச் செருகியபோது மேனகாவின் குரல் ஒலித்தது. "என்ன மாயா வரப்போறியா. வந்துரு. வெறுமனே ஊசி நிரடறதுக்கு எத்தனை பைசா."

பால்காரன் மணி அடிக்கும்வரை விழிப்பிலும் தூக்கத்திலும் ஊசலாடினாள். காலை சிந்தனை தெளிவாக இருந்தபோது தீர்மானித்தாள். "என்ன ஆனாலும் சரி, ஆபீசை விட்டு பதவித்யாகம்



தந்துவிட வேண்டும். போதும். இல்லை, ஆபீசுக்குப் போகாமலே இருந்துவிட்டால் என்ன?

"ஆபீஸ் போகலியா?" என்றார் அப்பா.

"உடம்பு சரியில்லப்பா."

"என்ன உடம்புக்கு. நல்லாத்தானே இருக்கே."

"ஜுரம்பா."

அப்பா அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்து, "நார்மலாத்தான் இருக்கு. ஏன் இப்படி அடம்பிடிக்கிறே?"

"உடம்பெல்லாம் வலிக்கிறது. இன்னிக்கு ஒரு நாள் போகலைப்பா. நாளைக்குப் போறேன்."

அம்மா, "அவ எல்லாம் நாளைக்குப் போவா. பேசாம இருங்கோ" என்றாள்.

"அம்மா! மேனகாவோட கடுதாசுங்கள்ளாம் கொண்டு வா."

"இந்த சுனில் போட்டு புரளி பண்றான். சரியா தேடியிருக்க மாட்டான்."

"அம்மா! மேனகா போன்ல பேசினாளே. அது அவமாதிரித்தானே இருந்தது?"

"பின்ன ஏன்டி?"

"அவ குரல்தானே?"

"ஆமா. அவ குரல்தான்."

"அம்மா! மேனகா குரல்தான்னு நிச்சயமா சொல்ல முடிஞ்சுதா?"

"என்னடி பேத்தற? அவதான் போட்டோ எல்லாம் அனுப்பிச்சிருக்கா. ஒவ்வொரு வாரமும் லெட்டர் போடறா."

"அம்மா, அந்த போட்டோ கொண்டு வா."

ஒரு வீட்டின் முன்னால் எடுத்த போட்டோக்கள்தான். எல்லாம் வீட்டின் உட்புறத்தில சில. வெளிப்புறத்தில் சில.

"இந்த போட்டோ எந்தத் தேசத்தில் வேணா எடுத்திருக்கலாம்மா."

"இதைப் பாரு கார் போறது, பின்னால 'மால்' எல்லாம் இருக்கு? இதெல்லாம் அமெரிக்கால தவிர வேறு எங்க இருக்கும்? ஏன் நீ அவ அமெரிக்காவே போகலைன்னு சந்தேகப்படறியா?"

"இல்லைம்மா. வேற சந்தேகம்."

"என்னடி புதுசா?"

"அப்புறம் சொல்றேன்."

"அடுத்த தடவை அவகிட்ட போன் பேசறப்ப சந்தேகம் தெளியக் கேட்டுரு என்ன?"

"கேக்கறேம்மா."

"ஆனா வேலைய விட்டுராதே சமத்தோல்லியோ. உங்கப்பாவும், நானும் உன் சம்பளத்திலதான் குடும்பம் நடத்தியாகணும்."

"வேற வேலை கிடைக்கும்மா."

"கிடைக்கும்மா. ஆனா இத்தனை சம்பளம் தருவாளா?"

"சம்பளம் தராம்மா. ஆனா அந்த இடம் என்னவோ பயமா இருக்கும்மா. என்னவோ தெரியலை, ஏதோ ஒரு விதத்தில் மாட்டிண்டுட்டேனோன்னு மனசுக்குள்ள குறுகுறுப்பா இருக்கு."

"சே, அப்டியெல்லாம் இருக்காது. மேனகா எத்தனை சிலாக்கியமா சொல்லிருக்கா. அனாவசியத்துக்குப் பயப்படாத."

"அம்மா, போய்ச் சேர்ந்ததும் அங்க எனக்குப் பத்துப் பதினஞ்சு டெஸ்ட் பண்ணா தெரியுமா?"

"மேனகாகூடச் சொல்லிருக்கா."

"அந்த டெஸ்ட் பண்ணப்புறம் எனக்கு ஒரு மயக்கம் மாதிரி வந்தது."

"சரியாப் போச்சோல்லியோ?"

"என்னம்மா இப்படிக் கேக்கறே? அந்த மாதிரி மயக்கம் இந்த வயசில வரக்கூடாதுன்னு டாக்டர் சொன்னா."

"என்னமோம்மா. உன் இஷ்டம் கொஞ்சநாள் தாக்குப்பிடிச்சுப் பாரு. இந்த டிசம்பர் வரைக்குமாவது. அப்பாவோட எஃப்.டி. மெச்சூர் ஆகிறவரைக்குமாவது இருந்தா உபகாரமாயிருக்கும். நாங்க என்ன ரொம்பவா கேக்கறோம். என் கழுத்தைப் பாரு. கொடி திருமங்கல்யத்தைத் தவிர மத்ததையெல்லாம் வித்தாச்சு. எனக்கு ஒரு கல்யாணம், கார்த்திக்குப் போகணும்னு ஆசையிருக்காதா?"

"இப்ப என்ன வேணுங்கறே. தங்கத்திலே சரடுதானே? நான் வாங்கிப் போடறேம்மா உனக்கு" என்று அவளை அணைத்துக் கொண்டாள்.

சாயங்காலம் வாசலில் கார் வந்து நின்று டாக்டர் நரேந்திரநாத் இறங்கியபோது தூக்கிவாரிப் போட்டது.

"என்ன மாயா! ஆபீசுக்கு வரலை? ஏதாவது உடம்பு சரியில்லையா?"

"ஆமா ஸார்."

"இந்த வழியாப் போறப்பப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். நாளைக்கு வருவே இல்லை."

"முடிஞ்சா வரேன் ஸார்."



"நமஸ்காரம். எம்பேர் நரேந்திரநாத்."

"அப்படியா. வாங்கோ, வாங்கோ" என்று படபடப்புடன் மோடாவை நகர்த்திப் போட்டாள் அம்மா. "உக்காருங்கோ."

"இல்லை. மற்றொரு சந்தர்ப்பத்தில வரேன் சாவகாசமா. உங்க மூத்த பெண் மேனகா எங்கிட்டதான் வேலை செய்துட்டு இருந்தா. லெட்டர் எழுதறாளா?"

"இவர்ட்டயே கேட்டுரேண்டி" என்றாள் அம்மா.

# 13

நரேந்திநாத் பரிவுடன் மாயாவைப் பார்த்து, "என்ன விஷயம். . . எதுவாயிருந்தாலும் என்னைக் கேளுங்கோ. தயக்கமே வேண்டாம்" என்றார்.

"என் அக்கா மேனகா, அமெரிக்காவிலதான் இருக்காளான்னு புதுசா ஒரு சந்தேகம் வந்திருக்கு."

"எதுக்காக அப்படிப்பட்ட விபரீதமான சந்தேகம்?"

"சுனில் விசாரிச்சிருக்கிறான் ஸார். அந்த மாதிரி அட்ரஸே இல்லையாம். தப்பாம்."

"அப்படியா!"

"டெலிபோன் நம்பரும் தப்பு. ஆனா எனக்கு போன் பண்றப்ப எல்லாம் அதே நம்பர்தான் சொல்றா. அவ எங்கேருந்து போன் பண்றா? எங்க இருக்கா? ஆச்சரியமா இருக்கு ஸார். ஒரு வேளை அமெரிக்காவே போகலையோ?"

"ஏன் அப்படி பண்ணணும் அவ?"

"அது எனக்கும் புரியலை ஸார். எதுக்காக மறைக்கணும்?"

"அடுத்த தடவை போன் பண்றப்ப கேட்டுரேன்."

"கேக்கத்தான் போறேன்."

"அமெரிக்காவில் சிலவேளை ரொம்ப சீக்ரெட்டா இருப்பா. இதெல்லாம் அங்க சகஜம். 'பர்க்ளரி, மகிங்' அப்படி இப்படின்னு இருக்கறதால சரியான அட்ரஸ் சொல்லத் தயங்கி போஸ்ட் பாக்ஸ் வெச்சுப்பா."

"சொந்த தங்கைகிட்ட எதுக்கு ஸார் பயப்படணும்?"

"எனக்கு உன் அக்காவைத் தெரிஞ்சவரை அவ மறைக்கிற வகையில்ல. எதையும் ஒளிவு மறைவில்லாம பேசிடுவா. அதான்



எனக்கு அவளைப் பிடிச்சிருந்ததுக்கே காரணம்."

"என்னவோ எல்லாமே விநோதமா இருக்கு டாக்டர். லாபில நுழையறபோதே என்னவோ வயிற்றைப் பண்ணுகிறது."

டாக்டர் சிரித்து "இதெல்லாம் கற்பனை பண்ணிக்காதே. நாளைலருந்து உனக்கு லாப் பக்கமே போகாம ஆபீஸ் வேலையாவே கொடுக்கறேன், சம்மதம்தானே."

அம்மா, "என்னவோ ஸார்! நீங்கதான் உங்க தங்கையாட்டம் இவளைப் பார்த்துக்கணும். இவ சம்பளம் வரலைன்னா எங்க குடும்பம் போண்டியாயிடும். பிடிவாதமா வேலையை விட்டுர்றேன்னு தினம் சொல்லிண்டிருக்கா. கொஞ்சம் புத்தி சொல்லுங்கோ அல்லது நல்ல இடமா பார்த்து ட்ரான்ஸ்பர் பண்ணிடுங்கோ. பயப்படறா" என்றாள்.

"அம்மா! ஒரு விஷயம் சொல்றேன், உங்க பொண்ணு பயப்படறது. . எங்க ஆபீஸ்ல சாரங்கபாணின்னு ஒரு கிராதகன் இருக்கான். அவனை எங்களால் ஒழிச்சுக்கட்ட முடியலை. அவனாலதான் எல்லா வினையும் வர்றது. அவங்கிட்டருந்து பல பெண்களை அடைகாக்க வேண்டியிருக்கு."

"நாசமாப்போறவன் உருப்படுவானா?"

"அம்மா! சும்மாரும்மா."

"பரவால்லை. அவங்க ஆதங்கத்தைச் சொல்றாங்க. சரி மாயா! நாளை ஆபீஸ் வந்துரு. சின்ன விஷயங்களுக்காக நீ வேலைய விடவேண்டாம். என்ன?"

மாயா தலையாட்ட, டாக்டர் நரேந்திரநாத் அம்மாவை வணங்கி விட்டு காரில் புறப்பட்டுச் செல்ல, அம்மா அவர் போன திசையைப் பார்த்து, "நல்ல மனுஷனா இருக்காரே. இவர்ட்ட வேலைபார்க்க கொடுத்து வெச்சிருக்கே. சும்மா வேலைய விட்டுர்றேன்னு பயப்படுத்தாத இந்த மாதிரி மேல்பதவி ஆபீசர் உனக்குக் கெடைக்கவே கிடைக்காது."

"அம்மா! உங்கிட்ட எப்படிம்மா புரியவெக்கப் போறேன்! எனக்கு ஓர் உபகாரம் பண்ணு. எனக்கு ஏதாவது ஆய்டுத்துன்னா சுனிலை உடனே வரவழைச்சுரு."

"சீ அப்படியெல்லாம் உளறாதே. உனக்கு எதுவும் ஆகாது. சாய்பாபாவை வேண்டிக்கோ, சகல கஷ்டமும் போய்டும்."

மாயா தலையில் அடித்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

திங்கள்கிழமை மிருணா கேட்டாள். "என்ன, வேலைய விட்டுட்டேன்னு சொன்னாங்க?"

"விடலை" என்றாள்.

"விடமாட்டாங்களே."

"பார்டன்?"

"உன்னை விட... விடமாட்டாங்களே. சே என்ன தமிழ்?"

மாயா தன் மேசைமேல் வைத்திருந்த குறிப்பை வெறித்துப் பார்த்தாள். நரேந்திரநாத்திடமிருந்து வந்திருந்தது.

"நான் மேனகா பற்றி விசாரித்துப் பார்த்துவிட்டேன். சில புதிய தகவல்கள் உள்ளன. பிற்பகல் அறைக்கு இரண்டு மணிக்கு வரவும்."

மிருணாவும் அருணாவும் டிபன்பாக்ஸில் கொண்டுவந்ததை மாயாவுடன் பங்கிட்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சாரங்கபாணி எட்டிப்பார்த்து, "அலோ இது லஞ்ச் டைமா" என்று கேட்டார். இருவரும் சாப்பிடுவதை நிறுத்த, "மாயா! ஒரு நிமிஷம் வரமுடியுமா" என்றார்.

"சாப்ட்டுட்டு வரேன் ஸார்" என்றாள், மற்றவர்களைப் பார்த்துக்கொண்டே.

"எப்ப ஃப்ரீயோ அப்ப... நோ ப்ராப்ளம்."

அவர் சென்றதும், 'போகாதே' என்றாள் மிருணா.

"என்னவோ விட்டுரலாம்னு பார்த்தாக்கூட இந்த வேளை சரியில்லை மிருணா. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என் பணம் தேவைப்படறது. வீட்டில உட்கார்ந்திருக்கிறதில அர்த்தமில்லை. என் அனுபவத்துக்கு வேற வேலை கிடைக்குமா?"

"உன் அழகுக்கு வேணா கிடைக்கும்."

"புரியலை."

"புரியலை?" என்றாள் அவளை ஆழமாகப் பார்த்து.

"நிசமாவே புரியலை."

மிருணாவும் அருணாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

இரண்டு மணிக்கு நரேந்திரநாத்தின் அறைக்குச் சென்றபோது மீட்டிங் முடிந்திருந்தது. "வா மாயா! உன் அக்காவைப் பற்றி எல்லாம் தெளிவாயிடுத்து."

"என்ன ஸார்!"

"தப்பா அட்ரஸ் கொடுத்திருக்கறதுக்குக் காரணம் அவ வந்து டிபென்ஸ் ப்ராஜெக்ட்டில வேலை பார்க்கறாளாம். ரகசியம். அதனால அட்ரஸ் மாற்றிக் கற்பனையா, இல்லாத ஓர் அட்ரஸைக் கொடுத்திருக்காளாம்."

"நீங்க அவளோட பேசினிங்களா?"

"ஆமாம். காலைலதான் பேசினேன். உங்கிட்டகூட சொல்ல வேண்டாம்னா. நீதான் கவலைப்படுவியோன்னு நான் சொல்லிட்டேன். டோன்ட் ஒர்ரி."

மேசைக்குத் திரும்பினதும், டாக்டர் சொன்னதில் முழு நம்பிக்கை ஏற்பட்டிருந்தாலும் ஓரத்தில் ஒரு சந்தேகத் தீற்றல் இருக்கத்தான்



இருந்தது.

மாலை சாரங்கபாணி இருமுறை கூப்பிட்டு அனுப்பியதால்தான் போனாள்.

"என்ன, நான் கூப்ட்டா வரதே இல்லைன்னு தீர்மானமா?"

"அப்படியெல்லாம் இல்லை ஸார்."

"உன் வெய்ட் என்ன?"

"எப்பவோ எடுத்தது ஸார். அம்பது கேஜி."

"அம்பது கேஜி இந்த நாற்காலி தாங்கும், உக்காரலாம்."

"பரவால்லை டாக்டர். சீட்டில வேலை நிறையவே இருக்கு."

"எப்ப ஒரு மணி நேரம் ஃப்ரீயா இருப்பே சொல்லு."

"எதுக்கு ஸார்?"

"ஒரு டெஸ்ட் விட்டுப் போச்சு. எடுக்கணும். எங்க சொல்லு பார்க்கலாம். நூறு, தொண்ணூத்து மூணு, எண்பத்தாறு. அடுத்த நம்பர் சொல்லு."

மாயா யோசித்து, "எழுத்தொன்பது" என்றாள்.

"குட்! நீதான் எனக்கு ஏற்ற பெண்" என்று அவளை ஊடுருவிப் பார்த்தார். 'மேனகா ஆரம்பிச்சு வெச்சது மாயா முடிக்கப்போறியா?"

மாயா கலக்கத்துடன் இருக்கைக்கு வந்து சேர்ந்தாள். நரேந்திரநாத் ஒரு கடிதத்தை லேசரில் அடிக்கச் சொல்லியிருந்தார். அதற்காக லேசர் ப்ரிண்ட் எங்கே இருக்கிறது என்று கேட்டதற்கு மிருணா "நேரப் போனா ரெண்டாவது காரிடார்ல ரெண்டாவது கதவு" என்றாள்.

அவள் காட்டிய கதவைத் திறந்ததில் ஒரு காலி அறை தெரிந்தது. அங்கிருந்து பச்சைக்கதவு தெரிய, அங்கே இருக்கிறதோ என்று அதைத் திறந்ததில் நீண்ட வாயில் தெரிந்தது. அதன் கோடியில் ஒரு வெளிச்ச பல்பு தெரிந்தது. பேசாமல் திரும்பி தன் இருக்கைக்குப் போகாமல் அவள் அந்த வாசலை நோக்கிச் சென்றாள். என்னவோ அவளைச் செலுத்துவதுபோலத்தான் இருந்தது. என்ன சக்தி அது என்று தெரியவில்லை. ஒரு மாதிரி ஆல்கஹால் வாசனை அடித்தது. பச்சை கவுன் அணிந்திருந்த இருவர் பேசிக்கொண்டு வந்தவர்கள், அவளைக் கவனிக்காமல் கதவைத் திறந்தனர்.

"எத்தனாவதுப்பா?"

"எட்டுங்க."

"எட்டுன்னா இடப்பக்கம் இருக்கும். ரெட்டைப் படையெல்லாம் இடப்பக்கம்தான் இருக்கும். ஒத்தைப்படை வலது. எல்லாம் சாரங்கபாணி ஐடியாப்பா."

அவர்கள் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பது புரியவில்லை. வழிதவறி தப்பான இடத்துக்கு வந்துவிட்டோம்

என்பது தெரிந்தது. இந்த மாதிரி பகுதி இந்த இடத்தில் இருக்கிறதா என்று ஆச்சரியமாக இருந்தது. இவளை அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை.

வலப்புறம் இருந்த பெரிய கதவைத் திறந்தபோது உள்ளேயிருந்து மிகக் குளிர்ந்த காற்றின் உம்ம் என்ற சப்தம் கேட்க அந்த ஸ்தலத்தின் முழு விஸ்தாரமும் உடனே தெரிந்தது.

ஆரஞ்சு நிற வெளிச்சத்தில் பிறை பிறையாக இலக்கமிட்டிருந்தது. அதன் மேல் சீட்டுக்கள். அதில் எட்டு என்ற எண்ணைத் தேர்ந்தெடுத்து அந்த வலுவான இரும்புக் கதவைத் திறந்தான். உள்ளே ப்ளாஸ்டிக் உறைபோல இருந்தது. அதைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு "இதானப்பா" என்றான் ஒருவன்.

அருகே இருந்த சக்கரம் வைத்த வண்டியை ஒருவன் இழுத்துவர,

"அண்ணே! இதில மொத்தம் எத்தனி இருக்குது?"

"தெரியாதுப்பா. நாப்பது அம்பது."

"எல்லாத்திலயும் இருக்குங்கறே?"

"பாதிதான். பாதி காலியா இருக்கும்."

அவர்கள் தம் வேலைக்கு ரொம்ப பழக்கப்பட்டவர்கள்போல எட்டாம் பிறையிலிருந்து ப்ளாஸ்டிக் போர்த்திய என்னவோவை இழுத்து அந்த சக்கர வண்டியில் வைத்து படக்கென்று மூடினார்கள். திரும்பும்போதுதான் அவளைப் பார்த்தனர்.

"யாரும்மா நீ ஸ்டாப்பா?"

"வந்து... வந்து... ப்ரிண்ட்..."

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு, "லாப் ஸ்டாப் மாரி கீதப்பா" என்றான்.

"போ இங்கெல்லாம் வரக்கூடாது. உன்னையும் உள்ள தள்ளிடுவாங்க. ஆளு புதுசா?"

மாயாவுக்கு அவன் சொன்னது கேட்கவில்லை. அந்த பாலித்தீன் உறைக்குள் இருந்த உடல்தான் அவள் கவனத்தைப் பிடித்து இழுத்தது.



# 14

மாயாவுக்கு முதலில் அந்த இடத்தை விட்டு விலகும் நிர்ப்பந்தம் தான் தோன்றியது. ஃபார்மலின் வாசனை. மஞ்சள் வெளிச்சம். ஃப்ரிஜ்ஜுக்குள் கறிகாய் வைத்திருப்பதுபோல சுத்தமாக பாலித்தீன் போர்த்தப்பட்ட சுச்சித உடல். மூக்கு நுனியில் கொஞ்சம் தண்ணீர்த் துளிகள் தெரிந்தன. அத்தனை குளிராக இருந்தாலும் நெற்றியில் வியர்வை முத்துக்கள் கொப்பளித்தன.

படபடவென்று அந்த இடத்தை விட்டு ஓடிவந்து, கதவைத் திறந்து அருகே பாத்ரூமுக்குப் போய் முகத்தில் நீரை வாரி இறைத்துக் கொண்டாள். கண்ணாடியில் பார்த்தபோது, முகம் காகிதம்போல வெண்மையாக இருப்பதைக் கவனித்தாள்.

பாத்ரூமில் உள்ளே வந்த அருணா, "என்ன, எங்க போய்ட்ட?"

"அருணா, அருணா! அந்த ரூமுக்குள்ள போனபோது பெரிசா காரிடர் இருந்தது. சுவர்ல பிறையா இருந்தது. அதிலருந்து ஒரு பாடியை எடுத்தாங்க."

அருணா அவளை வியப்புடன் பார்த்து, "அங்க எப்படிப் போனே. சாதாரணமா அந்தக் கதவு திறந்திருக்காதே?"

"அருணா, அது என்ன இடம்? அங்க என்ன?"

"மார்ச்சுவரி."

"அதெல்லாம் நிஜ உடலா?"

"ஆமாம். எல்லாம் செத்துப் போனது. 'பாத்தாலஜி'க்காக வெட்டி பண்ணிட்டு இருக்கும்."

"அருணா, இந்த இடம் ஆஸ்பத்திரியா?"

"ஆஸ்பத்திரி இணைந்த லாப். நியுரோ ஸர்ஜரி பண்ணுவாங்க. மூளைல ஆப்பரேஷன் எல்லாம் பண்ணுவாங்க."

"யாரு?"

"நரேந்திரநாத், சாரங்கபாணி ரெண்டுபேரும் பண்றாங்க. ரிஸர்ச்சுக்காக."

"அதெல்லாம் ஆப்பரேஷன் வெற்றி பெறாம இறந்து போய்ட்ட கேஸா?"

"ஆமாம்" என்றாள் அருணா. "இங்க நடக்கற ஆப்பரேஷன் எல்லாம் பாதிக்குப் பாதிதான் சக்சஸ் ஆகும். கைவிட்ட கேஸையெல்லாம் எடுத்துப்பார். டாக்டர் மேலும் ரிஸர்ச்சுக்காக வேற சில அபாயகரமான ஆப்பரேஷன் பண்றாரா..?"

"அருணா! சொல்லாத, பயமா இருக்கு."

"என்ன பயம்? உம்மேல ஆப்பரேஷன் பண்ணிடுவார்ன்னா?"

"ஆமாம் அருணா! நான் போறேன். எனக்கு இந்த இடமே வேண்டாம். சம்பளம் வேண்டாம். பாக்கி வேண்டாம். எதும் வேண்டாம்."

"பைத்தியம்! இந்த மாதிரி ஒரு சின்ன விஷயத்துக்குப் போயி வேலையை விடுவாளா?"

"இந்த வேலை வேண்டாம். இந்த வேலை வேண்டாம்."

"என்ன இப்படி நடுங்கறது. ஏதாவது ட்ராங்விலைஸர் சாப்பிடறியா?"

"வேண்டாம். நான் இப்பவே போறேன்."

"எங்க போறாப்பல?" என்று குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். சாரங்கபாணி நின்றுகொண்டிருந்தார்.

அருணா அவரைப் பார்த்துச் சிரித்து, "ஒண்ணுமில்லை டாக்டர்! மார்ச்சுவரி பக்கம் போயிருக்கா. பயந்துகிட்டா."

"அப்படியா. அங்கல்லாம் எதுக்குப் போறே மாயா?"

"ஏதோ எப்படிப் போனாளோ, வழி தப்பியிருக்கா போல இருக்கு. புது இடமில்லையா."

"பழகிடும்."

"பயந்துண்டு வேலையை விடறேன்னு பிடிவாதமா சொல்லிட்டிருக்கா."

"இதுக்குப் போய் வேலையை விடறதாவது? என்ன மாயா நீ! லைஃப்ல டெட்பாடி பார்த்ததில்லையா?"

"இந்த மாதிரி பார்த்ததில்லை ஸார். பிறை பிறையா ஏதோ டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ல அடுக்கிருக்காப்பல..."

"நல்ல உவமை" என்று சிரித்தார்.

டாக்டர் சாரங்கபாணியின் முகத்தைப் பார்த்தபோது அதில் விவரிக்க முடியாத கேலி. ஒரு கயமை இருப்பதுபோல அவளுக்கு



அப்போதுதான் தோன்றியது. பார்வையில் ஒரு எசமானத்தனம், இறுமாப்பு, 'என்னிடமிருந்து போய்விடுவாயா பார்க்கலாம்' என்கிற சவால் எல்லாம் இருந்தது.

"மாயா! உன்னை வெச்சுக்கிட்டு ஒரு முக்கியமான பரிசோதனை பண்ண ஒப்புத்துட்டப்புறம் எங்க போற?"

"நான் பரிசோதனை எதுக்கும் ஒப்புத்துக்கவே இல்லை ஸார். இது அநியாயம்."

"உன் ஜாய்னிங் ரிப்போர்ட்டைப் பாரு. அருணா மாயாவோட ஜாய்னிங் ரிப்போர்ட்டை எடுத்துக் காட்டு."

"எனக்குத் தெரியாது. ஏதேதோ கையெழுத்துப் போட்டேன். எல்லாம் கான்ஸல்."

"அப்படிச் சொல்லிட்டா எப்படி?"

"இப்ப என்ன ஸார். ஒரு வேலை. இந்த வேலையிலருந்து நான் ராஜிநாமா பண்ண முடியாதுங்கறிங்களா?"

"முடியாது, காண்ட்ராக்ட் பிரகாரம்."

"அதெப்படி ஸார்? வேலை செய்யறதோ விடறதோ ஓர் ஆதார உரிமையில்லையா?"

"காண்ட்ராக்ட்டை மீறினா உன்னை ஜெயில்ல போடுவாங்க."

"போடட்டும்."

இதற்கு அருணா குப்பென்று சிரித்து, "என்ன ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் இப்படி பண்ற மாயா! ஆஃப்டர் ஆல் ஒரே ஒரு சின்ன டெஸ்ட் மாதிரி."

"உன் மூளை அலைகளைப் பிரதி எடுக்கப் போறோம். வலிக்கவே வலிக்காது. என்ன அருணா! எத்தனை தடவை உனக்கு என்ஸஃபாலோகிராம் எடுத்திருக்கோம். தூக்கத்தின்போது விழிப்பின்போது, செக்ஸின்போது, எல்லாமே வாலண்டியரா பண்ணது. மாயா! உன்னுடைய ஹார்மோன் பாலன்ஸ் ரொம்ப விநோதமானது. உன் அக்காவுக்கு எப்படியோ அப்படித்தான். ஒரு ரகசியம் சொல்லட்டுமா. உன் அக்காவோட செய்த ஆராய்ச்சியின் தொடர்ச்சிக்காகத்தான் உனக்கே வேலை கொடுத்தோம். அவ திடீர்னு வேலையை விட்டுட்டுப் போயிட்டதால அதுவரை லட்சக்கணக்கில் செலவழிச்சு செய்த ஆராய்ச்சி விரயமாகிறது. அதனால அதே வகை ஜீன்ஸ், அதே மாலிக்யுலர் ந்யுரோனல் ஸ்ட்ரக்சர் உள்ள அவ தங்கையான நீ தேவையா இருந்தே. மாயா! பிடிவாதம் பிடிக்காதே. ஆராய்ச்சிக்கு இன்னும் ஒரு வாரம் எங்களோட ஒத்துழைச்சா போதும், விட்டுர்றோம்" என்றார் சாரங்கபாணி.

மாயா 'முடியாது' என்றாள் பிடிவாதமாக. 'இந்தக் கணம் வேலையை விட்டாச்சு' என்று மேஜைக்குச் சென்று 'ஐ ரிஸைன் மாயா' என்று எழுதி வைத்துவிட்டு கைப்பையை எடுத்துக்கொண்டு

விறுவிறுவென்று புறப்பட்டாள்.

அருணாவும் பாணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டது வினோதமாக இருந்தது.

லாபின் முன் வாசலுக்கு வந்தபோது அந்தக் கண்ணாடிக் கதவுகள் பூட்டியிருந்தன. 'வடக்கு வாசல் வழியாகப் போகவும்' என்று அறிவிப்புப் பலகையில் எழுதியிருந்தது. நார்த் கேட் எங்கிருக்கிறது என்று விசாரித்ததில் நேராகப் போய் இடப் பக்கம் திரும்பச் சொன்னார்கள்.

மெல்லச் சரிந்த புல்வெளியில் நடந்தாள். மாயாவுக்கு என்னவோ மனதை வாட்டியது. படபடவென இதயம் மார்புச் சிறைக்குள் அடித்துக்கொள்வது தெளிவாகக் கேட்டது. வியர்த்திருந்தது. தப்பித்தால் போதும். வேண்டாம் வேண்டாம். இந்த இடத்து சங்காத்தமே வேண்டாம், வேண்டாம்.

நார்த் கேட்டில் காவலாளி 'பாஸ்' கேட்டான். காட்டியபோது 'இந்த வழியா போகக் கூடாதுங்களே' என்றான். 'சவுத் கேட்லன்னா போகணும்.'

"சவுத் கேட் பூட்டியிருக்குப்பா. அங்க போர்டு போட்டிருந்தது."

"இந்த வழியா யாரையும் அனுமதிக்க முடியாதுங்க. ரிஜிஸ்த்ரார் பர்மிட் வேணுமே. சவுத் கேட் இருபத்து நாலு மணியும் திறந்திருக்குமே?"

"இல்லைப்பா மூடிருக்கு."

"எதுக்கும் நீங்க டாக்டர் சாரங்கபாணிட்ட சீட்டு வாங்கி வந்துருங்க" என்றான்.

அவனை நேர்முகமாகப் பார்த்தாள். இவர்கள் எல்லாருமே ஒரே கட்சி.

அவன் கேட்டைப் பாதி திறந்து வைத்திருந்தான். மாயா நுழையப் போதுமான இடைவெளியிருந்தது. மாயா சட்டென்று தீர்மானித்தாள்.

அவனை ஒரு தள்ளுத் தள்ளி ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிட்டாள். இரண்டு நிமிஷம் 'தலைதெறிக்க' என்று சொல்வார்களே, அப்படி ஓடின பின்தான் திரும்பிப் பார்த்தாள். அந்தக் காவலன் அவளைத் துரத்தவில்லை என்று தெரிந்தது. சமாதானமாகி, 'நான் எங்கே இருக்கிறேன்?' புரியவில்லை. வெளியே காம்பவுண்டுச் சுவர்களுக்கு அப்பால் கார், பஸ்களின் சப்தம் கேட்க, எங்கேயாவது ஒரு பாழாய்ப் போன வெளிவாசல் இருந்தே ஆக வேண்டும் என்று சுவரோடு நடந்தாள். கம்பிபோட்டுத் தடுத்த நடை வந்தது. அதுதான் வெளியே போகும்போல இருக்க, அதில் நுழைந்து படபடப்புடன் நடக்க அவள் நெஞ்சகம் மார்புக்கு வெளியே வந்துவிட்டதுபோல அப்படி கூப்பாடு போட்டது. திரைகளின் அப்பால் மிகமிக மௌனமாக இருக்க நீண்ட நடை அது. அதன் கடைசியில் அதன் திருப்பத்தில் எதிரொலி கேட்டது. காலடி ஓசையும் கேட்டது. அந்த மங்கல் ஒளியில் வருவது சாரங்கபாணிபோலத் தோன்றியது.

மாயா தன்னை அறியாமல் அருகே ஒரு கதவைத் திறந்து கதவைச் சாத்திக்கொண்டாள்.

இருட்டாக இருந்தாலும் அந்த இடத்து வாசனை பழகினதுபோல இருந்தது. ஒளிந்துகொள்ள வசதி இருந்தது. சுவரின் விளிம்பு வெளிச்சம் தெரிந்தது.

டாக்டர் சாரங்கபாணியும் சகாக்களும் அங்கேதான் வருகிறார்கள் என்று தெரிந்தது. மாயா சட்டென்று மேசை போல இருந்த இடத்தில் பதுங்கிக்கொண்டாள். கால்கள் அவளைக் கடந்து செல்வதைப் பார்த்தாள். அழுகையாக வந்தது. கால்கள் நின்றன. "லைட் போடுப்பா" யாரோ ஸ்விட்சைத் தட்ட, ஒளி வெள்ளம் அந்த இடத்தைப் பிரகாசித்தது.

"எத்தனாம் நம்பர்ப்பா?"

"பதினெட்டு ஸார்."

"எடு."

மாயாவுக்குக் கால்கள் தெரிய சக்கர வண்டி உருண்டு அவர்களிடம் தள்ளப்படுவது தெரிந்தது.

சாரங்கபாணியின் குரல் தெளிவாக, "வாவ், அப்படியே, அப்படியே இருக்கா. இன்னும் பத்து நாள் போதும்பா. இந்த பொண்ணு ஏனோ அப்படி முரண்டு பண்றா."

"ட்ரக் பண்ணாத்தான் இனி ஒப்புத்துக்கும்."

"கனெக்ஷன் கொடுப்பா. மெதுவா" என்று அந்தச் சக்கரப்படுக்கை மேல் அதை இழுத்துப் போட்டபோது "மேனகா எழுந்திரு" என்றார் சாரங்கபாணி.

# 15

'வா மேனகா! பேசு மேனகா!' என்று சாரங்கபாணி யாரைப் பார்த்துச் சொல்கிறார் என்பது முதலில் தெரியவில்லை. தைரியம் வந்ததும் தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டுச் சற்றே எட்டிப் பார்த்தாள். அந்தக் காட்சியை அவள் உயிருள்ளவரை மறக்க மாட்டாள். எதிர்காலத்தில் அனேகம் கனவுகளில் அந்தக் காட்சி திரும்ப பல்வேறு வடிவங்களில் தோன்றிக்கொண்டு இருக்கப் போகிறது. அத்தனை ஆழமாக அந்தக் காட்சி அவளைப் பாதித்தது.

சக்கரம் படைத்த படுக்கை வண்டியில் அதை அந்தப் பிறையிலிருந்து இழுத்துப்போட்டு உட்கார வைத்தார்கள். ஈரமாக இருந்தது. அது கண்ணீரா, தண்ணீரா தெரியாமல் கன்னத்தில் பளிச்சிட்டது. ஒரே திசையில் பார்த்துக்கொண்டிருந்தது. உயிருள்ளதா, இல்லையா? தெரியவில்லை. பார்ப்பது நிஜமா, கனவா என்றும் தெரியவில்லை. கனவு என்றால் உடனே விழித்தாக வேண்டும். ஏனெனில் அது – அந்த அதை என்ன சொல்வது – அது அவள் அக்கா மேனகாபோலத் தோற்றமளித்தது.

மேனகா அமெரிக்காவிலல்லவா இருக்கிறாள்! பின் இது யார்? அல்லது இது என்ன?

இதற்குள் தரையிலிருந்து பெட்டிபோலிருந்ததைத் திறந்து வட்ட வடிவமுள்ள வளையத்தை எடுத்து அதன் தலையில் பொருத்தினான் ஒருத்தன். அவ்வளையம் ஒருவாறு அழகுப் போட்டிகளில் அளிக்கும் கிரீடம்போல இருந்தாலும், அதன் விளிம்பிலிருந்து பல்வேறு ப்ளாஸ்டிக் மெல்லிய மின் இணைப்புகள் புறப்பட்டு, அவற்றை ஒவ்வொன்றாக அந்தப் பெட்டியில் இணைத்தார்கள். இதில் சாரங்கபாணியும் உதவ, அது – அதாவது மேனகா வடிவ அது – அதை பொம்மை போலத்தான் சொல்ல வேண்டும். ஆனால் எந்த பொம்மையும் இத்தனை நிர்வாணமாக இருக்காது.



மாயா முதலில் இப்போதுதான் அதன் நிர்வாணத்தைக் கவனித்தாள். மென்மையான மார்பும், வெள்ளை வெளேர் அங்கங்களும், எதிர்பார்த்த இடங்களில் உரோமத் திட்டுகளுமாக அதன் நிஜம் அவளைத் தாக்கியது.

சாரங்கபாணி ஒவ்வொன்றாக இணைக்கும்போதுகூட அது நேராகத்தான் பார்த்தது.

மேனகா போல யார் இது? மேனகாவாக இருக்க முடியாது. மேனகாவோடு நேற்றுதான் நரேந்திரநாத் பேசியிருக்கிறாரே! பின் இந்த பொம்மை என்ன?

இணைப்புகளை முடித்ததும் சாரங்கபாணி அதை ஆர்வத்துடன் பார்த்து, "மேனகா!"

கொஞ்ச நேரம் மௌனம்.

"மேனகா!"

"ம்!"

"பேர் சொல்லு."

"மேனகா."

"தேதி சொல்லு."

"செப்டம்பர் ஒம்பது."

"பேசு! ஃபைல்லருந்து ஏதாவது பேசு!"

"மக்களிடையே அறிவியல் விளக்கங்களைப் பரப்புதல்."

"நான் சொல்றதைத் திருப்பிச் சொல்லு."

"சொல்லு."

"நான்"

"நான்"

"மேனகா."

"மேனகா."

"மாயா என் தங்கை."

"மாயா என் தங்கை."

"இப்ப எல்லாத்தையும் திருப்பு."

"நான் மேனகா, மாயா என் தங்கை."

"ரிமார்க்கபிள், எக்ஸ்ட்ரார்டினரி" என்று சாரங்கபாணியின் அருகே இருந்தவர் அவர் கையைப் பற்றிக் குலுக்க...

"டவுன்லோடிங்கில இதுவரை வந்துட்டோம் பிரபாகரன்! அவனுக்கு நரேந்திரநாத்துக்கு பொறாமை!"

"அவரும் நல்ல தியரிட்டிஷியன்தான். இப்ப இதை இதுக்குமேல கொண்டு போகலையா?"

"இல்லை. என்ன ஆச்சுன்னு நான் சொன்னனே, சிக்கல், அது நேர்ந்து போச்சு. இம்யூன் சிஸ்டம் ரியாக்ட் பண்ணி..."

"அதான் சொன்னிங்களே."

"அதனாலதான் இவள் தங்கை மாயாவை எங்கேஜ் பண்ணிருக்கோம்!"

"அப்படியா! அவங்க இந்த லாப்லதான் இருக்காங்களா!"

"ஆமா. கொஞ்சம் எதிர்ப்பு இருக்கு. ஆனா 'டிரக்' பண்ணி மருந்து மூலம் சம்மதிக்க வைக்கப் போறோம், இன்னி ராத்திரி. சம்பத், மாயாவை இன்னிக்கு லாபுக்குக் கொண்டு வந்தே ஆகணும்!"

"அப்புறம் டாக்டர் இந்தக் கை குறையறதை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தி இருக்கீங்க?"

"அந்த ப்ராப்ளம் ஸால்வ் ஆயிடுத்து. ஒரு பாட்ச் ஐ.எஸ்ல இந்தக் கோளாறு. இனிமே அந்தப் பிரச்சினை இல்லை."

"அப்ப டோட்டலா டவுன் லோட் எப்ப நிகழும்?"

"ஒரு வருஷம் இப்பவே! ப்ரேக் த்ரூ!"

மாயா இதுவரை ஏதோ கட்டுண்டவள்போலத்தான் இருந்தவள் சட்டென்று தன் உணர்வுக்கு வந்தாள். கேட்டதில் பாதி புரியவில்லை. ஆனால் மூளைக்குள் "அபாயம்" என்கிற சிவப்பு விளக்கு பளீர் என்று எரிந்தது.

ஓடு... ஓடு... இந்த இடத்தை விட்டு ஓடு! எங்கே ஓடுவது? டாக்டர் நரேந்திரநாத் அவரிடம் முதலில் சொல்ல வேண்டும். சாரங்க பாணி இந்த பொம்மைக்குச் செய்யும் விநோத பரிசோதனை பற்றிச் சொல்லிவிட வேண்டும். டாக்டர் நரேந்திரநாத்துக்கு இதெல்லாம் தெரியுமோ இல்லையோ! இப்போது வெளியே செல்ல வேண்டும்.

அவர்கள் தீவிரமாகப் பேசிக்கொண்டிருக்க, சன்னமாக நடந்து அந்த இடத்து வாசலை அடைந்தபோது அவர்களில் யாரோ கவனித்து, "யாரங்கே!" என்று அதட்ட தறிகெட்டு ஓடினாள். நீண்ட உள்நடையின் இட, வலச் சுவர்களில் பதிந்திருந்த ஒவ்வொரு கதவையும் திறக்க முயற்சி செய்து தோற்றுத் தோற்று ஓடினாள். அவள் உயிராசையும் பயமும் கலந்து அவளுள் அட்ரினலின் காதுகளில் சூடாகும் வரை பிரவகிக்க... அப்பா! ஒரு கதவு திறந்தது.

லாபில் மைக்ராஸ்கோப் பார்த்துக்கொண்டிருந்த விஜி என்கிறவன் நிமிர்ந்து, "என்ன மாயா இது, இத்தனை அவசரம்?"

"டாக்டர் நரேந்திரநாத் ரூம் எங்கே?"

"உனக்குத் தெரியாதா?"

"அங்கே... அங்கே..." என்று ஆரம்பித்தாள். மூச்சு முட்டியது. இருமல் வந்தது.

"தண்ணி குடி."



"நேரமில்லை. டாக்டர் எங்கே?"

"நேராப் போய் வலப் பக்கம் திரும்பு..."

கோம்ளின் பரிச்சய வடிவம் பார்த்ததும் கொஞ்சம் மார்பு படபடப்பு அடங்கியது. "மேடம்! நான் டாக்டரை அர்ஜன்ட்டா பார்க்கணும்."

"மீட்டிங்கில இருக்கார். வெய்ட்!"

"அர்ஜன்ட் மேடம்! அவங்க என்னைத் துரத்திக்கிட்டு வராங்க."

"யாரு?"

"அவங்க" என்று காரிடாரைக் காட்ட...

"யாரும் இல்லையே!" இதற்குள் மணி அடிக்க, "சரி, நீ உள்ளே போகலாம்" என்றாள்.

மீட்டிங் கலைந்து அதிகாரிகள் வெளிவர மாயா உள்ளே சென்றாள். டாக்டர் நரேந்திரநாத் தன் மேஜை மேலிருந்த ப்ளாஸ்டிக் மலர்க் கொத்தை எடுத்து வைத்தார். "மாயா! என்ன இப்படி படபடப்பா வந்திருக்கே!"

"டாக்டர்... டாக்டர்... அங்கே... அங்கே..."

"எங்கே?"

"பிறை பிறையா... அதில பாடி மாதிரியும் இருக்கு. பொம்மை மாதிரியும் இருக்கு."

"என்ன சொல்ற புரியலையே!"

"டாக்டர்! நீங்க மேனகாகூட எப்ப பேசனீங்க?"

"நேத்து ராத்திரிதான். ஏன்?"

"அவளை போன்ல உடனே கூப்பிடுங்க! மைகாட்! இட் வாஸ் ஸோ ரியல்..."

"என்ன சொல்றே நீ! உட்கார்..."

"டாக்டர்! சாரங்கபாணி என்னை ரிலீஸ் பண்ண மாட்டேன்னார். நான் விட்டுட்டுப் போறதா முடிவு பண்ணிட்டேன். கடவுள் வந்தாலும் என் முடிவை மாற்ற முடியாதுன்னு சொல்லிட்டு வெளியேற போனேன். கதவு பூட்டியிருக்கு. நார்த் கேட் போகச் சொன்னா. பாஸ் கேட்டான். அங்கிருந்து ஓடி வந்தேன். எங்கேயோ போய் ஒளிஞ்சுண்டேன். அங்க பிரம்மாண்டமா ஒரு ஹால். அந்த மாதிரி இடம் இந்த இடத்தில் இருக்கான்னு ஆச்சரியம். அதைவிட ஆச்சரியம் நான் அங்கே பார்த்த உருவம்!"

"உருவமா?"

"ஆமா டாக்டர். பிறைக்குள்ளருந்து என் அக்கா போலவே ஒரு பொம்மையை எடுத்தார். பேசற பொம்மை."

"என்னது பேசும் பொம்மையா?"

"ஆமா. அக்காவோட குரல்ல பேசித்து. என்னவோ அதன் தலையில் இணைத்து நீங்க சொல்வீங்களே டவுன் லோடிங்..."

"வெய்ட் எ மினிட். சாரங்கபாணி கூட யாராவது இருந்தாங்களா?"

"சிவப்பா, வாட்டசாட்டமா இன்னொரு டாக்டர் வந்திருந்தார்!"

"விமாயே! என்ன செஞ்சான் சாரங்கபாணி?"

"பேச வெச்சார் ஸார். நிஜம் போலவே!"

"அவ்வளவுதானே!"

மாயா தயக்கமாக இருக்க, நரேந்திரநாத் "முதல்ல உட்கார். இந்தா தண்ணி சாப்பிடு, கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு நிதானமா மெல்லச் சொல்லு. என்ன நடந்தது?"

"டாக்டர்! அதுக்கு முன்னாடி நான் மேனகாகூட பேசியே ஆகணும். போன் போட்டுக் கொடுங்க."

அவர் கைக் கடிகாரத்தைப் பார்த்து, "இப்ப நியூயார்க்கில் எத்தனை மணி..."

"எத்தனை மணியா இருந்தாலும் எழுப்புங்க? கூப்பிடுங்க... டாக்டர் ப்ளீஸ்!"

"ஒன் மினிட். எங்கேயோ உங்க அக்காவோட புது நம்பர் எழுதி வெச்சிருந்தேனே. அ! இதோ இருக்கு." அவர் பித்தான்களை ஒத்த, கோம்ஸ் ஆடாக ட கொண்டுவந்து கொடுத்தாள். அதை ஸிப்பினதில் சற்றே படபடப்பு அடங்கியது.

"ஹலோ... திஸ் இஸ் என் ஓவர்ஸீஸ் கால். கன் ஐ டாக் டு மேனகா ப்ளீஸ்... எஸ் ப்ளீஸ்! வேக் ஹர் அப். இட்ஸ் அர்ஜெண்ட்!"

கொஞ்ச நேரம்... "தூங்கிண்டிருக்கா!"

"எழுப்பட்டும்."

"மேனகா! ஹாய்! டாக்டர் நரேந்திரநாத். ஹெள ஆர் யூ? கொஞ்சம் இரு. உன் தங்கை கூடப் பேசு!"

மாயா அந்த போனை வாங்கிக் காதில் வைத்துக்கொண்டு, "ஹலோ! அக்கா! நான் மாயா பேசறேன்."

"ஹாய் மாயா! எப்படிருக்கே?"

"மேனகா! மேனகா! நான் இங்க பயங்கரமான ஒரு காட்சியைப் பார்த்தேன்."

"என்ன காட்சி?"

"நீ அப்படியே பொம்மை மாதிரி, நேக்கடா... வேண்டாம் மேனகா, பயந்துப்பே. ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லு. ஒளிக்காம மறைக்காம. மேனகா! நீ நிஜமாவே அமெரிக்காலதான் இருந்து பேசறியா இல்லை நீ ஒரு குரலா?"

"ஏன் மாயா அப்படிச் சந்தேகம் உனக்கு?"



"இல்லை மேனகா! சமீபத்தில நடக்கிற சில அசந்தர்ப்பங்களைப் பார்த்தா அப்படித்தான் நினைக்கத் தோணறது. மேனகா! உன் மேல டாக்டர் சாரங்கபாணி ஒரு பரிசோதனை செய்தாராம். அதை என் மேல தொடர்ந்து செய்யணுமாம். அது என்ன பரிசோதனை அக்கா?"

"மாயா! பயப்படாதே. உன் இஷ்டமில்லாம அவங்க ஒண்ணும் செய்ய முடியாது. பிடிக்கலைன்னா வேண்டாம்னு சொல்லிடு. வேலையை விட்டுரு!"

"விடமாட்டாளாமா!"

"யார் சொன்னா? நான்சென்ஸ்! நீ டாக்டர் நரேந்திரநாத்கிட்ட கேட்டுக்கோ!"

சட்டென்று மாயாவுக்குள் நரம்புத் தண்டுக்குள் ஓர் ஐஸ் அலை ஓடியது.

எல்லாமே பொய். இந்த உரையாடல் பொய். இது வெறும் குரல்! அமெரிக்காவில் இருக்கும் அக்கா அல்ல!

எப்படிக் கண்டுபிடிப்பது... சட்டென்று ஒரு யோசனை உதயமானது. 'சே! இதை ஏன் முன்னமேயே நினைக்கவில்லை...

"அக்கா! நீ என்னைத் தப்பா நினைச்சுக்காதே. உன்னை டெஸ்ட் பண்றதா நினைச்சுக்காதே. நான் இப்ப இருக்கிற மனநிலையில இந்தப் பரீட்சை தேவையா இருக்கு. எதை நம்பறது என்று குழப்பமா இருக்கிற நிலையில நீ, நீதான்னு எனக்கு ஒரு நிரூபணம் தேவையா இருக்கு. அதனாலதான் கேக்கறேன்."

"சுத்தி வளைக்காதே. கேளு!"

"அக்கா! உனக்கும் எனக்கும் மட்டும் தெரிஞ்ச ஒரு ரகசியத்தை – வேறு யாருக்கும் தெரியாத ஒரு சிறு வயது ரகசியத்தைக் கேக்கப் போறேன். சொல்லியா?" என்றாள்.

# 16

மாயா தன் அத்தனை படபடப்பையும் அடக்கிக்கொண்டு மார்பைத் தடவிக்கொண்டு சுதாரித்துக்கொண்டு மெல்ல யோசித்தாள். எதைக் கேட்பது? எனக்கும் அக்காவுக்கும் மட்டும் தெரிந்த அந்தரங்க விஷயம். சிறு வயதில் நிகழ்ந்த எதைத் தேர்ந்தெடுப்பது? புன்னை மரத்தில் ஏறப்போய் சறுக்கி விழுந்து தொடையில் பட்ட ரத்தக் கீறலா? அக்காவும் அந்த மதனும் கைகோத்துக் கொண்டு அமெச்சூர் முத்தம் கொடுத்துக்கொள்ள முயன்றதைப் பார்த்ததா? ரயில் பாதையில் இருவரும் தனியாய் நடந்து செல்லும்போது ... ஆம், அதைத்தான் கேட்க வேண்டும். மற்ற எவருக்கும் தெரியாத சின்ன சம்பவம்.

"மேனகா! ஒரு தடவை நானும் நீயும் ரயில் பாதைக்குப் பக்கத்தில் நடந்துகிட்டு இருந்தபோது ..."

"ஞாபகமிருக்கு மாயா. தண்டவாளம் துடிக்க ஆரம்பிச்சுது. ரெண்டு பேரும் அதன்மேல காதுகொடுத்துக் கேட்டோம்... தூரத்தில் ரயில் வர்ற சப்தம். மாயா! எத்தனை தடவை நானும் நீயும் தனியா நடந்திருக்கோம்! கேட்டிருக்கோம். தந்திக் கம்பத்தில் காது கொடுத்து குய்ய்ய்ங்ன்னு ஒரு சப்தம் கேட்குமே, அதைக் காதை வெச்சுக் கேட்டிருக்கோம். இது என்ன சப்தம்னு கேட்பே. நான் வந்து பலபேருக்குத் தந்தி போறது அந்தச் சப்தம் என்பேன். தந்தில என்ன செய்தின்னு கேட்பே. நான்பாட்டுக்கு விசுவநாதன் பாஸ் பண்ணிட்டான், ராமுவுக்கு ஆண் குழந்தை, பார்த்தசாரதிக்கு பரிசு இப்படி ரீல் விட்டுக்கொண்டே இருப்பேன்."

"ஆமா அக்கா... அந்தத் தந்தில ஏதும் கெட்ட சேதியே இருக்காது! எல்லாமே இன்பமான தந்திகள்."

"அத்தனையும் நம்புவே, உன் கண்ணு விரியும்."



மைகாட்! இவள் மேனகாதான். நிஜம்தான். அந்தப் பொம்மை மேனகா இல்லை. இவள்தான் மேனகா. அமெரிக்காவில் உயிருடன் இருக்கும் அக்கா.

நரேந்திரநாத் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்.

மேனகா தொடர்ந்து போனில், "மாயா! முதல்ல மனசில கலக்கமில்லாம இரு. அந்த ஆராய்ச்சி சாலை வேண்டாம் உனக்கு. டாக்டர் நரேந்திரநாத்கிட்ட சொல்லிடு. அவர் நல்லவர். உனக்கு ரிலீஸ் வாங்கிக் கொடுப்பார். நான் இருந்தப்பவே அந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை. சம்பளம் ஜாஸ்தி கொடுத்தாலும் ஒரு மாதிரி சந்தேகத்துக்குரிய விஷயங்கள்ளாம் அங்க நடந்துக்கிட்டு இருந்தது. மாயா, உன்னை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. பிடிக்கலைன்னா விட்டுரு."

"அக்கா! ஒரு பொம்மை உன்னைப் போலவே பேசி, அய்யோ, அப்படியே அதிர்ச்சியில வெலவெலத்துப் போயிட்டேன்."

மேனகா சிரித்து, "வெறும் பொம்மைதானே" என்றாள். "பயப்படாதே."

போனை பீடத்தில் வைத்தபோது டாக்டர் நரேந்திரநாத், "பயமெல்லாம் போச்சா இல்லையா? உன் அக்கா உயிரோடத்தான் இருக்கா!" என்றபோது மாயா மறுபடி கண்களில் மிரட்சியுடன் அறை வாசலைப் பார்த்தாள்.

சாரங்கபாணி உள்ளே நுழைந்து அவளைப் பார்த்ததும், "இங்க இருக்கியா? உன்னை எங்கெல்லாம் தேடறோம்!"

நரேந்திரநாத்தின் பின்னால் மறைந்துகொண்டாள். "அட, நான் என்ன கடிச்சா சாப்பிட்டுடுவேன்!"

நரேந்திரநாத், "சாரு, லீவ் ஹர். அவ ரொம்ப பயப்படறா."

"எதுக்குப் பயம்?"

"அவ பார்த்த காட்சி.

"என்ன காட்சி! கமான் டெல் மி."

"மாயா, சொல்லு."

மாயா மிரண்டு தலையசைத்தாள்.

"சொல்லு. பயப்படாதே."

மாயா மெல்ல வெற்றுப்பார்வையுடன் தன் நினைவில் பதிந்திருந்த அந்த பிம்பத்தை மீண்டும் எடுத்துரைத்தாள்.

"யார் பரிசோதனை பண்ணா? செய்த பரிசோதனையைச் செய்த வரைக்கும் சரிபார்த்தோம். நம்ம மாயா வந்தாத்தானே இனிமேல, பரிசோதனையெல்லாம்."

"மாயா வரமாட்டா. சாரு! என்ன இதெல்லாம்?"

"யார் சொன்னது, காண்ட்ராக்ட் பிரகாரம் வந்தே ஆகணும்."

"காண்ட்ராக்டையெல்லாம் குப்பையில போடு. எந்தக் காண்ட்ராக்ட்டும் விருப்பமில்லாத காரியத்தைச் செய்விக்க முடியாது. மாயா ரொம்ப பயந்திருக்கா. அவளை ரிலீஸ் பண்ணிடறதா இருக்கேன்."

"வ்வாட்!" என்று அலறினார் சாரங்கபாணி. "ஏறக்குறைய ஒரு கோடி செலவழிச்சாச்சு. இந்தப் பெண் வரலைன்னா பரிசோதனையை முடிக்க முடியாது. நரு! ப்ளீஸ் இந்தப் பொண்ணுகிட்ட சொல்லேன்."

"நத்திங் டூயிங். யாரையும் வலுக்கட்டாயமா எதையும் செய்யச் சொல்ல முடியாது. அதுக்கு நமக்கு உரிமை இல்லை."

"பின்ன செலவழிச்ச பணம் எல்லாம் . . .? என்னடா, இத்தனை செலவழிச்சியே, எங்கடா முடிவுகள்னு போர்டில கேக்கமாட்டாளா?"

"கேட்டா நான்தான் சஸ்பெண்டு பண்ணிட்டேன்னு எம்மேல பழியைப்போடு. முதல்ல இவளை வீட்டுக்குப் போகச் சொல்லலாம். மாயா! ஸாரி, உனக்குப் பல அதிர்ச்சிகள் கொடுத்துட்டோம். அதனால வீட்டுக்குப் போய் கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு மீண்டும் வா. உன் சம்பளப் பாக்கியெல்லாம் தரச் சொல்றேன். மாயா, யு ஆர் ஃப்ரீ, நீ போகலாம்."

மாயா பிரமிப்புடன் அந்த அறையை விட்டு விலக, சாரங்கபாணி விநோதமாக அவளைப் பார்த்து, "மாயா! உன்னால எங்கயும் போக முடியாது. இங்க திரும்ப வரத்தான் போற. இந்தப் பரிசோதனைக்கு நீ சம்மதம் தரத்தான் போறே!"

டாக்டர் நரேந்திரநாத் "அவன் கிடக்கான். நீ போய்ட்டு வாம்மா. பெஸ்ட் ஆஃப் லக்."

மாயா கடைசி முறையாக அந்த ஆராய்ச்சி சாலையை விட்டு வெளியே வருவதாக நினைத்துக்கொண்டாள். அப்பா! தப்பித்தோம். இருந்தாலும் அது என்ன அந்தக் குரல்? மேனகா என்று அழைத்து அதனுடன் பேசினார்களே! அந்த மாதிரி அந்த அறை முழுவதும் பொம்மைகளா . . . அவளுக்குப் பயம் கலந்த ஆர்வம் இருந்தது.

சுனிலுக்கு போன் செய்ய வேண்டும் அல்லது கடிதம் எழுத வேண்டும். இந்த இடத்தில் நடக்கிறது என்று யாருக்காவது மந்திரிக்கு அல்லது பத்திரிகைக்கு பெட்டிஷன் எழுதிப் போட்டால் என்ன? பஸ்ஸுக்காகக் காத்திருக்கும்போது அந்தக் கடிதத்தை மனதில் அமைத்துக்கொண்டாள்.

'அன்புள்ள ஐயா, ஸி.எம்.ஆர்.ஐ. என்கிற நிறுவனத்தில் அண்மைக் காலத்தில் பணிபுரிந்து விலகினவள் நான். அந்த இடத்தில் ஆராய்ச்சி என்கிற பேரில் சில விநோதமான விஷயங்கள் நடக்கின்றன . . ."

பஸ் நிற்க ஏறிக்கொண்டாள். டிக்கெட் என்று கண்டக்டர் அருகில் வந்தபோதுதான் பர்ஸை மறந்து வைத்துவிட்டாள் என்று தெரிந்தது. என்ன செய்வது? அவள் தின வாழ்க்கையின் அடையாளங்கள் அனைத்தும் அதில் இருக்கிறது. ஐடி கார்டு, அட்ரஸ் புக்,



போன் புக்.

"என்னம்மா பணம் இல்லையா?"

"கண்டக்டர் ஸார், என் பர்ஸை ஆபீஸ்ல விட்டு வந்துட்டேன்."

"என்ன சொல்றீங்க? அடுத்த ஸ்டாப்ல இறங்கிக்கறாப்பலியா?" என்று விசிலடித்தான்.

தன்னை அறியாமல் இறங்கிக்கொண்டு மீண்டும் அங்கே நடந்து சென்றாள். "என்ன பயம்? கோம்ஸ் இருக்கிறாள். வாசலிலிருந்து போன் பண்ணிவிடலாம். உள்ளே போக வேண்டாம்."

உள் டெலிபோனில் "மாடம்! என் பர்ஸை உங்கள் மேசைக்கு அருகில் வைத்து வந்துவிட்டேன்."

கோம்ஸ் "இருக்கிறது" என்றாள். "இங்கு வருகிறாயா?"

"இல்லை. தயவு செய்து அதை ரிஸப்ஷனில் வந்து கொடுத்தால் நல்லது. உள்ளே வர விருப்பமில்லை எனக்கு."

கோம்ஸ் சிரித்து, "அத்தனை சீக்கிரத்தில் வெறுப்பா? என் சர்வீஸ் என்ன தெரியுமா?"

"காத்திருக்கிறேன்" என்றாள்.

காத்திருந்தாள். மனதில் அந்தக் காட்சி திரும்ப அலைந்தது. பிறைவாசல் திறப்பதும், அதிலிருந்து லேசாக அசைந்துகொண்டு அந்த பொம்மை, அதற்கு அணிவித்த வட்டக் கிரீடம், அதனுடன் இணைப்புகள் . . . வேண்டாம், வேண்டாம். அதைப்பற்றி நினைக்காதே மாயாவுக்கும் சட்டென்று பிறைக்குள் தான் இருப்பது போல ஒரு பதற்றம் தோன்ற, மிகுந்த கவனத்துடன் மற்ற விஷயங்களைப் பற்றி நினைக்க முயற்சி செய்தாள்.

அரை மணி ஆயிற்று. "என்ன நடந்திருக்கும்? கோம்ஸின் அறை அங்கிருந்து நேராக காரிடாரில் போனால் முப்பதடிக்குள். போய்த்தான் பார்க்கலாமே. நரேந்திரநாத் இருக்கிற வரைக்கும் என்ன பயம்?"

மெல்ல கோம்ஸின் அறையை அணுகியபோது தீவிரமாக டைப் அடித்துக்கொண்டிருந்தாள் அந்த மாது. மாயா அவளருகே கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தபின்தான் கவனித்தாள்.

"ஸாரி மாயா! ஃபர்காட். உன் பையை டாக்டர் நரேந்திரநாத் வீட்டில் கொடுப்பதாகச் சொல்லி எடுத்துக்கொண்டார்.

"அவர் எங்கே?"

"கிளம்பிப் போய்விட்டார். இல்லை. லாபில் இருக்கலாம். கொஞ்சம் இரு" என்று இண்டர்காமில் தட்டி "ஜானகி, நரு அங்கே இருக்கிறாரா?" என்று கேட்டாள்.

"ஆம்."

மாயாவைப் பார்த்து "அங்கே போய் பெற்றுக்கொள்ளலாம்."

மாயா யோசித்தாள். உள்ளே மறுபடி போக அவளுக்குப் பயமாக

இருந்தாலும் டாக்டர் நரேந்திரநாத்திடம்தானே போகிறோம் என்கிற தைரியத்தில் அவர் ஆராய்ச்சி செய்யும் மேற்குப் பகுதிக்கு நடந்தாள்.

மௌனமாக இருந்தது. ஏஸிக்காகத் தாழ்ந்த மேற்கூரை பிளவுகளின் ஊடே குளிர்காற்று உறுமிக்கொண்டிருந்தது. தீயணைக்கும் ஒஸ் பைப் கண்ணாடி அலமாரிக்குள் சுருண்டிருந்தது. தீயென்றால் கண்ணாடியை உடை என்று குறிப்பிட்டிருந்தது.

அறைக்கதவைத் தட்டியபோது யாரும் உள்ளே வா என்று சொல்லவில்லை. திறந்தபோது அறை காலியாக இருந்தது. எங்கே போயிருப்பார்? இதுதானே அவருடைய சாலை. டாக்டர் டாக்டர் என கேட்டுக்கொண்டு மெல்லச் சென்றாள்.

மனசின் ஓரத்தில் "பைத்தியமே மேலே போகாதே. பர்ஸ் இல்லாவிட்டால் என்ன. ஓடு வீட்டுக்கு ஓடு வீட்டுக்கு" என்று எச்சரிக்கை தோன்ற, மற்றொரு மூலை அவளை நரேந்திரநாத்திடம் என்ன பயம் என்று அழைத்தது.

டாக்டர் நரேந்திரநாத் சன்னலை நோக்கி வெளியுலக சென்னையின் மௌன சலனங்களைப் பார்த்துக்கொண்டிருக்க,

"டாக்டர்" என்று மெதுவாக அழைத்தாள்.

"என்ன?" என்றார்.

"என் பை."

அவர் திரும்ப, "ஓ வந்துட்டியா. வருவேன்னு தெரியும். என்ன வேணும் உனக்கு?"

"ஒண்ணும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்" என்று பதற்றத்துடன் மாயா பின்வாங்க, "இந்தத் தடவை நீ உன் அக்காவை சந்திச்சே ஆகணும். போகவே கூடாது. போகமாட்டே" என்றார் டாக்டர் சாரங்கபாணி!



# 17

மாயா சாரங்கபாணியை அங்கே எதிர்பார்க்கவில்லை. முதலில் அது நரேந்திரநாத் என்றுதான் எண்ணிக்கொண்டு தன் மனத்தில் உள்ளது அத்தனையையும் சொல்ல வாயெடுத்தவள், ஒருவிதக் கேலியுடன் புன்னகைத்துக்கொண்டிருந்த சாரங்கபாணியைக் கண்டதும் அதிர்ச்சியில் பின்வாங்கினாள்.

"நான் சொன்ன மாதிரி வந்த பார்த்தியா!"

"உங்களைப் பார்க்க வரலை நான்! டாக்டர் நரேந்திரநாத்..."

"அவன் பேச்சை எடுக்காதே. அவன் பொறாமைக்காரன். மாயா! சொல்றதைக் கேளு. நீ பார்த்த இல்லை. உங்க அக்காவினுடைய மறு அவதாரத்தை. அவ மாதிரியே பேச்சு, அவமாதிரியே தோற்றம், என்ன விந்தை பார்த்தியா? என் விஞ்ஞான ஆராய்ச்சியின் சிகரம் ஒரே ஒரு மிஸ்டேக் வந்து பாதில நின்னு போச்சு. உன்னால அது முழுமை பெறப்போறது. வா மாயா, சரித்திரத்திலே இடம்பெற வா!"

சாரங்கபாணி சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு ஒரு அவசரப் புகை மேகம் விடுவித்தார். அவள் விரல்கள் நடுங்கின.

"நான் டாக்டர் நரேந்திரநாத்தைப் பார்க்கணும்."

"அவன் வீட்டுக்குப் போயாச்சு. சோம்பேறி."

"அப்ப நான் வரேன்!" புறப்பட்டவளை 'இரு' என்று கையைப் பற்றினார். மாயா உதறிக்கொள்ள, அவளுக்கும் சாரங்கபாணிக்கும் இடையில் ஒரு கண்ணாடி ஜாடியில் தண்ணீரில் ஒரு தங்க மீன் நீந்திக்கொண்டிருந்தது.

"எங்க போவே நீ! எவ்வளவு செலவு செய்தாச்சு. தப்பிக்க முடியுமா..!"

மாயா அந்த ஜாடியை எடுத்து அவர் நெற்றியில் உடைத்தாள்.

அதனால் நிச்சயம் காயம்பட்ட சாரங்கபாணியின் கோபம் அதிகரித்தது. "அப்படியா சேதி! அடிப்பியா நீ! கடிப்பியா நீ..!" தங்கமீன் தரையில் துடித்தது.

மாயாவுக்கும் வாயிற் கதவுக்கும் இடையில் நின்றுகொண்டு நிதானமாகக் கைக்குட்டையால் நெற்றி ரத்தத்தைத் துடைத்துக் கொண்டார். மாயா சட்டென்று யோசித்து, திறந்திருந்த ஜன்னல் கதவின் வழியாக வெளியே தோட்டத்துப் பாத்தியில் குதித்து தடதடவென்று அந்த இடத்திலிருந்து விலகி ஓடினாள்.

"மாயா, போகாதே மாயா!"

மாயாவுக்கு அப்போது இருந்த பயத்தால் பிறந்த தைரியத்தில் எட்டடி சுவரைக்கூட தாண்டிக் குதித்திருப்பாள். காதுகள் சூடாகி, நாக்கு உலர்ந்து, கைகள் நடுங்க, வியர்த்து விதிர்த்து, கால் செருப்பு அறுந்து, ரத்தத் துடிப்பு நெற்றிப் பொட்டருகில் திடும் திடும் என்று கேட்க மாயா ஏதோ ஒரு வாயிலை நோக்கி ஏதோ ஒரு வெளியுலகை, விடுதலையை நோக்கி ஓடினாள்.

சற்று நேரம் ஓடிக் களைத்து நின்றபோது அந்த இடத்தில் மற்றொரு விநோதம் புலப்பட்டது.

வாசலே இல்லை! சுற்றிச் சுற்றி ஒரே இடத்துக்கே திரும்பி வந்துகொண்டிருக்கிறாள். அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்து கோம்ஸ் வீற்றிருந்த இடத்தின் வழியாகத்தான் வெளிப்பட முடியும். அங்கே சாரங்கபாணி காத்திருக்கிறார்!

எப்படி! சினிமாவில் வருவதுபோல் தீரச் செயல் புரிந்து... நர்ஸ் போல உடை மாற்றி... அதெல்லாம் சாத்தியமில்லை. ஜன்னல் வழியாக சாரங்கபாணி மறுபடி தெரிந்தார். அவர், தலையில் கட்டுப் போட்டுக்கொண்டிருந்தார்கள். பலமாக அடிபட்டிருக்க வேண்டும். படட்டும்.

மாயா மற்றொரு திறந்த வாசலில் நுழைந்து பரிச்சயமில்லாத தாழ்வாரங்களில் நடந்தாள். எது எங்கே எப்படி அழைத்துச் செல்கிறது என்ற குழப்பத்தில் ஏதாவது தெரிந்த மாதிரி பகுதி, பரிச்சய மூலை தென்படுகிறதா என்று பார்த்தாள். யாரோ பேசிக்கொண்டே நடந்து வருவது எதிரொலியுடன் கேட்டது. ஒரு கதவின் பின் மறைந்துகொள்ள, கடந்தவர்கள் டாக்டர் நருவும், விஜியும் என்று தெரிந்து மாயா வெளிப்பட்டாள்.

"டாக்டர்! டாக்டர்"

நரு திரும்பி, "மாயா, இங்க எப்படி!"

"என் கைப்பையைத் திரும்பி வாங்கிக்க வந்தேன்."

"ஏன் உடம்பெல்லாம் நடுங்கறது? கம் மாயா! என்ன ஆச்சு உனக்கு?"

"டாக்டர், நான் வந்து சாரங்கபாணியைக் காயப்படுத்திட்டேன்."



"காயப்படுத்திட்டியா! ஏன்? எதுக்கு?"

"என்னைப் பலாத்காரமா அந்தப் பரிசோதனை பண்ண அழைத்தார்."

"நான்சென்ஸ்! அதுக்கு உரிமை இல்லை. வேண்டாம்னு சொன்னேனே. கிராதகன்! மாயா! வா இனி பயம் இல்லை. என்கூட வா. நான் உன் வீட்டில் கொண்டு விடறேன். ஒரு பத்து நிமிஷம் பொறு. நானும் புறப்பட வேண்டியதுதான். பயப்படாதே மாயா!"

விஜியுடன் பேசிக்கொண்டே நடக்க, நரேந்திரநாத்தைத் தொடர்ந்து அவர் பின்னால் நடந்து சென்றாள். அவர் நிழல் சற்று தைரியமளித்தது. இவரை விட்டு விலகக்கூடாது. எப்படியாவது இவர் உதவியுடன் இந்தக் கட்டடத்தைவிட்டு வெளியே வந்துவிட்டால் போதும். அதன்பின் இந்தப் பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்க வேண்டாம். ஒழிந்தது சனியன். வேலையும் வேண்டாம் மண்ணாங்கட்டியும் வேண்டாம். பேசாமல் வீட்டோடு கிடக்கலாம்.

டாக்டர் நரேந்திரநாத் தீவிரமாக "என்னய்யா சாதித்தான்? பார்ஷியல் ட்ரான்ஸ்பர். அதை நான் 88லயே செய்து காட்டிட்டேன். அதை ரிப்பீட் செய்திருக்கான். ஆஸ்திரேலியாவில் ஜான்ஸ்டன் ஒரு கிகா வரைக்கும் போயாச்சு. இவன் என்னவோ சிக்ஸ்டி ஃபோர் கே பண்ணிட்டு பெரிசா பீத்திக்கிறான். இந்தப் பெண்ணை டெர்ரரைஸ் செய்து வெச்சிருக்கான். இவ இஷ்டமில்லாம, இவமேல எப்படிப் பரிசோதனை பண்ண முடியும்? கேட்டா காண்ட்ராக்ட்டுங்கறான்... மனிதாபிமானமே இல்லை..."

விஜி இதையெல்லாம் எந்தவித உணர்ச்சியும் இல்லாது கேட்டுக் கொண்டு உடன் நடந்து வந்தது மாயாவுக்கு விநோதமாக இருந்தது. ஒரு வேளை மரியாதை போலும்!

டாக்டர் நரேந்திரநாத்தின் அறைக்கு வந்தபோது கீழே கிடந்த கண்ணாடித் துண்டுகளையும் கார்ப்பெட் நனைந்திருந்ததையும் பார்த்து, "என்ன ஆச்சு" என்றார் பொதுவாக.

மாயா தயக்கத்துடன், "டாக்டர்! இதுக்கு நான்தான் காரணம். உங்களைப் பார்க்க இங்கே வந்தபோது சாரங்கபாணி இருந்தார் இங்கே!"

"அப்படியா! என் பேப்பர்ஸ் எதையாவது நோண்ட வந்திருப்பான்."

"என்னைப் பார்த்ததும் பலவந்தமாக இழுத்தார். நான் ஒரு கண்ணாடி ஜாடியை அவர் மேல் எறிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு..."

"அதான் அடிபட்டுதா! சபாஷ்! நல்லா வேணும்! காப்பி சாப்பிடறியா!"

"இல்லை டாக்டர். வீட்டுக்குப் போகணும்."

"ஒரு நிமிஷம், ஒரே ஓர் ஈ மெய்ல் அனுப்பிட்டு வந்துர்றேன். காப்பி சாப்பிடு." காஃபி மிஷினிலிருந்து எடுத்து வந்து கொடுத்தார்.

கணிப்பொறி டெர்மினலில் டாக்டர் நரேந்திரநாத் செய்தி அனுப்பும்போது மாயாவிடம் அந்தப் பரிசோதனை பற்றி இன்னும் விவரமாகப் பேசினார்.

"எல்லாம் டவுன்லோடிங்!"

"டாக்டர் அந்தப் பொம்மை பேசும் பொம்மை!"

"பயந்து போய்ட்ட இல்லை!"

"என் அக்கா மேனகா மாதிரியே இருந்தது. ஏதோ நெட்டுருப் பண்ணி ஒப்பிக்கிறாற்போல பேசினதுதான் இன்னும் பயமா இருந்தது."

"சும்மா தடலாடி பண்றான் சாரு!"

"அது என்ன டாக்டர் டேப்ரிக்கார்டரா?"

"இல்லை. அதைவிடக் கொஞ்சம் ஒஸ்தி. உன் அக்காவுடைய குரலை அலசி அதன் தன்மைகளை ஒரு கம்ப்யூட்டருக்குக் கற்றுக் கொடுத்து, வார்த்தைகளை அதுவே உன் அக்காவின் குரல்ல வடிவமைத்து வெளிப்படுத்தும்..."

"டவுன்லோடிங்னா என்ன?"

"சொன்னேனே. மனித மூளையின் ஞாபகங்களைப் பிரதியெடுத்து ஒரு கம்ப்யூட்டருடைய ஞாபகத்துக்கு மாத்தறது!"

"மாத்தி!"

"மாயா! இந்தப் பரிசோதனையுடைய எதிர்கால விளைவுகள் ரொம்ப விநோதமானவை. முதன்முதலா மரணத்தை வெல்லப் போறோம். இப்ப நீ யாரு? மாயா என்கிறதே ஒரு வடிவம், ஒரு ஞாபகம், அவ்வளவுதானே! இந்த இரண்டையுமே மெஷினுக்குக் கொடுத்துட்டா அந்த மெஷின் உன்னுடைய தொடர்ச்சிதானே. அதுக்கு அழிவே இல்லாம அப்பப்ப புதுப்பிச்சுட்டா சாவுங்கறதே இல்லாம போயிடறதில்லையா!"

"சாரங்கபாணி அதைத்தான் பரிசோதனை பண்ணிக்கிட்டு இருக்காரா?"

"இல்லை, சாரு பண்றது இன்னும் ஆபத்தான ஆராய்ச்சி. அவன் மெஷின்லருந்து மூளைக்கு ஞாபகங்களை மாத்தற வித்தையை முயற்சி செய்துக்கிட்டு இருக்கான்."

"இது ஆபத்தா?"

"ஆபத்து. மூளையைத் திறந்து அதன் உள்ளே சின்னச்சின்ன ஐஸி சில்லு ரெண்டு மூணு தெச்சுடறான்! அது சில வேளையில் ரிஜக்ட் ஆகி... ஒண்ணு ரெண்டு கேஸ் இறந்துகூட போய்ட்டாங்க."

"நீங்க பண்றது..."

"நான் பண்றது ரொம்ப சிம்பிள். ஒரே ஓர் இடத்தில் மூளையில



சின்ன ஊசியைச் செருகி ஒலோகிராஃபிக் இமேஜ்னு ஒரு முப்பரிமாண வடிவம், மற்ற சாதனங்களை இணைத்து எடுத்து அதை ஒரு கம்ப்யூட்டருடைய காந்த ஞாபகத்தட்டில் பதிவு செய்யறேன். அவ்வளவுதான். சிம்பிள்."

மாயா சற்று பயத்துடன் சிரித்தாள்.

"அப்படி ஒண்ணும் சிம்பிளா தெரியலைதானே உனக்கு! இனிமே இதெல்லாம் கவலையே இல்லை உனக்கு. விஜி, இவள கொண்டு போய் வீட்டில விட்டுர்றியா!"

விஜி, இதுவரை மௌனமாகவே இருந்தவன், "சரி ஸார்" என்றான்.

மாயா, "வேண்டாம் டாக்டர்! நான் உங்க கூடவே வரேன்" என்றாள்.

டாக்டர் நரேந்திரநாத் புன்னகைத்து, "இந்த லாப்ல என் ஒருத்தனைத்தான் நீ நம்பறே!"

"ஆமா டாக்டர்."

"மேனகா சொன்னாளா?"

"ஆமா டாக்டர்."

"போலாமா" என்றார் டாக்டர் நரேந்திரநாத். "காப்பியைச் சாப்ட்டு முடி."

மாயா காப்பியை மடக்கென்று குடித்தாள்.

அவருடன் ஒட்டினாற்போல் நடந்து செல்லத்தான் நினைத்தாள். ஆனால்...

"மாயா என்ன ஆச்சு?"

என்ன ஆச்சு என்று சொல்லத் தெரியவில்லை. கண்களுக்குள் இருள் பச்சையாக இருந்தது. அக்கா மேனகாவின், சாரங்கபாணியின், நரேந்திரநாத்தின் குரல்கள் கேட்க செழுமையாக அவள் குரலும் எல்லாக் குரல்களுடன் ஜரிகையிட்டாற்போல எதிரொலித்தது. 'என்ன ஆச்சு? எனக்கு ஏன் இந்த மயக்கம்?' என்று நினைப்பதற்குள் என்ன சாப்பிட்டேன் என்கிற நினைப்பும் குறுக்கிட்டது.

சாரங்கபாணியின் குரல் கேட்டது.

"சாரு, ரொம்ப மோசம் நீ!"

"காப்பி சாப்ட்டாளா?"

"சாப்ட்டா!"

"அப்ப மயக்கம்தான்!"

மாயாவின் மேல் இருள் கவிழ்ந்தது.

# 18

**மா**யா விளிம்பில் இருந்தாள். அந்த விளிம்பில் அவளுக்குக் குரல்கள் கேட்டன. கைகால்களை அசைக்க விருப்பம் இருந்தது. விருப்பம் மட்டும். ஆனால், செயல்படுத்த முடியவில்லை, கண் இரப்பைகளும் ஒத்துழைக்க மறுத்தன. பேச்சுக்குரல் தெளிவாகக் கேட்க, யாரோ அவளைத் தொட்டதும்தான் கண் திறக்க முடிந்தது. திறந்ததும் அந்த முகம் தெரிந்தது. 'மாயா!' என்று முகம் அவளைக் கூப்பிட்டுப் புன்னகைத்தது. மேலே விட்டத்தில் வெளிச்சப் பிரகாசம் கண் கூசியது. தான் எங்கே, தனக்கு நிகழ்வது என்ன என்பதெல்லாம் முக்கியமாகப் படவில்லை. படுத்துக்கொண்டு, நிகழ்வதை எல்லாம் வேறு யாருக்கோ போல வேடிக்கை பார்த்தாள். சிரிப்புக்கூட வந்தது. இப்போது அவள் பயம் முழுவதும் விலகிப்போயிருந்தது. தலைமேல் ஏதோ லேசாகக் கனத்தது. அதைத் தொட்டுப் பார்க்கலாம் என்றால் கைகள் படுக்கையுடன் கட்டியிருந்தன. எதிரே ஒரு பச்சைத் திரையில் அவள் இதயத் துடிப்பின் கீற்றல்கள் எழுதின. ஒவ்வொரு துடிப்புக்கும் ஒரு கீய்க் கேட்டது.

'கீய்க் . . . கீய்க் . . . கீய்க்.'

"பல்ஸ் நார்மல். பி.பி. நார்மல் டாக்டர்."

"ரெடி ஃபர்தி டவுன் லோடு."

"ரெடி!"

மாயா அப்போதுதான் தன் தலை மேலிருந்து பற்பல பற்பல இணைப்புகள் அந்த வெளியுலக மிஷினுக்குச் செல்வதைப் பார்த்தாள். அவள் எண்ணங்களில் ஓர் இரட்டைத் தனத்தை உணர்ந்தாள். ஒன்று இதையெல்லாம் பார்த்து அலசும் எண்ணம். மற்றொன்று அடித்தள எண்ணம். அதில் சம்பந்தா சம்பந்தமில்லாத விஷயங்கள் தென்பட்டன. மாம்பழ வாசனை, பள்ளிக்கூடத்தில் நனைத்துக் கொண்டது, ஊதுவத்தி சுட்டது, பாரதிதாசன் வரிகள், சுனில்



தந்த முத்தம் என்று தொடர்பில்லாமல், ஆனால் ஏதும் உறுத்தலில்லை இன்பமாக இருந்தது. தொடையை யாரோ தடவிவிடுவதுபோல.

"மாயா எப்படி இருக்கே?" பச்சை முகமூடிக்குப்பின் அந்த முகத்தை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. சாரங்கபாணி.

"வலிக்குதா?"

"இந்தப் பரிசோதனை இன்னும் ஓர் அஞ்சு நிமிஷம், அதுக்கப்புறம் சில கேள்விகள். அதுக்கப்புறம் ரெஸ்ட் தூக்கம். அத்தனை பயந்தியே, ஏதாவது ஆச்சா? ஏதாவது வலித்ததா? ஏதாவது தொந்தரவா?"

"டாக்டர்! ப்ராஸஸ் இனிஷியேட்டட்!"

சாரங்கபாணி, "லெட் மி ஸி லெட் மி ஸி" என்று திரையைப் பார்த்தார்.

அதில் எழுத்துகளுக்கு அருகில் இரு பிம்பங்கள் தெரிந்தன. அவை பாதிபாதியாக, கலர் கலராக இருந்தன. பிம்பத்துக்கு உயிர் இருப்பதுபோல் சலனம் ஏற்பட்டது.

"டெக்ஸா மெத்தஸோன் கொடுத்தீங்களா விஜி?"

"காலைல கொடுத்தோம் டாக்டர். ப்ளாஸ்மா கார்ட்டிஸால் அளவு நாலு மைக்ரோ கிராம்."

"நார்மல்தானே!"

"ஆமாம்."

"எம்.ஆர்.ஐ."

"நார்மல் லீஷன் எதும் இல்லை."

"அப்ப ஆரம்பிக்கலாம்."

"தாராளமா!"

மாயா தன் மனசில் மண்டையில் எங்கோ வண்ணப் பொறித் தீற்றல்களை உணர்ந்தாள். 'விர்ர்ர்' என்று தேனீபோல் மெஷின் சப்தம் உள்ளுக்குள் கேட்டது.

"சுனில், சுனில், இன்னும் கிட்ட வா சுனில்."

"இதுக்கு மேல வர முடியாது, மாயா!"

"இன்னும் கிட்ட, இன்னும் கிட்ட."

வெல்வெட் இருட்டில் ஜெல்லி தடவி அதில் வழுக்கினான். இடுப்பில் வலித்தது. மார்பின் நுனிகளில் ஐஸ் தொட்டாற்போல உடல் முழுவதும் வெவ்வேறு உஷ்ணப் பிரதேசங்களாக... யாரும் இல்லை. யார் என்னைத் தொடுகிறார்கள் என்பதுடன் ரயில் பாலத்தில் கடக்கும் சப்தம் கேட்டது. மலைப்பாதையில் பூச்சிகளின் தொடர்ந்த சப்தமும், மருந்து வாசனையும் கேட்டது. முழுங்கு, முழுங்கு என்று அம்மா தலையில் தட்டினாள். அப்பா அவன் கையைப் பிடித்து சிலேட்டில் எழுத, மேனகாவுடன் நாடாக்கட்டிலை நிற்க வைத்து இடைவெளியில் ஒளிந்துகொண்டு ஒருவரையொருவர்

தொட்டுக்கொண்டு ரகசியம் பேசினார்கள்.

"ப்யூட்டிஃபுல், ப்யூட்டிஃபுல்" என்றார் சாரங்கபாணி திரையைப் பார்த்து.

"மாயா! பேர் சொல்லு."

"நர்மதா."

சாரங்கபாணி விஜியைப் பெருமையுடன் பார்த்து, "கவனிச்சியா"

"நர்மதா, உன் வயசென்ன?"

"முப்பது."

"எந்த ஊர்?"

மாயா தன் நினைவுகளில் தேடித்தேடி, 'விஜயவாடா' என்றாள்.

"இட் ஒர்க்ஸ்" என்றான் விஜி, ஆச்சரியத்துடன்.

"இரு இரு. இப்பத்தானே ஆரம்பம். ஸிக்ஸ்டி ஃபோர் கே தானே ட்ரான்ஸ்பர் ஆகியிருக்கு. ஸிமாயி, இஸ் ஷி ஓகே ஃபர் அனதர் ஸெஷன்?"

"நாட் நௌ சாரு! லெட்ஸ் டூ இட் டுமாரோ!"

"டூ இட் நௌ!"

ஸிமாயி பிடிவாதமாக, "சாரு. இப்போது வேண்டாம். பல்ஸ் விழுகிறது. கொஞ்சம் ரியாக்ஷன் தெரிகிறது உடம்பில்."

"கமான் ஸிமாயி. இது சாதாரணமான ரியாக்ஷன்!"

"சாரு. இவள் அக்காவுக்கு நிகழ்ந்தது இவளுக்கும் நிகழ வேண்டுமா!"

சாரங்கபாணி உடனே மௌனமாகி, "ஆல்ரைட், நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்!" என்றார்.

விஜி ஏமாற்றத்துடன் "இன்றைக்கு இவ்வளவுதானா!"

"ஆம். இந்த இடத்தில் எச்சரிக்கை ஆசாமிகள், ஸிமாயி போன்ற ஆசாமிகளின் கொட்டம் அதிகமாகிவிட்டது."

"சாரு பேஷன்ஸ் சாரு, அவசரப்படாதே!"

"நான் முடிப்பதற்குள் ஆஸ்திரேலியன் நோபல் பரிசு வாங்கி விடுவான்."

மாயா இதையெல்லாம் அசுவாரஸ்யமாகத்தான் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் மனத்துக்குள் அந்த வேளையில் பலவிதக் குழப்ப எண்ணங்கள் உலவின. ஒரு மூலை என் பெயர் நர்மதா என்றது. மற்றொரு மூலை நான் மாயா என்றது. ஒரு மூலையில் தெலுங்கு வாக்கியங்கள் ஒலித்தன. மெல்ல மெல்ல கற்பூரம்போல அந்த எண்ணங்கள் கரைந்து சமநிலை ஏற்பட . . .

"நர்மதா?"

மௌனம்!



"நர்மதா!"

ம்ஹூம்.

"மாயா?"

"ம்!"

"வாலட்டைல் தற்காலிக ஞாபகத்தைத்தான் அடைய முடிகிறது" என்றார் சாரங்கபாணி.

மாயா வீட்டுக்கு வரவில்லை. அம்மாவும் அப்பாவும் எட்டரை மணிக்கப்புறம் கவலைப்பட ஆரம்பித்தார்கள்.

"ஏன் வரலை இன்னும்?"

"அதான் தெரியலையே. இன்னிக்குத்தானே ஆபீஸ்ல கடைசி நாள். அதனால எல்லா சம்பள பாக்கியும் வாங்கிண்டு வர நாழியாறதோ என்னவோ?"

"எட்டரை மணிவரையா?"

"இரு இரு. ஏதாவது போன் பண்ணுவா. சிநேகிதிகளோட சினிமா கினிமா பார்க்கப் போயிருக்கலாம்."

"நீங்க வேணா போய் விசாரிச்சுட்டு . . ."

"ஒம்பது வரைக்கும் பார்க்கலாம். அதுக்கப்புறம் கிளம்பறேன். எப்பப் பார்த்தாலும் உன் பெண்களால கவலை, கவலை, கவலை."

ஒன்பது மணிக்கு மாடி வீட்டில் அப்பாவுக்கு போன் வந்திருப்பதாகத் தகவல் வந்து சொல்ல அப்பா அங்கே சென்றார்.

"அப்பா, நான்தான் மாயா பேசறேன்."

"மாயா எங்க இருக்கே? என்ன ஆச்சு?"

"ஆபீஸ்ல கொஞ்சம் லேட் ஆய்டுத்துப்பா."

"ஏன் உன் குரல் என்னவோ மாதிரி இருக்கு?"

"அது வந்து தொண்டை கொஞ்சம் கம்மிருக்கு... அப்பா! நான் எதுக்கு போன் பண்ணேன்னா, எனக்கு ராத்திரி வீட்டுக்கு வர முடியாது. இங்கேயே நைட் ட்யூட்டி போட்டிருக்கா. ஒரு முக்கியமான ரிப்போர்ட்டை முடிக்கும்படியா டாக்டர் நரேந்திரநாத் சொல்லியிருக்கார். அதனால இங்கேயே டார்மிட்டரியில படுத்திருந்துட்டு நாளைக்குக் காலைல, அல்லது சாயங்காலம் வந்துருவேன். அம்மாகிட்ட சொல்லிடறியா?"

"மாயா! ஆர்யு ஆல்ரைட்?"

"ஐ'ம் ஆல்ரைட். கவலைப்படப் போறீங்களேன்னுதான போன் செய்தேன். வெச்சுரவா?"

"சரி" என்றார் தயக்கத்துடன்.

போன் விடுபட்டதும், சாரங்கபாணி அந்தப் பெண்ணைப் பார்த்து, "இன்னும் கொஞ்சம் ஃபீலிங்கோட பேசணும் பெண்ணே" என்றார்.

"அந்தப் பெண் குரல் இன்னும் அட்ஜஸ்ட் பண்ணணும்போல இருக்கு ஸார், சந்தேகப்படறார்."

"கொஞ்சம் அக்காரிதம் மாத்திடறேன். அதைப் பத்திக் கவலைப்படாதே. இப்ப என்ன, இனி ராத்திரிக்குக் கவலைப்பட மாட்டாங்களே!"

"மாட்டாங்க ஸார்."

"சபாஷ்" என்று தன் பையிலிருந்து சாரங்கபாணி ஒரு சாக்லேட் எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தார். மாயா, மேனகா . . . எத்தனைப் பேச்சுப் பேசுவே நீ!"

"எல்லாம் சாக்லேட் கொடுத்தா சரி" என்று அவள் அந்தச் சாக்லேட்டைத் தன் உதடுகளில் செருகிக் கன்னத்தை சூப்பிக்கொண்டு ஆர்வத்துடன் இழுத்தாள். "இதுபோல உண்டா!" என்றாள்.

"எப்பவாவது உன் மார்ல இருக்கற மச்சத்தைக் காட்டணும் மோகி நீ."

"இப்பவே டாக்டர்."

"வேண்டாம். எனக்கு வேற வேலை இருக்கு."

"இதைவிட முக்கிய வேலையா?"

"ஆமா. நோபல் பரிசு!"

சாரங்கபாணி, அந்த இடத்தைவிட்டு விலக அந்தப் பெண் மோகினி, ஸ்விட்ச் போர்டில் தெரிந்த விளக்குகளை ஆராய்ந்து மெலிய நளின விரல்களில் பட்டனைத் தட்டி, "டாக்டர் சாரங்கபாணிஸ் ஆஃபீஸ்!" என்றாள்.

மாயாவின் அப்பா மனைவியைப் பார்த்து, "அவகூட முதல்லே இப்படித்தான் ஆரம்பிச்சா."

"எவ?"

"அக்கா மேனகா. முதல்ல வேலைப்பளு தலைக்கு மேல இருக்கு. வீட்டுக்கு வரமாட்டேன்னுதான் ஆரம்பிச்சா, எனக்கு என்னவோ கவலையா இருக்கு."

"கார்த்தாலபோய் அவ நிஜமாவே வேலைதானான்னு பார்த்துட்டு வந்துருங்கோ."

"அதான் சரி. ஆனா டாக்டர் நரேந்திரநாத் கொடுத்த வேலைன்னா . . . அவர் நல்லவர். எசகு பிசகா எதும் நடக்காதுதானே?"



சுனில் பிட்ஸ்பர்க்கிலிருந்து விலகிச் சென்றுகொண்டிருந்தான். வலப் பக்க ஓட்டலும், நெடுஞ்சாலை அடையாளங்களும் அவனுக்குப் பழகிவிட்டன. அமெரிக்காவில் அவனுக்கு கார் தேவையாகத்தான் இருந்தது. நானூறு டாலரிலிருந்து, நாற்பதாயிரம் டாலர் வரை கார் கிடைக்கிறது. சம்மதம் என்று சொல்லிவிட்டால் போதும், சாஸ்திரத்துக்கு ஒரு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு, மற்றதைத் தவணையாகக் கட்டிக்கொள்ளலாம். தேசமே தவணைமுறையில் இயங்குகிறது. தன் நண்பனின் காரில் ப்ரொபஸர் பெர்னார்டு என்பவரைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்தான். சாலையோரத்து மரங்கள், இலைகளின் நிறம் பச்சையிலிருந்து துரு நிறத்துக்கு, மாறத் தொடங்கியிருந்தன. இன்னும் சில தினங்களில் எல்லாம் கொட்டிவிடும் என்று சொல்கிறார்கள்.

சுனிலுக்கு அமெரிக்கா வெறுமையாக இருந்தது. மாயாவின் நினைவுகள் அவன் மனமெங்கும் பரவியிருக்க, தினம் தினம் அவளை நினைத்தான். எத்தனையோ முறை போன் பண்ண முயற்சி செய்தும் ஆஸ்பத்திரியில் அவள் இல்லை, இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சுனில் தப்பு செய்துவிட்டான். அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு அவளையும் 'ஸ்டூடண்ட் விசா'வில் அழைத்து வந்திருக்க வேண்டும். இப்போதுகூட ஆயிரம் டாலர் இருந்தால் போதும். ஒரு நடை இந்தியா போய் உடனே மாயாவின் வீட்டுக்குப் போய். . .

மாயா! இப்போது மணி 3 ஆகிறது. சரியாக மூன்றரைக்குப் புறப்படு என்னுடன் வா.

எதுக்கு சுனில்?

கல்யாணம் பண்ணிக்கொள்ள. மாயா, நீயில்லாமல் எனக்கு பல் தேய்க்கக்கூட உற்சாகமில்லை. நீ இல்லாமல் அமெரிக்காவே பொலிவிழந்து கிடக்கிறது. நீயில்லாமல் டெலிவிஷனில் நாட்டமில்லை. இங்கே கிடைக்கும் புஷ்டி உணவுகளில் விருப்பமில்லை. மாயா! நீதான் சகலமும்!

மாயாவின் நினைப்பில் 'எக்ஸிட்'டைத் தவறவிட்டு விட்டு இன்னும் பதினைந்து மைல் போனப்புறம்தான் வழி திரும்ப முடிந்தது.

ப்ரொபஸர் பெர்னார்டு அவன் படிப்பு ஜாதகத்தைப் பார்த்தார். "எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் இதுவரை இந்திய மாணவர்களை ரிஸர்ச் அஸிஸ்டண்டாக எடுத்துக்கொண்டதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஏமாற்றமே. ஏறத்தாழ ஒரு சைனீஸ் மாணவனைத் தேர்ந்தெடுத்துவிட்டேன். அவன் இங்கிலீஷ்தான் இன்னும் புரியவில்லை. மேலும் உன் 'பயோடேட்டா'வில் அதிகம் புளுகில்லை. நான் ப்ரபஸர் இர்விங்குக்கு போன் செய்கிறேன்.

ஆறு மாதம் உனக்குக் கொடுக்குமாறு சொல்லிவிடுகிறேன் ..."

சுனிலுக்கு உற்சாக அலைபொங்க ... "க்ரேட் ஸார்! தாங்க்யூ ஸார். உங்களுக்கு எவ்வாறு நன்றி சொல்வது என்றே ..."

"நன்றி வேண்டாம். ஒழுங்காக ப்ராஜெக்டைப் பல்கலைக்கழகத்தில் முடித்துக் காட்டினால் போதும். மாதம் ஆயிரம் டாலர் கிராண்ட்டிலிருந்து அனுப்பப்படும். வெளியே என் செக்ரட்டரியைச் சந்தித்தால், மேற்கொண்டு விவரங்கள் தருவாள். பெஸ்ட் ஆஃப் லக்."

ஆயிரம் டாலர்! முன்னூறு டாலர் போதும் சொந்தச் செலவுக்கு. மற்றதெல்லாம் மிச்சப்படுத்தி இன்னும் இரண்டு மாதங்களில் மாயாவைச் சந்திக்க ஓர் அவசர ட்ரிப் போய்விட்டு வந்துவிடலாம் என்று எண்ணிய அதே சமயம் மாயாவை அடுத்த கட்டத்திற்குத் தயார்ப்படுத்த அறை மாற்றினார்கள்.



# 19

மாயா நினைவிலோ கனவிலோ உலவினாள். மஸ்லின் போர்த்தினாற் போல அவள்மேல் தூக்கத் திட்டு கவிந்துகொண்டிருந்தது. அதிலிருந்து அவ்வப்போது மிதந்து மேல் வரும்போது முகம் அவளைப் பார்த்துச் சிரித்து, "மாயா, எப்டி இருக்கே. எல்லாம் சரியாப் போய்டும்" என்று சொல்கிறது.

அந்த முகத்தை யார் என்று நினைவுக்குக் கொண்டுவருவதே வலிக்கிறது. மறுபடி தூங்குமுன் அவளுள் 'இது அதிக நேரம் நிகழாது. என்னை யாராவது வந்து காப்பாற்றத்தான் போகிறார்கள். எத்தனைபேர் இருக்கிறார்கள் என்னை மீட்பதற்கு? சுனில் வருவான். அக்கா வருவாள். மேனகா வருவாள். அப்பா அம்மா நான் எங்கே ஆபீஸ் போனவள் திரும்பவே இல்லையே என்று தேட மாட்டார்களா? இல்லை, டாக்டர் நரேந்திரநாத் இந்தப் பெண் உள்ளே போனவள் எங்கே என்று வியந்து விசாரிக்க மாட்டாரா? எல்லோரும் இதோ வந்துவிடுவார்கள் ... போலீஸ்கூட வரும். சந்தேகமாக இந்த இடத்தில் ஏதோ நடக்கிறது என்று யாராவது புகார் கொடுத்து ... இன்னும் கொஞ்ச நேரம் பல்லைக் கடித்துக்கொண்டு படுத்திரு. இவர்கள் என்ன உன்னைக் கொன்றா விடுவார்கள்? என்றெல்லாம் எண்ணங்கள் குழம்ப, பெண்டத்தாலின் காட்டம் அதிகரிக்க, மறுபடி மயங்கிப் போனாள்.

சாரங்கபாணி "விஜி, எப்படி இருக்கு" என்றார்.

"டாக்டர், இன்றைக்குத் தொடர வேண்டாம் என்று தோன்றுகிறது."

"ஏன் விஜி?" என்றார் ஏமாற்றத்துடன்.

"பல்ஸ் விழுந்துகிட்டு இருக்கு. மெடபாலிக் சேஞ்சஸ் எதாவது வந்துருச்சுன்னா ... அப்பறம் ப்ளட் பிரஷர் கொஞ்சம் கொஞ்சமா எகிறிட்டு வருது."

"கண்ட்ரோல் இட் மேன்."

"கண்ட்ரோல் செஞ்சுடறேன் ... அதுக்கப்புறம் பரிசோதனையைத் தொடரலாம்னு தோணுது."

"எத்தனை நேரமாகும்?"

"நேரமில்லை. நாள் ... நாளைக்கு அல்லது நாளன்னைக்குப் பத்திரம். மேலும் ..." அவர் காதில ஏதோ சொல்ல, "சே" என்று அலுத்துக்கொண்டு, "சஸ்டெய்ன் பண்ணி வெச்சிருங்க. நினைவு வந்தா அப்பப்ப லேசா அழுத்திருங்க என்ன? முழு நினைவும் வரக்கூடாது" என்றார்.

"சரி, டாக்டர்."

முகத்தை மூடியிருந்த அந்தப் பெண் மாயாவை உணர்ச்சி யில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். மாயாவுக்கு நகைகள் யாவும் கழற்றப்பட்டு, அந்த கவுனின் மென்மை அவள் அதனுள் நிர்வாணமாக இருப்பதைக் காட்டியது. மூக்கில் பிராணவாயுக் குடுவையைக் குழாய் மூலம் பொருத்தினார்கள். மானிட்டர் சீராக இயங்கத் துவங்க, கையைப் பிடித்து, ரத்தக் குழாயை ஊசியில் நிரடி, உடனே பிரவகித்த ரத்தத்தை வாங்கி, அதிலேயே க்ளுக்கோஸ் இணைத்து, வால்வைச் சீராக்கி சார்ட்டில் எழுதிவிட்டுச் சென்றார்.

மாயா சின்ன வயசில் குதிரை வண்டியில் அப்பா அம்மாவுடன் 'காதலிக்க நேரமில்லை' சென்றுகொண்டிருந்தாள் "உங்க ஊர்ல வனராஜ கார்ஸான் இன்னும் வரலியா." மாயா பெரிசாக, ஆனால் மௌனமாகச் சிரித்தாள்.

அதிகாலை, அப்பாவுக்கு மறுபடி போன் வந்தது, மாயாவிடமிருந்து. "இங்க இன்னும் எக்ஸ்பெரிமண்ட் முடியலைப்பா. அதனால இன்னிக்கும் வீட்டுக்கு வரமாட்டேன். இங்கயே ஆஸ்டல் ரூம் எல்லாம் வசதியாக இருக்கு. சாப்பாடு எல்லாம் கிடைச்சுர்றது. சிநேகிதிங்க கூடத்தான் இருக்கேன்."

"என்னம்மா மாயா, எதாவது ட்ரபிளா? எதாவது உங்க அக்கா மாதிரி ஷாக் தரப் போறியா? ஏன்னா அவ இப்படித்தான் ஆரம்பிச்சா. 'ராத்திரி ட்யூட்டி, டார்மிட்டரியில் படுத்துக்கறேன், வரமாட்டேன், வரமாட்டேன்'னு பாவலாக்காட்டி சொல்லாம அமெரிக்கா போய்ட்டா. அந்த மாதிரி எதாவது நீயும் ஷாக் தரப்போறியா?"

"இல்லைப்பா, அதெல்லாம் இல்லை" என்று மாயா சிரித்தாள்.

"கொஞ்சம் இரு, அம்மாவோட பேசு."

அம்மா போனைப் பிடுங்கிக்கொண்டு, "மாயா! நீ வீட்டுக்கு வராம இப்படி அழிச்சாட்டியம் பண்றது நன்னாவே இல்லை. என்னன்னு நினைச்சுட்டிருக்கே எங்களையெல்லாம்?"

"அதெல்லாம் இல்லைம்மா."

"ஒழுங்கா முதல் காரியமா கார்த்தாலை பத்து மணிக்குள்ள



வீட்டுக்கு வந்து சேரு."

"சரிம்மா, ட்ரை பண்றேன் அம்மா. நீ எதும் தப்பா எடுத்துக்காதே இங்க எதும் நடக்கலை. ரிப்போர்ட் எழுதிட்டிருக்கேன். அவ்வளவுதான். எல்லாரும் ப்ரெண்ட்லியாத்தான் இருக்கா."

"அது என்னடி ராப்பகலா தங்கும்படியா ரிப்போர்ட்?"

"அம்மா எனக்கு எப்படி ..."

"உன் குரலும் சரியில்லை. ஜல்தோஷம் பிடிச்சாப்பல. உனக்கு உடம்பு சரியில்லை."

"இல்லைம்மா. இந்த போன் சரியில்லை. அதான் குரல் கம்மினாப்பல இருக்கு. சரி, வெச்சுரவா?"

"பத்து மணிக்குள் வந்துரு."

"பார்க்கலாம்."

போனை வைத்ததும் அப்பாவும் அம்மாவும் மறுபடி ஒருவரை ஒருவர் பேதலித்துப் பார்த்துக்கொண்டு, "எனக்கென்னவோ ரெண்டு வருஷம் முன்னால இவ அக்கா பண்ண அதே கதைதான்."

"இவ ஒண்ணும் அப்படியில்லை. நம்மை த்ராட்டில விட்டுட்டுப் போகமாட்டா. அவளுக்கு ஆபீஸ்ல என்ன நெருக்கடியோ. வந்துர்றேன்னிருக்கா பத்து மணிக்கு."

"வரமாட்டா பார்."

"வராட்டா நாம எதும் செய்யற நிலையில இல்லை."

"அப்டி இல்லை. இன்னும் ஒருநாள் வரலைன்னா போலீசுக்கு மிஸ்ஸிங்னு புகார் கொடுக்கப் போறேன்."

"பேசாம இருங்கோ. எதாவது ஓடிப்போனவள்னு பட்டப்பேர் வந்துரும். எதுக்கும் சாயங்காலம் வரைக்கும் பார்க்கலாம். இல்லை, நேரா ஆபீஸ்ல போய் அவளைச் சந்திக்கலாம், என்ன?"

"அதை இப்பவே பண்ணிரலாமே."

"இப்ப வேண்டாம் ... எனக்குக் காரியம் இருக்கு."

மாயா ஒருமுறை பூப்பந்தாட்டத்தில் பல்கலைக்கழகத்தின் தலைவி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு குண்டூர் போகிறபோது ரமேஷ்பாபு என்கிற பையன் அவளை ரொம்பச் சுற்றினான். அவனைப் பார்த்தால் தெலுங்கு நடிகர்களைப் போல இருந்தது. காற்றில் பறக்கிறா மாதிரி இருந்தாலும் அழுந்த வாரி டைட்டாக பாண்ட் போட்டுக்கொண்டு, சிகரெட் பிடித்துக் கறுத்த உதடுகளுள் கறுத்த கண்களுடன், தெலுங்கில் கவிதை எழுதிக் கொடுத்து அதனோடு ஒரு மஞ்சள் ரோஜாவையும் வைத்து வழியனுப்பினான். அந்த ரமேஷ் பாபுவுக்கு போன் செய்து அழைச்சா வந்து காப்பாற்ற மாட்டானா? அபத்தம். அவனுக்கு

நான் இருக்குமிடம், இங்கே இருப்பது எப்படித் தெரியும்?

அப்பா அம்மா வந்தாக வேண்டும். ஏன் கவலைப்படவில்லை? வந்து தேடவேண்டாமோ? விசாரிக்க வேண்டாமோ? ஒரு பெண் ராத்திரி வரவில்லை. அவளிடமிருந்து தகவல் எதும் இல்லை என்றால் வந்து தேடமாட்டார்களோ? அவ்வளவு அலட்சியமா என்று அப்பா அம்மா பேரில் கோபம் வந்தது.

அந்த டெலிபோன் ஸ்விட்ச் போர்டு அருகில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். மிருணாளினி வந்து, "என்ன மோகினி! எல்லாம் சரியா இருக்குதானே? மாயா குரல்ல போன் பண்ணியாச்சில்ல."

"அவ அப்பா அம்மாகூடப் பேசினேன். வாய்ஸ்தான் இன்னும் செட் ஆகலைன்னு தோணுது."

"டாக்டர் பாணிகிட்டச் சொன்னியா?"

"சொன்னேன். டெக்னீஷியன்ஸ் வர்றதா சொன்னாங்க."

அப்போது வெள்ளை உடை அணிந்த டெக்னீஷியன்கள் இருவர் வந்து, "என்ன ப்ராப்ளம் மோகினி?"

"மாயாவுடைய சின்த் வாய்ஸ். அவங்க பேரண்ட்ஸ் போன் பண்றப்ப சந்தேகப்படறாங்க."

"என்ன சொன்னாங்க?"

"ஜலதோஷம் பிடிச்சாபபல இருக்குதுன்னாங்க."

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு "ஃப்ராக்டல்ஸை பாத்துரு துரை" என்றார் ஒருவர். கம்ப்யூட்டர் திரையருகே வந்து படபடவென்று அதில் செய்தியைச் செலுத்தினான் மற்றவன். "மாயா"என்றும் "வாய்ஸ்" என்றும் அடித்ததும் "ரெடி" என்றது.

"நம் அன்றாட வாழ்வில் நிறைய காமேஸ்வரிகளை நாம் காண முடியும்" என்று டைப் அடிக்க, கம்ப்யூட்டர் மாயாவின் குரலில் அந்த வாக்கியத்தைத் திருப்பிச் சொல்ல, அதில் திரை மூலமே சில திருத்தங்கள் செய்து, "இப்பச் சரியா இருக்கும். நான் வாய்ஸ்ட் கான்ஸனண்ட் கோயஃபிஷென்ட் கொஞ்சம் அதிகமா கொடுத்திருக்கேன். இனிமே ப்ராப்ளம் இருக்காது. இதுவரைக்கும் துரை, இந்த ப்ரோக்ராம்ல குற்றம் கண்டு, ஆள் பேசலை, கம்ப்யூட்டர் மூலம் பேசறாங்கறதை யாரும் கண்டுபிடிச்சதே இல்லை. அதுக்கே நோபல் பரிசு குடுக்கணும் துரை."

"இன்னி கணக்குப்படி உனக்கு நாற்பத்தெட்டு நோபல் பரிசு கொடுத்திருக்கணும்."



"என்ன மாதிரி ஜீனியஸ், துரை. இந்த நாட்டிலேயே பிறந்திருக்கக் கூடாது."

"சாரங்கபாணியும் அதான் சொல்றாரு."

அப்போது அந்த இடத்துக்கு வந்த டாக்டர் நரேந்திரநாத், "மிருணாளினி! உன்னைத்தான் தேடிட்டிருக்கேன். அவளைப் பார்த்தியோ?"

"அவளைன்னா யாரை ஸார்?"

"மாயா."

"அவ ரிஸைன் பண்ணிட்டாளே."

மஞ்சு, "இப்ப மாயாவுக்குத்தானே போன் பண்ணிட்டிருக்கேன்."

"ஷட் அப் மஞ்சு."

"என்ன சொன்னே, என்ன சொன்னே மஞ்சு" என்று நரேந்திரநாத் கேட்க, மிருணாளினி, "இல்லை ஸார் இவ வேற எதோ சொல்றா."

டெக்னீஷியன், "அப்ப நான் வரட்டுமா, ம்ருணா இதில ஒரு கையெழுத்து போட்டுட்டிங்கன்னா"

நரேந்திரநாத் "என்னப்பா விஷயம்?"

"மாஸ்டர் சின்தஸைஸர்ல ஒரு குரல் சரியா இல்லைன்னாங்க. அதை ஃபிக்ஸ் பண்ணிட்டோம்."

அவர்கள் சென்றதும் நரேந்திரநாத் வியப்புடன், "என்னவோ இந்த லாப்ல நடக்குது" என்றார். "எனக்குத் தெரியும். எதோ நடக்குது. அந்த சாரங்கபாணி திரிசமம்தான்னு தோணுது."

மிருணாளினி, "அவரையே கேட்டுருங்க ஸார்" என்றாள்.

"ரெண்டு நாளா அவ ஆளையே காணுமே. விஜியையும் காணம். எங்கயாவது கான்பரன்ஸ் போயிருக்காங்களா?"

டாக்டர் நரேந்திரநாத் போனை எடுத்து கோம்ஸைக் கூப்பிட்டு, "கோம்ஸ்! இந்த சாரங்கபாணி எங்க இருந்தாலும் . . ."

"சாரங்கபாணி இங்கதான் ஸார் இருக்கார். உங்க ரூம்லதான் ஸார், உங்களுக்காகத்தான் காத்திருக்கார்" என்றான்.

டாக்டர் நரேந்திரநாத் தன் அறைக்கு வந்தபோது சாரங்கபாணி அவர் ரிப்போர்ட்டில் பாதியைப் படித்துக்கொண்டிருந்தார்.

"முடிக்காத ரிப்போர்ட்டை, மற்ற பேர் ரிப்போர்ட்டைப் படிக்கிறது அநாகரிகம்."

"எல்லாம் தியரி. நான் செய்யறது ப்ராக்டிக்கல்."

"மாயா எங்கே?"

# 20

மாயா எங்கே? – என்றதற்கு, சாரங்கபாணி சட்டென்று இருபுறமும் பார்த்து, "ஒரு கை குடு" என்று நரேந்திரநாத் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

"யாராவது கேட்டுக்கொண்டிருக்கப் போறா சாரு. இந்த லாப்ல சுவர்களுக்குக்கூட காது" என்று நரேந்திரநாத் சொல்ல,

"இப்ப யாரும் இல்லை. கை குடு."

"என்ன?"

"மாயா மேல பரிசோதனை ரொம்ப பிரமாதமா வந்துக்கிட்டு இருக்கு."

"முடிச்சாச்சா?"

"முடிக்க முடியலை. கொஞ்சம் பல்ஸ், ப்ளட் பிரஷர் எல்லாம் விழ ஆரம்பிச்சுது. விஜிதான் போஸ்ட்போன் பண்ணிட்டான்."

"பரவாயில்லை. ஜாக்கிரதையாகவே இரு. அவசரப்பட்டா அவ அக்கா மாதிரி இவளும் செத்துப் போயிடப் போறா."

"மேனகா செத்துப்போய்ட்டாங்கறே?"

"ஆமாம்."

"இல்லை நரு. மற்ற பேர்களைப் பொறுத்த வரையில மேனகா சாகலை. உயிரோடத்தான் இருக்கா. அமெரிக்காவிலிருந்து கடிதம் எழுதறா, வாரா வாரம் டெலிபோன் பேசறா, போட்டோ அனுப்பியிருக்கா. அதைவிட என்ன வேணும்? இப்ப உங்க அப்பா எங்கே இருக்கார் நரு?"

"சிரங்கத்தில."

"கடைசியா எப்ப அவரைப் பார்த்தே?"

"ஒரு வருஷம் ஆச்சு."



"அவர் உயிரோட இருக்காரா இல்லையான்னு உனக்கு ஏதாவது சந்தேகம் இருக்குமா? அவரை நீ பார்க்கறியா? லெட்டர், போன்கால் பண்ணா அவங்க எழுத்தை, குரலை வச்சுட்டுத்தானே உயிரோட இருக்கார்ன்னு சொல்றே?"

"ஆமா."

"அதுபோலத்தான் மேனகாவும் அவங்க அப்பா, அம்மா, தங்கை இவங்களைப் பொறுத்தவரையில் உயிரோடத்தான் இருக்கா. கடிதம் வருது. போன் கால் வருது. இதுக்கு மேல என்ன?"

"என்னிக்காவது ஒரு நாள் உண்மை வெளிவந்துதானே ஆகணும்?"

"அந்தத் தினத்தைத் தீர்மானிக்க வேண்டியது நாம. நவீன பிரும்மாக்கள்! செத்துப்போகிற வேளையைத் தீர்மானிச்சு ஒரு தந்தி கொடுத்துட்டாப் போறது.

Regret to inform Menaka died in a traffic accident."

"எல்லாம் கம்ப்யூட்டர்தான். கம்ப்யூட்டர்ல அவளுடைய வாய்ஸ் இருக்கு. அவளுடைய பழைய ஞாபகங்களை டவுன்லோடு செய்து வெச்சிருக்கோம். எல்லாம் முடிஞ்சு, வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்தில பொசுக்குன்னு மண்டையைப் போட்டுட்டா. இம்யூன் சப்ரஸ்ஸண்ட் சரியா வேலை செய்யாம இன்ஃபெக்ட் ஆகி . . ."

நரேந்திரநாத் 'ப்ச்' என்றார்.

"இப்ப கூட என்ன, உயிரோடத்தானே இருக்கற மாதிரி, பாடியை மார்ச்சுல வெச்சிருக்கமே! பேசக்கூட பேசுது."

"அது அவளுடைய பேச்சில்லை. கம்ப்யூட்டருடன் இணைத்து பேசற பொம்மை மாதிரித்தானே?"

"அந்த கதி மாயாவுக்கு நேராம பாத்துண்டுரு சாரு."

"கவலைப்படாதே. ஜாக்கிரதையாவே இருக்கோம். பல்ஸ் நார்மலாற வரைக்கும் தொடமாட்டோம். அரை மயக்கத்தில வெச்சிருக்கோம்.

"இன்னும் என்ன பாக்கியிருக்கு சாரு."

"ஒரே ஓர் எக்ஸ்பெரிமண்ட். அவ மூளையில ஒரு சின்ன 'சிப்'பை இம்ப்ளாண்ட் பண்ணிட்டா அவளை விடுதலை பண்ணிரலாம்!"

"சாரு, எனக்கென்னவோ நாம பண்ற பரிசோதனைகள் சட்டப்படி தப்பு . . ."

"சட்டத்துக்குள் இயங்கினா எந்தவிதமான கிரியேட்டிவிட்டியும் முடியாது. கை குடு."

"நரு! இந்த ஆராய்ச்சியோட விளைவைக் கட்டுரையா எழுதும்போது என் பேரையும் போடணும்."

"உன் பேர் இல்லாமயா? நீதானே இந்த டவுன்லோடிங்கிற சித்தாந்தத்தையே எனக்குச் சொல்லிக் கொடுத்தே."

"ஆனா வெளியுலகத்தைப் பொறுத்தவரையில நாம ரெண்டு பேரும் விரோதி மாதிரியே இன்னும் கொஞ்சநாள் பாசாங்கு பண்ண வேண்டி வரும். மாயாவோட அப்பா அம்மா வருவாங்க. போலீஸ் வரும். எல்லாரும் நீ சொல்றதைத்தான் நம்புவாங்க. இந்த லாபைப் பொறுத்த வரையில ஹீரோ நீதானே? வில்லன் நானு."

"எல்லாம் ஓர் ஏற்பாடுதானே சாரு? அது இல்லைன்னா இத்தனை பெரிய முயற்சியில நாம ரெண்டு பேரும் இறங்கிற முடியுமா?"

அப்போது உள்ளே கோம்ஸ் வர, இருவரும் உடனே இறுகிப் போய்,

"சாரங்கபாணி! ஐ பாசிட்டிவ்லி அப்ஜெக்ட் டு திஸ்! என் அனுமதி இல்லாம என் ஆபீஸ்ல நுழையறதே தப்பு. கோம்ஸ், எப்படி இவரை அலவ் பண்ணே?"

"நான் என்ன செய்ய முடியும் டாக்டர்? அவர் பாட்டுக்கு உள்ளே நுழைந்தார்."

"கெட் அவுட்" என்று கத்தினார் நரேந்திரநாத்.

"நரு! இந்த மாதிரிப் பேசினதுக்கு உனக்குக் கேடு காலம் வரத்தான் போகிறது" என்று சொல்லிவிட்டு டாக்டர் சாரங்கபாணி விலக, கோம்ஸ், "ஐ'ம் ஸாரி ஸார். என்ன சொன்னாலும் கேட்காமல் . . ."

"நான் இல்லாதபோது இந்த அறையைப் பூட்டி வைத்திருப்பதே நல்லது" என்றார்.

"டாக்டர் நரேந்திரநாத்" என்று வாயில்படியில் குரல் கேட்க,

"யாரு?"

"நான் மாயாவுடைய ஃபாதர்."

"என்ன விஷயம்? அவ இங்க இல்லை போலிருக்கே."

"ஒரு தடவை நீங்க எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. ஞாபகம் இருக்கா?"

"ஞாபகம் இருக்கு. சொல்லுங்க."

"மாயா ரெண்டு நாளா வீட்டுக்கு வரலை. ரிப்போர்ட் எழுதறதா போன் பண்ணினா. அவளை ஒரு முறை பார்த்துட்டா நல்லது."

"அதுக்கென்ன."

"உள்ள இருக்காளா, கூப்பிடறீங்களா?"

நரேந்திரநாத், "இருங்க" என்று சொல்லிவிட்டு உள் தொடர்பு போனில் எண்களை ஒத்தினார்.

"மாயா."

"என்ன ஸார்?" ஸ்பீக்கரில் குரல் தெளிவாகக் கேட்டது. மாயாவின் குரல்.



"ரிப்போர்ட் எழுதிட்டியா?"

"இன்னும் முடிக்கலை ஸார்."

"உங்க அப்பா வந்திருக்காங்க."

"எங்க?"

"இங்கதான், ரொம்ப கவலையா இருக்கார், பேசுங்க. இங்கிருந்தே கேக்கும்."

"அப்பா, என்னப்பா இங்க வந்துட்டிங்க?"

"இல்லை மாயா, கவலையா இருந்தது."

"நான் ஒண்ணும் தொலைஞ்சு போகலைப்பா."

"அப்படியா. எப்ப வீட்டுக்கு வருவே?"

"சாயங்காலம் அல்லது நாளைக்குக் காலைக்குள்ள."

நரேந்திரநாத்தைப் பார்த்தார் அப்பா. "ஸார்! உங்க காரியம்தான் செய்துக்கிட்டு இருக்காபோல."

"ஆமாம். கவலைப்படாதீங்க. உங்க டாட்டர் என் டாட்டர் மாதிரி. அவளைப் பத்திரமா நானே கொண்டுவந்து விட்டுர்றேன்."

"இப்ப ஒருமுறை பார்க்க முடியாதா?"

"ஓ பார்க்கலாமே" மறுபடி இண்டர்காம் பட்டனைத் தட்டி, "மாயா ஆர் யு டு பிஸி?"

"ஆமாம் டாக்டர். என்ன வேணும்?"

"அப்பா உன்னைப் பார்க்கணுங்கறாரு. கொஞ்சம் வந்துட்டுப் போறியா?"

"ஒரு மணியாவது ஆகும் டாக்டர்."

"பரவால்லை. சாயங்காலம் கொண்டு வந்து விட்டுருங்கோ. டாக்டர்! நீங்க சொன்னாச் சரி. உங்களைப் பத்தி அவ நிறைய நல்லதாவே சொல்லியிருக்கா. அதனால ஒங்க மேல எங்களுக்கு நம்பிக்கைதான். சாரங்கபாணின்னு ஒருத்தர் இருக்காரே, அவர்தான் சிம்ம சொப்பனம் அவளுக்கு."

"பயப்படாதீங்க. இந்த லாப்ல யாரும் கடிச்சு சாப்பிட மாட்டாங்க. நான் உங்க பொண்ணுக்குப் பொறுப்பு. நாளைக்கு வந்துருவா."

அவர் செல்வதை உணர்ச்சியில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தார் நரேந்திரநாத்.

அந்த அறையில் நடமாடுவதற்கு அதிக இடமின்றிச் சாதனங்கள் நிரம்பியிருந்தன. வழக்கமான அனஸ்திஸியாலஜி சங்கதிகளைத் தவிர துளைபோடும் ட்ரில்களை இயக்குவதற்கு நைட்ரஜன் குடுவைகள், சக்கர ஸ்டாண்டுகளில் சர்ஜனின் தலைவிளக்கின் பாட்டரிகள், பலப்பலவித வடிவங்களில் ஆப்பரேஷன் கருவிகள், கத்திகள்,

கொக்கிகள், காட்டரி, மூன்றுபேர் பார்க்கக்கூடிய மைக்ராஸ்கோப், டி.வி. மானிட்டர்கள், மூளையின் சின்னச் சின்ன மின்சாரத்தை மேற்பார்வையிடும் இயந்திரங்கள்.

மாயா இதனிடையே படுத்திருந்தாள். அவள் கண்கள் லேசான மயக்கத்தில் இன்னமும் மூடியிருந்தன. தலைமயிர் ஒதுக்கப்பட்டுப் போர்வையால் உடல் முழுவதும் மூடப்பட்டு, மாயாவின் தலைமயிரில் இடது பகுதியில் இரண்டு இன்ச் சதுர அளவுக்கு வெட்டப்பட்டுச் சிரைக்கப்பட்ட பகுதியில் உள்ளே வெள்ளையாக மண்டைத்தோல் தெரிந்தது. அதை ஆல்கஹால் போட்டுத் துடைத்தார்கள்.

அண்மையில் ஒரு மிகச் சிறிய சிலிக்கன் சதுரம் ஒரு கண்ணாடி வட்டத் தட்டின் மேல் வைத்திருந்தது. அதன் தங்க இணைப்புகளை ஒருவர் சரிபார்த்துக்கொண்டிருக்க டாக்டர் சாரங்கபாணி, "விஜி! பல்ஸ் எல்லாம் நார்மல்தானே."

"நார்மல் டாக்டர்."

"ப்ளட் ப்ரஷர்."

"128–32.

"குட்! கண்ட்ரோல் பண்ணிட்ட."

"ப்ளட் ஷுகர் லெவல்தான் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கு. அதிகம் க்ளுக்கோஸ் கொடுத்ததாலே . . ."

"இன்ஸுலின் கொடுத்துப்பாரேன்."

"இல்லை. ஷி இஸ் நாட் எ டயாபடிக். அதனால இப்ப கண்ட்ரோல்ல வந்துரும்."

"அப்ப ஆரம்பிக்கலாமா?"

விஜி சொல்ல, டாக்டர் சாரங்கபாணி ஒரு சிறிய பளபளப்பான கத்தியை எடுத்துத் தலையில் முதல் கீறு கீற ரத்தம் வந்தது.

பக்கத்திலிருந்த ஃப்ளுராஸ் கோப்பை இயக்க, எதிரே அவள் மூளையின் பிசாசு போன்ற வடிவம் சாரங்கபாணியின் கத்தி நிரடலில் கறுப்பாகத் தெரிந்தது.

"சப்ட்யூரல்."

"மேலாக மெத்து மெத்துன்னு வெச்சுட்டா போதும். ம்யு சிப்பை எடு" என்றார்.

அந்த சிலிக்கன் சதுரத்தை எடுத்து இணைக்குமுன், "ம்யூஸிக் போடுய்யா" என்றார் சாரங்கபாணி.

அந்த இடத்திலே லேசான வயலின் இசை பரவ, சாரங்கபாணி அந்தச் சிறிய சிலிக்கன் சில்லை அதன் லித்தியம் பாட்டரி இணைப்புடன் பொருத்தி மாயாவின் மூளைக்குள் பதித்தார்.



# 21

சுனில் கென்னடி விமான நிலையத்தில் தன் நண்பனிடம், "மோகன்! நீ போய்க்கப்பா. எனக்காக பார்க் பண்ணிட்டு வர வேண்டாம், தாங்க்ஸ்" என்றான்.

"எப்ப திரும்பி வருவே?" என்றான் மோகன்.

"அடுத்த செமஸ்டர்க்குள்ள வந்துருவேன்."

"கல்யாணம் பண்ணிக்கிட்டா?"

"ஆமாம். அதுக்குத்தானே போறேன். அவளையும் முடிஞ்சா ஸ்டூடண்ட் விசாவில கூட்டிட்டு வந்துரலாம்னு பார்க்கறேன்."

"அவ அக்கா இங்கேயே இருக்கிறதா சொன்னா?"

"இல்லைப்பா. அதான் மிஸ்ட்ரி, அவளைக் காண்டாக்ட் பண்ண முடியலை. அட்ரஸ் தப்பு."

"ஆல் த பெஸ்ட். நான் போன் பண்றேன். கல்யாணத் தேதி குறிச்சதும் சொல்லு என்ன. ஹேவ் எ நைஸ் ட்ரிப்."

"பை மோகன்."

சுனில் ஏர் இண்டியாவின் கவுண்ட்டரை அணுகும்போது உற்சாகமாக இருந்தான். இரண்டு ஆள் ஆகிருதி இருந்த கறுப்பு ஆபீசர் அவன் பெட்டியைத் திறந்து மாயாவுக்காக வாங்கியிருந்த அத்தனை பரிசுப் பொருட்களையும் அலட்சியமாகப் பரிசோதிப்பது அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

அதிகாரி புன்னகைத்துக்கொண்டே, "ஏர் இண்டியா வாண்ட்ஸ் இட். என்ன செய்வது" என்று தோள்களைக் குலுக்கினான்.

மாயாவைச் சந்திக்கப் போகிறோம் என்கிற உற்சாகம் திரும்ப வந்து, ஃப்ளைட் இரண்டு மணி லேட்டானதும், ஒரு சீட் விடாமல் அத்தனையும் நிரம்பியிருந்தும், ஜம்போ விமானத்தில் பாத்ரூம்

குறைக்கவில்லை.

சுத்தமாக இல்லாததும் எதும் அவன் உற்சாகத்தைக்

"மாயா, மாயா" என்று எப்போதும் மனசுக்குள் மந்திர உச்சாடனம் போல சொல்லிக்கொண்டிருந்தான். பலமுறை அவளுடன் பேசினான் ...

"என்னது வந்துட்டிங்க. படிப்பு முடிஞ்சு போச்சா?"

"இன்னும் இல்லை மாயா."

"அதுக்குள்ள கல்யாணமா?"

"கல்யாணத்துக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லை மாயா! வர்ற சம்பளத்தில அப்பார்ட்மெண்ட் வாடகை முன்னூறு. அப்புறம் நம்ம செலவெல்லாம் மிஞ்சி மிஞ்சிப் போனா நானூறு டாலர் ஆகும்."

"இத்தனை அவசரமா?"

"மாயா! நான் பண்ணது தப்பு. போறதுக்கு முன்னாடியே கல்யாணம் செய்துட்டுப் புறப்பட்டிருக்கணும். அங்க போன பிறகுதான் தெரிஞ்சுது. பிரிவுங்கறது எத்தனை கொடுமை. காதல்ங்கறது எத்தனை பவர்ஃபுல். மைகாட்! எனக்குப் படிப்பில அக்கறையே இல்லாமப் போச்சு மாயா! பைத்தியமே பிடிச்சு ... ஸ்காலர்ஷிப்புக்காக அத்தனை உழைச்சது ஏன்? கல்யாணம் பண்ணிக்க வசதி வரும்ங்கறதுக்காகத் தான் மாயா..!" சுனில் எட்போனில் சானலை மாற்றி ஜூம்மா ஜூம்மா கேட்டான்.

அப்பாவுக்குக் கவலை கிலியாக மாறியிருந்தது. "என்ன இது? ஒரு வாரமாக் காணோமே! எங்கே? எப்பப் பார்த்தாலும் லாப்ல இருக்கேன்னு போன் மட்டும் வந்திண்டிருக்கு. ஆனா ஆளை முழுசா இதுவரை பார்க்கவே இல்லையே. என்னவோ எனக்கு எதோ தப்பா...? மறுபடி டாக்டரைப் பார்க்கலாமா?"

"இல்லை, அவர் கிட்டேப் போனா இதையேதான் சொல்வார். அடுத்த வீட்டில வக்கீல் மாமா இருக்காரே அவரை வேணா கேட்டுப் பார்க்கலாமே?"

வக்கீல் நாகரத்தினத்திடம் போனபோது அவர் காஸட்டில் சேஷகோபாலன் கேட்டுக்கொண்டிருந்தார்.

"என்ன ரொம்ப ரேரா வந்திருக்கேள்?"

"என் டாட்டரைப் பத்தி."

"முத டாட்டரா, ரண்டாவதா?"

"இளையது ஸார், மாயான்னு."

"தெரியும், தெரியும். சொல்லுங்கோ."

"ஏறக்குறைய பத்து நாளா அவளை நாங்க பார்க்கலை."

"என்னது? பத்து நாளா காணமா? சும்மா இருந்தீங்களா?"

"காணம்னு இல்லை ஸார். ஆபீஸ் போனவ வரவே இல்லை."



"ஆபீஸ்லன்னா விசாரிக்கணும்."

"விசாரிச்சோம். உள்ள இருக்கா. போன்ல இண்டர்காம்ல இப்ப வரேன், அப்ப வரேன்னு பேசறா. ஆனா, வரமாட்டேங்கறா. எதோ ரிப்போர்ட் எழுதிக்கிட்டு இருக்காளாம். ராப்பகலாவா ரிப்போர்ட்டு?"

"பதினெட்டு வயசாய்டுத்தா?"

"ஆச்சு."

"மைனர்னு சொல்ல முடியாது. வேணா ஒரு ரிட்டு போட்டுப் பார்க்கலாம் கோர்ட்டில, ஏபியஸ் கார்ப்பஸ் மாதிரி. அவளை அவ இஷ்டமில்லாம கன்ஃபைன் பண்ணி வெச்சிருக்கா, உடனே அவளைக் கொண்டுவந்து காட்டும்படிக்கு."

"அந்த மாதிரி போட முடியுமா ஸார்?"

"போட முடியும். ஆனா இந்த இன்ஸ்டிட்யூட்காரங்க கோவிச்சுக்கலாம்."

"கோவிச்சுக்கட்டும்" என்றாள் அம்மா.

"முதல்ல என்கூட வாங்க. போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டாம். அந்த அதிகாரிகளைப் பார்த்துட்டு ... பேர் என்ன சொன்னீங்க?"

"நரேந்திரநாத்துன்னு."

"ஸி.எம்.ஆர்.ஐ?"

"ஆமா."

"அவரா பெரிய அத்தாரிட்டியாச்சே. அவர் கீழயா உங்க டாட்டர் வேலை செய்யறா?"

"ஆமா ஸார்."

"அப்ப இதில சந்தேகப்படும்படியா எதும் இருக்கா என்ன?"

"பத்து நாளா வரலைன்னா ..."

"சரி. சாயங்காலம் போய்ப் பார்க்கலாம்."

இருவரும் மாலை இன்ஸ்டிட்யூட்டுக்குப் போய் டாக்டர் நரேந்திரநாத்தின் அறைக்குச் சென்று வாசலில் காத்திருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் அவர்கள் உள்ளே அழைக்கப்பட்டனர். அறிமுகங்கள் முடிந்ததும், நாகரத்தினம் பளிச்சென்று கேட்டார்.

"டாக்டர்! உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கோம். எதும் சந்தேகமா இல்லைன்னாலும் இவர் டாட்டரைப் பத்து நாளா பார்க்காததினால ரொம்ப பரிதவிப்பில் இருக்கார். ஒரு முறை அவளைக் கூப்ட்டுக் காட்டிட்டா போதும். பேசிட்டா போதும்" என்றார்.

"ஓ. அதுக்கென்ன? கோம்ஸ்! கொஞ்சம் மாயாவை வரச் சொல்லுங்க" என்றார்.

"என்ன ஆச்சுன்னா, ஒரு கான்பரன்ஸுக்கு ரிஸர்ச் பேப்பர்

எழுதிக்கிட்டு இருக்கோம். நிறைய ரிவிஷன். அதனால ஆபீஸ்ல ஸ்டாஃப் பூராவுமே ராப்பகலா இங்கதான் தங்கிக்கிட்டு இருக்காங்க. இருந்தும் உங்களுக்கு ஆன்க்ஸைட்டி இருக்கும். இல்லைங்கலை. கம் மாயா ..."

கோம்ஸ் உள்ளே வந்து டாக்டரிடம் ஏதோ சொல்ல அவர் யோசித்தார். "ஓ அப்படியா பிரச்சினை. சிக்கல் ... ஒண்ணு செய்யுங்க. உங்களுக்கு உங்க டாட்டரைப் பார்த்தா போதுமில்லை?"

"ஆமாம்."

"பார்க்கலாம். இப்ப பேச முடியாது."

"ஏன்?"

"ஸ்டெரைல் ரூம்ல இருக்காங்க. அங்க ரீடிங்ஸ் எடுத்துக்கிட்டு இருக்காங்க. கண்ணாடி வழியா பார்க்கலாம்."

"அதனால பரவால்லை. ஒரு முறை பாத்துட்டா போதும். ஏன்னா இவர் போலீஸ்ல புகார் சொல்றதுக்கு இருந்தார்."

"தேவையில்லை. விபரீதமா எதும் இல்லை."

"வாங்க" என்று இருவரையும் அழைத்துச் சென்றார்.

மூவரும் மௌனமாக நடக்க அவர்கள் கால்களின் சப்தம் எதிரொலிக்க, டாக்டர் நரேந்திரநாத் ஓர் அறைக் கதவைத் திறந்து, "உள்ளே பாருங்க" என்றார்.

உள்ளே இருட்டாக இருந்தது. அறையின் மேல்பகுதி கண்ணாடியால் பிரிக்கப்பட்டு, அந்தப் பகுதியில் பிரகாசமான வெளிச்சம் இருந்தது. மாயா அங்கே ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

உள்ளே ஒரு பெண் இவர்களைக் குறிப்பிட்டுக் காட்டினாள். மாயா இவர்கள் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

"தலையில் என்ன மொட்டு மாதிரி இருக்கே?" என்றார் அப்பா.

"அது வந்து என்ன ஆச்சுன்னா, ஒரு முறை லாப் வாசல்ல குனிந்து எதையோ எடுக்கறபோது விளிம்பில இடிச்சுக்கிட்டா. அதுக்கு லேசா ப்ளாஸ்திரி போட்டுக்கிட்டு இருக்கா."

"ஏன் ஒரு மாதிரி உட்கார்ந்திருக்கா?"

"டயர்டா இருக்கா. பத்துநாள் ரிப்போர்ட் எழுதியிருக்கா இல்லை."

"போலாமா? இங்கருந்து கூப்பிட்டா கேக்காது. கொஞ்சம் வெய்ட் பண்ணுங்களேன். வெளிய வந்துருவா. இல்லை காலைல எப்படியும் நானே உங்க வீட்டில கொண்டு விட்டுட்டுப் போறேன்."

"என்ன, சமாதானம்தானே?" என்று அப்பாவைக் கேட்க, அவர் மையமாகத் தலையாட்டினார்.

"தலையில பட்டுண்டதை போன்ல சொல்லவே இல்லையே?"



"சொன்னா கவலைப்படுவீங்கன்னு ... உங்களுக்கென்ன ஸார். அவ உயிரோட இருக்காளா, ஊர்லதான் இருக்காளான்னு சந்தேகம் இருந்ததில்லை? எல்லாம் தீர்ந்து போச்சில்லை?"

"ஆமாம்."

"நாளைக்குக் காலையில நீங்க வரிங்களா, நானே அழைச்சுகிட்டு வரவா?"

"வேண்டாம். நானே வரேன் சார். தாங்க்ஸ்" என்று புறப்பட்டார்கள்.

"ராத்திரி போன் பண்ணச் சொல்றேன். என்ன?"

"சரி ஸார்."

சென்டரைவிட்டு வெளிவந்ததும், நாகரத்தினம் "என்ன ஸார்! இப்ப சந்தேகம் தீர்ந்து போச்சோல்லியோ."

"சந்தேகம் ஜாஸ்தியாகி இருக்கு."

"என்ன சந்தேகம்?"

"அவங்க ஏதோ அவ மேல எக்ஸ்பெரிமெண்ட் செய்திருக்காங்க."

"அதெல்லாம் நாளைக்குக் காலைல அவ திரும்ப வரலைன்னா எங்கிட்ட சொல்லுங்க. ஒரு பெட்டிஷன் போட்டுரலாம். எனக்கும் கொஞ்சம் சந்தேக கேஸாகத் தான் இருக்கு. அவ உட்கார்ந்திருந்த விதம் சரியில்லை. ஏதோ ஒரு பொம்மை மாதிரி ..."

"தலை கட்டு வேற. பாண்டேஜ்."

"அப்புறம் கவனிச்சிங்களா. அவ கை நடுங்கிகிட்டு இருந்தது."

"அப்படியா?"

"கால் கை மாத்தி மாத்தி ஏதோ குளிர் மாதிரி ..."

"என்னவோ உட்கார்ந்திருந்த விதமே செயற்கையா இருந்தது. ஸார் இப்பவே போய் ..."

"அவசரப்படாதீங்க. காலையிலே நிச்சயம் அதை சீரியஸா பாத்துறலாம் என்ன, மாமிகிட்ட கவலைப்படாதீங்கன்னு சொல்லுங்க."

அவர்கள் வீடு திரும்பியபோது வாசலில் 'யாரு இது செருப்பு புதுசா இருக்கிறதே' என்று யோசித்தபோது சுனில் அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தான்.

# 22

சுனிலை முதலில் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கொஞ்சம் பூசினாற்போல இருந்தான், தலைமயிரை வெட்டி விட்டிருந்தான்.

"யாரு?" என்றார் அப்பா.

"சுனில். நம்ம மாயா ஃப்ரண்டு" என்றாள் அம்மா. காப்பி, மிக்சர் எல்லம் மேஜை மேல் வைத்திருந்தது.

"இது வேறயா குழப்பம். நீ அமெரிக்காவோ எங்கயோ இருக்கிறதா சொன்னா."

"ஆமா. அமெரிக்காவிலிருந்துதான் அவசரமா வந்திருக்கான்."

"மேனகாவைப் பாத்தியா?"

"பார்க்க முடியலை மாமா" என்றான். "அட்ரஸ் தப்பா இருந்தது, போன் நம்பரும் சரியா இல்லை."

"இங்க வாராவாரம் பேசறாளே!"

"மாயா எங்கே?" என்றான் சுனில்.

"மாயா ஆபீஸ்ல இருக்கா."

"பத்து நாளா வரலைப்பா. அதையேன் கேக்கறே. வேலை வேலை... என்ன? பாத்திங்களா மாயாவை."

"பத்து நாளாவா?" என்றான் சுனில்.

"ஆமாப்பா. என்னவோ ரிப்போர்ட் எழுதறேன். ரிப்போர்ட் எழுதறேன்னு திரும்பத் திரும்ப போன் பண்ணிட்டே இருந்தா. ஆளைக் காணோம். அதனால்தான் வக்கீல் மாமாவும் இவரும் போய்ப் பார்த்துட்டு வந்திருக்கா... சௌக்கியமாத்தானே இருக்கா? உடம்புக்கு எதும் இல்லைதானே? பயந்தே போய்ட்டேன்."

"இப்ப எதுக்கா வந்தே? படிப்பெல்லாம் முடிஞ்சு போச்சா



சுனில்?"

"இல்லை மாமா, பாதில விட்டுட்டு வந்திருக்கேன்."

"ஏதாவது ஃபாமிலியில எமர்ஜென்ஸியா?"

"அதெல்லாம் இல்லை மாமா. உங்களையெல்லாம் பார்க்கத்தான் வந்தேன்" என்று உற்சாகத்துடன் அவரைப் பார்த்தான்.

"சொல்றது வேடிக்கையா இருக்கு. பாதில அமெரிக்காவில் படிப்பை விட்டுட்டு இந்தக் கிழவனைப் பார்க்க வந்திருக்கியா? என்ன பொய்?"

"மாமா! மாயாவைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன். அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்."

"ஓஹோ? அப்படியா கதை போறது! பேஷ்! ரொம்ப பேஷ்" என்றார்.

அம்மா சுனிலிடம் "இதெல்லாம் அப்பறம் பேசிக்கலாம் சுனில்! முதல்ல உங்க வீட்டுக்குப் போ. உன் தங்கைகள்லாம் காத்துண்டிருப்பா."

"அவாளையெல்லாம் பாத்தாச்சும்மா. உங்ககிட்ட சீக்கிரமா முடிவு கேட்டுக்கணும். ஒரு வாரத்துக்குள்ள கல்யாணத்தை முடிச்சுடணும்.

"எக்ஸ்பிரஸ் மேரேஜ்! இப்ப புரியறது மாயா எதுக்கு வீட்டுக்கு வரத் தயங்கியிருக்கான்னு. இவன் வரட்டும்னு காத்துட்டிருக்கா. அக்காவை விட தங்கை ஒரு படி மேல போயாச்சு!"

"அப்புறம் பேசிக்கலாம். நீ இப்ப எழுந்து போனேன்னா வேற வேலை இருக்கு எங்களுக்கு."

சுனில் அவரை அடிபட்டமாதிரி பார்த்து, "மறுபடியும் நாளைக்கு வரேன் மாமா."

"வராம அப்படியே கல்யாணத்தை முடிச்சுண்டு போறதா இருந்தாலும் சரி."

"நீ போப்பா" என்றாள் அம்மா.

போனதும், "அமெரிக்காவிலிருந்து நேர இங்க வந்திருக்கான். எதுக்கு அவன்கூட சண்டை போடணும்?"

"உனக்குத் தெரியுமா?"

"என்ன?"

"ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கப் போறது?"

"எனக்கு ஒண்ணுமே தெரியாது. உங்க பொண்ணு வரப்போறா, அவளைக் கேட்டுக்கங்கோ."

வக்கீல், "நான் போய்ட்டு வரவா? பையன் யாரு?"

"அமெரிக்காவில படிக்கிறான். என் டாட்டரோட பாய்

ஃப்ரெண்டு."

"என் ஸார், பையனைப் பார்த்தா நல்ல குடும்பத்துப் பையன் மாதிரி இருக்கான். அமெரிக்காவில படிக்கிறாங்கறேள். இதைவிட நல்ல மாப்பிள்ளை எப்படி கிடைப்பான் உங்களுக்கு?"

"அதனால யாருக்கு ப்ரீதி? இவ அக்கா இருந்தா. அமெரிக்கா சொல்லாம கொள்ளாம போய் வாரா வாரம் கடுதாசி, ஐ லவ் யுன்னு எழுதிண்டிருக்கா. அதே மாதிரி இவளும் ஆரம்பிச்சிருவா. கலர் கலரா போட்டோ அனுப்பிண்டு. யாருக்கு ப்ரீதி? வயசான காலத்தில அப்பா அம்மாவுக்கு உதவியா ..."

"பையன்கிட்ட சொல்விடுங்களேன். படிச்ச கையோட திரும்பவர்றதா இருந்தா சம்மதம்னு."

"முதல்ல என் சம்மதம் எல்லாம் அவாளுக்குத் தேவையில்லை. கல்யாணம் பண்ணிக்கப் போறோம்னு தகவல் சொல்றான். அவ்வளவுதான். உமக்கு டாட்டர் இல்லையே. பிழைச்சீர்!"

"சுனில், எப்ப வந்தே?" என்றாள் கோம்ஸ்.

"காலைலதான் வந்தேன் மிஸ் கோம்ஸ், டாக்டர் நரேந்திரநாத் இருக்காரா?"

"லாப்ல இருக்கார்."

"மாயா?"

"அவளும் லாப்ல இருக்கா."

"பார்க்கணுமே?"

"இப்ப பார்க்க முடியாது. பிஸியா இருக்கா."

"வேலையை விட்டுட்டதா சொன்னா!"

"இல்லை. இன்னும் இல்லை." கோம்ஸ் சுனிலை நிமிர்ந்து பார்க்காமல் பதில் சொன்னது விநோதமாக இருந்தது.

"எந்த லாப்ல?"

"தெரியலை."

"சார்ட்டைப் பார்த்தா தெரியுமே. சார்ட்டைக் கொடுங்க."

"சார்ட் கொடுக்கக் கூடாது சுனில்! ரூல் மாறிப் போச்சு."

"கமான் கோம்ஸ்" என்று சார்ட்டை அவனே எடுத்துப் பார்த்து. "மாயா. பேரே இல்லையே. வேர் ஈஸ் மாயா?"

அப்போது டாக்டர் நரேந்திரநாத் உள்ளே வந்து, "யார் இது?" என்றார்.

"சுனில் டாக்டர்! ஞாபகமில்லை."



"ஓ, சுனில், நீ அமெரிக்காலன்னா இருக்கிறதா ..."

"வந்திருக்கிறேன் ஸார்."

"ஹாலிடேயா?"

"ஆமா ஸார். எனக்கு மாயாவைப் பார்க்கணும். உங்க செக்ரட்ரி சரியா தகவல் சொல்ல மாட்டேங்கறாங்க."

இதைக் கேட்டதும் டாக்டரின் முகத்து தசைகள் சற்று இறுகியதைக் கவனித்தான்.

"எனிதிங் ராங் டாக்டர்?"

"நத்திங் நத்திங்" என்றார் அவசரமாக.

"எதையோ சொல்லாம மறைக்கிறீங்க. வேர் ஈஸ் மாயா?"

"உள்ள பிஸியா இருக்கா."

"பார்க்கணும்."

"சாயங்காலம் பார்க்கலாம். இப்ப முடியாது. ஷி இஸ் டூ பிஸி. சொன்னா கேக்கணும். இந்த லாப்ல டிஸிப்ளின் எத்தனை முக்கியம்னு ..."

"நான் எல்லா ஸ்டெரைல் ப்ரொஸீஜரையும் கடைப்பிடிக்கிறேன் டாக்டர். எங்கருக்கா சொல்லுங்க. நானே போய்ப் பார்த்துக்கறேன்."

"பார்க்க முடியாது ... இப்ப."

அவர் உள்ளே செல்ல, கோம்ஸ் தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுனில், "ஆல்ரைட், சாயங்காலம் எத்தனை மணிக்கு?" என்றான்.

"சொல்ல முடியாது. நாலரைக்கு வா."

சுனில் வியப்புடன் வெளியே வந்தான். தன் பழைய ஐடி கார்டை வைத்திருந்தான். அதைத் திரும்பக் கொடுப்பதற்காகக் கொண்டு வந்திருந்தான். லாபில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் நுழையுமுன் காட்ட வேண்டிய கார்டு. யாரும் உன்னிப்பாக நோக்க மாட்டார்கள்.

அதைக் காட்டி லாப் பகுதிக்குச் சென்றுவிட்டான். கேத், ஃப்ளூரஸ் கோப், டோமோகிராஃபி இவற்றைக் கடந்து ஒவ்வோர் அறையாகப் பார்த்தான். காலியாக இருந்தன. டாக்டர் சாரங்கபாணி மூலை திரும்பிக்கொண்டிருந்தார். அவரைத் தொடர, ஓர் அறையில் மறைந்தார். இவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. லாப் கோட்டு அணிந்துகொண்டான். கதவைத் திறந்தபோது நான்கு பேர் உன்னிப்பாக ஒரு திரையைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். கான்ஸோல்போல இருந்தது. "மாயா பேசு."

"என்ன பேச."

"பேர் சொல்லு."

"நர்மதா."

"வயது?"

"முப்பது."

"எந்த ஊர்?"

"விஜயவாடாலோ ஒக்க கிராமம்."

"குட்."

சுனில் அப்போதுதான் மாயாவைக் கவனித்தான். அவர்களுக்கு எதிரே பல் டாக்டர் நாற்காலிபோல இருந்ததில் உட்கார்ந்திருந்தாள். மார்பு வரை போர்த்தி அவள் தலையுடன் இணைப்புகள் இணைந்திருந்தன. எதிரே கணிப்பொறி முனையத்தில் பல எழுத்துக்கள் ஓடிக்கொண்டிருந்தன. தீவிரமாக ஒருவன் விசைப் பலகையில் விளையாடிக்கொண்டிருக்க சுனில் ஸ்தம்பித்து நின்றான்.

"மாயா."

"ம்."

"இன்னிக்கு என்ன தேதி?"

"பதினாறு."

"மாதம்?"

"அக்டோபர்."

"குட். வீட்டுக்குப் போகணுமா?"

"ம். அப்பா, அம்மா எல்லாரையும் பார்த்து நாளாச்சு."

"வீட்டுக்குப் போனா சமர்த்தா இருப்பியா?"

"இருக்கேன்."

"தலை வலிக்குதா?"

"இல்லை டாக்டர்."

"சொன்னதைக் கேப்பில்ல. குட் கர்ள்."

"மாயா இது எத்தனை விரல்?"

"நாலு."

"கொஞ்சம் டபுள் விஷன் இருக்கு ஸார். கரெக்ட் பண்ணிரலாம். மிக்ஸட் ரெஸ்பான்ஸஸ். அக்கா மாதிரி ஆய்டாம தாங்கிட்டா. சிப் நல்ல வேலை செய்யுது. பாட்டரி ஒரு வருஷமாவது வரும்."

சுனில் அங்கே நடப்பதை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அத்தனை பேர் மாயாவை என்ன செய்கிறார்கள்? அய்யோ! ஏதாவது ஆபத்தானது... அவளைக் காப்பாற்ற வேண்டும். மாயா மாயா.

அப்போதுதான் ஓர் அஸிஸ்டென்ட் அவனைக் கவனித்தான்.



# 23

சுனிலுக்கு நடப்பதின் தீவிரம் முழுவதும் புரியவில்லை. 'ஜெட்லா'கினால் களைத்திருந்தான். இன்னமும் ஏரோப்ளேனில் போவதுபோல பிரமை விலகவில்லை. அந்த இடத்து நிகழ்ச்சிகளே கனவுத்தனமாக இருந்தன. டாக்டர் சாரங்கபாணி, உதவியாளர்கள், மண்டை வளையம் வைத்து மின் இணைக்கப்பட்டு கணிப்பொறி மூலம் பேசும் மாயா.

"யாருப்பா நீ?"

"ஹலோ டாக்டர் சாரங்கபாணி."

"யாரு நீ?"

"என்ன பண்றீங்க? என்ன பரிசோதனை இது. இதுக்கு அவ சம்மதம் இருக்கா?"

சாரங்கபாணி திரும்பி அவனை முழுசாக, அலட்சியமாகப் பார்த்தார்.

"கெட் அவுட். இந்த இடத்தில நுழையவே அனுமதி இல்லை உனக்கு."

"டாக்டர்! ஞாபகமில்லை?"

"ஓ, சுனில்! அடையாளமே மாறிப்போச்சு. எப்ப வந்தே? அமெரிக்காலன்னா இருக்கறதாச் சொன்னாங்க."

"இப்ப இங்க வந்தாச்சு. மாயாவை வெச்சு என்ன பரிசோதனை இது? விபரீதமா இருக்குது!"

"பயப்படாதப்பா. ஒரு கம்யூனிகேஷன் எக்ஸ்பெரிமென்ட், தாட் ட்ரான்ஸ்ஃபர் டவுன்லோடு. இப்பப் பாரு அவ தெலுங்கில பேசறா பாரு."

"டாக்டர்! லீவ் ஹர் அலோன். அவளைப் பத்து நாளா பார்க்காம,

பேரண்ட்ஸ் ரொம்ப கவலைப்பட்டுக்கிட்டு இருக்காங்க. முத முதல்ல அவளை அழைச்சுட்டுப் போக வந்திருக்கேன்."

"இருப்பா, அரைமணில எல்லாம் முடிஞ்சுரும்."

"நத்திங் டூயிங்! இப்ப கழட்டப் போறீங்களா இல்லை நானா எல்லாத்தையும் பிச்சுப் போட்டுருவேன். என்ன பரிசோதனை இது? அவ கன்ஸெண்ட் லெட்டரைக் காட்டுங்க. இல்லைன்னா போலீஸை அழைச்சுட்டு வரப் போறேன்."

"இருப்பா இரு! இப்ப என்ன நடந்துருச்சுன்னு சொல்றே? இதோ அரைமணி!"

"இப்பவே இந்தக் கணமே அவளை விடுவிச்சாகணும். இல்லேன்னா இந்தக் கண்ணாடியெல்லாம் தூள் தூளாக்கிடுவேன். போலீஸ்ல போய்க் கம்ப்ளெயிண்ட் கொடுத்து, உங்களையெல்லாம் கைது பண்ண ஏற்பாடு செய்து . . ."

டாக்டர் அருகே இருந்த குடுவையை எடுத்துக் கீழே போட்டான். அது சிதறியது.

சாரங்கபாணியை அனைவரும் கலவரத்துடன் பார்க்க, "விஜி! ரொம்ப முரண்டு பண்றான் . . . போதும். டிஸ்கனெக்ட் பண்ணிடு . . . மாயாவை ரிலீஸ் பண்ணிடு."

சாரங்கபாணி முகத்தைத் துடைத்துக்கொண்டு நேராகக் கணிப்பொறியின் பச்சைத் திரையினருகில் இருந்தவனோடு மெல்லப் பேசினார். அவன் தலையசைத்தான்.

உள்ளே மாயாவின் தலை மேலிருந்து இணைப்புகளை ஒவ்வொன்றாக நீக்கிவிட்டு அவள் முகத்தைத் துடைத்துவிட்டார்கள். மாயா ஆஸ்பத்திரி கவுன் அணிந்திருந்தாள்.

"அவளோட ஸாரியெல்லாம் லாக்கர்ல இருக்குது" என்றார். மாயாவை அந்த நாற்காலியிலிருந்து இறக்கும்போது அவளைத் தடுமாறி விழாமல் பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. மெல்ல கண்ணாடிக்கு அந்தப் பக்கத்திலிருந்து அழைத்துவரப்பட்டாள் மாயா.

"மாயா!"

நிமிர்ந்து பார்த்தாள்.

"மாயா! நான் சுனில் வந்திருக்கேன். சுனில்!"

"சுனில்" என்றாள் மையமாக. அவனை அடையாளம் கண்டு கொண்டாளா இல்லையா, ஏதும் தெரியவில்லை. மெல்லக் கைத்தாங்கலாக அழைத்துவரப்பட்டாள். கழுத்தில், காதில் நகையில்லாமல் பிரமை பிடித்தவள்போல இருந்தாள். தடுமாற்றம் விலகாமல் சுனில் அவளருகில் சென்று அணைத்துக்கொண்டு, "விடுங்க நான் பார்த்துக்கறேன். பாஸ்டர்ட்ஸ்! இந்தக் காரியத்துக்கு எல்லாரையும் சுப்ரீம் கோர்ட்டுவரை இழுக்கத்தான் போறேன்."



"என்னப்பா சுனில்! நீ நினைக்கறாப்பல அவ்வளவு தீவிரமானது இல்லை. என்ன, அவளுடைய சம்மதத்தோட சில பரிசோதனைகள், அளவைகள், மெஷர்மெண்ட்ஸ் பண்ணோம், அவ்வளவுதான்."

"வெச்சுருக்கேன் உங்களுக்கு இந்த இடத்தையே கொளுத்திர்றேன்.

"டோண்ட் பி இர்ராஷனல்!"

"டாக்டரா நீங்க பண்ற பரிசோதனைகள் என்னன்னு எனக்குத் தெரியும்."

மாயாவை மெல்ல அழைத்துக்கொண்டு போகும்போது, அவளுடைய பழைய தின உடைமைகளை லாக்கரிலிருந்து ஒரு பெண் கொண்டுவந்து தர, அதை அவளிடம் கொடுக்க மாயா சுனிலைப் பார்த்தாள். "டிரெஸ் மாத்தணும்" என்றாள் அந்தப் பெண். அவளைக் கண்கொட்டாமல் பார்த்து, "சீக்கிரம், கொண்டு வாங்க அழைச்சுட்டுப் போகணும்."

டாக்டர் சாரங்கபாணி அவனிடம் வந்து, "லுக். கொஞ்சம் உணர்ச்சிவசப்படாம இருந்தா என்னால எல்லாத்தையும்..."

"கெட் லாஸ்ட்" என்றான்.

அவர் ஏளனமாகப் புன்னகைத்து, "அழைச்சுட்டுப் போ. ஏதாவது ப்ராப்ளம்னா என்னை மீட் பண்ணு என்ன?"

"வேண்டாம். இனிமே அவ இந்தப் பக்கம் வரமாட்டா."

"பார்க்கலாம்" என்று அவர் புறப்பட, மாயா இப்போது சுமாராக சுத்தப்படுத்தப்பட்டு, தலைமயிர் தள்ளி வாரப்பட்டு, கருநீலப்புடவை உடுத்தப்பட்டு வெளியே வந்தாள்.

"போலாமா? என்றான் சுனில்.

தலையாட்டினாள்.

"மாயா! என்னைப் பாரு." அவளுடன் நடந்தான். "மாயா, நான் யாரு தெரியறதில்லையா?"

"சுனில்" என்றாள்.

"நல்ல வேளை. எங்கே ஞாபகங்களையும் அழிச்சுட்டாங்களோன்னு பயந்தேன்." அவளுடன் நடந்துசெல்லும்போது அந்தப் பெண்கள் 'குட்பை மாயா' என்று கூப்பிடுவதைத் திரும்பிப் பார்த்து சோகையாகச் சிரித்தாள்.

மாயாவை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். அவள் கண்கள் கூசின. ஆட்டோ ரிக்ஷாவில் உட்கார வைத்து அருகில் உட்கார்ந்தான். அவள் மேல் பட்டதோ படாததோ அவளுக்கு ஏதும் பொருட்டாக இல்லை. ஒரே திசையில் பார்த்துக்கொண்டே வந்தாள்.

"முதல்ல அப்பா அம்மாவைப் பார்த்துரலாம்."

"பார்த்துரலாம்."

"அப்புறம் உனக்கு ஒரு நல்ல சேதி. அதுக்கு முன்னால நான் எப்ப அமெரிக்காவிலிருந்து வந்தேன்னு கேக்கவே இல்லையே நீ?"

"எப்ப அமெரிக்காவிலிருந்து வந்தே?"

"காலையிலேதான். உடனே உன்னைத் தேடி வந்துட்டேன். எதுக்குன்னு கேளேன்."

"எதுக்கு?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்க."

"கல்யாணம்?"

"என்னம்மா, ஏதும் எக்ஸைட்மெண்ட்டே இல்லையா?"

"இல்லை."

"மாயா. ஆர் யூ ஆல்ரைட்?"

"ஆல்ரைட்."

"என்ன சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்றே மாயா. என்ன யாருன்னு தெரியறதா?"

"தெரியும். சுனில். அமெரிக்கா போயிருந்தே."

"அங்க மேனகாவைப் பார்க்க முடியலே."

"மேனகா . . ."

"மாயா, ஆர் யூ ஷ்யூர்? உனக்கு ஏதும் இல்லையே?"

"களைப்பா இருக்கு" என்றாள்.

"அவங்க என்ன செய்தாங்க உம்மேல? கேஸ் போட்டுரலாம். என்ன செய்தாங்க சொல்லு."

"ஞாபகமில்லை. நிறையக் கனா."

வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் வாசலில் அப்பாவும், அம்மாவும் அவளை வரவேற்றார்கள். "கண்ணே! எத்தனை நாள் கழிச்சு வந்திருக்கே!"

"மாப்பிள்ளையையும் தேடிண்டு வந்தாச்சு! மாப்பிள்ளை வர்றவரை காத்திருந்தாபோல."

"ஏன் இப்டி சோகை பிடிச்சாப்ல இருக்கே மாயா? தலையில என்னம்மா ப்ளாஸ்திரி?"

"ப்ளாஸ்திரி?"

"முதல்ல அவளை அழைச்சுண்டு போய் ஏதாவது சாப்பிடக் கொடு. அதுக்குப் பிறகு பேசலாம். யு யங் மேன், இப்ப நீ உன் வீட்டுக்குப் போறியா?"

"இல்ல ஸார், அவ ரெடியானப்புறம் உங்க எல்லாரையும் எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போக உத்தேசம். அங்கதான் சாப்பாடு உங்களுக்கு, மாயா திரும்ப வந்ததை செலிப்ரேட் பண்ற மாதிரி."



"அதெல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். முதல்ல அவ ஒழுங்கா வீட்டில ஒருநாள் ரெண்டு நாள் தங்கட்டும்."

மாயா படுக்கையில் வந்து உட்கார்ந்ததும் அவளுக்குக் கொஞ்சம் தலை சுற்றியது. அம்மா ஏதோ கேட்கிறாள். பதில் சொல்ல வேண்டும்போல இருந்தது. ஆனால் அந்த விஜயவாடா எண்ணங்கள் குறுக்கிட்டன. என்னவோ ஒரு பாதி பேசுவதெல்லாம் கேட்டது. இது எப்படி வந்தது என்றே புரியவில்லை. அம்மா ஆப்பிள் நறுக்கித் துண்டு துண்டாக அவளிடம் கொடுத்தாள்.

"தலைல என்னடி காயம்?"

காயம் ஏன் என்று அம்மாவுக்கு விஸ்தாரமாகப் பதில் சொல்ல வேண்டும்போலத்தான் விருப்பமாக இருந்தாலும் மற்ற ஏதோ குறுக்கிட்டது.

"அந்தப் பையன் சுனில் உனக்காக அமெரிக்காலருந்து பாதி படிப்பை விட்டுட்டு வந்திருக்கான்."

"சுனில்!"

"கல்யாணம் பண்ணிட்டுப் போகணும்னு ஒத்தைக் கால்ல நிக்கறான்... அவனைப் பிடிச்சிருக்கா? உனக்கு சம்மதமா?"

"ம்"

"எங்கடி இடிச்சிண்ட இப்படி போயி?" என்று அம்மா அவள் தலைமயிரை விலக்கி அந்தக் காயத்தின் மேல் போட்டிருந்த ப்ளாஸ்திரியைத் தொட்டுப் பார்த்தாள்.

மாயாவுக்குள் அந்த மின்புயல் வீசியது. அவளுள் பலவித சப்தங்கள் கேட்டன. கடல் அலைபோல, தேர்தல் கூட்டப் பேச்சுப் போல, தேர் உருளுவதுபோல, சென்ட்ரல் ஸ்டேஷன் ப்ளாட்பாரத்தில் தள்ளுவண்டிபோல, கார் பஸ் ஆரன் அலறல்கள் போல, மிக்ஸிபோல, ஆட்டோரிக்ஷா போல, குழந்தையின் பிடிவாத அழுகைபோல, அபசுரக் கிறல்கள், நாராசத் தொகுப்புகள்.

கண்கள் இருண்டு மகத்தான கோபம் அவளுள் உருவாகியது. கையாலாகாத்தனத்தின் மேல், தன் மேல் நிகழ்ந்த படையெடுப்பின் மேல், கோபம் உருண்டு திரண்டு . . .

"ஏ சுனில் இங்க வாப்பா! என்னவோ போல பார்க்கறா!"

அப்பாவும் சுனிலும் அவளருகில் வந்து, "மாயா மாயா என்ன ஆச்சு?" என்று கேட்பதற்குள்,

"ஏன் வரலை?" என்று பக்கத்தில் ஆப்பிள் நறுக்க வைத்திருந்த கத்தியால் சுனிலின் கழுத்தில் தாக்கினாள்.

# 24

சுனில் தாக்குதலை எதிர்பார்க்கவே இல்லை. மாயாவின் முகத்தில் அத்தனை வேதனையா, வெறுப்பான வெறியா ... சரியாகச் சொல்ல முடியவில்லை, ஆனால் கத்தி வீச்சில் வேகம் இருந்தது. தெய்வாதீனமாகச் சட்டென்று பாக்ஸிங் பண்ணுபவன்போலத் தலையைத் தாழ்த்திக்கொண்டதால் அவன் கழுத்தின் மேல் தோலைக் கீய்ச்சியது கத்தி. அடுத்த முறை அவள் வீசத் தொடங்குமுன் பலமாக அவள் கையை அழுத்திப் பிடித்து கத்தியை உதிர்த்தான்.

"விடு என்னை" என்று திமிறினாள்.

"என்னடி இது?" என்று அம்மா அதட்ட, "மாயா! என்ன ஆச்சு உனக்கு? பைத்தியம் பிடிச்சிருச்சா?" என்று அவன் மிரட்டினான்.

அவனை மிரள மிரளப் பரிபூரண அன்னியனைப் போலப் பார்த்துத் தெலுங்கில், "ஈயாண்டி ஈயாண்டி" என்று ஏதோ சொன்னாள்.

"அய்யோ ஏதாவது சூனியம் வெச்சுட்டாளா? என்னப்பா இது? எனக்கு வயத்தைக் கலக்கறதே."

"நீங்க சும்மாருங்கம்மா." மாயா கீழே உதிர்ந்த கத்தியைப் பார்த்துக்கொண்டிருந்தவள் மற்றொரு வலிய முயற்சியில் அதன் மேல் பாய்ந்து மறுபடி எடுத்து அப்பாவின் மேல் வீசினாள்.

ரங்கநாத் பயந்து போய், "என்ன எழவுடி இது?" என்றார்.

"பேய் கீய் பிடிச்சிடுத்தா? என்ன ஆச்சு என் செல்லத்துக்கு?" என்று அம்மா அவளைக் கட்டிக்கொள்ளச் செல்ல, "போ" என்று வலியத் தள்ள, அம்மா கீழே விழுந்தாள்.

"ஷி இஸ் ஹிஸ்டரிக் ஸார். அண்ட் வயலண்ட். உடனே பக்கத்தில டாக்டர் யாரையாவது கூப்பிடுங்கோ. ஸெடேட்டிவ் ஏதாவது கொடுக்கணும்."



மாயா இப்போது தன் மனத்தில் தோன்றிய ரத்தக் கோலங்களை இனம் காண முடியாமல் திணறினாள். உலகமே கலர் மாறுவது போலத் தோன்றியது. மறுபடி அந்தக் குரல்கள் சேர்ந்துகொண்டன. கலக்கம். கலக்கம். இடையே, "பகவானே என்னைக் காப்பாற்று! எனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி நடந்துகொள்கிறேன்" என்ற ஒரு கோரிக்கை வேறு உலவியது.

சுனில் அவள் கைகளைப் பின்பக்கமாக மடக்கிப் பிடித்துக் கொண்டான். "சவுக்கத்தைப் போட்டு மடக்குயா. சரிய்யா பிடிச்சுருக்கு போல."

இதற்குள் மாடி வீட்டு சரிதாவும் வந்து வேடிக்கை பார்த்தாள். பக்கத்து வீட்டுக்காரர்கள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க, மாயா புடவையைத் தலைப்பைக் கடித்துக்கொண்டாள்.

அவளுக்கு வெளியுலகத்தில் நடப்பதற்கும் உள்ளுலகத்தில் நடப்பதற்கும் வேறுபடுத்த முடியவில்லை. 'இவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்? மனத்திலா வெளியிலா?' என்று பிரமிப்பாக இருந்தது. சுனிலை, "ஏன் வரலை? ஏன் வரலை?" என்று திருப்பிக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"எங்க வரலை சொல்லு மாயா?"

"என்னைக் காப்பாத்த வராம தானே அந்தப் பரிசோதனைக்கு உள்ளாக்கி எல்லாரும் வேடிக்கை பார்த்திங்க. எல்லாரும்! இங்க்கா ஒக்க ஐஸ்க்ரீம் ஈ! அப்பா வரலை, அம்மா வரலை, மேனகா வரலை, நீ வரலை, எங்கே போவேன் சுனில்? ரொம்ப பயமாயிருக்கு சுனில், தலை மேல என்னவோ அழுத்தறது!"

டாக்டர் ராஜகோபால் வந்து, "கொஞ்சம் எல்லாரும் ஒதுங்கி நின்னுட்டா நல்லது. மாயா! உனக்கு என்ன ஆச்சு! என்றார்.

மாயா அவரைக் கன்னத்தில் பளீர் என்று சற்றும் எதிர்பாராத விதத்தில் அறைந்தாள்.

"மை காட்!" என்று சரிதா பின்தங்க,

"இதை நான் எதிர்பார்க்கலை. ஏன் சார் புடிச்சுக்கக் கூடாதா? பழுக்க காய்ச்சினாப்பல பேய் அறை அறையறாளே மாயா! உனக்குச் சரியானப்புறம் திருப்பி அறையத்தான் போறேன். புடிச்சுக்கங்கய்யா, பேஷண்ட் இஸ் அன்கண்ட்ரோலபிள்."

மூணு பேர் பிடித்துக்கொள்ள அதையும் மீறும் பலம் அவளிடம் இருந்தது.

"ம்மா! பாரும்மா பாரும்மா பால் சாப்பிடும்மா" என்றாள் அம்மா. பாலைத் துப்பினாள்.

"பாலைக் கொண்டுபோய் மூஞ்சில கொட்டிக்கோ சுனில்" என்றாள். டாக்டர் அவளுள் டயாஸிபாம் இன்ஜெக்ஷன் செலுத்தியபோது விநோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

செடேடிவ்வின் தாக்கம் ஐந்து நிமிஷத்துக்குள் ஏற்பட மாயா தலை சாய்க்க, சுனிலும் அம்மாவும், அப்பாவும் படுக்கை மேல் கிடத்தினார்கள். அம்மா அவள் புடவையைச் சரி செய்தாள்.

டாக்டர், "மண்டைல என்ன காயம்?" என்றார்.

"அது வந்து எங்கேயோ இடிச்சுண்டதா நரேந்திரநாத் சொன்னார்."

"அவரே டாக்டர். அதனால் இருக்குமோ?"

"முடியாதும்மா. டாக்டர் நரேந்திரநாத் அவரே பெரிய நியூரோ ஸர்ஜனாச்சே?"

"இப்ப என்ன ஆகுங்கறீங்க?"

"கொஞ்ச நேரம் தூங்கட்டும். இந்த மண்டை ப்ளாஸ்திரி காயம் எப்படி வந்ததுன்னு சரியான விவரம் தெரிஞ்சுக்கங்க."

டாக்டர் அவள் தலைமயிரை விலக்கி அந்த ப்ளாஸ்திரியை லேசாக உரித்துப் பார்த்தார்.

"பாத்தா ஏதோ இன்ஸிஷன் மாதிரி ஸுசர் மாதிரி இருக்கு. ஏதாவது ஆப்பரேஷன் பண்ணிண்டாளா சமீபத்துல?"

"இல்லவே இல்லை டாக்டர்."

"ஒரு அங்குலத்துக்குச் சச்சதுரமா வெட்டித் தெச்சிருக்கு."

அந்த இடத்தை விரலால் நிரடிப் பார்த்தார்.

மாயாவுக்குள் மறுபடி அந்தப் புயல் வீசியது. அவள் மயக்கத்தையும் புறக்கணித்து ஒரு வெறி அலை புறப்பட்டு, டாக்டர் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவர் கழுத்தைப் பிடித்தாள். டாக்டர் மூச்சுத் திணறும் அளவுக்குக் குரல்வளையை அழுத்திவிட்டாள். அவளை சுனில், ரங்கநாத் இருவரும் சேர்ந்து விலக்க வேண்டியிருந்தது.

அலை ஓய்ந்து மறுபடி மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

அப்பாவி டாக்டர் வியர்வையைத் துடைத்துக்கொண்டு இருமிக் கொண்டு, "ஸேஃபா அரைமணிக்கு ஒருமுறை சேடேட்டிவ் கொடுத்துக்கிட்டே இருக்கணும். என்ன பிடி, குரங்கு மாதிரி! பேசாம நர்ஸிங் ஹோம்ல அட்மிட் பண்றது நல்லது."

அம்மா, "அய்யோ ஆண்டவா" என்று அழ ஆரம்பித்தாள்.

"பத்து நாள் காணாமே இப்பதான் வந்தான்னு சந்தோஷப் பட்டுண்டிருந்தேன். பகவான் சோதிக்கறார். பாத்தியா சரிதா!"

"எங்காத்தில கொண்டுவந்து விட்டுடுங்க மாமி. நாங்க பார்த்துக்கறோம்.

"கவலைப்படாதீங்கம்மா" என்றான் சுனில், இருந்தும் அவனுக்கும் கவலையாகத்தான் இருந்தது. "என்ன ஆச்சு இவளுக்கு?"

"ரொம்ப ஜாக்கிரதையா பார்த்துக்கங்க. ரூமைப் பூட்டி வெச்சுக்கறது நல்லது. ஆள் பார்த்தா ஃப்ரெய்ல், இருந்தாலும் அசாத்திய பலம் எங்கிருந்து வருதுன்னு தெரியலை."



"முத காரியமாக உங்க ஸி.எம்.ஆர்.ஐலயே அட்மிட் பண்ணி ஒரு ஸ்கான் எடுங்க. எனக்கு ஏதோ ட்யூமர் ஏதாவது... அடிபட்டதில உள்ளுக்குள்ள ப்ளட் க்ளாட் ஆகியிருக்கலாம். காலையிலே வரேன். அதுவரை ஜாக்கிரதையா இருங்க" என்று புறப்பட்டுச் சென்றார்.

சுனில் அவள் அயர்ந்து தூங்குவதைப் பார்த்துவிட்டு, ஒருமுறை வீட்டுக்குப் போய் ராத்திரி படுத்துக்கொள்ள வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றான், அம்மா அவள் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு விசிறினாள்.

"என்னவோ வேளை எதுவுமே சரியில்லை. என்ன பாவத்தைப் பண்ணமோ, பொண்ணுகளால எந்தவித நிம்மதியும் இல்லை,"

சுனில் இருட்டில் வீடு திரும்பும்போது மிகுந்த குழப்பத்தில் இருந்தான். கழுத்தில் அவள் கத்தி வீச்சு தப்பித்த இடத்தில் வலித்தது. தொட்டுப் பார்த்ததில் ரத்தம் தெரிந்தது. கொஞ்சம் பட்டிருக்கிறது. கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்திருந்தால் இந்நேரம் கழுத்தில் வெட்டுப்பட்டிருப்பான்.

மாயாவா? இந்தக் காரியம் செய்யக்கூடியவளா? வண்ணத்துப் பூச்சியைப் பத்திரமாக இரு கைகளாலும் சேகரித்து அதன் வண்ணப் பறப்பை ரசிக்கும் மென்மையான அந்தப் பெண்ணிடம் அத்தனை மூர்க்கமா? எப்படி வந்தது? ஏதோ அந்த டாக்டர் செய்த காரியத்தின் விளைவாகத்தான் இருக்க வேண்டும்.

முதன்முதல் அவள் உடல்நிலை சரியானதும் அந்த இன்ஸ்டிட்யூட் மேல் கேஸ் போட வேண்டும். நல்ல வக்கிலாகப் பார்த்து, சம்மத மில்லாமல் பல பெண்களைப் பரிசோதனைப் பொருட்களாக உபயோகித்து, அவர்கள் உயிருக்கு ஆபத்து வரும்படியாகச் செய்ததற்கு சாரங்கபாணியை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும்.

நரேந்திரநாத் எப்படி? கொஞ்சம் முரட்டுத்தனமாக சாயங் காலம் அவர் பேசினாலும் உண்மையில் அவர் நல்லவர்தான். அவரிடம்தான் போய் முறையிட வேண்டும். சாரங்கபாணி செய்தது அக்ரமம்.

வீட்டுக்குப் போனபோது அம்மா கோபித்துக்கொண்டாள். "இன்னைக்குப் பார்த்து வந்த அன்னிக்கே அவ வீட்டுக்குப் போய் அட்டண்டன்ஸ் காட்டிட்டுதான் வரணுமா! எத்தனை நாழி வீட்டுக்கு வர?"

"அம்மா, அந்தப் பொண்ணு ஆபத்தில இருக்கா."

"எல்லாம் காலையில பேசலாம். முதல்ல சாப்பிட வா. எப்பப் பார்த்தாலும் மாயா, மாயா! பைத்தியம் பிடிச்சு அலை. நீ செய்த காரியத்தைக் கேட்டா சிரிப்பா. பாதிப்படிப்பை விட்டு இவளைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்காகக் கடல் கடந்து இத்தனை செலவழிச்சுண்டு வந்தே ஆகணுமா? ஓர் எட்டு மாசம் தாங்காதா உன் காதல்?

எத்தனை பேர் பொண் கொடுக்கத் தயாரா இருக்கா? இவதான் அகப்பட்டாளா உனக்கு?"

மௌனமாகச் சாப்பிட்டான். சட்டை மாற்றிக்கொண்டான்.

"கழுத்தில என்ன காயம்?"

"கிறிண்டுட்டேன்."

"எங்க?"

"வேலில."

"வேலியா?"

"எல்லாம் காலைல சொல்றேன்."

"இப்ப எங்க புறப்படற?"

"அவளைப் பார்க்கத்தான்" என்று புறப்பட்டான்.

அம்மா அவனை வெறித்துப் பார்த்தாள். ஒரு கணம் 'அம்மாவே யாரையாவது வைத்து ஏதாவது செய்திருப்பாளோ' என்று எண்ணம் பளிச்சிட்டது.

"சே" என்று அந்த எண்ணத்தை உடனே துரத்தினான்.

ராத்திரி பத்து மணி. பெட்ரோல் இல்லாததால் தெருவில் வாகனங்களே நடமாடவில்லை. குளிர் சற்றே இருந்தது. சோன்பப்டியை பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் வண்டி தள்ளிக்கொண்டு சென்றார்கள். 'மாயாவுக்கு சோன்பப்டி பிடிக்கும். இது நேரம் எழுந்திருப்பாள். வாங்கிப் போகலாமா?"

மாயாவின் வீட்டை அணுகியபோது ஜன்னல் திறந்திருந்தது. வெளிச்சமாக இருந்தது. அங்கேதான் படுத்திருக்கிறாள் என் மாயா.

"என்னப்பா மறுபடி வந்துட்டியா?"

"இப்ப எப்டி இருக்காம்மா?"

"எல்லாம் தூங்கிண்டு இருக்கா, மருந்து கொடுத்ததில."

"அப்பா?"

"அவர்தான் ரொம்ப கலங்கிப் போயிருக்கார். அவரும் மாத்திரை போட்டுண்டு தூங்கப் போய்விட்டார். நான்தான் கொட்டு கொட்டுன்னு விழிச்சிட்டுருக்கேன். சுனில்! அவளுக்கு சரியா போய்டும்தானே."

"சரியாப் போச்சு! கவலைப்படாதீங்க."

"என்னப்பா இவளுக்கு? பாழாப் போற தரித்திரம்பிடிச்ச லாபுக்குப் போனதிலிருந்தே சரியில்லை. என்ன என்னவோ கன்னா பின்னான்னு..." அப்போது அவள் அறையில் விழும் சப்தம் கேட்டது. "என்னப்பா சப்தம்?"

"போய்ப் பார்க்கலாம்." இருவரும் அவள் அறையைத் திறந்தபோது ஜன்னல் வழியாகப் பூனை கண்ணாடித் தம்ளரை உருட்டியிருந்தது. கதவு திறந்திருந்தது.

படுக்கையில் மாயா இல்லை.



# 25

"எங்க போனா ... பாத்ரூம் கீத்ரூம் போயிருக்காளா?" என்று அம்மா கேட்ட குரலில் பதற்றமும் நடுக்கமும் இருந்தது.

சுனில், "என்னம்மா, கூடவே இருந்திருக்க வேண்டாமோ? அவ ஒரு மாதிரி விநோதமா நடந்துகிட்டா இல்லை? இப்ப எங்க போயிருப்பா?" என்றான்.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். இருட்டு மண்டியிருந்தது. தூரத்தில் மங்கலான தெருவிளக்கு அவர்கள் கையாலாகாத் தனத்தின் பிரதிநிதிபோல, நின்றுகொண்டிருந்தது. நடமாட்டமே இல்லை.

"முதல்ல வீட்டுக்குள்ள இருக்காளா பாருங்க. மாயா, மாயா!"

வீடு முழுவதும் தேடிவிட்டார்கள். அதன்பின் மாடியில் போய் அவர்களை எழுப்பித் தேடினார்கள். மொட்டை மாடி. அதன்பின் அக்கம்பக்கத்தில் எழுப்பி விசாரித்தார்கள். தெரு முனையிலிருந்த பேக்கரி கடைக்காரரிடம், வெற்றிலை பாக்குக் கடைக்காரரிடம்...

இப்படி அவர்கள் எல்லையை விஸ்தரித்துக்கொண்டே போனதில் உதயமானது மாயாவை முழுசாகக் காணவில்லை என்பதே.

"எங்க போயிருப்பா? வேற யாராவது ஃப்ரெண்ட்ஸ், உறவுக்காரங்க இப்படி ..."

"யாராயிருந்தாலும் இந்த வேளையில் அவ வீட்டை விட்டு வெளியே போனதே இல்லை! அப்பா சுனில்! எனக்கு வயிற்றைக் கலக்கறதே, பக்கத்தில் புள்ளையார் கோவில்பக்கம் பெரிய கிணறு இருக்கே, அங்க எங்கயாவது போய் விழுந்துட்டாளோ, வேணா ஒரு முறை பார்த்துரலாமே. வரப்போவே கவனிச்சேன். உடம்பு சரியாவே இல்லை. ஒரு மாதிரி மலங்கப் பார்த்துண்டு, கண்ட கண்ட பேரை அடிச்சுண்டு ..."

"உளறாதே" என்று அப்பா அதட்டினாலும், அவரும் பயந்திருந்தார்

என்பதைக் குரல் நடுக்கம் காண்பித்தது. சுனில் கூடத் தைரியம் இழந்திருந்தான். அவனுக்கு முதலில் தோன்றியது, இன்ஸ்ட்யூட்டில் போய்ப் பார்க்க வேண்டும் என்பதே.

சாரங்கபாணி வேண்டாம். நரேந்திரநாத்திடம் கேட்கலாம். இல்லை, அவருக்கு போன் செய்து கேட்கலாம். நேரிலேயே போகலாம் என்று குழம்பினான்.

"அம்மா! தைரியமாக இருங்க. மாயாவைக் கண்டுபிடிக்காம திரும்ப வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் பக்கத்து வீட்டுப் பையனின் மோட்டார் சைக்கிளை இரவல் வாங்கிக்கொண்டு புறப்பட்டான்.

வி.எம்.ஆர்.ஐ கதவுகள் பூட்டியிருந்தன. காவல்காரன் டைம் க்ளாக் அருகே உறங்கிக்கொண்டிருக்க... சுனிலுக்கு அந்தக் கேட்டை எவ்வித் தாண்டுவது கஷ்டமாக இல்லை. மௌன காரிடாரின் பிரகாசம் அவன் அற்ப நிலையை அடிக்கோடிட்டது.

அறை அறையாக அந்த விநோத இடத்து மர்மங்கள் மறைந்திருந்தன. டாக்டர் நரேந்திரநாத், சாரங்கபாணி யாரும் இல்லை. அவர்கள் அறையெல்லாம் பூட்டியிருக்க, மெல்ல, நடந்தான். கண்ணாடிக் கதவுகளும் பல பூட்டியிருந்தன.

'வடக்கு வாசல் வழியாகப் போகவும்' என்று அறிவிப்பு எழுதியிருந்தது. அங்கேயிருந்த காவலாளி விழித்திருந்து பாஸ் கேட்டான். தன் காலாவதியான பாஸைக் காட்ட இஷ்டமின்றி "கொண்டு வரலைப்பா" என்றான் சுனில்.

"இந்த வழியா யாரையும் அனுமதிக்க முடியாதுங்க. ரிஜிஸ்தரார் பர்மிஷன் வேணுமில்லை."

கேட்டைப் பாதி திறந்து வைத்திருந்தான். சுனில் நுழையப் போதுமான இடைவெளியிருந்தது. அவனைத் தள்ளி விலக்கிவிட்டு இருட்டுப் பொந்தில் ஓடினான். காவலாளி விசில் அடித்தான். பல விளக்குகள் போடப்பட்டன. சுனில் சுவரோடு சுவராக நடந்தான்.

கம்பி போட்டுத் தடுத்த நடை வந்தது. அப்பால் மிக நீளமான உள் நடை. அதன் கடைசியில் திருப்பத்தில் எதிரொலி கேட்டது. சுனில் ஒரு கதவைத் திறந்து மூடிக்கொண்டான். சுவரின் விளிம்பில் வெளிச்சம் தெரிந்தது.

யாரோ லைட் சுவிட்சைத் தட்ட சுனில் பிரமித்தான். பிறை பிறையாக இருந்தது. சக்கரம் படைத்த படுக்கை வண்டி ஒன்று கொண்டுவரப்பட்டு, "எத்தனாம் நம்பர்?"

"பதினெட்டு."

அந்தப் பிறை திறந்தது.

"கனெக்ஷன் கொடுப்பா மெதுவா."

அதை அந்தப் பிறையிலிருந்து இழுத்துப்போட்டார்கள்.



தரையிலிருந்து பெட்டி போலிருந்ததை எடுத்து, வட்ட வடிவ வளையத்தை எடுத்து, 'மைகாட்... அது மேனகா போலல்லவா இருக்கிறது. இல்லை, இல்லை, மேனகா இல்லை.'

சுனில் மேனகாவைப் பலமுறை சந்தித்திருக்கிறான். பலமுறை மோட்டார் சைக்கிளின் பின் சீட்டில் ஏற்றிக்கொண்டு சுற்றியிருக்கிறான். அப்பொதெல்லாம் பார்த்ததைவிட இந்த வடிவம் பலவிதங்களில் வேறுபட்டாலும் முகத்தை மறுக்க முடியவில்லை.

அதே முகம், அதே சின்ன, சொப்பு போன்ற அதரங்கள். திறந்த வாய். மேனகாவா? இல்லை. மேனகாவின் பொம்மை வார்த்த வடிவமா? இல்லை, இறந்துவிட்டாளா? இந்த இடத்தை நான் பார்த்ததே கிடையாதே. இப்படி ஒரு... இது என்ன பிணவறையா? என்ன செய்கிறார்கள் இங்கே?

சுனில் தீர்மானித்து அந்த இடத்தைவிட்டு நைசாக நழுவினான். தனியாகச் சமாளிப்பது முட்டாள்தனம். போலீசில் போய்ச் சொல்ல வேண்டும். உடனே புகார் கொடுத்து அவர்களைக் கையோடு அழைத்து வர வேண்டும்.

சுனில் அந்த ஸ்தலத்தின் அடையாளங்களைக் கவனித்துக் கொண்டான். வடக்கு வாசல் வழி நுழைந்து சுவரோடு நடந்து, கம்பி போட்ட காரிடார் கடந்து, மூன்றாவது வாசலில் நுழைய வேண்டும். கதவைத் திறக்க வேண்டும். அங்கிருந்து காரிடாரின் இறுதியில் நுழைவதற்கு முதல் கதவில் திரும்பினான்.

சுனில் வீடு திரும்பியபோது மாயா வந்திருப்பாள் என்று எதிர்பார்த்தான். ஒருவேளை சாரங்கபாணியின் ஆட்கள் வந்து கடத்திக்கொண்டு போய்விட்டார்களா?

"என்னப்பா கிடைச்சாளா?"

"இல்லைம்மா, இன்னும் வரல்லையா?"

"இல்லை" என்று பரிதாபமாக முகத்தைத் தலைப்பில் மூடிக் கொண்டு தலையை இடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"சமாதானமாக இருங்கம்மா. காலைல போலீஸ்கிட்ட புகார் கொடுக்கலாம்."

"போலீசா?"

"அந்த லாபரட்டரிக்காரங்கதான் ஏதோ திருட்டுத்தனம் பண்ணியிருக்காங்க, அங்க நடக்கறதே ஏதும் சரியில்லை."

"மாயா வரமாட்டாளா" என்று ரங்கநாத் மார்பைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவருக்கு லேசாக அன்ஜைனா வலி வந்து விட்டது. அவரை அம்மா ஆசுவாசப்படுத்திக்கொண்டிருந்தான்.

மாடிக்குப் போய் போன் பண்ணலாம் என்றால் ஸ்ட்ரைக் காரணமாக எந்த நம்பரும் கிடைக்கவில்லை.

சுனில் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு வாசலில் வந்து உட்கார்ந்தான்.

கொஞ்ச நேரத்தில் தீர்மானித்தான். "இங்க போலீஸ் ஸ்டேஷன் எங்கங்க இருக்குது?"

காவல் நிலையத்தில், "காலைலதான் ஏதும் முடியும்" என்று சொல்லிவிட்டார்கள். "எஸ்.ஐ. வரட்டுங்க. கூட வரச் சொல்றேன்"

"இல்லைங்க, ஒரு பெண்ணைக் காணங்க."

"இந்த ஒரு ரிப்போர்ட் எழுதிக் கொடுத்துருங்க. பேரு, அடையாளம், போட்டோ எல்லாம் வெச்சு ... எத்தனை நாளா காணோம்?

"கான்ஸ்டபின் சார், அந்தப் பொண்ணை ஒரு இடத்தில பலாத்காரமா அடைச்சு வெச்சிருக்காங்கன்னு எங்களுக்குச் சந்தேகம். உங்க உதவியோட அங்க போய்த் தேடணும்."

"செய்யலாங்க. இந்த மாதிரி எத்தனை கேஸ் பாத்திருக்கோம்! ஆனா எல்லாம் காலைலதான். இப்ப முடியாது. ஓர் இடத்துக்குள்ள போக வாரண்டு போக்குவரத்தெல்லாம் வேணுமில்லை? பதற்றப் படாதீங்க. எங்கயாவது சினிமா கினிமா போய்ட்டு, ஃப்ரெண்ட்ஸ் வீட்டில படுத்துகிட்டு இருந்துட்டுத் திரும்ப ..."

சுனிலுக்கு ஆத்திரமாக வந்தது. "எஸ்.ஐ. எப்ப வருவாரு?"

"காலைல எட்டரை மணிக்கெல்லாம் வந்துருவாரு. அப்ப வரிங்களா?"

"இல்லைங்க. காத்திருக்கேன்."

"அப்ப அந்த ஓரத்திலே போய்ப் படுத்துக்கங்க. வெளிய பெஞ்ச் போட்டிருக்குது."

சுனில் காத்திருந்தபோது காலை ஆறு மணிக்கு வக்கீல் நாகரத்தினம் அவனைத் தேடிக்கொண்டு வந்தார். "என்ன ... அவங்க ரெண்டுபேரும் ரொம்ப மோசமா இருக்காங்க. அவருக்கு நெஞ்சுவலி! மாயா எங்க போனாள்னு தெரியலை. அவ அப்பா கூட அந்த இடத்துக்குப் போய் விசாரிச்சபோது காட்டினாங்க. அவங்க என்னவோ எக்ஸ்பெரிமெண்ட் பண்ணியிருக்காங்க. அதன் விளைவுதான் இருக்கும்னு தோணுது! நீ எதுக்கு இங்க காத்திருக்க?" என்றார்.

"போலீஸ் ஆபீசரைக் கூட்டிட்டுப் போய்த் தேடலாம்னுட்டு."

"அந்த இடம் ரொம்ப சிக்கலா இருக்குதப்பா. எந்த காரிடார் எங்க கொண்டு விடும்னு தெரியலை."

"எனக்குத் தெரியும் சார்! நான் அங்க வேலை பார்த்தவன்தானே."

போலீஸ் அதிகாரியிடம் புகார் எழுதிக் கொடுத்ததில், அவர் துடிப்புள்ள இளைஞர், "அந்த இடத்தைப் பத்தி எங்களுக்கும் அரசல் புரசலா காதில் விழுந்ததுங்க. போயிரலாம். பார்த்துரலாம்.



கவலைப்படாதீங்க. அவங்க அங்க இருந்தா மீட்டுக் கொடுத்துர்றேன்" என்றார்.

"நேத்து சாயங்காலம்தான் அவளை அழைச்சுட்டுப் போக வந்தேங்க. ராத்திரி காணாமப் போய்ட்டா. தலையில சின்னதா ஒரு ப்ளாஸ்திரி."

"ஜீப்புல ஏறுங்க".

ஜீப்பில் உட்கார்ந்ததும்,

"யாரைப் பார்க்கணும்னீங்க?"

"டாக்டர் சாரங்கபாணின்னு ஒருத்தரை. அங்க டைக்டரா இருக்காரு."

சாரங்கபாணி ரொம்ப சுமுகமாக போலீஸ் அதிகாரியை வரவேற்றார். "வாங்க இன்ஸ்பெக்டர் என்ன விஷயம்?"

"மாயாங்கற பொண்ணு இங்க வேலை செய்யறா இல்லை?"

"நேத்திக்குத்தான். இவர்தான் அழைச்சுகிட்டுப் போனாருங்க"

"அவளை ராத்திரியிலிருந்து காணமாம்."

"அப்படியா? இங்க வரலையே."

"தேட விரும்பறோம்."

"தாராளமா. இந்த இடம் ரொம்பப் பெரிய இடம். எங்க தேடணும்னு சொன்னா ..." என்றார் புன்னகைத்து.

"எனக்குத் தெரியும். என் கூட வாங்க காட்டறேன்."

நார்த் கேட் பக்கம் வந்து, அந்தக் கம்பி போட்ட காரிடாரில் நடந்து, மூன்றாவது கதவைத் திறந்து நீண்ட வழியில் மீண்டும் நடந்து, அதன் முடிவில் உள்ள முதல் கதவைத் திறந்தபோது அறை காலியாக இருந்தது.

"இங்கதாங்க கண்ணாடித் தடுப்பெல்லாம் போட்டு பெரிசா ஒரு 'மார்க்' மாதிரி இருந்தது. அறை அறையா ..."

"என்ன உளர்றிங்க? இது எங்க கான்ஃபரன்ஸ் ரூம். இன்னும் ஃபர்னிஷ் பண்ணலை."

சுனில் மௌனமாகச் சுற்றிலும் பார்த்தான்.

சாரங்கபாணி, "வேற எங்கயாவது தேடணுமா" என்றார் மிதப்பாக.

இன்ஸ்பெக்டர் சுனிலைப் பார்த்து, "எதுக்கும் இவர் கம்ப்ளெய்ண்ட் கொடுத்திருக்கறதால எல்லா அறையையும் ஒருமுறை காட்டிருங்க. இந்த ஆஸ்பத்திரி ப்ளான் இருக்குதுங்களா?

"ஆஸ்பத்திரி இல்லைங்க, இது ஆராய்ச்சிக் கேந்திரம்."

"ஏதோ ஒண்ணு. ப்ளான் வேணும்."

"தரச் சொல்றேன்."

எல்லா அறைகளையும் தேடிப் பார்த்தும் அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சுனில் களைத்து நாகரத்தினத்திடம், "வக்கீல் சார், இவங்க எமகாதகப் பசங்க. எப்படியோ எதையோ மாத்திட்டாங்க."

"இதைப் போலீசால கண்டுபிடிக்க முடியாதுப்பா. எனக்கு என்னவோ ஒரு வழிதான் தோணுது. மத்தியானம் கோர்ட்டுக்கு வா. கணேஷ்–வசந்த்னு எனக்குத் தெரிஞ்சவங்க இருக்காங்க. அவங்களை அணுகலாம்."



# 26

சுனில் தம்புச் செட்டித் தெருவில் விசாரித்ததில் "அதோ மாருதி நிக்குது பாருங்க, அந்த இடம்தான்" என்று அடையாளம் கிடைத்தது. தெருவுடன் ஒட்டிக்கொண்டு உறவாடுவதுபோல் இருந்தது அந்தப் பிரபல விலாச வீடு. ஆரவாரமில்லாமல் 'ஆர். கணேஷ் – ஜே. வசந்த்' என்று போர்டு போட்டிருக்க, மணிப் பொத்தானை அழுத்தத் தேவையின்றி கதவு திறந்துதான் இருந்தது.

இருந்தும் கதவைப் பின் விரலால் தட்டினான். வசந்த் நிமிர்ந்து பார்த்து, "மிஸ்டர் மூர்த்தி! உங்களைப் பத்து மணிக்கு வரச் சொன்னோம். இப்ப பத்து மணி இல்லை" என்றான்.

"நான் மூர்த்தி இல்லை."

"பின்ன நீங்க யாரு?"

"சுனில்."

"பாஸ், சுனில்னு யாரையாவது வரச் சொல்லியிருக்கீங்களா?"

"இல்லை."

"என்னது எல்லாத்துக்கும் நீங்களே பதில் சொல்லிண்டு... பிலிம் ஸ்டாரோட ரெண்டாவது அஸ்பண்டு மாதிரி."

"என் பேர் சுனில். ஸி.எம்.ஆர்.ஐன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"கேள்விப்பட்டிருக்கேன். லுக் மிஸ்டர் சுனில், வி ஆர் இன் ஹர்ரி. எங்காளு ஒருத்தரைத் தூக்கில போடப் போறாங்க..."

"எனக்கு என் கேஸை சொல்ல சரியா மூணு நிமிஷம் ஆகும். மூணு நிமிஷம் இருக்குமா உங்களுக்கு?"

கணேஷ் இதற்குள் குளித்துவிட்டுப் புதிய சட்டையின் பட்டன்களைப் பூர்த்தி செய்துகொண்டு வந்தான். "கஃப்லிங்க எங்க வெச்சே வசந்த்!"

"பாத்தீங்களா என் பிழைப்பை?" என்று தங்கபித்தான்களை எடுத்துக் கொடுத்துவிட்டு, "பாஸ் இவர் புதுசா கேஸ் சொல்றார். பேரு சுனிலாம்."

"ஓ எஸ். வக்கீல் மாமா நேத்து சொன்னார்."

"அதை இன்னிக்கி எங்கிட்ட சொல்லுங்க. ஸாரை விரட்டறதா இருந்தேன், பொய் சொல்லி! உக்காருங்க. சிகரெட் பிடிப்பீங்க போல, பைல வில்ஸ் இருக்கு. கைல கறை இருக்கு."

சுனில் உட்கார்ந்தான். "உங்களுக்கு ஸி.எம்.ஆர்.ஐங்கற இடத்தைப் பத்திச் சொல்லணும்."

"தெரியும். டாக்டர் சாரங்கபாணி, நரேந்திரநாத்னு ரெண்டு பேரு. பிரசித்தி பெற்றவங்க. மூளை, நினைவு, செயற்கை அறிவு இதையெல்லாம் பற்றி ஆராய்ச்சி செய்றாங்க. உலகப் புகழ்..."

"வசந்த்! உனக்கு எப்படிரா தெரியும்?"

"இதெல்லாம் அங்கங்கே சைடில தெரிஞ்சு வச்சுக்கறது எங்க பரம்பரை வழக்கம்."

"அங்கே மாயாங்கற ஒரு பொண்ணு வேலை பார்த்துக்கிட்டு இருந்ததுங்க ..."

"இன்டரஸ்டிங் ..."

"நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு."

"நாட் இன்டரஸ்டிங்!"

கணேஷ், "வக்கில் சொன்னார் அந்தப் பெண்ணைக் காணம்னு."

"ஆமா ஸார். திடீர்னு காணம்! அவங்க ஏதோ ஆராய்ச்சி செய்து ஏதோ விபரீதம் நடந்திருக்கு."

"என்ன ஆராய்ச்சி?"

"டவுன்லோடிங்னு என்னமோ செய்துக்கிட்டு இருந்தாங்க. நான் கூட அங்கதான் வேலை செஞ்சேன் முதல்ல. இந்த மாயாவோட அக்கா மேனகாகூட சினேகிதமா இருந்தேன். அவ அமெரிக்க போய்விட, அவ தங்கையை அவ இடத்திலே நியமிச்சாங்க. எனக்கு அமெரிக்காவில இடம் கிடைச்சு ..."

"மிஸ்டர் சுனில்! உங்க பேச்சு ராம்ஜன்ம பூமி மாதிரி குழப்புது. கொஞ்சம் விவரமா பதற்றப்படாம சொன்னீங்கன்னா என்னை மாதிரி அற்பங்களுக்குப் புரியும்."

கணேஷ் கோப்பையில் சுனிலுக்கும் வசந்துக்கும் டீ கொடுத்து விட்டுத் தன் பீங்கானை ஸிப்பினான். "மிஸ்டர் சுனில்! ரங்க நாதங்கறவர் யார்?"

"மாயா, மேனகாவோட அப்பா."

"அவர் வரலியா?"

"அவர் ஹார்ட் கண்டிஷன் ... ஏறக்குறைய அட்டாக் வந்துருச்சு."



"தட் ஸீரியஸ்."

"ஏதோ அவ மேல ஸர்ஜரி பண்ணிருக்காங்க ஸார்"

"இந்த 'ஸார்' பிஸினஸ் எல்லாம் வேண்டாம். வசந்த்னு கூப்பிடுங்க."

சுனில் அனைத்தையும் பதினைந்து நிமிஷங்களில் சொன்னான். மாயாவை முதன் முதல் அழைத்து வந்தது ... தனக்கு உடனே கல்கத்தாவுக்கு மாற்றலானது ... ராஜினாமா செய்தது ... அமெரிக்கா வில் மேனகாவைச் சந்திக்க, பேச முயன்றது ... அட்ரஸ் தடுமாற்றம் ... திரும்ப வந்தது ... ஆஸ்பத்திரிக்குப் போனது ... மாயாவை அழைத்து வந்தது ... மூர்க்கத்தனமாகத் தன்னைத் தாக்கியது ... இரவு காணாமற் போனது ... போலீஸுடன் சென்று தேடியது ...

"வெரி வெரி இன்டரஸ்ட்ரிங். பாஸ், நீங்க என்ன நினைக்கிறீங்க? இந்தக் கேஸை எடுத்தே ஆகணும். அதும் அந்த ஆராய்ச்சி நிலையம் பூரா பெண்களாம்!"

"அந்த டாக்டர் சாரங்கபாணியைப் பார்க்கணும்போல இருக்கு."

"பார்த்தா அங்க எதுவுமே நடக்கலைன்னு கன்வின்ஸ் ஆய்டுவீங்க."

"வசந்த், நான் இவரோட போறேன். நீ இப்ப வராதே!"

"ஆஸ்பத்திரி பூராவே திறந்த புத்தகம். யார் வேணா எப்ப வேணா, எதை வேணா பார்க்கலாம்" என்றார் சாரங்கபாணி.

கணேஷ் அந்த அறையைச் சுற்றிலும் பார்த்தான். சாரங்கபாணியின் அலுவலக வெளி அறை அது. சுவரில் பல படங்கள். ஓரத்தில் ஒரு டெலக்ஸ் மெஷின், ஃபாக்ஸ் மெஷின், ஃபோட்டோ காப்பி மெஷின், பிசி என்று நவீன அலுவலகத்தின் சர்வ சாமக்கிரியைகளும் இருந்தன. "என்ன பாக்கறீங்க?" இதைத் தவிர, 'ஈ மெயில்கூட இருக்கு. இதெல்லாம் இல்லைன்னா இந்த நாள்களில் ரிஸர்ச் பண்ண முடியாது."

"வெரி இம்ப்ரெஸிவ், டாக்டர்! அந்தப் பெண் மாயா நீங்க செய்த பரிசோதனையின் விளைவினால் சுய கட்டுப்பாடு இழந்து காணாமப் போயிருக்கலாம்னு இவர் சந்தேகப்படுகிறார்."

"என்ன பரிசோதனை?" என்றார் அவர். நெற்றிப் புருவங்கள் சேர்ந்துகொள்ள முயற்சி செய்தன.

"டவுன்லோடிங்!"

அந்த வார்த்தையைக் கேட்டதும் அவர் அதிர்ச்சியுற்று சமாளித்ததை கணேஷ் கவனித்தான்.

"வாட்! யார் சொன்னது? உனக்கு என்னய்யா தெரியும், டவுன்லோடிங் பற்றி ... என்ன உளறுகிறாய்?"

"கொஞ்சம் தெரியும் டாக்டர்" என்றான் கணேஷ்.

"என்ன?"

"கார்னிகி மெலன் பல்கலைக் கழகத்தில் ஹான்ஸ் மோராவெக்னு ஓர் ஆராய்ச்சியாளர் அட்டானமஸ் மொபைல் ரோபாட் லாபரட்டரி யில ஒரு பரிசோதனை செய்யறாங்க. அப்புறம் ஸ்டான்ஃபோர்டு எஸ்.ஆர்.ஐல. அப்புறம் இங்க. உலகத்திலேயே மூன்று இடங்களில் மட்டும்தான் இந்தப் பரிசோதனை நடக்குது."

சாரங்கபாணி சற்றே ஆச்சரியத்துடன், "ஒரு வக்கீலுக்கு நிறையத்தான் படிச்சிருக்கே!"

"நிறையப் படிச்சாகணும் டாக்டர்."

"எங்க படிச்ச இதை?"

"டுமாரோ மேக்கர்ஸ்னு ஒரு புத்தகத்தில!"

"அதுவா! கொஞ்சம் ரீல் விட்டிருக்கான்."

"டாக்டர்! மாயா!"

"மாயா? அதான் சொன்னனே ... அந்தப் பெண் எங்களை விட்டு ரிஸைன் பண்ணிட்டுப் போயாச்சு! ஸாரி, அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். இந்தாளு போலீஸைக் கூட்டி வந்து துப்புரவாத் தேடியாச்சு!"

"டாக்டர்! நீங்க எதையும் மறைக்கலைதானே? அப்படி மறைச்சு ஒரு பெண்ணின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கலைதானே?"

"அப்படி எதுவும் இல்லை. நாங்கள்ளாம் விஞ்ஞானிகள். எதையும் மறைக்க மாட்டோம். அரசியல்வாதிகளும், வக்கீல்களும்தான்..."

அப்போது அறையிலிருந்து ஒரு பெண் வந்து, "டாக்டர், கலிஃபோர்னியா கால்" என்றாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ" என்று டாக்டர் சாரங்கபாணி உள்ளே செல்ல, அந்தப் பெண்ணும் உள்ளே சென்றாள்.

கணேஷ் சுனிலைப் பார்த்தான். "எல்லாம் பொய். இங்க எங்கயோ மறைச்சு வெச்சிருக்காங்க! அந்த இடத்தை நான் பார்த்தேன் கணேஷ். ஆனா எங்கேன்னு சொல்லத் தெரியலை. எல்லா அறை வாசலும் ஒரே மாதிரி இருக்கு கவனிச்சிங்களா?"

"எல்லாப் பெண்களும் பொம்மை போல இயங்கறாங்க. அதையும் கவனிச்சேன்."

அப்போது டெலக்ஸ் இயந்திரம் இயங்க ஆரம்பித்தது. கணேஷ் அது தந்த செய்தியைக் கவனித்தான்.

யோசித்தான். சரக்கென்று டெலக்ஸ் இயந்திரத்தின் அந்தக் காகிதத்தைக் கிழித்துப் பைக்குள் போட்டுக்கொண்டான். "வாங்க போகலாம்."

கணேஷ் அலுவலகத்துக்குத் திரும்பும்போது, "வழியில மாயாவுடைய அப்பா, அம்மாவையும் பார்த்துர்றேன். அப்புறம்



அவகாசம் கிடைக்காது."

"நீங்க என்ன நினைக்கிறீங்க கணேஷ்?"

"அந்த அலுவலகத்துக்குள்ள, அந்த ஆராய்ச்சிக் கேந்திரத்துக்குள்ள தான் பதில் உண்டு. போலீஸ்ல மாயாவைக் காணம்னு ஒரு ரிப்போர்ட் எழுதிக் கொடுத்தீங்களா!"

"ஆச்சு."

"அந்த இடத்து ரிக்கார்டுகள் எல்லாம் எங்கே இருக்கும்?"

"ரிக்கார்டு ரூம்ல கம்ப்யூட்டர்ல."

"அது எங்கே இருக்கு?"

"எங்கே வேணா இருக்கலாம். இடம் மாத்திருக்கலாம். அங்கே எதும் நடக்கும்."

"உங்களை உள்ள விடுவாங்களா?"

"சத்தியமா மாட்டாங்க!"

மாயாவின் அப்பா ரங்கநாத் படுத்திருந்தார். அருகே ஸார்பிட்டால் மாத்திரைகள் வைத்திருக்க அம்மா விசிறிக்கொண்டிருந்தாள்.

"ஸாரி! உங்க நிலைமையில அதிகம் தொந்தரவு செய்ய விரும்பலை. இவர் கணேஷ். பேமஸ் லாயர்."

"நமஸ்காரம்" என்றான் கணேஷ்.

"எப்படியாவது- எப்படியாவது மாயாவை" என்றார். மேற்கொண்டு பேச முடியவில்லை.

"ரங்கநாத்! சிரமப்படுத்திக்காதீங்க. நீங்க ரெஸ்ட் எடுத்துக்கங்க. ஏம்மா உங்ககிட்டச் சில விஷயங்கள் கேக்கணும் ..."

"போ" என்றார் ரங்கநாத்.

அம்மா தலைப்பால் கையைத் துடைத்துக்கொண்டு வெளியே கணேஷுடன் ஹாலுக்கு வந்தாள்.

"என்னப்பா?"

"உங்க மூத்த பெண் மேனகா போட்டோ இருக்குமா?"

"இருக்கே. அவ அமெரிக்காவிலிருந்து அனுப்பிய கடுதாசி, போட்டோ எல்லாம் இருக்கு."

"மாயா போட்டோ?"

"எங்கிட்ட இருக்கு ஸார்" என்றான் சுனில்.

"என்னமோ உன்னை மலை போல நம்பறோம்பா! எப்படியாவது என் சின்னப்பொண்ணைக் கண்டுபிடிச்சு ..."

"மேனகா வாரா வாரம் போன் பண்றாங்களா?"

"ஆமாம் போன ஞாயிற்றுக்கிழமைகூட ..."

"நீங்க எப்பவாவது அவங்களுக்கு போன் பண்ணியிருக்கீங்களா ...?"

"இல்லை ரொம்ப காசாகுமே! பாரு இந்த போட்டோ எல்லாம்..."

கணேஷ் அவற்றைப் புரட்டிப் பார்த்தான்.

"தெலுங்கில பேசினாப்பா! எதுக்கு திடீர்னு தெலுங்கில் பேசணும்?"

"யாரு?"

"மாயாதான்."

"தெலுங்கிலயா!"

"ஆமாம்."

"நான் கூட கவனிச்சேன் மிஸ்டர் கணேஷ்."

"உங்க பொண்ணுக்கு முன்னால தெலுங்கு தெரியுமா?"

"தெரியாதுப்பா. அவ எங்க தெலுங்கு படிச்சா!"

கணேஷ் திரும்ப மாருதியைக் கிளப்புமுன், "யு நோ சுனில்! இந்த கேஸ் எனக்குப் பிடிச்சிருக்கு. பெரிய சவாலா இருக்கு."

"நீங்க பார்க்காத சவாலா மிஸ்டர் கணேஷ்?"

"டாக்டர் நரேந்திரநாத் எப்படி?"

"சாரங்கபாணிக்கு விரோதி!"

"அவரையும் பார்க்கணும். நாளைக்கு வர்றீங்களா?"

அவனை மவுண்ட் ரோடில் உதறிவிட்டு திரும்ப அலுவலகம் சென்றபோது வசந்த் தலை வாரிக்கொண்டிருந்தான்.

"என்னது இந்த மாசத்துக்கு ரெண்டு தடவை தலை வாரிக்கறே?"

"பாஸ்! இப்பல்லாம் நான் ஆர்ட் மூவிஸ் தான் பார்க்கறது. ஒரு ஸ்வீடிஸ் படம். ஸப்டைட்டில்ஸ் இல்லாம ப்ளாக் அண்டு வைட்ல."

"புதுசா யாராவது கேர்ள் ஃபிரண்டா?"

"ஆமா எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"வசந்த் இன்னிக்கு நீ சினிமா போக முடியாது."

"கெடுத்தீங்களே. என்ன விசேஷம்?"

"சி.எம்.ஆர்.ஐ. போகணும்."

"நீங்கதான் போய்ட்டு வந்தீங்களே."

"இப்ப நீ போகணும். உன் முறை. அதுக்கு முன்னாலே..."

"அதுக்கு முன்னாலே."

"டவுன்லோடிங் பத்தி கொஞ்சம் படிச்சுக்கோ!"

"எதுக்கு?"

"நீ அங்க போகப் போறது டாக்டர் ஸபாஸ்டியன்ராஜ் என்கிற பெயர்ல. இந்த டெலக்ஸைப் பாரு!"



## 27

வசந்த் திடுக்கிட்டு, "பாஸ்! ஆள் மாறாட்டமா செய்யணும்?" என்றான்.

கணேஷ், "வேற வழியிருந்தாச் சொல்லு. ஒரு நாள்ல கச்சிதமா அந்த ஆஸ்பத்திரி அல்லது ஆராய்ச்சி சாலை பற்றி அத்தனை விவரங்களும் தெரிஞ்சுக்கலாம்."

"டாக்டர் செபாஸ்டியன் ராஜ்..." வசந்த் அந்த டெலக்ஸ் செய்தியின் வாசகங்களைப் பார்த்தான். "ஃப்ளைட் கான்ஸல் ஆய்டுத்து. வரலைன்னு சொல்லியிருக்கார்."

"அதைவிட அடுத்த வாரம் வரதாச் சொல்லி ஏர்போர்ட்டுக்கு அடையாளத்தோட ஆள் அனுப்பும்படியும் கேட்டிருக்கிறார்."

"அதனால?"

"அதனால இவங்களும் யாரும் அவரைப் பார்த்ததில்லைன்னு யூகம்."

"ப்ரிலியண்ட், அதனால."

"வசந்த்! நீ டாக்டர் செபாஸ்டியன் ராஜா அங்க போறே."

"பாஸ்! எனக்கு சப்ஜெக்ட் தெரியாதே. ஏதாவது எக்கச்சக்கமா கேட்டு மாட்டிக்கிட்டா?"

"சமாளி. இந்தக் காலத்தில சப்ஜெக்ட் தெரியாம ஜாலி அடிக்கிறது சுலபம் வசந்த்."

"இல்லை பாஸ். இவங்க... டாக்டர் நரேந்திரநாத்தும், சாரங்கபாணியும் விற்பன்னர்கள். இன்டர்நேஷனல் எக்ஸ்பர்ட்டுங்க. அவங்ககிட்ட ஏடாகூடமா ஏதாவது கேட்டுட்டா கண்டுபிடிச்சு சுளுக்கு எடுத்துடுவாங்க!"

கணேஷ் "அதுக்குத்தான் இதைப்படி." என்று கூறி ஒரு புத்தகத்தை வசந்திடம் தர அவன் அதைப் புரட்டி, "டுமாரோ மேக்கர்ஸ்! இதை வேற படிச்சாகணுமா? உங்ககிட்ட அஸிஸ்டண்டா இருக்கறதுக்கு என்னவெல்லாம் பாடு? பொய்ப் பேச்சு, பொய்

வேஷம், பொய் ஞானம்! பாஸ், பொய்னப்புறம் ஞாபகம் வந்தது. அன்னிக்கு நம்ம சசிதரன்கிட்ட 'பொய்மையும் வாய்மை இடத்து'ன்னு திருவள்ளுவர் சொல்லியிருக்காருன்னு மேற்கோள் காட்டினா, "அந்தாளை அழைச்சுட்டு வா! உதைக்கிறேன்"ங்கறான்.

"யாரை?"

"திருவள்ளுவர் ஹி . . . ஹி . . .!

"சிரிப்பு வரலை."

"ஒரு நான்–வெஜ் சொல்லட்டுமா அப்ப?"

"வேண்டாம், ஆளை விடு."

வசந்த் அந்தப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டே வெளியே சென்றான்.

ஒரு மணிநேரம் கழிந்த பின் உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தான். "பாஸ்! இது ரொம்ப சுவாரஸ்யம். என்னவெல்லாமோ பரிசோதனைங்களைப் பத்திப் போட்டிருக்கான்."

"டவுன்லோடிங்னு ஒரு சாப்ட்டர்ல படிச்சியோ?"

"படிச்சேன் பாஸ். நான் ஆடறேன். ஐ ஸ்வே! 'Though you have not lost consciousness, or even your train of thought, your mind-some would say soul has been removed from the brain and transferred to a machine!' பாஸ்! இதெல்லாம் சாத்தியமா?"

"எல்லாமே விளிம்பில நடக்கிற பரிசோதனைகள் வசந்த். இந்தப் பெண் மாயா, இவ மறைஞ்சு போனதில் முக்கியமான விஷயம் என்னங்கறே நீ?"

"ஆஸ்பத்திரிலிருந்து திரும்பி வந்த பிறகு காணாமப் போனது?"

"இல்லை. தெலுங்கு பேசினது. எதுக்காக திடீர்னு ஒரு பெண் தெலுங்கு பேசணும்?"

"பூர்வ ஜன்மம்?"

"ம்ஹூம்."

"டாக்டர் சாரங்கபாணியின் தாய் பாஷை?"

"இருக்கலாம்."

"எல்லாக் கேள்விகளுக்கும் இந்த செபாஸ்டியன் ராஜின் பதில் விரைவில்" என்று சொல்லி வசந்த் புறப்பட்டான்.

"ஹலோ டாக்டர் யு லுக் வெரி யங்!"

வசந்த், "யா! தே ஆல்வேஸ் ஸே தட்!" என்று டாக்டர் சாரங்கபாணியின் கையைக் குலுக்கினான்.

"ஸாரி டாக்டர்! எந்த ஃப்ளைட்டில் வருகிறீர்கள் எனத் தெரியாததால் விமான நிலையத்திற்கு கார் அனுப்பவில்லை."



"நோ ப்ராப்ளம்" என்றான் வசந்த்.

"காப்பி சாப்பிடுகிறீர்களா?"

"எனக்கு அவகாசமில்லை. உடனே ஒரு கான்ஃபரன்ஸ் டில்லியில். ஒரு நாளில் உங்கள் விசிட் முடிந்துவிட்டால் நல்லது."

"ஒரு நாளிலா . . . ஒரு வாரம் தங்கப் போவதாகவல்லவா டெலக்ஸ் அனுப்பியிருந்தீர்கள்?"

"ட்ரு . . . ட்ரு. இப்போது மனம் மாறிவிட்டேன்!"

"சரி, என்ன பார்க்க விரும்புகிறீர்கள்?"

"என்ன காட்ட விரும்புகிறீர்கள்?" என்றான் அவன் கண்கள் அலைய.

"அது நீங்கள் என்ன பார்க்க விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தது" என்றார் சாரங்கபாணி சிரிப்புத் தணியாமல்.

"இந்த வார்த்தைப் பந்தலைப் புறக்கணித்துவிட்டு உங்கள் 'டவுன் லோடிங்' பரிசோதனைகளை எனக்குக் காட்டுங்களேன்."

"காட்டுகிறேன். ஆனால் எல்லாம் ரகசியம். நோபல் பரிசு கிடைக்கக்கூடிய அத்தனை முக்கியமான பரிசோதனை இது!"

"நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்."

"வாருங்கள் போகலாம்."

இருவரும் மௌனமாக காரிடரில் நடக்க, வசந்துக்கு அந்த வெள்ளைக் கோட்டு பொருந்தினாலும் சட்டை சற்று இறுக்கியது. கால் ஷூ கடித்தது.

காரிடாரின் முடிவில் வந்த கதவருகில் திறந்திருந்த வழியில் நுழைந்தார்கள். வசந்த் சுற்றிலும் பார்த்துக்கொண்டே நடந்தான். "டாக்டர் ராஜ்! நீங்கள் போட்டோவில் போல் தோற்றமளிக்கவில்லை" என்றார் சாரங்கபாணி.

"போட்டோக்கள் ஏமாற்றும்" என்றான் வசந்த். அவசரமாகப் பேச்சின் திசையை மாற்ற வேண்டியிருந்தது. 'இங்கே ஃபேஸ்ட் அர்ரே ரேடியோ என்ஸஃபாலோ கிராஃபி வசதி இருக்கிறதோ?" என்றான். அந்தப் புத்தகத்தில் படித்திருந்தான்.

"இல்லை மாக்னட்டிக் ரெஸனன்ஸ் ஹோலோ கிராஃபிதான் இங்கே லேட்டஸ்ட்."

டாக்டர் சாரங்கபாணி உற்சாகப்பட்டு, "உங்களைப் போன்ற 'அத்தாரிட்டி'களிடம் எங்கள் பரிசோதனையின் முழு விவரங்களையும் காட்டுவதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை. பாமர ஜனங்கள் இவற்றை அபாயகரமான விளையாட்டு என்று சொல்லலாம். ஆனால் விஞ்ஞான முன்னேற்றத்துக்கு ஏதும் செய்யலாமில்லையா?"

"அவசியம்" என்றான் வசந்த். அந்த அறையில் பிறை பிறையாக

இருந்தது. வயிற்றைக் கலக்கியது வசந்துக்கு. அதில் எட்டாம் நம்பர் பிறையைத் திறக்கச் சொன்னார் டாக்டர் சாரங்கபாணி.

"டாக்டர் ராஜ்! இது ஒரு விநோதமான கேஸ். இந்தப் பெண் பெயர் மேனகா. இவளிடம் ஒரு இம்ப்ளாண்ட் முயற்சி செய்யும்போது ஒரு தப்பு நிகழ்ந்து பரிசோதனை அரைகுறையாக நின்றுவிட்டது. பாதி மூளையின் நினைவுகளை கம்ப்யூட்டருக்கு மாற்றிவிட்டோம். குரல், சில நினைவுகள்."

"உடல்?"

"பாதி உயிர் இருக்கிறது. மூளையின் பகுதி சேதமடைந்துவிட்டதில் வெளி இணைப்புகளின் மூலம் மின் துடிப்புகள் கொடுத்தால் பேசுகிறாள். இவள் மூலம் ஒன்வே ட்ரான்ஸ்ஃபர் நிரூபித்து விட்டோம்."

"டூவே?" என்றான் வசந்த். 'ஒன்வே'க்கு அடுத்தது அதுதான் இருக்க வேண்டும் என்று.

"அதும் நிரூபிக்கப்பட்டுவிட்டது ஏறத்தாழ! இவள் தங்கை மாயா. அருமையான பிரஜை. அவள் மண்டைக்குள் ஒரு சிப் பொருத்தி விட்டோம். அதன் மெமரியிலிருந்தும் சில ஆணைகள் செல்கிறதை நிரூபித்துவிட்டோம். துரதிர்ஷ்டவசமாக அந்தப் பரிசோதனை முற்றுப் பெறுவதற்குள் உறவினர்கள் போலீஸில் புகார் கொடுத்துவிட்டதால் அவளை வீட்டுக்கு அனுப்பும்படியாகி விட்டது."

"அவள் எங்கே இப்போது?"

"தெரியாது. அவள் மூளைக்குள் சில்லு பத்திரமாக இருக்கிறது. இங்கிருந்து மானிட்டர் பண்ண முடிந்தது."

"அந்த சில்லுக்குள் என்ன?"

"ஞாபகங்கள். ஒரு விஜயவாடா பெண்ணின் ஞாபகங்கள்."

"அந்த விஜயவாடா பெண் எங்கே?"

"அவள் இறந்துவிட்டாள்! டவுன்லோடிங் செய்யும்போது ஒரு சிக்கல்."

"ஐ ஸி!" வசந்தின் கைவிரல்கள் நடுங்கின. "ஒரு பெண் இறந்து . . . ஒரு பெண் பாதி இறந்து . . . ஒரு பெண் இடிந்து . . . எல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்துக்காக . . ."

'எல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்துக்காக!' வசந்த் அடப் பாதகர்களா என்று எண்ணிக்கொண்டு, "கங்க்ராஜுலேஷன்ஸ் டாக்டர் சாரங்கபாணி! உங்களுக்கும் டாக்டர் நரேந்திரநாத்துக்கும் நோபல் பரிசு கிடைக்க வேண்டும். அவரும் இதில் உண்டல்லவா"

"உண்டு. ஆனால் வெளி உலகுக்கு நாங்கள் விரோதிகளே."

இப்போது அந்தப் பிறையிலிருந்து மேனகாவின் உடல் நீக்கப்பட்டது. தலையில் கிரீடம்போல இணைப்புத் தொகை அமைக்கப்பட்டு அருகில் இருந்த கணிப்பொறியுடன் உறவு தரப்பட்டது.



"பாருங்கள் விந்தையை" என்று டாக்டர் சாரங்கபாணி "மேனகா" என்றார்.

"ம்."

"இன்று என்ன தேதி?"

"தெரியாது."

"எட்டும் எட்டும் என்ன?"

"பதினொறு."

"உன் தங்கை பெயர் என்ன?"

"மாயா."

"சில எளிய ஞாபகங்கள்தான் மாற்றியிருந்தோம். இணைப்பின் மூலம் பேசுகிறாள் பாருங்கள்."

"இவள் உயிருடன் இருக்கிறாளா?"

"அரை உயிருடன், பேசும் பொம்மை என்று சொல்லலாம். க்ரையோ முறைப்படி உடலைக் குளிர்ப்படுத்தி வைத்திருக்கிறோம்! டாமேஜ் ஆன செல்கள் உயிர்த்தெழ சில நாள்களாகும். அதுவரை . . ."

வசந்த் உறைந்துபோய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

"அதுவரை அவள் உயிருடன் இருக்கிறாள் என்கிற பிரமையை வெளியுலகத்திற்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம்."

"எப்படி?"

"இவள் அமெரிக்காவில் இருப்பதாகவும், வாராவாரம் கடிதம் எழுதுவதாகவும், அப்பா, அம்மா, தங்கைக்கு போன் பண்ணுவதாகவும் . . . ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன."

"ஐ ஸி! எல்லாம் இங்கிருந்துதான்."

"ஆம், எல்லாம் இங்கிருந்துதான்."

"குரல்?"

"அதே குரல். சின்தஸி ட்ரான்ஸ்ஃபர் என்று புதிய கருவி அதைக் காட்டுகிறேன், உங்களுக்கு. யார் வேண்டுமானாலும், யார் குரலில் வேண்டுமானாலும் பேசலாம்."

"அதாவது . . ."

"டாக்டர் ராஜ்! நீங்கள் லதா மங்கேஷ்கரின் குரலில் பேச விரும்பினால் அதுகூட அந்தக் கருவியில் சாத்தியம். அதன் மூலம்தான் போன் செய்கிறோம்."

"க்ரேட்!" என்றான் வசந்த். "இந்தப் பெண்ணைக் கொஞ்சம் உடை உடுத்தி மூடிவைத்தால் நன்றாக இருக்கும். பேச்சைக் கவனிக்க முடிவதில்லை."

"நம் போன்றவர்கள் செக்ஸுக்கு அப்பாற்பட்டவர்களல்லவா?

டாக்டர் ராஜ்! மற்ற இடங்களைப் பார்க்கலாமா?"

வசந்த் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து கேத் லாபுக்கு வந்த அதே சமயம் டாக்டர் நரேந்திரநாத்தின் மேசையருகில் வைத்திருந்த ஃபாக்ஸ் மெஷின் உயிர்பெற்று இயங்கியது.

"டாக்டர் செபாஸ்டியன் ராஜ் இப்போது புதன் கிழமை காலை பம்பாய் ஃப்ளைட்டில் வந்து சேர்கிறார். விமான நிலையத்துக்கு அடையாள அட்டையுடன் ஆள் அனுப்பவும்."

அந்தச் செய்தியைப் படித்த கோம்ஸ், "செபாஸ்டியன் ராஜ் புதன்கிழமை வருகிறாரா? அப்படியெனில் இன்று வந்திருப்பது யார்?" என்று வியந்து, "மிருணாளினி! இந்தக் காகிதத்தை உடனே டாக்டர் சாரங்கபாணி எங்கிருந்தாலும் கொடுத்துவிடு" என்றாள்.

வசந்தும், சாரங்கபாணியும் கான்ஃபரன்ஸ் அறையில் உட்கார்ந்திருக்க, ஸ்லைட் ப்ரெஜெக்டரில் ஸி.எம்.ஆர்.ஐ. பற்றிய விவரங்கள் அடங்கிய ஸ்லைடுகளை அடுக்கிக்கொண்டிருக்கிற சமயம் அந்த ஃபாக்ஸ் காகிதத்தை சாரங்கபாணியிடம் கொண்டு வந்து கொடுத்தாள். வசந்த் ஒரு பைப் பற்றவைத்துக்கொண்டு, கால்மேல் கால் போட்டுக்கொண்டு சுதாரித்து உட்கார்ந்து கொண்டான்.

சாரங்கபாணி அந்தச் செய்தியைப் படித்தார். வசந்தைப் பார்த்தார். காகிதத்தை மடித்துப் பைக்குள் போட்டுக்கொண்டு, 'மிருணா, நீ போகலாம்' என்றார்,

வசந்த் புகை மேகம் விடுவிக்க,

"டாக்டர் ராஜ்! கொஞ்சம் என்னுடன் அடுத்த அறைக்கு வருகிறீர்களா?"



# 28

வசந்த் கலவரப்படாமல் டாக்டர் சாரங்கபாணியை முழுசாகப் பார்த்துப் புன்னகைத்து "என்ன வேணும்?" என்றான்.

"யார்ப்பா நீ?"

"என்ன திடீர்னு மரியாதை இறங்கிருச்சி. நான்தான் டாக்டர் செபாஸ்டியன் ராஜ்."

"நீ செபாஸ்டியன் ராஜ்ன்னா, நான் மேனகா காந்தி!"

"என்ன சொல்றீங்க டாக்டர் பாணி!" வசந்த் மெல்ல வாசற் கதவுப் பக்கம் நழுவினான்.

"எனக்கு முதல்லயே சந்தேகமாய்டுத்து. என்னடாது போட்டோவில வேற மாதிரி இருந்ததே, இது எப்படி . . ."

"இப்ப, நான் செபாஸ்டியன் ராஜ் இல்லைங்றீங்களா?"

"இல்லை."

"இல்லையா, ஆமாம்மா? போட்டுக் குழப்பாதீங்க?"

"நீ யார்ப்பா சொல்லிடு" என்று டாக்டர் சாரங்கபாணி மேசைப் பொத்தானை அழுத்த, உடனே தகடாக இரண்டு ஆசாமிகள் கதவில் தோன்றினார்கள். "மிக்கி, வீரு, இவர் நிறையப் பார்த்துட்டார். அதனால இவரையும் நம்ம லிஸ்ட்ல சேர்த்துட்டு நல்லா தூங்கப் பண்ணிர வேண்டியதுதான்."

"வாங்க!" என்றான் மிக்கி சந்தோஷமாக.

"வெய்ட் எ மினிட். நௌ ஹோல்ட் இட். ஈஸி ஈஸி. இப்ப என்ன ஆய்டுத்துன்னு எங்கிட்ட நெருங்கறீங்க?"

"டாக்டர் செபாஸ்டியன்ராஜ் . . .!"

"நான் டாக்டருமில்லை, ஓர் எழவும் இல்லை. எம் பேர் வசந்த் கணேஷ்"டைய அஸிஸ்டெண்ட். டாக்டர்! இதை நாம சமாதானமாப்

பேசி முடிக்கலாமே. சதாம் உசேன் சொல்ற மாதிரி எதுக்காக சண்டை போடணும்..."

"ஓ! நீங்க கணேஷுடைய அஸிஸ்டெண்ட்டா! பேஷ்!"

"நான் இங்க பார்த்ததை யார்கிட்டயும் சொல்லப்போறதில்லை, ஸ்டாம்ப் பேப்பர்ல வேணா கையெழுத்து போட்டுட்டு, பிறகு வீட்டுக்குப் போறேன்."

"தேவையே இல்லை அதுக்கெல்லாம். நீங்க பார்த்த இந்த விஷயத்தை வெளியே சொல்ல முடியாதபடி மிக்கியும் வீருவும் பார்த்துப்பாங்க, ஏம்ப்பா பெண்டத்தால் வந்துதா?"

"பெண்டத்தால்... ஏய்ப்பா, இப்பல்லாம் பெண்டத்தால் அதிகம் யூஸ் பண்றதில்லைன்னு..."

மிக்கி, வீரு என்று சொல்லப்பட்ட இரண்டு வெள்ளைக் குல்லாய் குண்டர்களும் வசந்த்தை நெருங்கி, அவனை அள்ளி எடுத்துக் கொண்டு சக்கர பெஞ்சின் மேல் பற்றி, இரண்டு பக்கமும் கையைச் சிறைப்படுத்திப் பிடித்துக்கொண்டிருக்க, வசந்த் கால்களால் அவர்களை உதைப்பதற்காக முயற்சி செய்ய, முழங்காலில் ஒரு வெட்டு வெட்டியது நிரம்பவும் வலித்தது.

ஒரு பெண் வெள்ளுடையில் ஊசி மருந்து நிரப்பிக்கொண்டு வந்து, அவன் இடதுபுஜத்தின் சட்டைக் கையை நீக்கிச் சட்டென்று குத்தி, அதன் பம்ப்பை அழுத்த...

வசந்த் மெல்ல நினைவிழந்தான்.

கணேஷ் கைக்கடிகாரத்தைப் பார்த்தான், 'என்ன இது? ஏழு மணி ஆகிறது. இன்னும் காணவில்லையே. நிச்சயம் அவர்கள் கண்டு பிடித்திருக்க வேண்டும். இல்லையெனில் இந்நேரம் வந்திருப்பான். என்ன செய்யலாம்?' என சற்று நேரம் யோசித்தபின் டாக்டர் சாரங்கபாணியிடம் சென்றான்.

"வசந்த்தா? வரவே இல்லையே. இன்னி முழுக்க டாக்டர் செபாஸ்டியன்ராஜ்னு ஒருத்தர் கூட இருந்தோம்."

"அவர் எங்க இப்ப?"

"ஓட்டலுக்குத் திரும்பிப் போயிட்டாரே."

"எந்த ஓட்டல்?"

"சோழாவில தங்கப் போறதா சொன்னதா ஞாபகம்" என்றார் புன்னகையுடன்.

கணேஷ் அவரிடம் மேலே பேச விருப்பமில்லாமல் அறையைச் சுற்றும் முற்றும் பார்த்தான். எதிரே ஒரு சக்கர பெஞ்ச் வைத்திருந்தது. வசந்தின் கைக்குட்டை கீழே கிடந்தது.



"எனிதிங் எல்ஸ் மிஸ்டர் கணேஷ்?"

"நத்திங் டாக்டர்."

"மாயா கிடைச்சாளா?"

"இல்லை டாக்டர்."

"கிடைச்சா சொல்லுங்க."

"சொல்றேன்."

கணேஷ் அந்த அறையை விட்டு விலகும்போது அந்த ரோஜா சிவப்புப் பொடியின் லேசான தூவலைக் கவனித்தான். 'சபாஷ்டா வசந்த்' என்று சொல்லிக்கொண்டு அறைக்கு வெளியே வந்தான். நடை மௌனமாக இருந்தது.

கீழே லினோலியம் பதித்துப் பாத ஒலியை மழுப்பின தரையில் கவனமாக உற்றுப் பார்த்தான். லேசான அந்தச் சிவப்புப் பொடி ஒரு நூல் போல சரடு போலச் சிந்தியிருந்தது.

வசந்தின் உத்தி அது. இருமுறை பயன்படுத்தியிருக்கான். மாட்டிக் கொண்டால், எப்படியாவது ஒரு அடையாளம் விட்டு வைத்து விடுவான்.

அந்த செஞ்சரடு காரிடார் கடைசி வாசல்வரை சென்று, முதல் கதவில் நின்றது. கணேஷ் அந்தக் கதவைத் திறந்ததும், நேர் கோணத்தில் மற்றொரு காரிடார் தெரிந்தது. கணேஷ் அதில் சூட்சுமமாகப் பொடி அடையாளம் தேடினான். நெடுகச் சென்றது.

எதிரே பேச்சுக் குரல் கேட்க, சரேல் என்று கிடைத்த கதவில் நுழைந்து இருளில் அழுந்திக்கொண்டான். சம்பாஷணை அவனைக் கடந்தது.

"எய்ட்ல இன்னொரு ஆள் போலிருக்கே."

"ஆமாம்ப்பா. வேற ஏதோ பேர் சொல்லிக்கிட்டு உள்ளே புகுந்துட்டான்."

"என்ன செஞ்சாங்க?"

"பெண்டத்தால் கொடுத்து உக்கார வச்சிருக்காங்க?"

கணேஷ் சுற்றிலும் பார்த்தான். வெளிர் நீலக் கோட்டுகள். அந்த லாபின் சீருடைகள் வரிசையாக லாண்டரிக்குக் காத்திருந்தன. மாட்டியிருந்தன.

அவற்றில் ஒன்றை எடுத்து அணிந்துகொண்டு வெளியே வந்தான். மறுபடி ரோஸ் நிறப்பொடியைச் சரடைத் தரையில் கண்டுபிடித்து அதைத் தொடர்ந்து சென்றான்.

எதிரே வந்தவர்களைத் தைரியமாகக் கடந்து சென்றான். அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை என்று தெரிந்தது.

அடையாளம் முடிந்த இடம் குழப்பமாக இருந்தது. லிஃப்ட்டின் கதவு சற்றுத் தள்ளியிருந்தது. ஆனால் அடையாளம் முடிந்த இடம்

பக்கவாட்டுச் சுவரின் அருகில் அப்படியே முடிந்து போயிற்று.

கணேஷ் அந்தச் சுவரைக் கவனமாகப் பார்த்தான். தொடர்ந்து சுவர்போல இருந்தாலும், ஓர் இடத்தில் லேசான கோடு தெரிந்தது. ஆறு அடி விட்டு மற்றொரு லேசான கோடு தெரிந்தது. எதிர்ச் சுவரில் மாடர்ன் ஆர்ட் படம் மாட்டியிருந்தது.

லிஃப்டின் விளக்கு பளிச்சிட, அது நின்று கதவு திறந்து உற்சாகமாக மூன்று பெண்கள் பேசிக்கொண்டே வந்தனர்.

லிஃப்ட் வாய்திறந்து காத்திருக்க, அந்தப் பெண்களில் ஒருத்தி கணேஷைத் திரும்பிப்பார்க்க, கணேஷ் சட்டென்று லிஃப்டில் நுழையக் கதவு மூடிக்கொண்டது. பட்டனை அழுத்தக் காத்திருந்த கணேஷ் பத்துவரை எண்ணிவிட்டு, 'டீஓ' என்ற பட்டனை அழுத்தினான். கதவு திறந்தது. அந்தப் பெண்கள் போய்விட்டார்கள்.

கணேஷ் மறுபடி அந்த அடையாளம் சட்டென்று நின்ற இடத்துக்கு வந்தான். யோசித்தான். எதிரே இருந்த படத்தை விலக்கிப் பார்த்தான். மறைமுகமாக ஏதாவது ஸ்விட்ச் இருக்குமா என்று இல்லை. இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

அந்த இடம் இப்போது சுவரில் பிளவு ஏற்பட்டதுபோல பிளந்து திறந்திருந்தது.

கணேஷ் உடனே தீர்மானித்து, உள்ளே நுழைந்துவிட்டான். எதிர்ப் படத்தை நகர்த்தினாலே போதும் போல இருக்கிறது என்று புரிந்துகொண்டான். சட்டென்று கதவு மூடிக்கொண்டது. போட்டோ சென்ஸர் ஏதாவது இருக்க வேண்டும்.

கணேஷ் இப்போது அந்த நீண்ட அறையையும் பிறைகளையும் பார்த்தான். மந்த ஸ்தாயியில் ஒரு விர்ர்ர் கேட்டுக்கொண்டிருக்க மூக்கில் கெமிக்கல்–அம்மோனியா போன்ற வாசனையும் தாக்கியது.

கணேஷ் அந்த விநோதப் பிரதேசத்தை அணுகினான். பிறைகள் எல்லாம் ஏதோ மூடிகள்போல சுவரோடு சுவராக இருந்தன. ஒவ்வொன்றிலும் பெயர் எழுதியிருந்தது. அவற்றை மெல்ல மெல்லப் பார்க்குமுன் வசந்தின் பொடி அடையாளத்தைத் தேடி, அதைக் கண்டுபிடித்தான். அறையின் கடைசிப் பிறைவரை சென்றது.

கணேஷ் பதற்றத்துடன் நடக்க, அந்தப் பிறைக்குள் வசந்த் இருப்பதைப் பார்த்தான். நீண்ட குறுகலான இடத்தில் வசந்த் அண்டர்வேர் மட்டும் அணிந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கவனித்து "அய்யோ!" என்றான்.

"என்ன வேணும் டாக்டர்?"

திடுக்கிட்டுத் திரும்ப ஒரு சிப்பந்தி அவனுக்கு அருகே நின்றுகொண்டிருப்பதைக் கவனித்து சுதாரித்துக்கொண்டு, "இந்த பேஷண்டை வெளியே கொண்டுவரணும்ப்பா . . .!"

"நான் செய்யறேன் டாக்டர்."



அந்தப் பிறையின் கண்ணாடி மூடியைத் திருகித் திறந்து, உள்ளே மிகக் குளிர்ந்த இரும்புப் படுக்கையில் படுத்திருந்த வசந்தின் ஸ்ட்ரெச்சரை வெளியே இழுத்து, ஒரு சக்கர வண்டி கொண்டு வந்து அதற்கு மாற்றினான்.

"காலைலதான் கொண்டாந்தாங்க . . ."

"மயக்கமாப்பா?"

"ஆமாங்க. பெண்டத்தால் குடுத்து வெச்சிருக்கு. சாரங்கபாணி க்ரூப்தான் வந்தாங்க.

"இந்தாளை ரிவைவ் பண்ணணும்பா!"

"கம்ப்யூட்டர்ல மாட்டி கேள்வி கேக்கறதுக்கா?"

"ஆமாப்பா! உனக்குத் தெரியுமா?"

"மானமின்னு ஒண்ணு தருவாங்க. பத்து ஸிஸி கொண்டாரட்டுமா!"

"கொண்டு வாப்பா."

அவன் கண்ணாடி அலமாரிக்குச் சென்று, ஒரு டிஸ்போஸபில் சிரிஞ்சை உரித்து, மருந்து ஏற்றிக்கொண்டு வந்தான்.

"நீயே குத்திடேன். நல்லாக் குத்துவியே!"

"என்னைப்பத்தி சாரங்கபாணிகிட்ட சொன்னா சரி" என்று புன்னகைத்து வசந்தின் புஜத்தில் அந்த ஊசி மருந்தைச் செலுத்தி "மூணு நிமிசம் ஆகுங்க!" என்றான்.

"சரி, நீ போப்பா, நான் பார்த்துக்கறேன்."

"வண்டி தள்றதுக்கு ஆளு?"

"வருவாங்க, சொல்லிருக்கேன்."

"டாக்டர், நீங்க லாபுக்கு புதுசா?"

"ஆமாப்பா!"

"அதான் பார்த்தேன்."

"நீங்க போங்க."

"ரிவைவ் ஆறவரைக்கும் இருக்கேன்" என்றான்.

கணேஷ் சட்டென்று தீர்மானித்தான். "இங்க வாப்பா. உம் பேர் என்ன?"

"சரவணமுத்துங்க."

"கைல என்ன?"

"ஸ்க்ரு டிரைவர்ங்க. நான் இங்க மெக்கானிக்தான். எல்லா வேலையும் செய்வேன்."

"பைல என்ன?"

"ஹாமர் ஸ்பானர் எல்லாம் இருக்குங்க."

"பெரிசா ஒண்ணு எடு."

எடுத்து "எதுக்குங்க . . . ?"

"இதுக்குத்தான்" என்று மண்டையில் ஓர் அடி அடித்தான். அவன் அப்படியே துணி பெட்ஷீட்போல் துவண்டு விழுந்தான். அவனை இரு கக்கத்திலும் தாங்கி இழுத்து, அருகில் உள்ள அறைக் கதவைத் திறந்து, திணித்தான். இன்னும் அரை மணிக்கு விழிக்க மாட்டான் என்று வசந்தின் அருகே வந்தான்.

வசந்த் அப்போது லேசாக விழித்திருந்தான்.

"வசந்த்! வசந்த்!" அவன் கன்னத்தில் தட்ட, எழுந்திருந்தான்.

"பாஸ், பாஸ் வந்துட்டீங்களா?"

"வந்துட்டேன்."

"பொடி?"

"ஆமாம். நல்ல க்ளு!"

"என்ன ஆச்சு?"

"நீதான் சொல்லணும். மயக்க மருந்து கொடுத்திருக்காங்க போல. செபாஸ்டியன் ராஜ் இல்லைன்னு கண்டுபிடிச்சிட்டாங்களா?"

"ஆமாம் பாஸ்."

"போடா தத்தி!"

"இப்ப என்ன?"

"இது என்ன இடம்?"

"என்னவோ மார்ச்சுவரிபோல இருக்குது. இங்கதான் வந்திருந்தேன் பாஸ். மத்யானம் மேனகாவை வெளியே எடுத்தாங்க!"

"என்னது?"

"ஆமாம் பாஸ். மேனகா மாதிரி ஓர் உருவமா நிஜ உடலா இதில ஏதோ ஒரு பிறையிலிருந்துதான் வெளியே உருவினாங்க." வசந்த் இறங்கி, "பாண்ட் சர்ட்டெல்லாம் உருவிட்டாங்க. படுபாவிப் பசங்க."

"இப்படியே இரு" கணேஷ் அந்தப் பிறைகளை ஒவ்வொன்றாக எட்டிப் பார்த்தான். "எல்லாம் காலியா இருக்குது" எட்டாம் எண்ணுக்கு வந்தபோது . . .

மேனகா ரங்கநாத் என்று எழுதியிருந்தது.

"பாஸ் இதான்."

உள்ளே எட்டிப் பார்த்தார்கள்.

மேனகா நீல வெளிச்சத்தில் துயில் புரிந்துகொண்டிருக்க, "என்ன பண்ணலாம்" என்றான்.

"திறந்து, இது பொம்மையா, உடலான்னு பார்த்துடலாம்."

வசந்த் அதன் லீவரை இயக்க, டாக்டர் சாரங்கபாணியின் அறையில் அலாரம் ஒலித்தது.



# 29

அந்த எச்சரிக்கை ஒலி டாக்டர் சாரங்கபாணியின் அறையில் மட்டுமில்லாது கேந்திரத்தின் பாதுகாப்பு அறை, நைட் ரூம், செக்யூரிட்டி ஆபீசரின் அறை எங்கும் ஒலித்தது.

வசந்தும், கணேஷும் இருந்த அந்த ஹாலில், ஸிஸிடி காமிரா சுறுசுறுப்பாகி அவர்களைப் பார்க்கத் தன்னிச்சையாகத் திரும்பியது.

"பாஸ்! ஆபத்து, என்னவோ எதையோ கிளப்பிட்டோம்னு தோணுது" என்றான் வசந்த்.

"என்னடா?"

"விலகுங்க, விலகுங்க. காமிரா நம்மைப் பார்க்குது."

சாரங்கபாணி அப்போதுதான் தன் வேலையை முடித்துக் கொண்டு அறையைப் பூட்டிவிட்டுப் புறப்பட இருந்தவர் எச்சரிக்கை ஒலியைக் கேட்டதும் மானிட்டர் திரையைப் பார்த்தார். பிம்பம் அசைவது போலத் தோன்றியது. தவிர சட்டென்று அந்த பிம்பமும் காமிராவின் புலனிலிருந்து விலகிவிட்டது.

"விஜி, கோம்ஸ், மிருணா . . . எல்லாரும் எங்க போயிட்டீங்க?"

"வேலை முடிஞ்சு எல்லாரும் வீட்டுக்குப் போய்ட்டாங்க ஸார்" என்றான் காவல்காரன்.

"எங்கூட வாய்யா. யாரோ புகுந்துட்டாப்ல இருக்கு. அலார்ம் வருது."

"சில வேளை அது தப்பா அலார்ம் கொடுக்குதுங்க. பார்த்திருக்கேன்."

"எதுக்கும் போய்ப் பார்த்துட்டு வரலாம்" என்றார்.

இருவரும் கணேஷ், வசந்த் அகப்பட்டுக்கொண்டிருந்த அறையை நோக்கிச் சென்று, சுவரில் பதித்திருந்த கதவைப் பிளந்து திறந்து,

உள்ளே நுழைந்தார்கள்.

"இப்படி ஒரு ரூம் இருக்குதுங்களா? தெரியவே தெரியாதுங்களே."

"யார்கிட்டேயும் சொல்லாதே. இது சீக்ரெட்."

அறை காலியாக இருந்தது.

"நான் சொன்னேன். பார்த்தீங்களா."

"இல்லைப்பா. டிவில நிழல் தெரிஞ்சது."

அத்தனை பிறைகளும் மூடியிருக்க, ஏஸியின் உறுமல் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

"எல்லா எடத்தையும் பார்த்துருப்பா. அந்த ரூம்ல என்ன?"

ஆண்ட்டி ரூம் கதவைத் திறந்ததில்–"உள்ளுக்குள்ள கண்டா, முண்டா சாமான்களும், துணிகளும்தாங்க இருக்கு."

"செபாஸ்டியன்ராஜ்னு பேரை வெச்சுகிட்டு வக்கில் ஒருத்தன் புகுந்துட்டான். ஒரு பிறையில மயக்கம் கொடுத்து கூல் பண்ணி உக்கார வெச்சிருக்கோம்."

"பார்த்துருங்களேன். எந்தப் பிறையில தெரியுமா?"

"ரிஜிஸ்தரைப் பார்த்தா தெரியும். ரிக்கார்டு ரூம்ல இருக்கும்."

"பார்த்துட்டு வரட்டுங்களா?"

"சரிப்பா. இல்லைப்பா. போயிடலாம். நீ சொன்னாப்ல ஃபால்ஸ் அலாரம் மாதிரிதான் தோணுது."

அவர்கள் அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லத் தீர்மானித்தாலும், "ஒருமுறை ரிக்கார்டு ரூமைப் பார்த்துட்டு வந்துர்றேங்க" என்றான்.

வசந்தும், கணேஷும் அங்கேதான் பதுங்கியிருந்தார்கள்.

"போச்சுடா, பாஸ்! இங்கதான் வரான். என்ன பண்றது?"

"என்ன பண்ணுவே?"

"மண்டையில ஒரு டமால்."

"அதைப் பண்ணு."

கதவாளன் உள்ளே நுழைந்த மாத்திரத்தில் அவர்கள் இருவரையும் பார்த்து சப்தம் போடுவதற்கு முன்னாலேயே மண்டையில் வலுவான பொருளால் அடிபட்டான். சற்று நேரம் அவன் மண்டைக்குள் குருவிகள் பறக்க அதுவும் கரைந்துபோய் மயங்கி விழுந்தான்.

"என்னடா உள்ளே போனவன் திரும்பவே இல்லையே" என்று சாரங்கபாணி சற்று நேரம் காத்திருந்தார். 'இந்தாப்பா, இந்தாப்பா' என்று கூப்பிட ஆரம்பித்தார். பதில் இல்லை. 'ரிக்கார்டு ரூமில என்னதான் இருக்கு?' என்று அதன் கதவைத் திறந்தபோது கதவடியிலேயே கிடந்த காவலாளியைப் பார்த்தார். "என்னப்பா ஆச்சு உனக்கு?"



"அடிபட்டுட்டாங்க" என்றான் வசந்த்.

அவர் அப்போதுதான் நிமிர்ந்தார். கணேஷ் அவரை முழுவதும் நிமிர விடாமல் வாயில் அடைத்தான். குளிர் அலமாரியில் இருந்த ஸோடியம் பெண்டத்தால் நனைத்து கர்சீப்பை அவர் முகத்தில் வைத்து அழுத்தினான்.

சாரங்கபாணி நினைவிழந்தார்.

"பாஸ்! போதும் தீரச் செயல்கள். வாங்க போயிடலாம். போலீஸ்ல ஏதும் இவங்களால புகார் கொடுக்க முடியாது. கொடுக்க மாட்டாங்க."

"இரு வசந்த்" என்ற கணேஷ் ரிக்கார்டு ரூமில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்த பச்சை அட்டை ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பாஸ் நம்ம லக்கை இத்தனை தூரம் இழுக்க வேண்டாம். வாங்க போயிடலாம்."

"இருடா."

கணேஷ் அந்தக் கோப்புகளில் இரண்டை மட்டும் தேர்ந்தெடுத்தான். "எல்லாம் கம்ப்யூட்டர் ப்ரிண்ட் அவுட் மாதிரி இருக்கு.

"போலாமில்லை."

"திரும்பப் போற வழி தெரியுமில்லை. மயன் அரக்கு மாளிகை மாதிரி இருக்குது இந்த இடம்."

"அதான் பொடி போட்டு வழித்தடத்தை மார்க் பண்ணியிருக்கிறாயே! கில்லாடிடா நீ."

"அதைக் கண்டுபிடிச்சு வந்தீங்களே. நீங்க அதவிடப் பெரிய கில்லாடி."

"சரி சரி. சுயபிரதாபம் வேண்டாம். புறப்படு."

அவர்கள் மெல்ல அந்தப் பிளந்த கதவைக் கடந்து வந்தபோது சுவரில் இருந்த படத்தைச் சீர்படுத்த மூடிக்கொண்டதை வசந்த் பார்த்தான். "செத்தாலும் இந்த இடத்தை மத்த பேர்க கண்டுபிடிக்க முடியாது."

ரிஸர்ச் கவுனை இருவரும் அணிந்திருந்ததால் எதிர்ப்பட்டு ஓடினார்கள், 'அலார்ம் கேட்டுதா' என்று அவர்களையே விசாரிக்க வசந்த் 'ஃபால்ஸ் அலார்ம்' என்றான். இருவரும் அந்த விநோதப் பிரதேசத்தை விட்டு விலகி வீட்டுக்கு வந்துசேர ராத்திரி பத்தரையாகி விட்டது. வசந்த் சூடாக ஒரு மசாலா பால் வாங்கி சேர்க்கைகள் சேர்த்து, ஒரு பஞ்சாப் டம்ளர் அளவுக்கு அடித்து "ரொம்ப டயர்டு பாஸ்."

"என்னாச்சு சொல்லு?"

"நான் செபாஸ்டியன் ராஜ் இல்லைன்னு சுலபத்தில கண்டு பிடிச்சுட்டார் சாரங்கி மாமா."

"நினைச்சேன்."

"ஆமா நினைச்சிங்க. பலியாடு மாதிரி அனுப்பச்சிங்க. இந்நேரம் ஆபிச்சுவரில வந்திருப்பேன் தெரியுமா? அதும் மெட்ராஸ்ல போய் ஆந்த்ரப் பிரதேசத்தில் வதங்கினா மாதிரி சாவு. என்னா குளிர் பாஸ்! கனாவெல்லாம் ஐஸ் கட்டி கன்னிகைகள். தேச்சு விடறாங்க அதுவும் எங்கங்க?"

"வார்மா ஒரு பியர் அடி."

"அதைவிட வார்மா சேத்திருக்கேன். காதெல்லாம் சுடுது.

"பச்சலையா. நீ உருப்பட மாட்டியே."

"பாஸ்! ஒரு கேள்வி. அங்க நடக்கிற ஆராய்ச்சி என்னன்னு இப்பவாவது புரிஞ்சுதா?"

"அவங்களே சொல்றாங்களே – டவுன் லோடிங்னு."

"அதாவது ஒரு மூளையில் இருக்கிற நினைவுங்களை மற்றொரு மூளைக்கு மாத்தறது."

"மற்றொரு மூளைக்கு இல்லை. மிஷினுக்கு ... கம்ப்யூட்டருக்கு ..."

"இதெல்லாம் சாத்தியமா பாஸ்?"

"சாத்தியம்னு நம்பித்தானே பரிசோதனை பண்ணிக்கிட்டு இருக்காங்க."

"அதுக்கு அரசாங்க அனுமதி உண்டா?"

"பரிசோதனைக்கு அனுமதி உண்டோ இல்லியோ, அந்த மாதிரி அத்தனை பேரை க்ரையோஜனிக்கா வெச்சிருக்கறதுக்கு அனுமதி இல்லை."

"பாத்தீங்க இல்லை? அத்தனையும் டெட்பாடி தானே."

"சொல்றதுக்கில்லை."

"பொம்மையா?"

"இல்லை."

"பின்ன என்ன?"

"அதைவிட முக்கியம் – மாயா எங்கே?"

"ஆமா மாயா எங்கே?" என்று கணேஷ் அந்த ஃபைல்களைப் பார்த்தான். "மாயா தெலுங்கு பேசினதா சொன்னாங்க. பாத்தியா?"

"ஆமாம் பாஸ்."

"வசந்த்! நீ என்ன பண்றே ... சார்மினார் எக்ஸ்பிரஸ்ஸையோ எதையோ பிடிச்சு விஜயவாடா போய்ட்டு வா ..."

"என்னது? அங்க ஏதாவது கேஸ் எடுக்கறமா பாஸ்?"

"இல்லை. இந்த கேஸ்தான்."

"என்ன பாஸ்? புரியும்படியா சொல்லுங்க. மாயா தெலுங்கு



பேசினாங்கறதுக்காக விஜயவாடா போகணுமா?

"இல்லைடா. இதைப் பார்."

வசந்த் அந்த ஃபைலைப் பார்த்தான். பெயர் நர்மதா. வயது பத்தொன்பது.

டவுன்லோடிங் பரிசோதனை பாதி வெற்றி. மாயா என்கிறவள் ஞாபகத்தின் பகுதியை இப்போது நர்மதா ஆக்ரமிக்கிறாள். துரதிர்ஷ்டவசமாக இம்யுன் சிஸ்டம் அவள் மூளையில் பதித்த 'சிப்'பை நிராகரித்ததனால் உயிரிழந்து அறையில் பத்தாவது பிறையில் இருக்கிறாள்."

"அப்படின்னா மேனகா கூட ..."

"ஆமாடா. அவளும் உயிரிழந்துதான் இருக்கணும். நீ இந்த விலாசத்துக்குப் போ. விஜயவாடாவில் இந்த நர்மதாங்கற பெண் வீட்டுக்குப் போனா ..."

"போனா என்ன ஆகும்?"

"அங்க மாயா இருக்கலாம்."

"எப்படி?"

"முட்டாளே! மாயா தெலுங்கு பேசினாதானே."

"ஆமாம். அதுக்கு என்ன அர்த்தம்?"

"இந்த நர்மதா பெண்ணோட ஞாபகங்களை அவ மூளையில் ஏத்தியிருக்காங்கன்னு வச்சுக்கலாம். அப்ப என்ன பண்ணுவா?"

"வீட்டுக்குப் போவா."

"வீடு எங்க இருக்கு?"

"விஜயவாடாலே ... கை குடுங்க பாஸ்! இந்த மாயாவை முதல்ல மீட்டுக் கொடுத்துட்டு வழி பூரா ஆசுவாசமா மாரைத் தடவிக் கொடுத்துக்கிட்டே கொண்டாந்துர்றேன்" என்று டெலிபோனைச் சுழற்றினான்.

# 30

**வ**சந்த் பற்பசை முதலியவற்றைப் பைக்குள் திணித்துக்கொண்டிருந்த போது, "பாஸ்! ஞாபகம் வருது . . ."

"என்ன?"

"என்னை டாக்டர் செபாஸ்டியன் ராஜ்னு நினைச்சுக்கிட்டு மாமா எல்லா விவரங்களையும் சொல்லிட்டார், மண்டைக்குள்ளசிப் பொருத்தின சமாச்சாரம்."

"யார் மண்டைக்குள்ள?"

"அங்க பெறை பெறையா வெச்சிருந்தாங்க பாருங்க! அத்தனை பாடிலயும் இந்தப் பரிசோதனை பண்ணிருக்காங்க. சிலது பூட்ட கேஸ். சிலது பாதி ஜெயிச்ச கேஸ். மாயா தலையில பொருத்தியிருக்கணும். அதான் அந்தம்மா அப்பப்ப பாயை பிறாண்டியிருக்காங்க. ஸ்க்ராட்ச் ம்யாட்"

"உன் மண்டைல ஏதும் வெக்கலையே?" என்றான் கணேஷ்.

வசந்த் தொட்டுப் பார்த்துக்கொண்டு, "இல்லை பாஸ்! பிறைல வெச்சுட்டாங்க. அதோட சரி, பாஸ்! ஒரு ஸிக் ஜோக் சொல்லட்டுமா?"

"வேண்டாம்."

"சொல்றேன். புருஷன் செத்துப் போய்ட்டு அண்டர் டேக்கர் அவனை நல்லா டிரஸ்பண்ணி பாடியை சவப்பெட்டி அருகில் வெச்சிருந்தான். அதை மனைவி பார்த்துட்டு "நல்லாதான் அலங்காரம் பண்ணியிருக்கீங்க. ஆனா ஸுட்டு கலர்தான் சரியில்லை. நீல கலர்னா கேட்டேன். இத பாருங்க. பக்கத்து பாடிக்குப் போட்டிருக்காங்க பாருங்க, அது நல்லாயிருக்கு" என்றாளாம். "அதுக்கென்ன மாத்திர்றேன் அரை மணியில வாங்க" என்றான்.

அரை மணியில போனபோது புருஷனுக்கு ஷோக்கா நீல ஸுட் போட்டிருந்ததைப் பார்த்ததும் திருப்தியாச்சு மனைவிக்கு.



"பரவால்லையே ரொம்ப சீக்கிரம் டிரஸ்ஸை மாத்திட்டீங்களே?"

இதுக்கு அந்தாளு, "டிரஸ்ஸை இல்லைங்க தலையை மாத்திட்டேன். அதான் சீக்கிரம்"னானாம்.

கணேஷ், "சிரிப்பு வரலை" என்றான்.

"சிரிக்கறதுக்காக இல்லை ஜோக். சிந்திக்கறதுக்காக பாஸ்! அலமாரில ஒரு பொட்டலம் வச்சிருந்தனே"

"தூக்கிக் குப்பைல போட்டுட்டன்"

"அய்யோ அது என்ன விலை தெரியுமா?"

"தெரிஞ்சுதான்."

வசந்த் கணேஷை முறைத்துப் பார்த்து, "சரி சரி. ஆந்திராவில வாங்கிண்டா போச்சு. அங்கிருந்துதானே வரது" என்று 'முப்பது நாட்களில் தெலுங்கு புஸ்தகத்தை எடுத்து பையின் மேல் பகுதியில் வைத்துக்கொண்டு "விளக்கை அணைக்கறதுக்குத் தெலுங்கு போட்டிருக்கானா பார்க்கணும்" என்றான்.

வசந்த் சென்ட்ரல் நிலையம் வந்தபோது ஹிக்கின்பாதம்ஸ் அருகே டிராவல் ஏஜெண்டிடம் வரச் சொல்லியிருந்தான். டிக்கெட் பெற்றுக்கொள்ள, மாலை பேப்பரின் தலைப்புச் செய்திக்கு அருகில் 'நோபல் கிடைக்குமா?" என்று டாக்டர் சாரங்கபாணி போட்டோ போட்டிருந்தது.

"சென்னையில் இருக்கும் ஸி.எம்.ஆர்.ஐ. என்னும் இடத்தைப் பற்றி அதிகம் பேருக்குத் தெரியாது. இங்கே ஓசைப்படாமல் நடைபெறும் ஆராய்ச்சிகள் குறிப்பாக, ந்யுராலஜி ந்யுரோஸைன்ஸ் ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் என்னும் செயற்கை அறிவு இணைத் துறைகளில் மிகப் பிரசித்தமானவை. டாக்டர் சாரங்கபாணி மன எண்ணங்களை கம்ப்யூட்டரில் சிறைப்படுத்து வதைப் பற்றிய சில ஆராய்ச்சிகளுக்கு நோபல் பரிசு கிடைக்கலாம் என்று சொல்லப் படுகிறது. அது பௌதிகத்திலா மருத்துவத்திலா என்று தீர்மானிக்க இயலாமல் தவிக்கிறார்களாம்."

வசந்த் புன்னகைத்து போட்டோ மூலம் அவனை முறைத்துக் கொண்டிருந்த டாக்டர் சாரங்கபாணியைப் பார்த்து, "அப்படியா சேதி? வா உனக்கு வெக்கறேன்" என்றான். சீட் நம்பர் பார்த்து, பெட்டி எண் எட்டைத் தேடிச் செல்லச் சற்று தூரத்தில் பேப்பர் படிக்கிறாற்போல முகத்தை மூடிக்கொண்டிருந்த ஒருத்தன் அவன் பின்னே தொடர்ந்தான்.

வசந்த் தன் பெர்த் எண்ணைப் பரிசோதித்துவிட்டு உட்கார்ந்தான். பிரயாணத்தில் படிக்க தலையணை நாவல்கள் கொண்டு வந்திருந்தான். ஒரு ஜோக் புக். ஒரு பாக்கெட் ஒஸ்தி சிகரெட் எல்லாவற்றையும் பரப்பிக்கொண்டு அடுத்த கம்பார்ட்மெண்ட் பிரயாணியைப் பார்த்தான். "அலோ பாரதி! சர்ப்ரைஸ்."

"அலோ வசந்த்! நீங்க எப்படி ..." அந்தப் பெண் தன் அருகில் இருந்த தந்தையைப் பார்த்து தெலுங்கில் சொல்ல அவர் முகம் கடுத்து, "மீபேரு ஏமி" போலீஸ்லே புகார் சொல்வதற்காகக் கேட்பது போல சொன்னார். வசந்த் கவலையின்றி அந்தப் பெண்ணை பயங்கரமாக ஸைட் அடித்தான். "அப்பாவா இது? அப்பர் பர்த்தானே? ராத்திரிக்குப் பேச்சுத் துணையா ரெண்டு பேரும் பிலாசபி பேசலாம் வெரிகுட்." கட்டம் கட்டமாகப் புடவை. பச்சை ரவிக்கை. கன்னங்கரேல் என்று சுமார் ஓர் ஏக்கர் கண்கள். கட்டைன்னா இதாண்டா என்று சொல்லிக்கொண்டான். "பார்டன்" என்று அவன் வினவியதற்கு "பாரதி! உன்னைப் பார்த்து நாலு நாளாச்சு. அந்த இடைக்காலத்தில் இன்னம் கொஞ்சம் அழகாயிட்டிருக்கே அநியாயமா." பரிசோதகர் அவனை பர்த் எண் கேட்க அவன் தன் டிக்கெட் எடுத்துக் கொடுத்து, "பர்த் நம்பர் செவண்டிபோர் மாத்திருங்க ஸார்'" வசந்த்தைத் தொடர்ந்து வந்திருந்த ஆசாமி "ஸார் ஒரு பர்த் கிடைக்குமா?" என்று பரிசோதகரை விசாரித்தான்.

"வெய்ட் பண்ணுங்க எல்லா பாசஞ்சரும் வந்தப்புறம்தான் வேக்கன்ஸி நிலைமை தெரியும்."

அவன் எதிர் சீட்டில் உட்கார்ந்துகொள்ள வசந்த் அவளைப் பார்த்துச் சிரித்ததற்குப் பதில் சிரிப்பு தரவில்லை. ஆனால் ஒரு முறை ஆழமாகப் பார்த்தாள். "இது என்னடா, இது கண்ணா இல்லை கரு நிலவா!"

வசந்த் அந்தப் பெண்ணைப் பார்த்து, "பாரதி ஜலம் உந்தா. ரொம்ப தாகம். நான் விஜய்வாடா போறேன். நீ?

அவள் திரும்பிக்கொள்ள, "ஏ மிஸ்டர்" என்றார் அப்பா.

டிடிஆரிடம் வேறு பர்த் கேட்டார். பாரதி அப்புறம் என்று அடையாளம் காட்டினாள். டி டி "பார்க்கலாம் பார்க்கலாம்" என்று சின்ன சின்ன ஸ்லிப்புகளில் காபியிங் பென்ஸிலால் எழுதிக் கொண்டிருந்தார்.

வசந்த், "வசம்மா சிக்கிட்டா, பிட்ர குண்ட்டா வரதுக்குள்ள இந்தப் பெண்ணைக் கணக்குப் பண்ணலைன்னா எதுக்கு உயிர் வாழறது?"

பாரதி கூஜாவைத் திறந்தபோது விரல்களில் மரு தோன்றித் தொப்பிகளைக் கவனித்தான். ஒரு முறை கூஜா கீழே விழும் போலிருக்க, உடனே உதவி பண்ணினான். "தாங்ஸ்" என்றாள், தலையைத் தேய்த்துக்கொண்டு. அப்பா மேல் பர்த்துக்குத்தான் போயாக வேண்டும். வசந்த் அந்தப் பெண்ணுக்கு எதிர் பர்த்தை ஆக்ரமித்தான்.

வசந்தைத் தொடர்ந்து வந்தவன், இப்போது தன் பட்டாபட்டி பையிலிருந்த ஒரு கத்தியை எடுத்து இடுப்பு வேஷ்டிக்குள் செருகிக் கொண்டான்.



வசந்த் ஜன்னல் வெளியே ரயிலுடன் கூட வந்த பவுர்ணமி நிலாவை அவளுக்குக் காட்டினான். "இன்னிக்குத் தூக்கம் கிடையாது" என்று மெல்ல உச்சரித்தான்.

வசந்த், "முப்பது நாளில் தெலுங்கு" புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். புடலங்காய் கத்தரிக்காய் போன்ற காய் வகைகளுக்கும், திங்கள் செவ்வாய் போன்ற கிழமைகளுக்கும் தெலுங்கு போட்டிருந்ததே தவிர, வசந்த் விரும்பிய வாக்கியங்கள் எவையும் அதில் இல்லை.

வசந்த் பாரதியை ஒரு மாதிரி பார்த்து, வா என்று தலையால் அதட்டினான். அவள் தன் சங்கிலியைக் கடித்தாள். ஒரே சமயத்தில் இருவரும் சட்டென்று எழுந்து தலையில் இடித்துக்கொண்டனர்.

அவன் 'ஸாரி' என்றான்.

"அம்ருதாஞ்சனம் இருக்கா? போயே போச்சு."

அவள் தன் ஏராளமான பைக்குள் கையை விட்டு எடுத்து அதை வசந்திடம் கொடுத்தபோது, வசந்த் அவள் மேல் பட்டான், கையைப் பற்றிக்கொண்டான், பிடுங்கிக்கொள்ளாமல் அவனிடமே கையை வைத்திருந்தாள்.

வண்டி அப்போதுதான் ஸ்பீட் எடுத்தது. அப்பா ரயில் சப்தத்துக்கு மேல் குறட்டை விடத் தொடங்க, பாரதியும் வசந்தும் பார்த்துக்கொண்டு சிரித்துக்கொண்டார்கள். வசந்த் அவள் கையை வெளிச்சத்தில் பார்த்து "ரெண்டு" என்று கை விரல்களைக் காட்டினான். அவள் 'என்ன' என்று ஜாடையாகக் கேட்க ...

"கொடுக்கு" என்றான். அவள் 'க்ளுக்' என்று சிரிக்க அப்பா குறட்டை நிறுத்திவிட, படுத்துத் தூங்குவதுபோல பாசாங்கு செய்தான்.

சற்று நேரம் விட்டு வசந்த் மறுபடி அந்த ஜோஸ்யக் கையைப் பற்றிக்கொள்ள, அவள் இஷ்டமாக அவனைப் பார்த்தாள். வசந்த் அவளை காரிடார்பக்கம் அழைத்தான்.

அவள் தயக்கத்துடன் எழுந்தாள். "நாநா பார்த்ரும்" என்றாள்.

'ம்' என்று அவர் செருமினார். வசந்த் அவளைப் பின்பற்றி காரிடார் பக்கம் வந்தான்.

"நான் வந்து நல்லா கைரேகை பார்ப்பேன் பெண்களுக்கு" என்றான்.

அவள் கையைக் காட்டித் தலையைக் கோதிக்கொண்டாள்.

வசந்த் கைப்பற்றி மெல்ல முன்னேறி, "முழங்கை ஷேப்லயே எப்படிப்பட்ட பொண்ணுன்னு தெரியப் போறது" என்று சொல்லி அவளை வாசனை பார்க்க முயல அவள் விலக ரயில் வேகம் குறைந்தது. அந்தப் பெண்ணின் மார்புப் புடவையைக் காற்று விளையாட, இப்போதும் அப்போதும் கோடி காட்டிக்கொண்டிருந்த அவள் மார்பகங்களால் ஈடுபட்டு, மெல்ல அவளை வளைத்துப் போடலாம் என்பதற்குள் யாரோ ஒரு மூத்திரர் பாத்ரூமுக்குள்

போகுமுன் இவர்களை சந்தேகமாகப் பார்த்துக்கொண்டே சென்றார்.

வசந்த் அந்த ஆசாமி மறைந்ததும் காலைக் குறுக்கே போட்டு, அவளைச் சின்ன ரூம்போல ஆக்கிச் சிறைப்படுத்திக்கொண்டு,

"பாரதி! சொல்லு. போன தபா என்னைப் பார்த்ததும் என்னவெல்லாம் ஆச்சு? என்னை நினைச்சுட்டியா?"

"ம்" என்றாள்.

"என்ன நெனைச்சே?"

"என்னை நினைச்சுக்கிட்டேன்னா?"

"என்னவெல்லாம் நினைச்சே சொல்லு, உதாரணம் சொல்லு."

"உன்னைப் பத்திப் பொதுவா . . ."

"பொதுவா என்னைப் பத்தி அப்படி என்ன நினைக்க முடியும் பாரதி? உனக்கு ஜுபிட்ஸு தெரியுமா?"

"தெரியாது."

"தெரிஞ்சுக்க வேண்டாம்."

"புத்த பிட்சு இல்லை ஜுபிட்ஸு. அது ஒரு மாதிரி எக்ஸர்ஸைஸ். செஸ்ட் எல்லாம் நல்ல பலம் வரும்."

"வேண்டாம். நீ போன தடவை இந்த மாதிரித்தான் எக்ஸைஸ் சொல்லித்தரேன்னு சைக்கிள்ள முன்னால வெச்சுக்கிட்டு ஏதோ செஞ்சியே அது பேர் என்ன?"

"சக்கரவாகம். அது வேற, இது ஜுபிட்ஸு."

"அது எந்த பிட்ஜுவா இருந்தாலும் வேண்டாம். வசந்த் பேசாம தொடாம படாம எதாவது எக்ஸர்ஸைஸ் இருந்தா சொல்லு."

"அப்படி ஏதும் ஸ்டாக் இல்லையே. காதார புகை விடறதைத் தவிர."

"அதும் பண்ணியாச்சு?"

"ஒரு ஜோக் சொல்லிடறேன்."

வசந்த் சற்றும் எதிர்பாராத விதமாக வண்டி நின்றது.

குலுங்கி நின்ற அந்த குலுக்கில் பாரதி அவன்மேல் சாய, அந்தச் சந்தர்ப்பத்தில் அவளை இறுக்கப் பிடித்துக் கைகளால் ஒத்தடம் தந்து, மற்றொரு கையில் முதலில் ஏதோ கடிக்கிறது என்றுதான் நினைத்தான்.

அந்தப் பெண் வீல் என்று கத்தினதும்தான் அந்த ரத்தம் தன்னுடையது என்று தெரிந்தது. வண்டி நின்றது. வசந்துக்கு மயக்கம் போலவோ நினைவிழப்பு போலவோ ஏற்பட்டது. அது எது என்று தெரியாமல் கதவருகே சரிந்தான்.



# 31

கதவு திறக்கப்பட்டு வசந்த் ஏதோ திருட்டு அரிசி மூட்டை போல வண்டியிலிருந்து வீசி எறியப்பட்டான். சரளைக் கற்கள் நிறைந்த இருப்புப் பாதை அருகிலுள்ள பிரதேசத்திலிருந்த சப்பாத்திக் கள்ளிகளின் மேல் பட்டு உருண்டு சரிவில் விழுந்தான்.

ரயில் ஏதோ சொல்லத் தயங்குவது போல ஒருமுறை 'டேட்' என்று ஊதிவிட்டு மறுபடி புறப்பட்டது.

அந்த பாரதி என்ற பெண் அதிர்ச்சியில் பேச்சிழந்துபோய் அவள் முகத்தருகே இருந்த கொடூர முகத்தைப் பார்த்தாள். அவள் வாய் மூர்க்கக் கைகளால் பொத்தப்பட்டிருந்தது.

"மூச்சு கீச்சு விட்டே அவனுக்கான கதிதான் உனக்கும். என்ன?

பெரிய கண்களை உருட்டி "சரி" என்றாள்.

"ஏதாவது கூச்சல் போட்ட . . . பாத்தியா கத்தி! இன்னொருமுறை பிரயோகம் பண்ணனுமா? அவன் வயித்தில குத்தினாப்பல உன் வயித்திலும்!

"வேண்டாம்" என்று தலையாட்டினாள்.

அவளை பாத்ரூமுக்குள் அடைத்து, "அரை மணிக்கு அப்புறம் வெளியே வா. இல்லை இன்னொரு குத்து விழும்" என்றான்.

பாரதி திகிலில் பாத்ரூமுக்குள் செல்ல, வசந்தைக் குத்தினவன் வெளியே இருந்த பேசினில் கத்தியை அலம்பி, இரு கைகளாலும் தண்ணீர் ஏந்திக் கீழே சிந்தியிருந்த ரத்தத்தை நீர் ஊற்றிக் காலால் தற்காலிகமாகப் பெருக்கினான்.

சிக்னல் கிடைத்து ரயில் வேகம் பிடித்துப் புறப்பட அதன் வால் விளக்கை வசந்தால் பார்க்க முடியவில்லை. நினைவா இல்லையா என்றறியாமல் மனத்தில் பிம்பங்கள் குழம்பின. டாக்டர் சாரங்கபாணியின் முகமும் கணேஷின் முகமும் மாயாவின் முகமும்

பிறைபிறையாகப் பிள்ளை முகங்களும் அவன் மனவெளியில் ஊசலாடின. "மயங்காதே, மயங்காதே, மூச்சைப் பிடித்துக்கொள். யாராவது வருவார்கள்."

"இருட்டில் யார் வருவார்?"

"வந்துதான் ஆக வேண்டும். அருகே சைடிங் தெரிகிறது. அதில் விளக்குத் தெரிகிறது. அதுவரை நடக்க முடியுதா பார்க்கலாம்."

நடப்பதென்ன, எழுந்திருக்கக் கூட முடியவில்லை. தன் நினைவைப் பத்திரமாக வைத்துக்கொள்வதே வலித்தது அவனுக்கு.

அடுத்த ரயிலில் அடிபடாமல் இருக்க வேண்டும் என்று கூடிய வரை நகர்ந்துகொண்டான்.

வயிற்றில் தொட்டுப் பார்த்துக்கொண்டான். ஈரமாக இருந்தது. ரத்த ஈரம். அதன் இழப்பால் சுவாசம் கஷ்டமாக இருந்ததுமில்லாமல் தாகம் எடுத்தது. தண்ணி தண்ணி என்று கத்திப் பார்த்தான். வார்த்தை கேட்கவில்லை. பக்கத்தில் சேற்றுநீர் போல இருந்தது. அதில் நிலா தெரிந்தது. "அதே நிலா, பாரதிக்குக் காட்டிய அதே நிலா. ஒரு பத்து நிமிஷத்தில் எங்கிருந்து எங்கே வந்து விழுந்தேன்."

பாஸ் கணேஷின் மேல் கோபமாக வந்தது. 'பலியாடு மாதிரி என்னை மட்டும் தனியா அனுப்பிவிட்டு இந்நேரம் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பார். டி.வியில் என்ன இப்போது என்று அபத்தமாக யோசித்தான். நாலு கிழவர்கள் பானல் டிஸ்கஷன் பண்ணிக் கொண்டிருப்பார்கள்.

கொஞ்ச காலமாயினும் பாரதியின், இடுப்பு வரை வந்து விட்டேன். சே, என் ஜாதகம் அப்படி எது கிடைத்தாலும் முழுவதும் கிடைக்காது. இப்போதுகூட சாகப் போறேனே. முழுசாக சாக மாட்டேன். குத்துயிரும் குலையுயிருமாக...

யாராவது சினிமாவில் போல கிராமத்துப் பெண் வந்து, என்னைக் குடிசைக்கு அழைத்துச் சென்று கட்டுப் போட்டு, டிபன் பாக்ஸிலிருந்து ஏதாவது எடுத்துக் கொடுக்க மாட்டாளா. இப்படி ரயில் கத்தாழை யருகில் கிடக்க வேண்டுமா? எத்தனை நேரம்?

தூரத்தில் வெள்ளிப் பொட்டு தெரிந்தது. உடன் இன்ஜினின் குரல் கேட்டது. அப்போதிலிருந்தே அந்த இஞ்சின் பிடிவாதமாகக் கூப்பாடு போட்டு வந்தது. அந்த சிக்னல் இன்னும் சிவப்பாக இருந்தது. வசந்துக்குள் ஒரு பல்பு எரிந்தது.

"அடுத்த வண்டியும் சிக்னலில் மாட்டிக்கொண்டு நிற்கப் போகிறது. வசந்தா நீ அனுமார்றா. உன் பலம் உனக்குத் தெரியாது. எப்படியாவது பிடித்துக்கொண்டு அடுத்த வண்டியில் எங்கேயாவது தொத்திவிடு" என்ஜின் மெல்ல மெல்ல மெல்ல என்று சொல்லிக் கொள்ள "நில்லு, சிவப்புத் தெரிகிறது அல்லவா, நில், வசந்துக்காக நில்லு."

நின்றது.



ஆனால் குட்ஸ் வண்டி. அவனருகில் கறுப்பாகத் தெரிந்த பெட்டியில் ஏதோ பிளவு போல கதவுபோல திறந்திருந்தது. பாழாய்ப்போன பச்சை உடனே கிடைத்து, வண்டி மறுபடி சந்தோஷமாக ஊதிவிட்டு உடனே புறப்பட்டது.

வசந்துக்குத் தொத்திக்கொள்ளக்கூட சமயம் இன்றி ஒரு பெட்டிக்குள் இடைப்பட்டதில் தொத்திக்கொண்டு, எப்படியோ கொஞ்ச நேரம் ப்ரித்விராஜ் சம்யுக்தா மாதிரி பிரயாணம் செய்து விட்டு பிறகுதான் பெட்டிக்குள் இடம் பிடித்தான். அந்த வாசனை என்ன வாசனை... மூத்திரமும் சாணியுமாகப் பெட்டி பூரா இருட்டு இருட்டாக எருமை மாடுகள். வசந்த் அந்த எருமைகளில் ஒன்றின் மேல் சாய்ந்து தூங்கிப் போனான்.

அதிகாலை கணேஷ் எழுந்து பற்பசையில் கால் இன்ச் மட்டும் பிதுக்கிக்கொண்டு கண்ணாடிக்கு முன் பல் தேய்க்கும்போது டெலிபோன் மணியடித்தது.

"அலோ."

"ட்ரங்கால் ஃப்ரம் பிட்ரகுண்டா—ஸ்பீக் ஆன்"

"பிட்ரகுண்டா, யார் அங்கே?"

"அலோ"

"பாஸ்"

"வசந்த்! நீயா?"

"ஆமா சாட்சாத் நானே. வயிற்றிலே பாண்டேஜ்... இன்னமும் நிமிஷத்தில செத்துப் போகப் போறாப்பல உணர்ச்சி."

"என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சு, ரயில்ல கத்திக் குத்து. ஏதோ தெய்வாதீனமா தப்பி இப்ப... இது என்ன ஆஸ்பத்திரிப்பா... ஏமி ஆஸ்பத்திரி?"

"பவனம் வெங்கட்ராமையா சாரிட்பிள்... ஆஸ்பத்திரி பேரை முழுக்க உச்சரிக்கிறதுக்குள்ளயே செத்துப் போயிருவேன் போல இருக்கு. பாஷை வேற சரியில்லை. நர்ஸெல்லாம் கோடாலி மீசை... என்ன பொழைப்பு பார்த்திங்களா பாஸ்?"

"யார்றா குத்தினா?"

"பேர் கேட்டு வெச்சுக்கலை. ரயில்ல ஒரு பொண்ணை பயங்கரமா மாத்மாட்டிக் பண்ணிட்டு இருந்தேன். பூஜை வேளையில கத்தி..."

"வசந்த்! வெரி சாரிடா."

"ஸாரியெல்லாம் வேணாம், உடனே புறப்பட்டு வாங்க. கேஸ் ரொம்ப தீவிரமாயிருக்கு. கண்ட கண்ட பேரெல்லாம் கத்திக் குத்து."

"சரி உடனே காரை எடுத்துக்கிட்டு வர்றேன்."

"யாராவது ஃபாலோ பண்றாங்களா . . . பார்த்துட்டே வாங்க."

மாருதியில் தேசிய சென்னை கல்கத்தா நெடுஞ்சாலையில் செல்லும்போது–ரெட்ஹில்ஸ் அருகிலேயே அந்தக் காரைக் கவனித்தான். ஆல் இண்டியா பர்மிட் கார் அது. அவன் வேகத்துக்குச் சீராக வந்துகொண்டிருந்தது. அவன் தாழ்த்த அதுவும் தாழ்ந்து அவனை 'ஓவர் டேக்' பண்ண விருப்பமே இருப்பதாகத் தெரியவில்லை.

கணேஷ் இரண்டு லாரிகளுக்கு இடையே புகுந்துகொண்டு இடப்பக்கம் மண் பாதையில் திருப்பினான்.

அதைக் கவனிக்காமல் அவனைத் தொடர்ந்து வந்த அம்பாஸடர் அவனைக் கடக்க கணேஷ் அவன் வாலைப் பிடித்துக்கொண்டான். அவன் ஓர் இளநீர்க்கடை அருகில் நிறுத்த, கணேஷ் அவர்களைக் கடந்து போய் பத்தடி தள்ளி நிறுத்தினான்.

முன்பாகம் ஆதிசேஷன் போல திறந்திருக்க, கணேஷ் அவர்கள் ஓரத்தில் போய் ஒன்றுக்கிருக்கிற மாதிரி பாவனை செய்வதைக் கவனித்தான்.

கணேஷ் பையில் இருந்த பேனாக் கத்தியை எடுத்து இரண்டு டயர்களையும் கீறிட, புஸ்ஸ் என்று சப்தம் கேட்டதும் தான் தன் காரில் பாய்ந்து ஏறிக்கொண்டு, அவர்கள் ஓடிவர அவர்களுக்கு டாட்டா காட்டிவிட்டுப் புறப்பட்டான்.

பிட்ரகுண்டா ஸ்டேஷன் அருகில் இருந்தது ஆஸ்பத்திரி. வசந்த் முள் தாடியுடன், தலையில் ப்ளாஸ்திரியுடன், வயிற்றருகில் பாண்டேஜுடன் "வாங்க பாஸ். வந்தீங்களே, இன்னேரம் ஆபிச்சுவரியில் இடம்பெற்றிருப்பேன். சரியா."

"யார்றா அது?"

"எவனோ கவனிக்கவே இல்லை. பாரதின்னு நம்ம தோஸ்த்தைப் பார்த்தானா . . . சுஸ்தாயிட்டேன். நிலா வேற ஓவர்டைம் பண்ணிட்டு இருந்தது. காதல்ல என்ன ஆச்சுன்னா பின்னால ஓர் ஆளு கத்தியை வெச்சிருக்கான்னு கவனிக்கவே இல்லை."

"அந்தப் பொண்ணை வெச்சு வலை பின்னிட்டாங்களா?"

"சீச்சி, அது பூச்சி. அதுக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்லை. தப்பு எம்பேர்லதான். ட்யுட்டி வேற ப்யுட்டி வேற. போறது விடுங்க.

"எப்படி இருக்கே வசந்த்?"

"சரியா குத்தலை. வண்டிலருந்து தள்ளிட்டதில அங்கங்க சிராய்ப்பு. பாஸ், ஒரு முலை இழந்த கண்ணகிபோல நான் ஆளூரைத்துட்டேன், அந்த விஜயவாடா பார்ட்டியைக் கண்டுபிடிச்சு கீமா பண்ணலை என்பேர் வசந்த் இல்லை. வசுந்தரா,"

"நேரா மெட்ராஸ் போயிரலாம். பிறகு . . .?"



"முன் வைச்ச காலைப் பின் வைக்கக் கூடாது. சந்தடியில பாரதி எங்க போறான்னு கேட்டு வெச்சுக்க மறந்துட்டேன். இப்ப விஜிவாடா வாடான்னு அழைக்குது."

"நானும் வரேன். இன்னொரு கத்திக்குத்து உன் பாடி தாங்காது.

பெட்ரோல் நிரப்பி அவர்கள் கிளம்பும்போது பிறபகலாகி விட்டது வசந்த் நாலைந்து 'ப்ராக்ஸிவான்' மாத்திரைகள் வாங்கிக் கொண்டு, ஒரு பாக்கெட் சிகரெட்டு தூள் கொஞ்சம்... "ஆந்திராவில சுட்டா சுருட்டு அமோகமாக இருக்கும். ஓர் இழுப்பு இழுத்தா கனம்மா இறங்கும். திரும்பி வெச்சுப் பிடிக்கணும்" என்றான்.

"ஏன்டா இப்பத்தான் அடிபட்டுக் குத்துயிரா வந்திருக்கே. அதுக்குள்ளே சுருட்டா?"

"அது பாட்டுக்கு அது. இது பாட்டுக்கு இது. திருவள்ளுவர் சொன்னாப்பல வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம். மற்றவையெல்லாம் பிற."

இரவில் ஓர் இடத்தில் சாப்பிட நிறுத்தினார்கள். மந்தார இலையில் பொடியெல்லாம் வைத்து நல்ல காரமாகச் சாப்பிட்ட பின்தான் வசந்துக்கு மனசாந்தி கிடைத்து "பாஸ்! உங்ககூடச் சேர்ந்ததில இதுவரை எத்தனை அபாயம்னு யோசிச்சுகிட்டு இருந்தேன். மொத்தம் நூத்திப்பத்து . . ."

கணேஷ் கண்ணாடி வழி பார்த்தான். அந்த விளக்குகள் அவனைத் தொந்தரவு செய்தன.

"என்ன பாஸ்?"

"நூத்திப் பதினொண்ணாவது."

# 32

விளக்குகள் பிடிவாதமாக ரியர்வ்யு மிர்ரரில் தெரிந்தன. மரியாதையான தூரத்தில், கடக்க விருப்பமின்றி மானசீக நூறு மீட்டர் சங்கிலியால் இணைத்தது போல அந்தக் கார் அவர்களைத் தொடர்ந்தது.

"வசந்த்! நாம இருக்கற இடம் அவங்களுக்குத் தெரிஞ்சுபோய் மறுபடி ஃபாலோ பண்றாங்கடா."

"மறுபடியும்னா."

"புறப்படறப்ப ரெட் ஹில்ஸ்லருந்து ஒரு பார்ட்டி ஃபாலோ பண்ணி அவங்களை உதுத்துட்டுத்தான் வந்தேன்."

"கொஞ்சம் நிறுத்துங்க. விசாரிக்கலாம்."

நிறுத்தினதும் அந்தக் காரும் நின்றது. அதன் ஹெட் வெளிச்சம் அவிந்துபோய், சிகரெட் நெருப்பு இருட்டில் தெரிந்தது.

"என்ன பண்ண?"

"இருட்டில் புறப்படலாம். எல்லா விளக்கையும் அணைச்சுருங்க."

"இல்லை வசந்த். கிட்டப் போய் விசாரிக்கலாம்."

"பாஸ் அம்பேல்! இப்பதான் கத்திக்குத்து இன்னபிற அபாயங் களுக்கெல்லாம் உள்ளாகி எங்கம்மா செய்த பூஜா பலன்களால பிழைச்சு எழுந்திருக்கேன்."

"சரி, நீ இரு. நான் போறேன்.

"இருட்டிலயா?"

"காலைல வரை காத்திருக்க முடியாது."

"இது என்ன இடம் பாஸ்?"

"என்னவோ குண்டா."



கணேஷ் மெல்ல அந்த சிகரெட் நெருப்பை அணுகினான். பிஸ்டல் சுட்டால் அடிபடாத தூரத்தில் நின்றான்.

மௌனம்...

மௌனம்...

கணேஷ் சப்தமே போடாது சாலையின் மருங்கில் இறங்கி அந்தக் காரை அணுகினான். கறுப்பு விளிம்பு தெரிந்தது. அவர்கள் உள்ளே ஸ்டீரியோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். உன்னிப்பாக முன்னால் இருக்கும் காரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கணேஷ் மூச்சைக்கூட அடக்கி காரின் அடி அருகே வந்து படுத்துக்கொண்டான். அம்பாஸடர் கார். பின்னால ஃப்யுயல் டாங்கிலிருந்து பைப் போகும் பாதையைக் கையால் நிரடிப் பார்த்துக் கொண்டான். நல்ல வேளை, ஒரு பகுதி ரப்பரோ, ப்ளாஸ்டிக்கோ ஜாயிண்ட் போட்டிருந்தது. கணேஷ் பதற்றப்படாமல் அந்தப் பகுதியைப் பிளந்துவிட்டான். மறுபடி சாலையின் மருங்கில் சரிந்து நழுவித் தன் காருக்கு வந்தான்.

"என்ன பாஸ்?"

"காரியம் முடிஞ்சது, புறப்படு."

"என்ன பண்ணிங்க?"

"பெட்ரோல் சப்ளையைப் புடுங்கிவிட்டேன். கார்பரேட்டர்ல இருக்கிறதில ஒரு கிலோமீட்டர் தாங்கும்."

"கில்லாடி பாஸ் நீங்க. நான், சண்டை போடப் போறீங்க... டிஷ்யும் டிஷ்யும்னு நினைச்சுக்கிட்டேன்."

"அதெல்லாம் தேவைப்பட்டாதான் செய்யணும் வசந்த்!"

"நான் என்னைக் கத்தியால குத்தின ஆசாமியை விரையடிச்சாத் தான் ஆத்மசாந்தி அடையும் பாஸ்! பின்னாலர்ந்து அதும் ஒரு பெண்ணை அல்ஜிப்ரா பண்ணிட்டிருக்கறபோது குத்தறது கோழைத் தனம் இல்லையா?"

கார் கிளம்ப, பின் காரும் விசுவாசமாகத் தொடர, கணேஷ் அரிதாக விசில் அடித்தான்.

சற்று நேரத்தில் அந்தக் கார் நின்றிருக்க வேண்டும். பின்னால் வரவில்லை.

விஜயவாடாவின் சித்திர எழுத்துக்களாக சினிமா விளம்பரங் களும் எலக்ஷன் மிச்சங்களும் ட்யுட்டோரியல் விளம்பரங்களும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்க, அங்கங்கே காந்தி சிலைகள் அழுக்காக நின்றுகொண்டிருக்க, "ஒரு நிமிஷம் ஸ்டேஷன்ல போய் விசாரிச்சுட்டு வந்துர்றேன் பாஸ்! பாரதி இருக்காளான்னு."

"வேற வேலையில்லை. முதல்ல அந்தப் பெண் விலாசம் இருக்கு கேட்டுட்டு போகணுமா, இல்லையா?

"ஆமா, பாஸ். அதான் முதல் கடமை." காந்திநகர் என்னும் புதிய நெல் வயல்களைக் கூறு போட்டுப் பிரித்த குடியிருப்பில் இருந்தது அந்த வீடு. வாசலில் நாய் கட்டியிருந்தது.

இவர்களைப் பார்த்ததும் பெரிசாகக் குரைக்க ஆரம்பித்தது. அதை அதட்டிக்கொண்டே ஒருவர் வந்தார். பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு குடுமியும் இல்லாமல் கிராப்பும் இல்லாமல் மீசையில் அங்கங்கே நரைமயிர் தோன்ற, "எவரு" என்றார்.

வசந்த், "வி ஆர் ஃப்ரம் மெட்ராஸ், வசந்த், கணேஷ்—லாயர்ஸ்."

"லாயர்ஸா? ஏமிட்டி?"

"பாஸ், ஏமிட்டினா?"

கணேஷ் "மிஸ்டர், இங்க மாயான்னு ஒரு பெண் வந்தாளா?"

"லே தண்டி."

"உங்களுக்கு ஒரு பெண் இருக்கா. பேர் ஏமி?

அவர், "ஐ ஹேவ் நோ டாட்டர். ஒன்லி ஸன் இன் ராஜ்மண்ட்ரி" என்றார்.

வசந்த். "பாஸ், அட்ரஸ் தப்பா வந்துட்டமா."

"இதானே சாந்தி நகர்."

"இதே."

"நம்பர் தர்ட்டிஸிக்ஸ்?"

"தர்ட்டிஸிக்ஸ்."

"இங்க துர்கான்னு ஒரு பெண் இல்லை? பாஸ். என்ன பேரு துர்க்காதானே?"

"ம்ஹூம்" என்று அவர் தலையாட்ட . . .

"பாஸ், எங்கேயோ தப்பு. தகவல் தப்பு. அட்ரஸ் சரியா கேட்டு வெச்சுக்காம வந்திருக்கிங்க."

"பாவி! நீதானேடா குறிச்சுக் கொடுத்தே."

"இப்ப என்ன பண்ணுவது மிஸ்டர் ரங்காராவ்? இங்க ஏதாவது போஜனம் கிடைக்கிற இடம் இருக்குமா? 'முப்பது நாளில் தெலுங்கு' புஸ்தகமும் பெட்டியோட போய்டுச்சு."

அவர் சிக்கலாகத் தெலுங்கில் சொன்னார். அது ஓட்டலுக்கு அடையாளமா, போலீஸ் நிலையத்துக்கா என்பது புரியவில்லை. அருகே சின்னப் பையன்கள் கூட்டம் கூடிவிட கணேஷும், வசந்தும் மெதுவாக நடந்தார்கள்.

கணேஷ் திரும்ப விரக்தியுடன் புறப்பட்டு, தூரம் போய் ஒரு பெட்டிக் கடையில் ஒதுங்கி, அருகே இருந்த மரபெஞ்சில் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன பாஸ் உக்காந்துட்டீங்க?"



"அந்தாளை சரியா பார்த்தியா?"

"பார்த்தேன். ரங்காராவ் மாதிரி இருந்தான்."

"அவன் நேரா நம்மைக் கண்ணில பாத்து பதில் சொல்லலை பாரு."

"அர்த்தம் என்ன?"

"எதையோ மறைக்கிறான்."

"அதனால மறுபடி போய் ரங்காராவை ரெண்டு உலுக்கு உலுக்கிட்டு வரட்டுமா."

"முதல்ல திரும்பப் போகலாம். அப்புறம் உலுக்கலாம், தேவையிருந்தா."

போனபோது அவர் டெலிபோன் மூலம் பேசிக்கொண்டிருந்தார். ஒரு காதில் விரல் வைத்து இரைச்சலாகவே பேசிக்கொண்டிருந்தார்.

"ஸார் நேனு சச்சநாராயணா பேசுகிறன் . . . ரெண்டு ஆளு அந்தப் பெண்ணைத் தேடி வந்துவிட்டார்கள்."

"ஆமாம். கணேஷ், வசந்த் பேர் சொன்னாங்க."

"டாக்டர் விட்டிருக்கேன் ஸார்."

"ஸார் அது நம்மால் ஆகிறதில்லை ஸார். எம் பெண் . . . எம் பெண்ணை பொண்ணுக்கு என்னா தெலுங்கு."

"இன்னொரு தடவை அடி. தமிழு புரிஞ்சுப்பார்."

"சொல்லு. நாங்கள்ளாம் மெட்ராஸ்காரங்க. அதிகம் டயம் எடுக்க மாட்டோம்."

"ஆஸ்பிட்டல், சாந்தி ஆஸ்பிட்டல்."

சாந்தி ஆஸ்பத்திரி இரைச்சலாக இருந்தது. தரையெல்லாம் பாய் போட்டு பெண் நோயாளிகள் படுத்திருக்க, சூப்ரண்டு போஜனத்துக்குப் போயிருந்தார். அவரை ரூமில் மடக்கி கணேஷ், " வி ஆர் ஆபீஸர்ஸ். ஸி.பி.ஐ. ஆபீஸர்ஸ் ஃப்ரம் மெட்ராஸ்" என்று சொல்லி, "இங்கே ஒரு பெண் சேர்க்கப்பட்டிருக்கிறாள். அவள் வேண்டும்."

"பெயர்?"

"மாயா."

அவர் ரிஜிஸ்தரைப் பார்த்து . . .

எட்டாம் நம்பர் வார்டில் தரையில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்தாள்.

"பாஸ் இவதான்" என்றான் வசந்த்.

"எப்படி சொல்றே?"

"தலையில கட்டு பாருங்க."

"மாயா?"

அவள் திரும்பவில்லை.

"துர்கா" என்றான் வசந்த்.

திரும்பினாள்.

"வா."

அவள் புரியாமல் விழிக்க . . .

"வீடு தெரியாது . . .? இண்ட்டி இண்ட்டி" என்றான் கணேஷ்.

மாடியிலிருந்து பால்கனி வழியாகப் பார்க்க, அந்த மாருதி கார் வந்து நிற்பதையும் இரண்டு பேர் அவசரமாக இறங்குவதையும் கவனித்தான். அவர்கள் சூப்ரண்டிடம் விசாரிக்க, அவர் மேலே எட்டாம் நம்பர் வார்டு பக்கம் சைகை காட்ட . . .

"வசந்த்! பேச நேரமில்லை. ஆளுங்க வந்தாச்சு. வெளிய வா. சீக்கிரம்."

கணேஷ் வார்டின் கதவில் மாட்டியிருந்த ப்ளாஸ்டிக் போர்டைப் பார்த்தான். வார்டு எண் 8 என்று எழுதியிருந்தது. அதை எடுத்து வார்டின் போர்டுடன் மாற்றினான்.

"வசந்த்! சீக்கிரம் . . . அதோ அந்தப் பொண்ணுகிட்ட போய் நில்லு."

அவர்கள் வந்து, "எங்கே மாயா?" என்று கேட்டனர்.

"நாங்களும் அதைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறோம்."

"எட்டாவது வார்டு போங்கடா, போங்கடா."

"தேடிப்பாருங்க."

எட்டாவது வார்டில் அவர்கள் நுழைய வசந்த் ஒரு பெண்ணின் அருகில் நிற்பதைக் கண்டு, "இவதான் இவதான்" என்றான் அவசரமாக. அந்தப் பெண்ணைத் தரதரவென்று இழுத்துச் சென்றனர்.

அவள் வார்டே எதிரொலிக்க வீறிட, அவர்களில் ஒருத்தன் அனாவசியமாகக் கத்தி காட்டி பயங்காட்டி, அவளை மாடிப்படிகளில் இழுத்துச் சென்றான்.



# 33

"பாஸ் எத்தனை தடவை உங்களுக்குக் கை கொடுக்கறது? எட்டாம் நம்பர் வார்டு போர்டையே மாத்திட்டீங்களே."

அவர்கள் அந்தப் பெண்ணைத் தரதரவென்று இழுத்துச் செல்வதை பால்கனி வழியாகப் பார்த்து கணேஷ், "அவங்க மாயாவை முன்ன பின்ன பார்த்ததில்லைபோல இருக்கு. ரொம்ப நேரம் தாங்காது. அது போடற கூச்சல்ல போலீஸ்காரங்க மீட்டுருவாங்க. அதுக்குள்ள ஏதாவது செய்தாகணும். வசந்த்! அந்த தெலுங்கு பெண் பேரு துர்கா இல்லை நர்மதா. இப்பதான் குறிப்பைப் பார்த்தேன்.

"இப்ப என்னங்கறீங்க. நர்மதா எங்க இருப்பாங்கறீங்க?"

கணேஷ் வானத்தைப் பார்த்தான்.

"அய்யோ."

மாயா இவர்கள் சொல்வதையெல்லாம் கவனிக்காமல் ஒரே திசையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன ஒரு சோகம் பார்த்தீங்களா? இவ்வளவு அழகான பொண்ணு ஒரு வார்த்தை பேசாம பங்கியடிச்சாப்பல உட்கார்ந்திருக்குது. வரியாம்மா மாயா."

"வசந்த்! ஜாக்கிரதை."

வசந்த் அவளருகில் செல்ல, மாயா அவன் கையைப் பிடித்துக் கடித்தாள். வசந்த் சுள்ளென்று உதறிக்கொண்டு, "கடிக்காதே, கடிக்கக் கூடாது. கெட்ட கோபம் வரும். வலிக்குதில்லை?"

மாயா தெலுங்கில் ஏதோ சொல்ல . . .

"கிரகசாரம். தெலுங்கு வேறயா."

அப்போது கணேஷ் டாக்டரை அழைத்து வந்தான். "டாக்டர் ராஜு, இங்க சர்ஜிக்கல் வார்டு இருக்கா?"

"இருக்கிறதே. என்ன வேண்டும்?"

"இந்தப் பெண்ணுக்கு ஒரு மைனர் ஆப்பரேஷன் செய்ய வேண்டும்."

"யார் இந்தப் பெண்?" மாயாவைக் கிட்டத்தில் வந்து பார்த்தார்.

"தள்ளியே இருங்க, கடிப்பா."

"மீ பேரு ஏமி?"

"மாயா" என்றான் வசந்த்.

"நர்மதா" என்றாள் மாயா.

வசந்த் டாக்டரைப் பார்த்து, "ஸார். அது பெரிய கதை. இவள் மண்டைக்குள் ஓர் அந்நியப் பொருள் விதைக்கப்பட்டிருக்கிறது. அதன் பாதிப்பில் இவள் ஞாபகங்கள் குழப்ப நிலையில் இருக்கின்றன. அந்தப் பொருளை முதலில் நீக்க வேண்டும்."

"இந்த ஆஸ்பத்திரியில் ப்ரெய்ன் சமாச்சாரம் எதும் செய்வதில்லை. அதற்கு சென்னையில் ஸி.எம்.ஆர்.ஐ என்ற ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது."

"போச்சுரா" என்றான் வசந்த், கணேஷைப் பார்த்துக்கொண்டு.

"பார்டன்?"

"டாக்டர்! இந்தப் பெண் அங்கிருந்துதான் வந்திருக்கிறாள். அங்கே செய்த பரிசோதனைக் கோளாறினால்தான் இந்த நிலைக்கு வந்துவிட்டாள், என்னங்கறீங்க?"

"மேலாகத்தான் பொருத்தியிருக்கிறார்கள் போல." டாக்டர் அவள் தலையின் பக்கவாட்டில் பொருந்தியிருந்த ப்ளாஸ்திரியை ஆராய்ந்தார்.

"அவசரமாகச் செய்ய வேண்டுமா? ஏதோ 'பேஸ் மேக்கர்' மாதிரி இருக்கிறது."

"அப்படித்தான் தோன்றுகிறது."

"எதற்கும் ஸூப்ரண்டிடம் ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள்."

ஸூப்ரண்டிடம் சென்றபோது நர்மதாவின் தகப்பனார், போனில் பேசிய அந்த 'சச்ச நாராயணா' காத்துக்கொண்டிருந்தார்.

"ஏமண்டி இங்கயும் வந்தாச்சா" என்றான் வசந்த்.

அவர், "எனக்கு எதுவுமே புரியவில்லை. இப்போதுதான் போன் செய்தார்கள், நீங்கள் இருவரும் ரொம்ப மோசமானவர்கள் என்று."

"ஸார் உங்க பேர் என்ன?"

"சத்யநாராயண ராவ்."

"ராவ்காரு ஒகபணி சேஸி ..."

"என் நர்மதா எங்கே? இந்தப் பெண் யார்? ஒன்றுமே புரியலையே."

"என்ன நடந்தது சொல்லுங்க."



"கொஞ்ச நாள் முன்னால் இந்தப் பெண் திக்பிரமை பிடித்தவள் போல பஸ் ஸ்டாண்டில் என் வீட்டை விசாரித்துக்கொண்டிருந்தா ளாம். நரசிம்மம் வந்து சொன்னான். போய்ப் பார்த்தால் நர்மதா என்று என் பெண்ணைப் போலவே பேசுகிறாள். அத்தனை ஞாபகங்களும் இருக்கின்றன. சின்ன வயசில் ஜாண்டிஸ் வந்ததெல்லாம் சொல்கிறாள். ஆனால் இவள் நர்மதா இல்லை."

"தெரியும் நர்மதா, உங்கள் பெண் எதற்கு சென்னைக்குப் போனாள்?"

"அங்கே ஓர் ஆராய்ச்சி சாலையில் நல்ல வேலையில் இருக்கிறாள். அடிக்கடி போன் பேசுவாள். நேற்றுகூடப் பேசினாள். அவள் தான் சொன்னாள்–இந்தமாதிரி ஒரு பெண் என் பெயரைச் சொல்லிக் கொண்டு வருவாள். ஆபத்தானவள். அவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடு. மதராஸிலிருந்து பார்ட்டி வருவார்கள், அவர்களிடம் ஒப்படைத்துவிடு என்று. நீங்கள்தான் அந்த பார்ட்டி என்று நினைத்துக் கொண்டிருந்தால் மறுபடி சாரங்கபாணியிடமிருந்து போன் வந்தது. நீங்கள் கெட்ட சனங்கள் என்று ... ஒரே குழப்பம். எனக்கு நர்மதாவைப் பார்க்க வேண்டும்போல இருக்கிறது."

"பாஸ் சொல்லிடலாமா" என்றான் வசந்த்.

"இப்ப வாண்டாம். இருக்கிற குழப்பம் போதும்.

"நீங்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?"

"ராவ்காரு கொஞ்சம் சமாதானமாக இரண்டி. மதராஸ்லே எல்லாம் பேசிக்கலாம். நர்மதாவைப் பார்க்கலாம். பத்திரமாக வெச்சிருக்காங்க லெனின் மாதிரி."

ஸூப்ரண்டு வெளியே வந்தார். "மிஸ்டர் கணேஷ்! எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தோம். ஸப்க்யுட்டேனியஸாத்தான் பொருத்தி யிருக்காங்க, எடுத்துரலாம். ஆனா நீங்க இந்தப் பெண்ணுக்கு என்ன உறவு?"

"ஏன்?"

"இவங்க பேரண்ட்ஸ் சம்மதம் வேணும்."

"டாக்டர்! இந்தப் பெண் பேரு மாயா. ஸி.எம்.ஆர்.ஐ. கேள்விப்பட்டிருப்பீங்களே."

"சொல்லுங்க."

"அங்க ஒரு லாப் அஸிஸ்டெண்டா சேர்ந்தபோது இவமேலே டவுன் லோடிங்னு ஓர் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்காங்க. மண்டைக் குள்ள 'சிப்'பை வெச்சு வேறு ஒரு பெண்–இதோ ஸார் இருக்காரே, இவர் டாட்டரோட ஞாபகங்களை மாத்தியிருக்காங்க."

"இதெல்லாம் சயன்ஸ் ஃபிக்ஷன் மாதிரி இருக்கு நீங்க சொல்றது."

டாக்டர் லேசான கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தார்.

ஃப்ளாஸ்கிலிருந்து காப்பி ஊற்றி "சாப்பிடறீங்களா" என்றார். தமிழ் பேசினார் கொச்சை கொச்சையாக.

"இல்லை டாக்டர்."

"ஒண்ணு பண்ணுங்க. பேரண்ட்ஸை அழைச்சுட்டு வாங்க. அப்புறம் லீகலா எதும் சிக்கல் வரக்கூடாது, பாருங்க."

"டாக்டர்! இந்தப் பொண்ணு ஒரு விபத்தில காஷுவால்ட்டியில் அட்மிட் ஆகியிருக்கான்னு வெச்சுக்கங்க. அட்மிட் ஆகி மண்டைல ஏதோ ஃபாரின் பாடி பதிஞ்சிருக்கு இரும்புத்தூள் மாதிரி. அப்ப என்ன செய்வீங்க? உடனே எடுத்துருவீங்க இல்லை? அந்த மாதிரி வெச்சுக்கங்க. நான் மதராஸ்க்கு கால் போட்டு அவங்களை வரவழைக்கிறேன். அதுக்குள்ள ஆப்பரேஷனுக்குத் தயார் பண்ணிடுங்க" என்றான்.

டாக்டர் யோசித்து, "லெட் மி ஸீ" என்றார்.

மாயா தலைமேல் வளர்ந்திருந்த பூக்களை ஒவ்வொன்றாகப் பறித்தாள். ஒவ்வொரு தடவை பறிக்கும்போதும் கொஞ்சம் வலித்தது. ஆனால் வலி இதமாகத்தான் இருந்தது. காம்போடு வந்த பூவின் அடிப்பாகத்தில் ரத்தம் இருந்தது. தெலுங்கு ரத்தம். சுனில் அவள் கையைப் பிடித்து மணல் சரிவில் அழைத்துச் செல்ல, மாயா எந்தக் கதவைத் திறந்தாலும் புறப்பட்ட இடத்துக்கே வந்தாள். போன் மட்டும் கேட்டுக்கொண்டிருக்கிறது. எந்த அறையில் அடிக்கிறது என்று தெரியவில்லை. அடிக்கட்டும் என்று விட்டு விட்டாள். "அலோ மாயா! நான் யார் பேசறேன் தெரியுமா?" என்று போன் கேட்டது தானாகவே.

"நர்மதா."

"நான் நர்மதா இல்லை. மேனகா."

"எங்க இருக்கே?"

"உன்னுள்ளயே."

"நீ அமெரிக்கால இல்லையா?"

"இங்கதான் இருக்கேன். உனக்கு ரொம்ப கிட்டத்தில். பக்கத்து ரூமுக்குள்ளயே, மிருணாளினி கிட்ட சாவி இருக்கு."

"மாயா! என்னை வந்து பார்த்த இல்லை. ஏன் பேசாம போய்ட்ட?"

"எப்ப பார்த்தேன் அக்கா, நான் உன்னை?"

"என்னை வந்து பார்க்கலை?"

மடிப்பாக இருந்தது அந்த இடம். ஒரு மடிப்பிலிருந்து மற்றொன்று பத்து மைல் இருக்கும் போல இருந்தது. யாவும் ரோஜா வண்ணத்தில் சற்று ஈரமாக இருந்தன. தொட்டுப் பார்த்தால் கையில் ஒட்டிக் கொண்டது.



"இது என்ன சுனில்?"

"மூளை."

"என் மூளைல நான் நடக்க முடியுமா?"

"முடியும். உன் வாயிலே நீ புகுந்துகொள்ள முடியும். உன் வயிற்றிலேயே நீ சாப்பிட முடியும். எல்லாம் டவுன்லோடிங்."

டாக்டர் சாரங்கபாணி 'ஆமாம்' என்றார். நரேந்திரநாத் கூட 'ஆமாம்' என்றார். 'மாயா மாயா' என்று கையைச் சொடக்கினார்கள்.

'வா மாயா' என்று அழைக்க அவள் எழத் தொடங்கினாள். ஆனால் எழ முடியாமல் அந்தப் பிரதேசத்தின் பிசின் அவள் காலில் ஒட்டிக்கொண்டு அவளை இழுத்து, கையை, காலை அசைக்க வேண்டும் என்று இச்சை இருந்ததே தவிர முடியவில்லை. கடைசியில் வாழ்நாளில் உள்ள அத்தனை பலத்தையும் அத்தனை வைராக்கியத்தையும், சேகரித்துக்கொண்டு ஒரே ஒரு திமிராகத் திரட்டி, பிடுங்கித் தன்னை விழிப்பித்துக்கொண்டாள்.

"ஹாய்" என்றான் வசந்த். "எப்படி இருக்கீங்க?"

சன்னலில் வைத்திருந்த மலரைப் பார்த்தாள்.

"வாட்ஸ் யுவர் நேம்?" என்றார் டாக்டர்.

"மாயா ரங்கநாத்."

"ஷி'ஸ் ஆல்ரைட் தென" என்றார் டாக்டர்.

சுனில் தெரிந்தான். "என் கண்ணே!" என்று அம்மாவின் விசும்பல் கேட்டது. "மாயா, எப்படி இருக்கே?" என்று அப்பாவின் குரல் கேட்டது.

"மேனகா வல்லையா" என்றார்.

"மாயா, ஆர் யு, ஆர் யு ஆல்ரைட்? இது எத்தனை விரல்?"

அவளருகே வெண்மையான பேசினில் அவள் மண்டைக்குள் பொருத்தப்பட்டிருந்த சிலிக்கன் சதுரம் அனாதையாக, அதன் பேட்டரி சக்தி இழந்து அடிபட்ட வண்டுபோலக் கிடந்தது. டாக்டர் அதை எடுத்து அவளிடம் காட்டி "இதாலதான் ஆச்சு" என்றார்.

மாயா சுனிலின் கையை எடுத்துப் பத்திரப்படுத்திக்கொள்ள, வார்டின் மறுமுனையிலிருந்த போன் ஒலிக்க, அங்கிருந்த சிஸ்டர் எடுத்துக் கேட்டு, "யாரும் மாயான்னு இருக்காங்களா? அவங்களுக்கு போன்."

"யார் கிட்டருந்து?" என்றான் வசந்த்.

"அவங்க அக்காவாம் – மேனகா."

# 34

மேனகாவிடமிருந்து போன் வந்திருக்கிறது என்றதும் கணேஷ் வசந்தை அர்த்தத்துடன் பார்த்தான். வசந்த், "பாஸ்! நான் போய் விசாரிக்கிறேன்" என்று சொல்லி வார்டின் மறுமுனையில் வைத்திருந்த போனை எடுத்துப் பேசினான்.

"மாயா?"

"ஸ்பீக்கிங்." வசந்த் குரலை மாற்றிக்கொள்ளவில்லை.

"மாயா! நான் மேனகா பேசறேன்."

"பேசு மேனகா."

"அவங்க சொல்றது எதையும் நம்பாதே. டாக்டர் சாரங்கபாணி வர்றவரைக்கும் எதும் சொல்லாதே. அவர்தான் உன்னைக் குணம் பண்ணக்கூடியவர்!"

"இந்தக் கதைதானே வேண்டாங்கறது, நைனா? அசரீரி! நீ யாராயிருந்தாலும் சரி. ஒண்ணு மட்டும் நல்லாத் தெரியும். மேனகா இல்லை, மேனகாவுக்குப் பதிலா யாரோ பேசறீங்க. தெரிஞ்சு போச்சு. பூனைக்குட்டி சாக்லருந்து வெளிய வந்துருச்சுன்னு சொல்லிடு. சாரங்கன்கிட்ட இதோ வந்துகிட்டே இருக்கோம்னு சொல்லு, என்ன?"

"சரி குட்பை" என்று போன் தொடர்பறுந்தது.

"இதபார்றா" என்று வசந்த் அதை வைத்துவிட்டு கணேஷிடம் வந்து, "பாஸ்! மேனகா போன் பண்றாப்பல பாவ்லா, அது பாட்டுக்கு ஏதோ பேசுது. மெஷின்னு நினைக்கிறேன்!"

"அது வாய்ஸ் சின்தஸிஸ்ஸா இருக்கலாம். அப்பவே அதில நிறைய பரிசோதனைங்க பண்ணிக்கிட்டு இருந்தாங்க" என்றான் சுனில்.

மாயா கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருக்க, அம்மா அவள்



தலையைத் தடவிக்கொண்டிருக்க ரங்கநாத், "அதுக்குத்தான் சொன்னேன்" என்று உளறிக்கொண்டிருந்தார்.

"மாயா எழுந்திருக்க முடியுதா பாரு."

"முடியலை. தலை சுத்தறதுங்கறா."

"சுனில்! நீங்கதானே பாய் ஃபிரண்டு? இதான் சான்ஸ். கைத்தாங்கலா பிடிச்சு கட்டில்லயிருந்து இறக்குங்க. சென்னை வரைக்கும் ஆசுவாசப்படுத்தலாம். ரூபா வெச்சிருக்கீங்க இல்லை? ரொம்ப செலவு."

மாயா, மாயாவின் பெற்றோர், சுனில் அனைவரும் டாக்ஸி ஏற்பாடு செய்துகொண்டு புறப்பட கணேஷும் வசந்தும் காரில் அவர்களைப் பின்பற்றினார்கள்.

"பாஸ்! ஆதியோடந்தமா சொல்லுங்க. திரைக்கதை வசனம் ரொம்ப குண்ஸா இருக்குது."

"என்ன தெரியணும்?"

"மேனகாங்கறது?"

"மாயாவுடைய அக்கா, அமெரிக்காவில இருக்கிறதா நம்ப வெச்சிருக்காங்க."

"தெரியுது. வாய்ஸ் சின்தஸிஸ்னு சொன்னாங்க."

"இப்ப கொஞ்சம் கொஞ்சமா துண்டுகளை ஒட்ட வெக்க முடியறது வசந்த் மேனகா முதல்ல வேலைக்குச் சேர்ந்திருக்கா. அவ மேல முதல்ல பல சோதனை செய்திருக்காங்க. அது பெயில் ஆய்டுச்சு. அவளுக்கு என்னவோ ஆயிருச்சு. அவளுக்கு ஒண்ணும் ஆகலைன்னு நம்பவெக்க வாராவாரம் அவ குரல்ல போன் பண்ணிகிட்டே இருந்திருக்காங்க. இவ்வாறு பலமுறை போன் கால் வந்துண்டு, குரல்கூட அதே மாதிரி இருந்தா அமெரிக்காவில இருக்கான்னுதானே நம்புவோம்."

"மேனகா அப்பவே காலிங்கறிங்க? பாஸ்! அந்த ஆராய்ச்சிக் கிடங்கில பிறை பிறையா பெண்கள் என்னவோ திரிசமம் பண்ணிக்கிட்டிருக்காங்க. அவங்க யார்?"

"இனிபிக்ஸ்னு சொல்வாங்களே, அந்த மாதிரி பெண்களின் மூளையில 'சிப்'பைப் பதிச்சு எண்ணங்களை மாற்ற சோதனை. அதான் திருப்பித் திருப்பிச் செய்து பார்த்திருக்காங்க. அவங்கள்ளாம் மூளை பாதிக்கப்பட்டு அரை உயிரும் கால் உயிருமா பிறைல படுக்க வெச்சுட்டாங்க."

"ஆட்டோ சங்கருக்கும் இந்த ஆளுக்கும் என்ன பாஸ் வித்தியாசம்?"

"குவைத்தை விடுதலை பண்றதா சொல்லி இராக்கை அழிச்சிட்டிருக்காங்களே அவங்களைக் கேக்கவா முடியறது? விஞ்ஞானம், யுத்தம் இது ரெண்டிலயும் எந்த பாவமும் மன்னிக்கப்படும்."

விஜயவாடா நகரைப் புறக்கணித்துவிட்டு கார் நெடுஞ்சாலையில் செல்ல வசந்த் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு, "பாஸ்! போன உடனே ராஜேந்திரன்கிட்ட சொல்லிட்டு . . ."

"முதல்ல போய்ச் சேரலாம். அந்த வேன் பாரு நம்மையே சில மணி நேரமா தொடர்ந்து வந்துகிட்டு இருக்கு."

"ஆ . . . ஆமாம் பாஸ்!"

"சென்னையிலிருந்தே என்னையும், உன்னையும் துரத்திகிட்டு வந்திருக்காங்க. உன்னை ரயில்ல கொல்ல முயற்சி. என்னை சாலையில தொடர்ந்து ஆக்ஸிடெண்ட் பண்ண."

"இப்ப என்னங்கறீங்க."

அம்பாஸிடர் டாக்ஸி இடைப்பட்ட ஊரின் டீக்கடையில் நின்றது.

கணேஷ் அவர்களைப் பின்னால் நிறுத்தி, "என்ன விஷயம்?" என்றான்.

"தாகமா இருக்கு, சோடா சாப்பிடலாம்னு"

அப்போது அவர்களைக் கடந்து சென்ற வேன் சட்டென்று நின்றது.

வசந்தும் கணேஷும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்த போது அதிலிருந்து இருவர் இறங்கி மௌனமாக அவர்களை நோக்கி வந்தார்கள்.

முரடர்கள். லுங்கியை இறுகக் கட்டியிருந்தார்கள். அதில், ஏதாவது ஆயுதம் நிச்சயம் ஒளித்து வைத்திருக்க வேண்டும்.

கயிற்றுக் கட்டிலை வெளியில் கொண்டு வந்து மடக்கிப் போட்டு 'கடக்கா' என்று ஆர்டர் செய்தார்கள். ஒருவன் மீசையை நீவிவிட்டுக் கொண்டே வசந்தைப் பார்த்தான். "செமத்தியா அடி வாங்கின இல்லை. முழுக்க சாக விருப்பமா?" என்றான்.

"சாக அடிக்கத்தான் விருப்பம் குரு" என்றான் வசந்த்.

"வசந்த்! டோண்ட் டாக்." கணேஷின் கண்கள் அவர்களின் ஒவ்வொரு சலனத்தையும் கவனித்தன.

கணேஷின் அருகில் வந்து, "பெட்ரோலைப் பிடுங்கிவிட்டா?" என்றான்.

"நீங்க என்னா சொல்றீங்கன்னே புரியலே."

"புரியலையா, புரிய வெக்கட்டுமா?" என்ற தகர நாற்காலியை ஒருவன் எடுக்க மற்றொருவன் சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு நாட்டுத் துப்பாக்கியை உருவி கணேஷை நோக்கி நிதானமாகக் குறி வைத்து.

"பாஸ்! லுக் அவுட் . . ." என்று கத்துவதற்குள் சுட்டுவிட்டான்.

கணேஷ் அப்படியே மார்பைப் பிடித்துக் கொண்டு "அய்யோ" என்று விழ, வசந்த் சட்டென்று பெஞ்சுக்கடியில் ஒளிந்துகொள்ள,



மாயாவும் மற்றவர்களும் வீற்றிருந்த வண்டியை நோக்கி அவர்கள் சென்று ஒரு வீச்சில் சுனிலை வீழ்த்தி, ரங்கநாதத்தைத் தள்ளிவிட்டு, அம்மாவின் அலறலைப் பொருட்படுத்தாமல் மாயாவைத் தம் வண்டிக்குள் தரதரவென்று இழுத்துக்கொண்டு செல்ல, அவர்கள் இன்ஜின் உயிர் பெற்றுக் காத்திருந்த வண்டி உடனே புறப்பட்டு புழுதிப் படலத்தில் மறைந்தது.

வசந்த் வெளிப்பட்டான். கந்தகப் புகை வாசனை இன்னும் விரவியிருந்தது. "பாஸ் பாஸ் போய்ட்டிங்களா! அய்யோ" என்று கணேஷைப் புரட்டினான்.

"ரத்தம் இல்லையே என்னடாது."

கணேஷ் எழுந்து, "ஒரு விதத்தில இதை எதிர்பார்த்துத்தான் 'வெஸ்ட்' போட்டுக்கிட்டேன். படலை. என்ன ஆச்சு? எல்லாம் கோட்டை விட்டுட்டீங்களா".

"மாயாவைக் கடத்திட்டுப் போறாங்க." சுனில் அவர்களிடம் ஓடிவர, "என்ன ஹீரோ? நீங்க சண்டை போட்டு காதலியைக் காப்பாற்றியிருக்க வேண்டாமா?

"துப்பாக்கி சப்தம் கேட்டுச்சே, யார் அடிபட்டாங்க?"

"பாஸ்தான்."

"எழுந்துட்டாரே."

"காயகல்பம் சாப்ட்டிருக்காரு. பொழைச்சுட்டாரு."

அம்மா, "அய்யோ என் பொண்ணு, என் பொண்ணு" என்று அலறினாள்.

"கவலைப்படாதீங்க, பிடிச்சுரலாம். வசந்த நம்பர் நோட் பண்ணிட்டியா?"

"மட்டடார் வேன் பாஸ்! தமிழ்நாடு ரிஜிஸ்ட்ரேஷன் 4545."

"வசந்த்! காரை எடு. சுனில்! இங்கேயே இருங்க. மரத்தடியில அம்மாவுக்கு ஆசுவாசப்படுத்திண்டு, நாங்க போய் வந்துர்றம்."

வசந்த் மாருதியை எடுத்து அலற வைத்து சீறிப்புறப்பட்டான்.

"இன்னும் அரை மணில பிடிக்கலை எதுக்காக இந்த ஜென்மம். ஜெய் சதாம் உசேன். பெல்ட் போடுங்க பாஸ்!"

மாருதி ஏதோ கார் ரேஸ் புறப்பாடுபோல புழுதியில் கிளம்ப கணேஷ் பெல்ட் அணிந்தான்.

ஒரு ஏபிடி பஸ், மூன்று லாரிகள், பிக்னிக் பார்ட்டி, ட்ராக்டர் இவற்றை முதல் நிமிஷத்தில் சாப்பிட்டான், அதன் பின் மூடவிருந்த ரெயில்வே கேட் தழைவதற்குள் சில செண்டிமீட்டர்களில் புகுந்து கடந்தான், 'மென் அட் வொர்க், டேக் டைவர்ஷன்" என்கிற பகுதியில் தொண்ணூறு கிலோ மீட்டருக்குத் தழைந்தான்.

"பிச்சுட்டடா" என்றான் கணேஷ். "அதோ மட்டடார்"

அது முயல்போலக் குதித்துக் குதித்துச் செல்ல, "பாஸ் என்ன பண்ணலாம்?"

"ஓவர்டேக் பண்ணாதே. எங்க போறான் பார்க்கலாம்."

"எங்கயாவது டீஸலுக்கு நின்னுதானே ஆகணும்."

மாறாக அடுத்த ஊரை அணுகுமுன் அந்த வேன் பாதை விலகி வரப்பை அடுத்த மண்பாதையில் சென்றது. தூரத்தில் ஒரு பண்ணை வீடுபோலத் தெரிந்தது.

"வசந்த்! இங்கேயே நிறுத்து. இனிமே ஃபாலோ பண்ணா சுலபமா தெரிஞ்சிரும்."

மரத்தடியில் நிற்க, கணேஷும் வசந்தும் இறங்கினார்கள்.

அந்த வேன் பண்ணை வீட்டின் அருகில் நின்றிருந்தது. மாயாவை அவர்கள் வெளியே இழுத்து, அந்த வீட்டுக்குள் பலவந்தமாக இழுத்துச் செல்வது தெரிந்தது.

அவர்கள் இருவரும் உள்ளே செல்வதும் தெரிந்தது. கணேஷும் வசந்தும் சாலையோர வரப்பில் இறங்கி சற்றே தழைவாக ஓடினார்கள். வீட்டின் பின்புறத்திற்கு வந்தனர். வாசலில் ஒருவன் வெற்றுப்பார்வை பார்த்துக்கொண்டிருந்தான். பின்னால் நழுவி ஜன்னலில் எட்டிப் பார்க்க, மாயாவை உட்கார்த்தி வைத்திருந்தார்கள், அவள் தலையை ஒருவர் ஆராய்ந்து கொண்டிருந்தார்.

"ஒண்ணும் செய்யப் போறதில்லை. மண்டையில என்ன பண்ணாங்க, சொல்லு. கட்டு புதுசா இருக்கு, எடுத்துட்டாங்களா சொல்லு."

"எனக்கு எதுவுமே ஞாபகமில்லை. என்னை விட்டுருங்க டாக்டர்! என்றாள் மாயா.

"விட்டுர்றேன். எத்தனை தெரிஞ்சாச்சு உனக்கு?"

"எனக்கு எதும் தெரியாது டாக்டர்."

டாக்டர் திரும்ப, சாரங்கபாணி!

இப்போது நாய் குரைக்க, "சோமு யாரு பாரு" என்றார்.



# 35

கணேஷ் ஜன்னலிலிருந்து பதுங்கிக்கொள்வதற்குள் ஒருவன் பார்த்து விட்டான்.

"டாக்டர் ... வந்துட்டாங்க."

"யாரு?"

"அதே ஆளுங்கதான். இரண்டு பேர்."

"என்னடா, சுட்டு வீழ்த்தினதா சொன்னே."

வசந்த், "டாக்டரே ...! அது என்ன விஷயம்னா, எங்க பாஸ் இருக்கார் பாருங்க. அவருட்ட சித்தர் ஒரு சூரணம் கொடுத்து வெச்சிருக்கார். அதைச் சாப்பிட்டா எந்த துப்பாக்கி சுட்டாலும் ..." என்று திறந்த ஜன்னல் வழியாக உள்ளே குதித்தான்.

டாக்டர் சாரங்கபாணி தலை கலைந்து, முகம் வியர்த்து, சிகரெட்டை சிகரெட்டால் பற்ற வைத்துக்கொண்டே, "ஷட் அப்."

கணேஷும், வசந்தும் ஹாலில் நுழைய, மாயா அவர்களை விழித்துப் பார்த்து, "வந்துட்டீங்களா? அய்யோ என்னைக் கூட்டிட்டுப் போங்களேன்"

சாரங்கபாணி அவர்கள் இருவரையும் நோக்கி, "நீங்க வந்ததும் ஒரு சௌகரியமா போச்சு. இங்கேயே இவங்களை டிஸ்போஸ் பண்ணிரலாம் குருநாத்." அவர் கைகள் நடுங்கின.

"தாராளமா" என்றான்.

"என்னது?"

கணேஷ், "டாக்டர்! உங்க அத்தனை ரகசியங்களும் வெளிய வந்தாச்சு" என்றான்.

"யார் சொன்னது? என் ஆராய்ச்சி இப்பதான் அதன் சிகரத்தை அடையப் போகிறது. டவுன் லோடிங் இஸ் ஸக்ஸஸ்ஃபுல். மாயா

கேஸ்ல அதை நிரூபிச்சிட்டேன். ஸக்ஸஸ், ஸக்ஸஸ்" என்று டாக்டர் ஆவேசம் வந்தவர்போலச் சொல்ல...

"என்ன பாஸ், பாயைப் பிறாண்டறாரு."

"மெகலோ" என்றான் கணேஷ்.

"பார்டன் மீ? யு கால் மி எ மானியாக்?" என்றார் கோபத்துடன்.

"அப்படிதான் டாக்டர். நீங்கள் செய்த பரிசோதனை நியாயமானதா?"

"விஞ்ஞான முன்னேற்றத்துக்கு எதும் செய்யலாம். நான் செய்யப் போகும் பரிசோதனை இன்னும் முக்கியமானது. கணேஷ்! எனக்கு நோபல் பரிசு வரப்போகிறது."

"எத்தனைபேர் செத்திருக்கிறார்கள் இதுவரை?"

"சாகவில்லை. எல்லோரும் அரைமயக்கத்தில்தான் இருக்கிறார்கள். சரியான மருந்து கண்டுபிடித்ததும் அவர்களை முழுசாக உயிர்ப்பிப்பேன்."

"உத்தமம்."

டாக்டர் அருகில் இருந்தவன் அவரையே பார்த்துக் கொண்டிருக்க, "எப்போது?" என்று சைகையில் கேட்டான்.

சாரங்கபாணி, "உங்களுக்கு நான் எதும் சமாதானம் சொல்ல வேண்டிய அவசியமில்லை கணேஷ்! ஐ'ம் ஜஸ்ட் கோயிங் டு கில் யு போத். ரெண்டு பேரும் என் பொறுமையை ரொம்ப சோதிச்சுட்டீங்க. என் பொறுமை காலியாயிடுச்சு. திவான்" என்று ஆணையிட்டார்.

திவான் என்பது யாரோ எடுபிடி ஆள் என்றுதான் நினைத்தார்கள். இல்லை நாய். "என்ன ஸார் நாயா, கன்னுக் குட்டியா?" நிஜமாக ஒரு கன்றுக்குட்டி சைஸுக்கு இருந்தது. நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு எச்சில் கொட்ட, பரத நாட்டியத்துக்கு உள்ளே அசைந்தாடி நடந்து வருவார்களே, அது போல் வந்து கணேஷையும், வசந்தையும் ஓரத்தில் மடக்கியது. போதாக் குறைக்கு வாலை லேசாக சாமரம்போல ஆட்டியது.

"திவான் ரெண்டு பேரையும் அசராம பாத்துக்கம்மா. நாகராஜனைக் கூப்பிடுறா சோமாரி. இவங்களை அப்பவே தீர்த்திருக்க வேண்டாம். வெத்து... இன்ஜெக்ஷன் போட்டுரலாம்."

டாக்டர் மாயாவை நெருங்கித் தலையைக் கவனித்து "யார் எடுத்தாங்க சிப்பை? ஏன் எடுத்தாங்க?"

அவர் முகத்தில் ஏமாற்றத்தைக் கவனித்து, "நாங்கதான் எடுக்கச் சொன்னோம்" என்றான் கணேஷ்.

"தெரிஞ்சு போச்சு டாக்டர்! இனிமே உங்க சோதனைகளை யாரும் அனுமதிக்க மாட்டாங்க."



டாக்டர் அவர்களருகே வந்தார். கை நடுங்க திக்கித் திக்கிப் பேசினார். "சிப்பை எடுத்துட்டீங்களா?"

"ஆமா டாக்டர், எடுத்துட்டோம்."

"அது என்ன விலை தெரியுமா! மை காட்! ஆஸிட்டா அது! டிஸைனுக்கே நாலு லட்சம் ஆச்சுரா. வி.எல்.எஸ்.ஐ. எங்க அது! திவான் மோந்து பார்றா இவங்களை!"

திவான் என்கிற நாய் ஒருமுறை ரூமே எதிரொலிக்க குரைத்து விட்டு, அவர்கள் மேல் விழுந்து பிறாண்டாத குறையாக அவர்களை ஓரங்கட்ட, நாகு என்கிறவன் ஓர் ஊசியை அசைத்துக்கொண்டு அவர்கள் முன் வந்தபோது வசந்த், ஷ்ஷ்ய் என்று விசில் அடித்து ஜிம்மி ஜிம்மி தோதோ என்றான். மற்றொருவன் துப்பாக்கி வைத்திருந்தான்.

கணேஷ், "வசந்த், இது தெரு நாய் இல்லை"

"ஆணா பெண்ணா பாஸ் இது? யோவ்! துப்பாக்கியை ரொம்ப கிட்டத்திலே ஆட்டாதே. வெடிச்சு கிடிச்சு வெக்கப் போறது. பாஸ், இவனைப் பாருங்க. எதாவது செய்யுங்க, நிஜமாவே சுட்டுகிட்டு வெக்கப்போறான்.

"சுடத்தான் போறோம்" என்றார் சாரங்கபாணி.

"சாரங்கி! திஸ் இஸ் நாட் ரைட்! திஸ் இஸ் நாட் ஆன்!

"எங்களைக் கொல்லப் போறீங்களா டாக்டர்?" என்றான் கணேஷ்.

"ஆமாம்"

"டாக்டர்! அப்படின்னா உங்களுக்கு அந்த சிப் வேண்டாமா?"

டாக்டர் பிரகாசமாகி, "எங்கே அது?"

"இருக்கு. ஓர் இடத்தில இருக்கு" என்றான் கணேஷ்.

"நாகு ரெண்டு பேரையும் ஸர்ச் பண்ணு."

நாகராஜன் அருகில் வந்து அவர்கள் பைகளைக் காலி செய்தான்.

"எங்கே எப்படித் தேடினாலும் கிடைக்காது. கிச்சு கிச்சு மூட்டாதய்யா, உடம்பில இல்லே."

"எங்கே அது? எங்கே அது?" என்றார் டாக்டர் நரம்பு புடைக்க.

"ஓர் இடத்தில வெச்சிருக்கோம். எங்கேன்னு சொல்றதுக்கு..."

"என்ன பண்ணணும் சொல்லு!"

"முதல்ல நாயைக் கட்டுங்க."

"கட்டுரா" என்றார். "திவான்! போம்மா ச்ச்ச்." நாய் அவனைப் பார்த்து ஒருமுறை அதட்டிக் குரைத்தது.

"சீ சுவானமே."

"கணேஷ்! ப்ளீஸ் அந்த சிப்பைக் கொடுத்துருப்பா. என் லைஃப் பூரா அதில மாட்டிருக்குப்பா. ப்ளீஸ்" என்று தாவாங்கட்டையைப்

பிடித்து முகத்தருகில் கெஞ்சினார்.

"டாக்டர்! அந்த சிப்பைப் பத்திரமான ஓர் இடத்தில வெச்சிருக்கோம். அதை எடுத்துக் கொடுக்கும் முன் ஒரு கண்டிஷன்."

"சொல்லு, சொல்லு."

"மாயாவை விட்டிருங்க."

"முடியாது."

"அப்ப நாங்களும் முடியாது."

"எங்க காட்டு முதல்ல"

"வசந்த், காட்டலாமா?"

"காட்டிரலாம் பாஸ்."

"எங்க வெச்சிருக்கோம் அதை?"

"அதான் அந்த இடத்தில."

"ரெண்டு பேரும் பொய் சொல்றீங்களாடா?"

"இல்லியே" என்றான் வசந்த்.

"டாக்டர், உங்களால அதைக் கண்டுபிடிக்க முடியாது. எங்க பேச்சை நீங்க நம்பித்தான் ஆகணும். எங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா சிப்பை நீங்க கண்டுபிடிக்கவே முடியாது. அதனால . . ."

"ரெண்டு பேரும் ஏமாத்தறீங்க. உங்ககிட்ட இல்லை!"

"சரி அப்படியே வெச்சுக்குங்க."

"அது விலை நாலு லட்சம் ரூபாய்டா ராட்சசா!"

"ரொம்ப விலை. ஒண்ணு பண்ணுங்க. சொல்லமாட்டோம். மாயாவை எங்ககூட பத்திரமா மெட்ராஸ்க்கு அனுப்பி வெச்சாத்தான் சிப் கிடைக்கும் உங்களுக்கு."

"எங்கே அது?"

"நாளைக்குத்தான் கிடைக்கும்."

"எங்க வெச்சிருக்க?"

"பத்திரமா விஜயவாடாவிலிருக்கு."

"விஜயவாடாவிலே எங்கே?"

"சொல்லமாட்டோம்."

"சொல்லமாட்டே?"

"மாட்டோம்."

"அடிச்சாலும் சொல்லமாட்டே? கொன்னுட்டா."

"கொல்லமாட்டீங்க, சிப் கிடைக்கிற வரைக்கும். கொன்னுட்டா எங்கன்னு சொல்றது."

"சித்திரவதை பண்ணா? மர்ம ஸ்தானத்தைப் பிசிஞ்சா?"



"பிசிஞ்சு பாருங்க."

"அடேய் ராஜா! இவனுங்களை சோறு தண்ணியில்லாம காயப் போடுங்கடா. உடம்பு பூரா தேடுங்கடா."

"இல்லை ஸார். அடி ஒதவற மாதிரி எதுவும் உதவாது. நீங்க முன்ன போங்க. டேய் எடுடா, சைக்கிள் டீப்பையும், கூழாங் கல்லையும்."

"ஏன் பிரதர்! கூழாங்கலை சைக்கிள் ட்யூப்ல போட்டு அடிக்கப் போறீங்களா?"

"அதே!"

"பாஸ்! ஒரு நிமிஷம். பாஸ்! நிஜம்மாவே அடிப்பாங்க போல. எனக்கு அங்கல்லாம் வலி தாங்காது. ப்ளீஸ், ஒரு நிமிஷம் நாங்க இரண்டு பேரும் கூடிப் பேசிக்கணும்."

"உம்."

"ஒரு நிமிஷம் அந்த ரூமுக்குள்ள தனியா பேசிக்கலாமா?"

"தப்பிச்சுப் போக முடியும்னு நினைக்காதே."

"இல்லை. எனக்கு அவ்வளவா சித்திரவதை தாங்காது. அதனால, ரெண்டு பேரும் ஓர் அட்ஜஸ்ட்மெண்ட்."

"சரி அஞ்சு நிமிஷம்."

"வெளிக் கதவை தாப்பா போட்டுக்கங்க. அப்பதான் ஓட மாட்டோம்."

இருவரையும் அறையில் அடைத்து, கதவை வெளியே சாத்தினார்கள்.

உள்ளே கணேஷ் வசந்தை ஷ்ஷ் என்று வாயில் விரல் வைத்து மௌனமாக இருக்கச் சொன்னான்.

வெளியேயும் நிசப்தமாக இருக்க, கணேஷ் சாவித்துவாரம் வழியாக எட்டிப் பார்த்தான். அந்தப் பக்கத்தில் டாக்டர் சாரங்கபாணி அவர்கள் அறை அருகே வந்து கதவருகில் காதை வைப்பதும் தெரிந்தது.

கணேஷ் வசந்துக்கு சைகை செய்தான். 'பேசு' என்பது போல்.

"பாஸ்! அதை நாம எங்க வெச்சிருக்கோம்னு சொல்லிடலாம் பாஸ். உயிர் தப்பிக்கலாம்."

"அப்படித்தான் தோணுது, ஆனா . . ."

"என்ன பண்ணீங்க சிப்பை?"

"விஜயவாடா ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்து, அதை ஒரு சின்ன கவர்ல போட்டு, என் விலாசத்துக்குத் தபால்ல அனுப்பிச்சுட்டேன்டா. தபால்ல நாளைக்கு அல்லது நாளன்னைக்கு காலையிலதான் அது போய்ச் சேரும். அதுக்குள்ள நாம் போய் தபால் பார்த்து . . ."

"என்ன தபால்?"

"ஆர்டினரிதான்."

"போச்சுரா, கையெழுத்து இல்லாம கொடுப்பாங்க. என்ன விலாசத்துக்கு அனுப்பிச்சீங்க?"

"தம்பு செட்டி ஸ்ட்ரீட்தான்."

அப்போது கதவு படக்கென்று திறந்தது. 'ராஜா' என்று சொல்லப் பட்ட நாகராஜன் கயிறு கொண்டுவர, வாசலில் கார்க் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது.

நிமிஷமாய் அவர்கள் இருவரையும் கயிற்றால் பிணைத்து, சுவரோடு இருந்த வளையத்தில் கட்டிவிட்டு, விளக்கை அணைத்து விட்டுச் சென்றார்கள்.

இருள் படிந்தது.



# 36

"பாஸ்! எங்க இருக்கீங்க? உங்க கூட சேர்ந்தா இருட்டில தடவிக்கிட்டே இருக்கணும். கையை வேற கட்டியிருக்காங்க."

"போய்ட்டாங்களா வசந்த்?"

கொஞ்ச நேரம் மௌனமாக உற்றுக் கேட்டுக்கொண்டிருந்து விட்டு, "போய்ட்டாங்கனுதான் தோணுது, நிசமாவே 'சிப்' பை தபால்ல அனுப்பிட்டீங்களா?"

"அனுப்புவனா?"

"அதான பார்த்தேன். அவங்களை நம்மைவிட்டு ஓடவெக்கறதுக்கு ஓர் உபாயம். அவ்வளவுதானே?"

"ஆமாம். ஆனா மாயாவையும் கூட்டிக்கிட்டுப் போயிட்டாங்களே."

"வசந்த்! கட்டை அவிழ்டா. எத்தனை நேரம் காத்திருக்கிறது?"

"எப்படி அவுக்கிறது?"

"இதில எல்லாம் எக்ஸ்பர்ட் இல்லையாடா நீ.

"அது வேற கட்டு பாஸ்."

"இப்ப என்ன பண்ண?"

கணேஷையும், வசந்தையும் முதுகு முதுகாகக் கட்டியிருந்தார்கள். கைகள் பக்கவாட்டில் பதிந்திருக்க, தளர்த்துவதே கஷ்டமாக இருந்தது. வசந்த் பின்பக்கமாகக் கஷ்டப்பட்டு திரும்பி, கணேஷின் கழுத்துப் பாகத்தில் கடித்துப் பார்த்தான்.

"டேய் காதையும் சேர்த்துக் கடிக்கறே."

"பின்னே என்ன செய்யறது?"

"சிகரெட் குடிக்கறதில்லையா. லைட்டர் கிய்ட்டர் எதும்...?

"எல்லாம் கார்ல வெச்சுத் தொலைச்சிருக்கேன். பாஸ் ஓர் ஐடியா. மெல்ல மெல்ல மூவ் பண்ணி வாங்க அலமாரிப் பக்கம்."

"என்னடா?"

இருவரும் ஊர்ந்து அலமாரிப் பக்கம் வந்ததில் அங்கே ஒரு பாட்டில் இருந்தது. வசந்த் அதை விழவைத்து, உடைத்து, அது உருண்டு செல்ல, அதை இருவரும் உட்கார்ந்துகொண்டு, சாக்கு ரேஸ் மாதிரி துரத்தி உடைந்த பாட்டிலை அரிவாள்மனையாக்கிக் கட்டை அவிழ்த்தார்கள். அதன்பின் வீட்டு வாசலுக்கு வந்தபோது இருட்டாக இருந்தது. அருகே இருந்த அவுட் ஹவுஸில் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

"யாரோ உள்ள இருக்காங்க."

நெடுஞ்சாலையில் அவர்கள் மாருதி கார் தெரிந்தது.

"கார்ல போய் டார்ச் எடுத்துட்டு வா வசந்த்."

கணேஷ் அவுட் அவுஸை அணுகியபோது குழப்பமான குரல்கள்.

வாயிற்கதவு பூட்டியிருந்தது.

வசந்த் டார்ச் அடித்துப் பார்த்து, "பாஸ்! பெரிய பூட்டு."

"திறடா. பேசிக்கிட்டு இருக்காதே."

வசந்த் ஒரு கல்லை எடுத்து அடிக்க அடிக்க வாயைப் பிளந்தது.

"அலோவ்" என்றான் வசந்த். உள்ளே அந்த உருவங்கள் தெரிந்தன.

"மாயா, உள்ளதான் இருக்கீங்களா?. மாமா, நம்ம ஹீரோ எல்லாம் இருக்காங்க. மாயா, களைப்பா இருக்குதா? சகோதர பாசமா என் தோள்மேல வேணா சாஞ்சுக்கங்களேன்."

"என்ன ஆச்சு?"

"அவசரமா எங்க எல்லாரையும் அடைச்சுப் போட்டுட்டு வேன்ல கிளம்பிப் போய்ட்டாங்க. மெட்ராஸ்தான் போறதா பேசிக்கிட்டு இருந்தாங்க.

"கணேஷ்! இந்த விவகாரமே வேண்டாம்ப்பா. எங்களை எப்படியாவது மெட்ராஸ் சேர்ப்பிச்சுருப்பா" என்றார் ரங்கநாத்.

"போலாம். போலாம். பயப்படாதீங்க. அவசரப்படாதீங்க. முதல்ல ராஜேந்தினுக்கு போன் பண்ணணும். விஜயவாடாவுக்குப் போய் ஃப்ளைட் இருக்கா பார்க்கலாமா?"

"வாரம் ஒரு ஃப்ளைட் போகும் பாஸ். ரிஸ்க்கு. பேசாம ஐதராபாத் போய்ட்டு அங்க காலை ஃப்ளைட்டை பிடிச்சுட்டு போயிரலாம். அவங்க போய்ச் சேர்றதுக்குள்ள போய்ட்டா சரி. பாஸ்! ஒரு மாருதி இவ்வளவு பேரைத் தாங்குமா?"

"அடுத்த டவுன் வரைக்குமாவது இவங்களையும் திணிச்சிட்டுத்தான் வரணும். அங்க போய் 'பி.டி.' எடுத்துக்கலாம்."

அவர்கள் புறப்பட, சற்று தூரத்தில் பெட்ரோல் தீர்ந்துவிட்டது. விடிந்தவுடன் பங்க் திறந்து கேனை எடுத்துப் போய் நிரப்பி



அவர்கள் கிளம்புவதற்குள் காலை ஒன்பதாகிவிட்டது. அங்கிருந்து ஐதராபாத் போய்ச்சேர சாயங்காலமாகி, ஒரு கல்கத்தா ஃப்ளைட் வழக்கம்போல் டிலே ஆகி, டிக்கெட் கிடைத்து அவர்கள் சென்னை வந்து சேர்வதற்குள் ராத்திரி எட்டரை மணியாகிவிட்டது.

வந்தவுடன் ராஜேந்திரனுக்கு போன் செய்தான்.

ராஜேந்திரன், "என்ன கணேஷ்! ஆந்திராவெல்லாம் போக ஆரம்பிச்சிட்டீங்களா? உங்க தந்தி புரியவே இல்ல. என்ன விஷயம்? யாரை அரஸ்ட் பண்ணணும் சொல்லுங்க."

"வி.எம்.ஆர் ஜன்னு ஓர் இடம் இருக்குதுங்க. அங்க சாரங்கபாணி, நரேந்திரநாத்னு ரெண்டு பேரு."

"அவங்களா! அவங்க ரொம்ப கில்லாடிங்களாச்சே, அவங்களைப் போய் எதுக்கு அரஸ்ட் பண்ணணும்?"

"அவங்க செய்யற பரிசோதனைகள் அளவுக்கு மீறினவை. அதை வேணா பப்ளிக் இன்ட்ரஸ்ட் மாதிரி ரிட் போட்டு..."

"உங்களுக்குத் தெரியாதா கணேஷ்?"

"தே ஆர் கில்லிங் பேஷண்ட்ஸ் ராஜேந்திரன்!"

"ஆதாரம்?"

"மேனகான்னு ஒரு பெண்ணுக்கு ஏபியஸ் கார்ப்பஸ் பெட்டிசனோட வரேன்! அவளை விடுவிக்கவாவது வருவீங்களா? ஆச்சரியகரமான விஷயங்கள் வெளியே வரும்."

"அதெல்லாம் வேண்டாம். நாளைக்குக் காலைல முதல் காரியமா அங்க போலாம்."

"இப்பவே போயிரலாம் ராஜேந்திரன்!"

போன் செய்து பார்த்ததில் டாக்டர் சாரங்கபாணி வெளியூர் போயிருக்கிறார் என்றும், எப்போது வருவார் என்று சொல்ல முடியாது என்றும் தகவல் வந்ததாக ராஜேந்திரன் மறுபடி போன் செய்தார்.

கணேஷ் ஆயாசத்துடன், "நம்ம அவசரத்தை அவர் புரிஞ்சுக்கலை' என்றான்.

"பாஸ்! அவங்க இன்னும் வந்திருக்கவே மாட்டாங்க."

"சொல்ல முடியாது. வா வசந்த்! போய்ப் பார்க்கலாம்."

"பாஸ்! எதுக்கும் இந்த முறை போலீஸ் துணையோட போறது நல்லதுன்னு நினைக்கிறேன்."

கணேஷ் குழப்பத்துடன், "இன்னொரு தடவை போன் செய்து பார்க்கலாம்" என்று ராஜேந்திரனின் எண்ணைச் சுற்ற, எங்கேஜ்டாக இருந்தது. வைத்ததும் மணியடித்து...

"ராஜேந்திரன் பேசறேன். ஒரு கோயின்ஸிடன்ஸ் பார்த்தீங்களா!"

"என்ன?"

"அந்த லாப் சொன்னீங்கதானே?"

"ஆமாம்."

"அதில் தீ விபத்து."

"என்னது?"

வசந்த், கணேஷ் இருவரும் ஸி.எம்.ஆர்.ஐ. போனபோது அதன் ஒரு பகுதியில் புகை மேகம் எழுந்து வானளவு உயர, தீயணைப்பு வண்டிகள் ஜன்னல் வழி ராட்சச நீருற்றைத் திணித்துக் கொண்டிருக்க . . .

"மை காட்! எப்படி பாஸ்? இதுக்கு என்ன அர்த்தம்?"

"சொல்றேன், சாரங்கபாணியோட அடுத்த திட்டம் இது."

"என்ன பாஸ்?"

"தடயங்களை அழிக்கிறான். பாஸ்டர்டு. ரொம்ப கிளவர், ரொம்ப கிளவர்."

மேலும் சைரன்கள் ஓலத்துடன் நகரத்தின் அத்தனை தீ வண்டிகளும் சேதி கேட்டு விரைந்து வந்து படையுடன் சேர்ந்து கொண்டன.

கணேஷ் செய்வதறியாது வானத்தை அம்பர் வெளிச்ச சவுக்குகளால் வீறிக்கொண்டிருந்த பிரும்மாண்டமான தீயைக் கவனித்தான். தீயணைப்பு அதிகாரியை நிறுத்தி, "ஏங்க எத்தனை நேரமாகும் தீயை அணைக்க?" என்றதற்கு அவர் "காலை வரை போகும். பெரிய தீ" என்றார்.

ராஜேந்திரன் அவர்களருகில் வந்து, "என்ன விஷயம் சொல்லுங்க!"

"ராஜேந்திரன், இது ஸபாட்டாஜ், நிச்சயம்."

"எலக்ட்ரிக்கல் ஃபயர்ங்கறாங்க."

"நீங்க ஸிஐடியில நல்லா விசாரிக்கச் சொல்லுங்க. நிச்சயம் இது ஆர்ஸன்தான். வேண்டுமென்றே வச்ச தீ."

"நீங்க ஒருத்தர்தான் இந்த லாபைப் பற்றி குறை சொல்லியிருக்கீங்க. என்னவோ நோபல் பரிசுக்கான ஆராய்ச்சியெல்லாம் நடக்குதுன்னு டில்லி ஹோம் மினிஸ்ட்ரியிலிருந்து போன் கால் வந்து, தீயை அணைக்கிறதில தீவிரமா ஈடுபடச் சொல்லி கவர்னர் கூட சொல்லியிருக்காரு."

"சாரங்கபாணி வந்துட்டாராமா?"

"இப்பதான் வந்தாராம்."

சாரங்கபாணி காரிலிருந்து இறங்குவதை வசந்த் பார்த்து, "பாஸ்! நம்மாளு" என்றான்.

சாரங்கபாணி கைகளை உதறிக்கொண்டு தீயை நோக்கிச் செல்ல அவரைச் சுற்றியிருந்தவர்கள் தடுத்தார்கள்.



"வசந்த்! நீ எதுக்கும் நாளை காலையில ஆபீசுக்கு சீக்கிரம் வந்துரு. இந்த வேளையில ஒண்ணும் செய்ய முடியாத நிலை."

"இல்லை பாஸ்! அந்தாளைக் கிட்டத்தில் போய்ப் பார்க்கலாம். வாங்க விசாரிக்கலாம், அதிர்ச்சியாவது கொடுக்க வேண்டாமா?"

வசந்தின் பின் கணேஷ் சென்று "ஹலோ டாக்டர்!" என்றான்.

சாரங்கபாணி திரும்பிப் பார்த்து " ஹலோ வசந்த்! பார்த்தீங்களா இந்த அநியாயத்தை?"

"விஜயவாடாவிலிருந்து எப்ப வந்தீங்க?"

"விஜயவாடா!" ஆச்சரியத்துடன் பார்த்து, "என்ன உளறுகிறீர்கள்? லாபின் மேற்குப் பகுதி சேதமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் மிஸ்டர் ஆனந்தராஜ்!" என்று தீ அதிகாரியைக் கேட்டுக்கொண்டார்.

"எக்ஸ்க்யுஸ் மி கணேஷ்! உங்களுடன் பேச வேண்டியது நிறைய இருக்கிறது. இந்த தீயைக் கட்டுப்படுத்தினபின்தான் என் மனம் நிம்மதி பெறும். எத்தனை வருஷமாகக் கட்டிக் காத்த ஆராய்ச்சிசாலை இது. என் உழைப்பின் வியர்வை அனைத்தும் . . ."

"ஷட் அப்! நீதான் அதைக் கொளுத்தியிருக்கிறாய். தெரியும்."

"வியப்பாக இருக்கிறது, நீங்கள் சொல்வது. நானே . . . தகப்பன் தன் குழந்தையைத் தீப்பற்ற வைப்பானா?

"சாரங்கபாணி! மாயா எங்கே?"

"யார் மாயா?"

"பாசாங்கு வேண்டாம். அவுட் ஹவுஸ்ல அடைச்சிட்டு . . ."

"என்ன சொல்கிறீர்கள் என்றே தெரியவில்லை. புரியும்படி சொல்லுங்க. நரேன், லுக் அட் திஸ். மேற்குப் பகுதியைக் காப்பாற்றி ஆக வேண்டும். இவர்கள் என்ன என்னவோ உளறுகிறார்கள். எனக்கு இருதயமே நின்றுவிடும் போல இருக்கிறது."

"நிற்கட்டும்" என்றான் வசந்த்.

"போங்கப்பா, போங்கப்பா! நெருப்பை வேடிக்கை பார்த்துக்கிட்டு."

கணேஷும், வசந்தும் பின்னால் தள்ளப்பட கணேஷ் "ரொம்ப கில்லாடி இவன் சாரங்கபாணி" என்றான்.!

# 37

தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்க, கணேஷ் அவர்களை விட்டு விலகி, "வசந்த்! வா சீக்கிரம்." என்றான்.

"என்ன பாஸ்?"

"அந்த தீக்குள்ள நாம நுழைஞ்சாகணும்."

"என்னது?"

"அது என்ன பண்ணுவியோ, அஸ்பெஸ்டாஸ் போடுவியோ இல்லை ஊதுவியோ, உள்ள போய் முக்கியமா மேனகா இருந்த பிறையிலிருந்து உடலை மீட்டே ஆகணும்."

"எதுக்கு பாஸ்?" என்று அலறினான்.

"சும்மா கேள்வி கேட்காதே. டாக்டர் சாரங்கபாணியுடைய ப்ளான் புரியலையா? அவன் தடயங்களை அனைத்தையும் எரிக்கப் பார்க்கிறான். அதில ஒரு உடலாவது மீட்கப்பட வேண்டியது முக்கியம். மேனகா கிடைச்சா உத்தமம்."

"சரி, பாஸ்! ட்ரை பண்றேன். கொஞ்சம் பர்னால் கிர்னால் வாங்கி வையுங்க. தீப்பட்ட காயத்துக்குத் தடவலாம்."

"நானும் வரட்டுமா? ஃபயர்க்குள்ள பூர்றதுக்கு ஒரு 'நேக்' இருக்கு, லோர்ஸைப் பாரு, காற்றின் திசையைப் பாரு..."

"வெறுப்பேத்தறீங்களா?"

"ரொம்ப அதிகம் இருந்தா வந்துரு. ரிஸ்க் எடுக்காதே. எங்கயாவது காலியாய்ட்டன்னா மூணு கேஸ் பெண்டிங்கில இருக்கு. ப்ரீஃப் எழுதணும் நீ..."

"வந்து கவனிச்சுக்கறேன் உங்களை" என்ற வசந்த், "ஜெய் மாருதி" என்று அந்தத் தீயை நோக்கிச் சென்றான்.



கணேஷ் சற்று கவலையுடன்தான் காத்திருந்தான். வசந்த் ரிஸ்க் எடுக்கமாட்டான். ஆனால் தீரச் செயல்களுக்குத் தயங்கவும் மாட்டான். ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிட்டால்?

அரைமணியில் வசந்த் கறுப்புப் பிசாசு போல வெளியே வந்தான். "பாஸ்! உங்க கூட சேர்ந்ததுல இது ஒரு வேலைதான் பாக்கின்னு நினைச்சுட்டிருந்தேன்."

"என்னடா ஆச்சு?"

"உயிரோட முழுசா வெளியே வந்திருக்கனே, ஒரு 'வா வா' உண்டா, சபாஷ் உண்டா?"

"வா வா! சபாஷ்! சொல்லு என்ன ஆச்சு?"

"ஜன்னல், வாசல் எல்லாம் எரிஞ்சுகிட்டு தீக்கங்குகள் அனைவரையும் நசுக்கிக்கொண்டிருக்க..."

"கட் தட் அவுட்! டிட் யு கெட் மேனகா?"

"ய்ய்யெஸ்" என்றான். கணேஷின் கைமேல் தட்டினான்.

"வசந்த்! யூ ஆர் கிரேட். அம்பது ரூபாய் சம்பள உயர்வு."

"முதல்ல ஓர் ஆம்புலன்ஸ் வேணும். காரிடார்ல மேனகாவை விட்டுட்டு வந்திருக்கேன். இனிமே எங்க கொண்டு போறது?"

"டாக்டர் ராமமூர்த்தியோட ப்ரைவேட் நர்ஸிங் ஹோமுக்கு."

ராத்திரி மாயாவின் வீட்டுக்கு இருவரும் சென்றபோது மணி பதினொன்றாகி விட்டது.

"எப்படி இருக்கீங்க ரங்கநாத்? ரொம்ப அடிப்பூட்டிங்க இல்லை?" என்றான் வசந்த்.

"என்னப்பா பேஜாராப் போச்சுப்பா. இந்த சாரங்கபாணி சகவாசமே வேண்டாம் இனிமே."

'இனிமேலதான் அவங்க பேர்ல கேஸே போடணும்" என்றான் கணேஷ்.

"ஆமா, எங்கே நம்ம ஹீரோ சுனில்?"

"இப்பதான் வீட்டுக்குப் போனான்."

"ஏன் ஸார்? உங்களை விஜயவாடாவில விட்டுட்டு நேரா மெட்ராஸ் போய்ச் சேருங்கன்னுதானே புறப்பட்டோம்? அப்புறம் எப்படி அந்த பண்ணை வீட்டுக்கு குடுகுடுன்னு எங்க பின்னால வந்துட்டீங்க?"

"சுனில்தான் சொன்னான், பாவம், அவங்க ரெண்டு பேரும் தனியாப் போயிருக்காங்க. ஒத்தாசை தேவைப்படும். அவங்க பின்னாலேயே போகலாம்னு. டாக்ஸி எடுத்துட்டு வந்தோம். உங்க காரை மரத்தடியில பார்த்தோம். இறங்கி வந்தபோது சாரங்கபாணியும் அவன் ஆட்களும் அவசரமா ஓடிக்கிட்டு இருக்காங்க. எங்களைப்

பார்த்ததும் நாலு ஆளும் சேர்ந்து, எங்களை அவுட் அவுஸ் மாதிரி இருந்தது, அதில தள்ளிக் கதவைச் சாத்தி பூட்டிட்டுப் போய்ட்டாங்க."

"பலி ஆடு மாதிரி மாட்டிக்கிட்டாங்க! கொஞ்சம் சண்டை போட மாட்டானோ, எங்க சுனில்? வெத்து!"

மறுதினம் காலை அலறலாகத் தலைப்புச் செய்தி வந்திருந்தது.

"ஆராய்ச்சி சாலையில் தீ. ஆராய்ச்சிக் கருவிகளுக்குப் பலத்த சேதம். நாற்பது பேர் பலி. கவர்னர் பார்வையிட்டார்."

கணேஷ் அந்த செய்தித்தாளை விசிறி எறிந்துவிட்டு, "என்ன பொய்! என்ன பொய்!"

"என்ன பாஸ்?"

"வசந்த்! இதை எப்படி நிரூபிக்கிறது? இந்த தீயை ஏற்படுத்தியவனே சாரங்கபாணிதான்னு"

"எப்படிச் சொல்றீங்க?"

"முட்டாள். குட்டு உடைஞ்சு போனதினாலே அரைகுறையா இருந்த அந்த உடல்களையெல்லாம் முழுக்க ஒரேடியா தீர்த்துக் கட்ட ஒரே உபாயம் தீ விபத்து."

"இன்ஷுரன்ஸ் சர்வேயர் யாரையாவது கன்சல்ட் பண்ணலாம் பாஸ்!"

காலை பத்துக்கு மறுபடி ஸி.எம்.ஆர்.ஐ. போய்ச் சேர்ந்தார்கள். இன்னமும் புகைந்துகொண்டிருந்த இடத்திலிருந்து இடிபாடுகளும் ப்ளாஸ்டிக் ரப்பர் முதலியன எரிந்த நாற்றமும் விரவ, லாபின் ஒரு பகுதி மட்டுமே முழுவதும் சேதமடைந்திருந்தது.

கணேஷ் டாக்டர் நரேந்திரநாத்தைப் பார்க்கப் போனான்.

"டாக்டர்! இந்த விபத்து எப்படி நடந்தது?"

"ஷார்ட் சர்க்யுட். ஏன் கேக்கறீங்க?"

"இன்ஷுரன்ஸ் கம்பெனியின் சார்பில விசாரிக்க வந்திருக்கோம்."

"நாங்க இன்ஷுரன்ஸ் க்ளைம் பண்றதா இன்னும் தீர்மானிக்கலை."

"ஏன்?"

"அவங்க நஷ்டஈடு கொடுப்பாங்களான்னு சந்தேகம் மிஸ்டர் கணேஷ்!"

"கொடுப்பாங்க. கொடுக்காம என்ன? நீங்க எத்தனை சேத மதிப்பு போட்டிருக்கீங்க."

"ஆட்டாப்ஸி ரூம், டெர்மினல் யுனிட், அப்புறம் மூணு ஆப்பரேஷன் தியேட்டர்கள், கெமிக்கல், பயாலாஜிக்கல் லாப் எல்லாமே காலி. ஒரு கோடி ரூபாய் ஆயிருக்கும்.



"ஆட்கள்?"

"பேஷண்ட்ஸ் நாற்பது பேர் செத்துட்டாங்க. அதான் சோகம்" என்றார் நரேந்திரநாத், அவர்களை நேராகப் பார்க்காமல்.

"அவங்க பேஷண்ட்ஸ்தானா?"

"ஆமா, ஏன்?"

"டாக்டர் நரேந்திரநாத் கம் க்ளீன்! இந்தப் பரிசோதனையில் உங்க பங்கு என்ன? சதியில உங்க பாத்திரம் என்ன?"

"என்ன சொல்றீங்க?"

"டாக்டர்! ஒரு மாதிரி கதை வசனம் உங்களுக்கு சொல்றோம், அதை சரி பாருங்க,"

"சுறுக்க பேசாதீங்க என்ன" என்றான் வசந்த்.

"அதுக்கெல்லாம் டயம் இல்லப்பா."

"ஸிட் டவுன் டாக்டர்!" என்று அதட்டினான் கணேஷ்.

"கால் சாரங்கபாணி" என்று இண்டர் காமில், 'சாரங், இந்த வக்கீல்கள் ரெண்டு பேரும் மறுபடி வந்துட்டானுங்க. ரொம்ப இம்சை பண்றாங்க."

"உடனே வரேன்" என்று பதில் கேட்டது.

சற்று நேரத்தில் சாரங்கபாணி உள்ளே வந்து, "வெல் ஜென்டில்மேன், வாட் டு யு வாண்ட்?"

"ட்ரூத் டாக்டர்!"

"என்ன ட்ரூத்? ஏதாவது பணம் கிணம் வேணும்னா வாங்கிண்டுரு கணேஷ். தொந்தரவு பண்ணாதே."

"டாக்டர்! ஒரு முக்கிய விஷயத்தை மறந்தே போய்ட்டீங்க. உங்க குடுமி எங்ககிட்ட சரியா மாட்டிக்கிட்டு இருக்குது" என்றான் வசந்த்.

"எனக்குக் குடுமி இல்லை வசந்த். க்ராப்பு."

"ஒத்தை மயிர் இருந்தாலும் பிடிச்சுகிட்டு இருக்கமே" என்றான்.

"இந்த மாதிரி மறைமுகமா பேசாம விஷயத்துக்கு வாங்க. வாட் டு யு நோ?"

"எவ்ரி திங். நீங்க செய்த பரிசோதனை, அதன் வெற்றி தோல்வி, நீங்க செய்த சின்தஸிஸ், கணிப்பொறிய வெச்சுகிட்டு ஊர ஏச்சது எல்லாமே தெரியும் டாக்டர்."

"அம்யூஸிங்."

"இட் இஸ் நாட் அம்யூஸிங். எத்தனை இளம் பெண்ணுக இங்கே இறந்து போயிருக்காங்க தெரியுமா?"

"டூ பேட், தீ விபத்துல இம்மாதிரி ..."

"அது விபத்தில்லை."

"பின்ன?"

"நீங்க தடயங்களை மறைக்க ஏற்படுத்தின ஆக்ஸிடெண்ட் எரிப்பு."

"எப்படிப்பா ப்ருவ் பண்ணுவே? முதல்ல இது உளறல். அது இல்லைன்னாலும் எப்படி நிருபிப்பே?"

"உங்க ஆராய்ச்சிக் குறிப்புகள் ..."

"அதிலிருந்து எதையும் நிருபிக்க முடியாது."

"நான் என் க்ளையண்ட் மாயாவின் மூலமா கேஸ் போடப் போறேன் உங்க மேலே."

"என்ன கேஸ்?"

"அவ இஷ்டமில்லாம அவ மேல பண்ண பரிசோதனைகள். உங்க டவுன் லோடிங் எக்ஸ்பெரிமெண்ட்."

"நரு! இவர்கிட்ட மாயா சைன் பண்ண அக்ரிமெண்ட் காண்பிக்கணும்."

"அப்புறம் மேனகாவின் மேல செய்த பரிசோதனைகள்."

"அவ லாபை விட்டுப் போய்ட்டாப்பா."

"அதுக்கு ஆதாரம்?"

"டிஸ்சார்ஜ் சர்ட்டிகேட், ரிஸிக்னேஷன் லெட்டர், கல்யாணம் பண்ணிக்கிட்டு அமெரிக்கா போயி அவ எழுதின லெட்டர்கள் ..."

"எல்லாம் பொய் டாக்டர்! மேனகா எங்கயும் போகல. உங்க லாபிலதான் இருந்தா அரை உயிரும் குறை உயிருமாய்."

டாக்டர் சாரங்கபாணி சற்று ஆச்சரியத்துடன், கலவரத்துடன், "யார் சொன்னது இப்படியெல்லாம் பயங்கரமான கற்பனையை ..."

"கற்பனை இல்லை டாக்டர். சாட்சி வச்சிருக்கோம்."

"நரு! அவன் கூட என்ன பேச்சு நமக்கு? எத்தனையோ வேலை இருக்கு. மிஸ்டர் கணேஷ்! போய்ட்டு வாங்க. நீங்க என்ன வேணா செய்துக்கங்க. எங்களுக்குக் கவலையில்லை.'

"வாடா வசந்த்! இந்தாளு முழு வேஷத்தையும் கலைக்கலாம். டாக்டர், சிப் கிடைச்சுதா?"

"என்ன சிப்பு?

"என்கிட்ட கேட்டீங்களே!'

"ஓ தட்! அது போனாப் போவுது. இன்னொரு 'அணிக்கு'க்கு ஆர்டர் கொடுத்திருக்கோம் சிலிக்கன் ஃபவுண்டரியில."

"அப்படியா! போஸ்ட்ல கிடைக்கலையா? வேகு வேகுன்னு ஓடி வந்தீங்களே?'



டாக்டர் சாரங்கபாணி சட்டென்று முகம் தீவிரமாகி, "நூக் கணேஷ்! நீ யார்ட்ட விளையாடறே, எப்படிப்பட்ட மகத்தான சக்திகிட்ட விளையாடறேன்னு தெரியாது. நான் கை சொடக்கினா நாளைக்குக் காலைல கூவத்தில இரண்டு பேரும் மிதப்பீங்க. சும்மா பெரிய சக்திகளோட எல்லாம் விளையாடாதீங்க. சின்ன ஜனங்க நீங்க. ஒரு ஸ்னாப்! அணைச்சுர முடியும் உங்களை."

"சரி" என்று கணேஷ் புறப்பட்டு, "வசந்த்! நேரா ராஜேந்திரன் வீட்டுக்குப் போலாம்."

"என்ன பாஸ்! இப்படி பேசறானே? பெரிய சக்தின்னா யாரு ஸி.ஐ.ஏ.வா?"

"எதா இருந்தா என்ன?"

ராஜேந்திரன் அப்போதுதான் டி.வி. போட்டு செய்தி கேட்டுக் கொண்டிருந்தார். "மறுபடி வந்துட்டீங்களா? இப்ப என்ன கணேஷ்?"

"ராஜேந்திரன் இந்த டாக்டர் சாரங்கபாணி, டாக்டர் நரேந்திரநாத் ரெண்டு பேரையும் அரஸ்ட் பண்ணணும் நீங்க."

"எப்ப?"

"இப்ப?"

"இப்ப முடியாது வாரண்டு ரெண்டுன்னு."

"அதுக்கெல்லாம் உங்களுக்கு பவர் இருக்கு ராஜேந்திரன்! இல்லைன்னா மாஜிஸ்திரேட் யாரையாவது எழுப்பலாம்."

கணேஷ் யோசித்தான். "ராஜேந்திரன்! அதிர்ச்சிகரமான ஒரு விஷயம் காட்டறேன் வரிங்களா? டாக்டர் ராமமூர்த்தியோட நர்ஸிங் ஹோமுக்கு?"

"என்ன காட்டப் போறீங்க?"

"பேசும் பொம்மை."

# 38

கணேஷ் ராஜேந்திரனை அழைத்துக்கொண்டு டாக்டர் ராமமூர்த்தியின் நர்சிங் ஹோமுக்குச் சென்றபோது வசந்த் காத்திருந்தான்.

"வாங்க பாஸ்! பின்னாடி வழியா போகலாம்."

"ஏன்?" என்றார் ராஜேந்திரன்.

"இங்க வெச்சிருக்கறதே ரகசியம்."

"கூடிய சீக்கிரம் தெரியவரும்."

இரும்புப் படிகள் வழியாக இரண்டாவது மாடிக்கு ஏறிச் சென்றனர். அங்கே பரஞ்சோதி, செபாஸ்டியன் என்று இரு டாக்டர்களை அறிமுகம் செய்துவைத்தான் வசந்த்.

"ரெண்டு பேரும் ஸ்டேட்ஸ்ல நியூராலஜி படிச்சவங்க. பரஞ்சோதி, சொல்லுங்க. முதல்ல."

"முதல்ல பாத்துருவமே" என்றார் டாக்டர் பரஞ்சோதி.

சுமார் முப்பது, முப்பத்திரண்டு வயது இருக்கும். சர்ஜனின் பனியனும், பச்சைக் குல்லாயும் அணிந்திருந்தார். புஜங்கள் வலுவாகத் தெரிந்தன.

"என்ன பார்க்கணும்?"

"கொஞ்சம் பொறுமை" என்று வசந்த் அவர்களை அழைத்துச் செல்ல, சுத்தமாக இருந்த காரிடாரில் நடந்து, குளிர் அறைக்குள் நுழைந்து, கண்ணாடி மூலம் தெரிந்த உள்ளறையில் காத்திருந்த மற்றொரு டாக்டரைப் பார்த்து "ப்ரகாஷ், கொண்டு வாங்க' என்றார்.

உள்ளிருந்து ஒரு சக்கரப் படுக்கை கொண்டுவரப்பட்டது. அதில் உட்கார்ந்திருந்த வாக்கில் இருந்த பெண்ணைப் பார்த்து, "யாருங்க இது?" என்றார் ராஜேந்திரன்.



"மேனகா, மாயாவுடைய அக்கா."

மேனகா ஒரே திசையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

கண்கள் ஜீவனற்று இருந்தன. படுக்கையின் சலனத்துக்கு ஏற்ப அவள் உடலும் ஆடியது.

"என்னங்க இது? உயிர் இருக்கா இல்லையா?"

"பாதி உயிர்."

"அப்டின்னா?"

"கேட்டானிக் ஸ்டேஜ்ங்கறாங்களே அது மாதிரியா?" என்றான் கணேஷ்.

"ராஜேந்திரன்! நீங்க ஸைபோர்க்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"இல்லை."

"அப்புறம் விளக்கறேன். இப்ப பாருங்க மேனகா பேசறத. மேனகா!" என்றார் பரஞ்சோதி.

"என்ன?"

"உன் பேர் சொல்லு."

"மேனகா ரங்கநாத்."

"நல்லா இருக்கியா?"

"நல்லா இருக்கேன். நீங்க?"

"நானும் நல்லா இருக்கேன். இன்னிக்கு என்ன கிழமை மேனகா?"

"வியாழன்."

"தப்பா சொல்லுதே."

"நேத்திக்கு என்ன கிழமை மேனகா?"

"வியாழன்."

"கிழமைன்னு கேட்டா வியாழன் மட்டும் சொல்லுது."

"ரொம்ப சிக்கலான விஷயம் சார்."

"இந்தப் பொண்ணுக்கு உயிர் இருக்கிறதா, இல்லையா?"

"பேசுதே."

"பேசினா போதுமா?"

"கையை, காலை ஆட்டுமா"

"ஆட்டாது."

"இது உடலா, ப்ளாஸ்டிக்கா?"

"பாருங்க உள்ள வாங்க" என்றார் பரஞ்சோதி.

ராஜேந்திரன் தயங்கித்தான் சென்றார். "பாஸ்! நான் கூட பார்த்ததில்லை. எனக்கு என்னவோ, நாம பார்க்கப் போறது பிடிக்கப் போறதில்லைன்னு பட்சி சொல்லுது."

பரஞ்சோதி உள்ளே வந்து திரைகளை மூடினார். மேனகாவின் கழுத்து வரை போர்த்தியிருந்த மேலுடையை நீக்கினார்.

"மை காட்" என்று பின்வாங்கினார்கள்.

நால்வரும் ராஜேந்திரனின் அலுவலகத்தில் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வசந்த் ஒரு மாத்திரையை நாக்கில் வைத்து காப்பியால் அதை உள்ளே தள்ளினான். "ட்ராங்க்விலைஸர்" என்றான் ராஜேந்திரனிடம்.

"இந்த வேளையிலா?"

"ஆடிப்புட்டேன் டாக்டர் ஸார்! அது என்னது உயிருள்ளதா, உயிரில்லாததா? "காத்"னு சொல்றாளே அதுவா, இல்லை ஜோம்பியா? பழுப்பா ஞமஞமன்னு என்னவோ மெழுகு போல."

"அது வந்து ஒரு மாதிரிங்க. கெமிக்கலா ட்ரீட் பண்ணா பாடி இப்படித்தான் இருக்கும். ஸஸ்டனன்ஸ் லெவல்ல வெச்சிருக்கிற கோமா பேஷண்ட் மாதிரின்னு வெச்சுக்கங்களேன். எல்லாம் டாக்டர் சாரங்கபாணியுடைய குறை முயற்சிகள்."

"எப்படிப் பேசறது?"

"அது வந்து மேலாகப் பேசுது. மண்டைக்குள்ள சிப்பைப் பொருத்தி, வாய்ஸ் சின்தஸிஸ் வாய்ஸ் ரிகக்னிஷன் மூலமா பேச வெச்சிருக்காங்க."

"மூச்சு?"

"மூச்சு மட்டும் இருக்குது, ரெஸ்பிரேட்டரி, ஹார்ட், சைக்கோ மோட்டார் ஃபங்ஷன்களையும் சிப் வெச்சுக் கட்டுப்படுத்தியிருக்காங்க. மத்தபடி செத்தாப்பல தான்."

"பழையபடி ஆக எத்தனை நாளாகும்?"

"பழையபடி ஆக முடியாதுன்னுதான் தோணுது. டீப் ப்ரெய்ன் டிஷ்யூஸ் நிறைய டாமேஜ் ஆயிருக்குது."

"இந்த மாதிரியா எத்தனை காலம் ஜீவிக்க முடியும்?"

"என் எஸ்டிமேட்டில ஒரு வருஷம் தாங்கும். டாக்டர் சாரங்கபாணியோட பரிசோதனைகள்ள ஒரு ஃபெயிலியர் இது."

"அந்த மாதிரி நிறைய பிறையா வெச்சிருந்தார். இது ஒண்ணுதான் தீ விபத்திலிருந்து தப்பிச்சுது!"

"பாஸ்! இந்த உருவத்தை கோர்ட்டுக்குக் கொண்டாந்து, ஒரு கலக்குக் கலக்கி ரெண்டு டாக்டரையும் செருப்பால அடிக்கிறாப்பல செய்து, நூத்தம்பது வருஷம் சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்தாகணும்."

"இதை எவிடன்ஸா ஒப்புத்துப்பாங்களா?"



"ஆமா. ஜட்ஜ் பயந்துண்டு கூழ் மோர் கேஸாயிடப் போவுது!"

"கொஞ்சம் விவரமா சொல்லுங்க பரஞ்சோதி! என்ன பரிசோதனை?" என்றார் ராஜேந்திரன், மிகுந்த சுவாரஸ்யத்துடன்.

"டவுன் லோடிங். அது அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட பரிசோதனை. அது வந்து . . ."

"விளங்கலை."

"ஓர் ஆளுடைய ஞாபகங்களைப் பிரதியெடுத்து டிஸ்க் மூலமாக கம்ப்யூட்டருக்கு வெளில கொண்டுவந்துடறது. அப்புறம் மூளையினுடைய சில செயல்பாடுகளை மட்டும் ஒரு சிப்பைப் பதிச்சு பண்ணி வைக்கறது. இரண்டுமே அதி அபாயமான பரிசோதனைகள். இந்த ஃபீல்டில ப்ரேஸில்லியோ, எங்கயோ சில ஜ்யு டாக்டர்கள் பண்றதா சொல்றாங்க. மத்த இடங்களில் தடை செய்யப்பட்ட பரிசோதனை. அதை இங்க செய்யறாங்கன்னு அறிஞ்சு முதல்ல நான் நம்பலை. வசந்த் சொன்னதும் நம்பவே இல்லை. ஆனா இணைப்புகளைப் பார்த்ததில இது ஈ.ஸி.ஜிக்கு இணைச்சது இல்லைன்னு தெரிஞ்சு போச்சு. டவுன் லோடிங் பர்ப்பஸ்தான் இது! பயங்கரம்."

"இது சக்ஸஸ் ஆயிட்டிருக்குது. கொஞ்சம் கொஞ்சமா முன்னேற்றம் கண்டிருக்காங்க. நிறைய பலி வாங்கியிருக்கணும். அந்த நோபல் ஆசைதான் இவங்களையெல்லாம் இந்த விஷப்பரிட்சையில செலுத்துது."

"ஆனா இவங்களை உடனே அரஸ்ட் பண்ணியிருக்கலாமே."

"எவிடென்ஸே அகப்படலை. இப்ப ஆஸ்பத்திரியிலுள்ள எல்லா எவிடென்ஸையும் தீ வெச்சுக் கொளுத்திட்டாங்க. இந்தப் பெண்ணைத் தவிர."

"இதைக் கொண்டு போய் கோர்ட்டில நிறுத்தி . . . ரொம்ப பாடுங்க. கணேஷ் என்ன சொல்றீங்க?"

"ஏதோ சாக்கு சொல்லி டாக்டர்ங்க ரெண்டு பேரையும் அரஸ்ட் பண்ணிட்டு வாங்க. அதுக்கப்புறம் கொட்டையைப் பிசிஞ்சு செய்த காரியத்துக்கெல்லாம் கன்ஃபெஷன் வாங்கிரலாம். என்ன?" என்றான் வசந்த்.

"அது சாத்தியமாகத் தோணலை. அவங்க இந்நேரம் ஃப்ளைட்டைப் புடிக்க மீனம்பாக்கம் போயிருப்பாங்கன்னு தோணுது."

ராஜேந்திரன் தன் ஜீப்புக்குப் போய் ரேடியோ மூலமாக கண்ட்ரோல் ரூமுக்குச் செய்தி சொன்னார்.

"ஏர்போர்ட்டுக்குச் செய்தி போயிருக்கும். முதல் அவங்களைப் போய்ப் பார்க்கலாம் வாங்க. தாங்க்ஸ் டாக்டர்!" என்றான்.

டாக்டர் சாரங்கபாணி தப்பித்து ஓட எந்தவிதப் பிரயத்தனமும் செய்வதாகத் தெரியவில்லை. அடையாறில் மெட்ராஸ் கிளப்பில் ஒரு லெக்சர் கொடுத்துக்கொண்டிருந்தார்.

"மனித மனத்தின் செயல்பாட்டை முழுவதும் அறிந்துகொள்ளும் நேரம் வந்துவிட்டது. இன்னும் பத்து வருஷத்துக்குள் நம் வாழ்நாளிலேயே நம் சரித்திரத்தின் மகத்தான கேள்விக்கு விடை கிடைத்துவிடும். அப்போதுதான் நாம் கடவுளின் செயல்பாட்டை ஏற்றுக்கொள்ளப் போகிறோம். அந்த செயல்பாடு என்ன..." சாரங்கபாணி அந்த முன்னூறு பேர் சபையை ஒரு மௌன அந்தரத்தில் நிறுத்திவிட்டு, "சாகா வரம்! இம்மார்ட்டலிட்டி" என்று தொடர்ந்தார்.

"ஜென்டில்மேன்! இப்படி யோசித்துப் பாருங்கள். நீங்கள் இறக்கும்போது உங்கள் நினைவுகள் அத்தனையும் இறந்து போகின்றன. நீங்கள் வாழ்நாள் முழுவதுமாகச் சேர்த்து வைத்த இத்தனை புத்தகங்கள், பாடங்கள், அறிவுப் பெட்டகங்கள், அனுபவங்கள் அத்தனையும் செத்துவிடுவதுதான் மனிதப் பிறவியின் மகத்தான சோகம்.

"இப்போ அந்த நினைவுகள் அனைத்தையும் ஒரு காந்தத் தட்டுக்கு மாற்றி மற்றோர் உடலுக்குப் புத்தம் புதிய உடலுக்கு மாற்ற முடிந்தால் என்ன ஆகிறது?" மறுபடியும் ஒரு மின்சாரம் செறிந்த மௌனம்.

"மனிதன் இறவா வரம் பெறுகிறான். தேவன் ஆகிறான். அந்த நாள்கள் அதிக தூரத்தில் இல்லை. நானும் டாக்டர் நரேந்திரநாத்தும் மற்றும் சிலரும் செய்துவரும் பரிசோதனைகள் மூலம் இந்த ஞாபக மாற்றத்தை ஒருவாறு முடித்துவிட்டோம். இன்னமும் இரண்டு வருஷங்களில் பூரண மாற்றத்தைச் செயல்படுத்திவிடுவோம். துரதிருஷ்டவசமாக எமது ஆராய்ச்சிசாலை பொறாமைக்காரர்களால் தீ வைக்கப்பட்டது. இருந்தும் மனம் கலங்காமல் ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய உத்தேசித்திருக்கிறோம்.

கைதட்டல் முடிந்ததும், "இப்போ கேள்விகள் கேட்கலாம்."

வசந்தும், கணேஷும் மெல்ல மேடையருகே செல்ல ராஜேந்திரன் எதிர்ப்பக்கம் நகர்ந்து வந்தார். ஏதோ கேள்வி கேட்க வந்திருக்கிறார் என்று டாக்டர் புன்னகையுடன் காத்திருக்க, ராஜேந்திரன் "டாக்டர் சாரங்கபாணி! உங்களை அரஸ்ட் பண்ண வந்திருக்கிறேன்" என்றார் தணிந்த குரலில்.

சாரங்கபாணி "எதுக்கு?"

"வந்தீங்கன்னா சொல்றேன்."

"அதுக்கென்ன வரேன்" என்றார் டாக்டர் சாரங்கபாணி.



# 39

டாக்டர் சாரங்கபாணி அவர்களுடன் நடந்துகொண்டே பைப் பற்ற வைத்தார். "எதுக்காக என்னைக் கைது செய்யப் போறீங்க மிஸ்டர் ராஜேந்திரன்?"

"ஒரு பெண்ணின் மரணம் சம்பந்தமா உங்களை அரஸ்ட் பண்ணப் போறேன்" என்றார் ராஜேந்திரன்.

"அதுக்கு உங்களுக்கு என்ன அத்தாரிட்டின்னு சொல்ல முடியுமா? நான் செய்த குற்றம் என்ன சொல்ல முடியுமா?"

"அசிரத்தையால் மரணம், செக்ஷன் 304 ஏ!"

"அம்யுசிங்" என்று சிரித்தார். "இப்ப என்ன பண்ணணும்? உங்ககூட ஜெயிலுக்கு வரணுமா?"

வசந்த் ஓரங்கட்ட, "என்ன பாஸ்? இப்படி ஸூப்பர் கான்ஃபிடண்டா இருக்கான் ப்ரொபஸர்?"

"விஜி கொஞ்சம் என்ட்ட வர்றியா" என்று தன் அஸிஸ்டண்டைக் கூப்பிட்டு, "என்னை அரஸ்ட் பண்ணிட்டு போறாங்களாம். நம்ம வாசுதேவன் லாயர் இருக்காரு பாரு, அவருக்கு போன் செய்து சாயங்காலத்துக்குள்ள ரிலீஸ் பண்ண வெச்சுரு. எனக்கு லாபில ரொம்ப வேலை இருக்கு. ரிப்போர்ட் எழுதணும். அரை குறை போலீஸ், லாயர்களையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. என் விதியில் எழுதியிருந்தா மாத்த முடியாது."

டாக்டர் சாரங்கபாணியை அருகிலிருந்த போலீஸ் நிலையத்திற்குக் கொண்டுபோகுமுன்பே பத்திரிகைக்காரர்கள் கூடிவிட்டார்கள்.

"எதுக்காக ஸார் நோபெல் பரிசு பெறப்போற விஞ்ஞானியைக் கைது பண்றீங்க?"

"பி.எம். போன் பண்ணாராமே?"

எல்லாக் கேள்விகளுக்கும் மௌனமே பதிலாக்கி அவர்கள் உள்ளே டாக்டரை அழைத்துச் செல்ல... 'பளிச்' 'பளிச்'சென்று போட்டோ எடுத்துக்கொண்டிருக்கும்போது வாசுதேவன் வந்தார். இரட்டை நாடியாக உலகத்தில் உள்ள அத்தனை போலீஸ்காரர்களும் அராஜகம் என்கிற சித்தாந்தம், மூக்கின் கூர்மையிலும் புருவத்தின் அடர்த்தியிலும் தென்பட்டபடி "என்ன மிஸ்டர் ராஜேந்திரன், வாட்ஸ் திஸ் நான்சென்ஸ். என் கிளையண்ட் யார் தெரியுமா உங்களுக்கு? நீங்க டி.வி. பார்க்கறதில்லையா?"

"வாசுதேவன்! என் கடமையைச் செய்யறேன்."

"அரஸ்ட் வாரண்ட் இருக்குதா?"

"மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஆள் போயிருக்குது."

"மைகாட். சாரங்கபாணி! நீங்க இங்க வர வேண்டியதே இல்லை. தெர் இஸ் நோ வாரண்ட்."

வசந்த், "சில சந்தர்ப்பங்கள்ள போலீஸ் ஆபீசர் வாரண்ட் இல்லாம இருபத்துநாலு மணி நேரம்..." என்று ஆரம்பித்தவனை, அது யார் என்கிற மாதிரி பார்த்தார். "அலோ கணேஷ்! நீங்க எங்க இப்படி?" என்றார் வாசுதேவன்.

கணேஷ் அவரைத் தனியாக அழைத்துச் சென்று, "சார், உங்க கிளையண்ட் அபாயகரமான பரிசோதனை பண்ணிட்டிருக்கிறதா எங்களுக்கு ஆதாரபூர்வமாக..."

"அபாயகரமா? நான்சென்ஸ். அவருக்கு நோபல் பரிசு வரப் போகிறது. நம்ம தேசத்துக்கே பெருமை. போயும் போயும் இதைப் பெரிசா எடுத்துக்கிட்டீங்களே!"

"வாசுதேவன், உங்க கிளையண்ட் புகழ் உங்க கண்ணை மறைக்கிறது!"

"நான்சென்ஸ். வாங்க ஸார் போகலாம். ராஜேந்திரன்! நீங்க அரஸ்ட் வாரண்டோட அங்க வாங்க" காமிராக்களின் பளிச்களின் இடையில் சாரங்கபாணியை அழைத்துச் சென்றார்.

கணேஷ் வசந்தைப் பார்த்தான். "என்ன ஸார் உங்களுக்கு இந்த உரிமை கூட இல்லையா?"

"ஜாஸ்தி பப்ளிஸிட்டி ஆயிடுத்து. கவலைப்படாதீங்க. ராத்திரிக்குள்ள மாஜிஸ்திரேட்டைப் புடிச்சு வாரண்ட் வாங்கி வந்துர்றேன். மாயா வருவாங்களா?"

"அதுக்குள்ள ஆண்டிஸிபேட்டரி பெய்ல் வாங்கிடுவார் வாசு. பார்த்துண்டே இருங்களேன்."

"இந்த வக்கீலுங்க இருக்கறவரை எங்களால் உருப்படியா ஒரு காரியம் செய்ய முடியாது வசந்த்!"

"அப்டின்னு ஒரு பரம வக்கீலைப் பார்த்து சொல்றீங்க. அதையும் கேட்டுகிட்டு இருக்கம்."



"இப்ப என்ன செய்யறது?"

"கணேஷ்! இதை நாம் பதற்றப்படாம செய்யலாம். காலைக்குள்ள இந்த ஆளைக் கொண்டாந்து கோர்ட்டில் நிறுத்திர்றேன்."

அவர்கள் ஏமாற்றத்துடன் மாயாவின் வீட்டுக்குப் போனபோது சுனில் வாசலில் மோட்டார் சைக்கிளில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.

"சுனில்! மாயா எப்படி இருக்காங்க?"

"கொஞ்சம் பரவாயில்லை ஸார். ஒரு வாக்கியத்துக்கும் மற்றொரு வாக்கியத்துக்கும் தொடர்ச்சியா பேசறா. அதுவே முன்னேற்றம்."

"மேனகாவைப் பாத்தீங்க இல்லை."

"பாத்தனே ஸார்" என்றான் அதிர்வுடன்.

"சுனில்! நீங்களும்தான் லேப்ல இருந்தீங்க. அந்த ஆராய்ச்சிக் கெல்லாம் ஏன் மறுப்பு தெரிவிக்கலை?"

"இந்த ஆராய்ச்சி சாரங்கபாணியும், நரேந்திரநாத்தும் ரகசியமா செய்துட்டு இருந்தாங்க. மிருணாளின்னு ஒரு பெண்ணுக்குத்தான் முழுவிவரமும் தெரியும்."

"அந்தப் பொண்ணு சாட்சி சொல்ல வருமா?"

"கேட்டுப் பார்க்கலாம். பயப்படுவாங்கன்னு நினைக்கிறேன். எல்லாரையுமே அழுத்தி வெச்சிருந்தாங்க லாப்ல. என்ன என்னவோ மறைமுகமா ட்ரக் எல்லாம் அவங்க மேல பரிசோதனை செய்து பார்த்து, ஒரு கோஷ்டியில் பல பேருக்குக் கை சின்னதாய்டுத்து."

"உங்க கை எப்படி?" என்று வசந்த் கேட்க...

"நான் தக்க சமயத்தில அமெரிக்கா போய் தப்பிச்சேன் ஸார். அங்க போனா மேனகா அட்ரஸ்ஸே தப்பு. அப்பவே எனக்கு சந்தேகம் வந்துச்சு. மாயாவுக்கு இதை போன்ல சொன்னேன். எல்லாம் பழைய கதை. இப்ப அந்த சாரங்கபாணியை எப்படி மாட்டலாம். அதுக்கு யோசனை சொல்லுங்க. மொத்தம் எத்தனை பேரை கொன்னிருக்கான்?"

"எல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்துக்காக."

"புல்ஷிட். இந்தாளை வெட்டிப் போடணும் ஸார்."

சாயங்காலம் மேனகாவை மறுபடி டாக்டர் ராமமூர்த்தியின் நர்ஸிங்ஹோமில் பார்த்துக் கண்ணாடி வழியாக சுனில் கண்ணீர் விட்டழுதான். மாயா, அவ அப்பா, அம்மாவும், வேற எவரும் இதைப் பார்க்காம இருந்ததே நல்லது.

"சுனில்! இது என்ன உயிரா இல்லையான்னு சொல்ல முடியுமா?"

"அதான் கணேஷ் சொன்னாரே, பாதி உயிர்தான். ஒரு சில

இயக்கங்கள் மட்டும் வெளி உலகத்திலிருந்து சப்ளை செய்து சாவைப் பாதி கட்டத்தில் ஒத்தி வெச்சிருக்கிறதா சொல்லலாம்."

"டாக்டர்! அப்படி நீங்க சர்டிபிகேட் கொடுக்க முடிஞ்சா அவரை மர்டருக்கு சார்ஜ் பண்ணலாம்."

"கோமா பேஷண்ட் மாதிரின்னு சொல்லலாம்."

கண்ணாடி வழியாக மேனகாவைப் பார்த்ததும் வசந்த் "மேனகா" என்றான்.

"என்ன" என்றாள் அல்லது என்றது.

"யார் நீ?" என்றான்.

"மேனகா."

"நீ வெறும் பொம்மையா? பேசும் பொம்மையா?"

"மேனகா."

"டாக்டர்! இதை அப்படியே கொண்டுவந்து கோர்ட்டில நிறுத்த முடியுமா ஆம்புலன்ஸ் வெச்சு?"

"கஷ்டம்."

"இல்லை வசந்த்! ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கி வந்து இன்ஸ்பெக்ட் பண்ணச் சொல்லலாம். ஆனா, அது என்னவோ எனக்கு உகந்த சாட்சியாத் தெரியலை. கோமா பேஷண்ட்ம்பாங்க. பேச வேற பேசுது. எல்லாரும் அவர் ஆராய்ச்சித் திறமையில மயங்கிக் கிடக்கிற போது நாம் சைன்ஸை, மெடிக்கல் சைன்ஸை நமக்கு எதிர் சாட்சியா வெச்சுக்கக் கூடாது."

"பின்ன அவரை எப்படி பழி வாங்கறதாம்" என்றான் வசந்த்.

"ஒரு நிமிஷம் மேனகா."

"என்ன?"

"நீ டாக்டர் சாரங்கபாணியைக் கொன்னுட்டு வரியா. கைல கத்தி கொடுக்கறோம்." – ட்ராகுலா மாதிரி விட்டுப் பார்ப்போம் என்று கணேஷிடம் சன்னமாகச் சொன்னான்.

"கத்தி" என்றது.

"ஆமா கத்தி."

"ஆமா கத்தி."

"சரியா போச்சு."

கணேஷ், "வசந்த்! இது வீண் முயற்சி. ஏதாவது ப்ரிஸிடெண்ட் இருக்கா பார்க்கலாம். பப்ளிக் இண்டரஸ்ட்... ரங்கநாத் ஒரு பெட்டிஷன் கொடுத்தா கையெழுத்துப் போடுவாரா?"

"நான் வாங்கி வரனே ஸார் கையெழுத்து."



காலை ராஜேந்திரன் போன் செய்திருந்தார்.

"கணேஷ்! நீங்க சொன்னமாதிரி ரெண்டு பேருக்கும் வாகதேவன் ஆண்டிஸிபேட்டரி பெய்ல் வாங்கிட்டார். அவர் ஆராய்ச்சியில பொறாமை கொண்டவங்க அவரைக் கைது பண்ண முயற்சி செய்கிறதாவும் என்ன என்னவோ காரணங்கள் போட்டு... அவரை அரஸ்ட் பண்ணாலும் ஜெயில்ல வெக்க முடியாது. அதுக்கு எதிரா எதாவது பப்ளிக் இன்டரஸ்ட் லிட்டிகேஷன் மாதிரி வேற எதனாச்சியும் போடறீங்களா? எனக்கு என்னடான்னா இந்தாளு ஃபோனின்னு நல்லாத் தெரியுது. பெரிய மனுசங்க பேரைச் சொல்லிக்கிட்டு பாவ்லா பண்றான். அதான் எனக்குப் பிடிக்கலை. எதாவது ட்ராஃபிக் கேஸ்லயாவது பிடிச்சு மடக்கி உள்ள போடலாம்னா ஆபீசுக்குக் கூட நடந்துதான் போறான்!'

கணேஷ், "ராஜேந்திரன்! 'பொயட்டிக் ஜஸ்டிஸ்'னு ஒண்ணு இருக்குது. அதன்படி எதாவது அவருக்குத் தண்டனை நிச்சயம் கிடைக்கும்."

போனை வைத்ததும் மறுபடி போன் அடித்தது. டாக்டர் ராமமூர்த்தியின் நர்ஸிங் ஹோமிலிருந்து சுனில்தான் போன் செய்திருந்தான்.

"என்ன சுனில்?" என்றான் வசந்த்.

"உடனே வாங்க, மேனகா இறந்துட்டா."

இருவரும் விரைந்து சென்றதில் மேனகா தன் இணைப்புகளுடன் அமைதியாகப் படுத்திருந்தாள்.

"என்ன ஆச்சு டாக்டர்?"

"அவங்க என்ன ஸஸ்டனன்ஸ் டோஸ் வெச்சிருந்தாங்கன்னு தெரியலை. ந்யுட்ரிஷன் பத்தலையா, இல்லை மெடபாலிஸம் டிஸ்டர்ப் ஆய்டுத்தோ, இல்லை பாட்டரி கிட்டரி செத்துப் போயிருச்சா, திடீர்னு கேட்டா பதில் கூட சொல்ல மாட்டேங்குது... பேசும் பொம்மை பேசாத பொம்மையாயிடுத்து."

"மைகாட்! நான் இவளை எத்தனை உயிரோட, எத்தனை உற்சாகத்தோட பார்த்திருக்கேன் ஸார்! எத்தனை முறை மோட்டார் சைக்கிள் பின்னால கூட்டி வெச்சுட்டு போயிருக்கேன். எல்லாத்துக்கும் சாரங்கபாணிதானே காரணம்."

"சுனில்! கொஞ்சம் தனியா வாங்க" என்றான் வசந்த்.

# 40

சுனில் வசந்திடம் கண்ணீர் விட்டு அழுதான். "ஒரு காலத்தில் நான் மேனகாவைக் காதலிச்சேன் சார். அமெரிக்காவுக்கு ஏமாத்திட்டு போய்ட்டான்னு அவமேல வெறுப்பாயிருச்சு ... இப்பதானே தெரியுது. அவ இங்க லோக்கல் ஆஸ்பத்திரியில பேசும் பொம்மையா ஜீவிச்சிருக்கான்னு. ச்ச். கஷ்டம்தான். இருந்தாலும் அக்கா தங்கை ரெண்டு பேரையும் காதலிச்சது மிஸ்டேக்!"

"சுனில்! சாரங்கபாணியை நாம் ரெண்டு பேரும் ஒரு வழியா..."

"ஒரு வழியா.."

"ஒரு வழி பண்ணிரலாமா."

"எப்படி?"

"எல்லாத்தையும் நானே சொல்லணுமா?"

எப்படி என்று வசந்த் சொல்வதற்குள் கணேஷூம் டாக்டரும் அவர்களிடம் வர, கணேஷ் ராமமூர்த்தியிடம் "என்ன டாக்டர்! இந்த எக்ஸ்பெரிமெண்டை கோர்ட்டில் விவரமா விளக்க முடியுமா?"

"முடியும். ஆனா சாரங்கபாணி நிஜமாகவே டவுன்லோடிங் எக்ஸ்பெரிமெண்ட்தான் பண்ணார்னு நிரூபிக்க முடியாது. இவள் ஸிம்ப்டம்ஸ் எல்லாம் கியாஸிக்கல் கோமாவுடைய ஸிம்ப்டம் அல்லது காட்டடோனி."

"எதாவது ஒரு வகையில இந்த சாரங்கபாணி செய்யற பரிசோதனைகளை நிறுத்தி அவர் செய்ததுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியாதா?"

"அவர் செய்யற பரிசோதனைகளை நிறுத்தறதுக்கு ஒரு வழிதான் இருக்கு பாஸ்!" என்றான் வசந்த்.

"என்ன?"



"அவரை நிறுத்தணும்! யார் நிறுத்தறது?"

"அவர் மூச்சை நிறுத்தணும்" என்றான் சுனில்.

"யு மீன் மர்டரா?"

"பின்ன என்ன ஸார்? இதுவரை நீங்க அந்த பிறை பிறையா இருந்த பெண்களைப் பாக்கலை. நான் பார்த்தேன். ஆடிப்புட்டேன்! அத்தனையும் பொம்மையா, உயிர் இருக்கா, இல்ல சும்மா மூச்சு வாங்கற மெஷினான்னு தெரியாம மொத்து மொத்தா ... என்ன ஸார் உரிமை இவருக்கு மனித உயிர்களோட விளையாட?"

"அதெல்லாம் சரி வசந்த்! அந்த உடல்களை சாட்சியா காண்பிக்க முடியாதே. தக்க சமயத்தில் எரிச்சாச்சு. மேனகாவும் க்ளோஸ்!"

சுனில் வெறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தவன், "எப்படியாவது அவன்மேல லாரி ஏறிட்டதா ஆக்ஸிடெண்ட் பண்ணிட்டா என்ன?" என்றான்.

"எப்படி அதை ஏற்பாடு பண்ணறது?" என்றான் வசந்த்.

"வசந்த்! யூ ஆர் நாட் சீரியஸ்! சுனில் இருக்கற மனநிலையில நீ என்ன செய்யச் சொன்னாலும் செய்துறக்கூடிய அத்தனை வெறுப்பில் இருக்கார்."

"பாஸ், தட்'ஸ் த ஐடியா! டாக்டர் கிளவர்னா நாம அதைவிட கிளவரா இருக்கலாமில்லையா?"

"எப்படிச் சொல்லு."

"சொல்றேன். சுனில்! தனியா வாங்க. டாக்டர் ராமமூர்த்தி, நீங்க நாங்க பேசினது எதையும் கேக்கவே இல்லை. பிரேத பரிசோதனைக்கு உண்டான ஏற்பாடுகளைப் பண்ணுங்க."

அவர்கள் மூவரும் தனியே வருவதற்கு முன், "மேனகாவுடைய பேரண்ட்ஸ் யாருன்னு சொல்ல முடியுமா? அவங்க எங்க இருக்காங்க?"

"அவங்களை இந்த நேரத்தில் எழுப்ப வேண்டாங்க. அவங்க ஏற்கனவே ... மாயா வேற பாதியா வந்திருக்கா. இப்ப மேனகாவைப் பத்தி தகவல் கொடுத்தா ரெண்டு பேரும் கொலாப்ஸ் ஆயிடுவாங்க. மெல்ல மெல்ல நாங்க சொல்லிக்கறம். நீங்க மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பாருங்க."

வசந்த் சுனிலுடன் வந்தான் "சுனில்! நீங்கதான் ஓர் ஏற்பாடு பண்ணப் போறீங்க."

"என்ன ஏற்பாடு?"

"ஒருவிதமான மரண ஏற்பாடு."

"புரியற மாதிரி சொல்லுங்க."

"எப்படியாவது சாரங்கபாணியைச் சந்திக்கறீங்க."

"சந்திச்சு அவர்ட்ட ஒரு பிச்சுவாவை நீட்டி . . ."

கணேஷ், "இதைவிட முட்டாள்தனமான யோசனை சொல்ல உனக்குத் தெரியலையா முட்டாளே?"

"பின்ன நீங்கதான் சொல்லுங்களேன்." என்றான் சுனில்.

"சொல்றேன்" என்றான் கணேஷ்.

கணேஷ்தான் டாக்டர் சாரங்கபாணிக்கு போன் செய்தான்.

"டாக்டர்! உங்க கூட அவசரமாப் பேசணும். உங்களைச் சந்திக்கணும். ரொம்ப அவசரம்."

"என்ன விஷயம்? உங்களைச் சந்திக்கிறதில எனக்கு ஒரு லாபமும் இல்லை."

"டாக்டர்! நாங்க சம்மதிக்கிறம்."

"எதுக்கு?"

"நீங்க சொல்றதுக்கு. எதில் வேணா கையெழுத்துப் போட தயாரா இருக்கம். விலை பேசலாம்."

"எதுக்கு விலை, என்ன விலை?"

"உங்க சிப் எங்கிட்டதான் பத்திரமா இருக்குது."

"இருக்கட்டும்."

"அப்ப அது உங்களுக்கு வேண்டாமா?"

"காட்டுவியா?

"காட்டின பின்தான் பைசா."

"எத்தனை?"

"அதனுடைய உண்மையான மதிப்பு என்னவோ அதைக் கொடுங்க. ஒரு லட்ச ரூபாயா இருந்தாலும் ஒரு ரூபாயா இருந்தாலும் சரி."

மறுமுனை மவுனமாக இருக்கையில் "பாஸ்! உங்க ஐடியா என்னன்னு புரியலை, நம்மகிட்ட எங்க சிப் இருக்கு?"

"சிப் இல்ல. ஆனா டாக்டரைப் பத்திய ஒரு முக்கியமான தகவல் இருக்கு. ராஜேந்திரன்தான் எனக்குக் கொடுத்தார். அவர் சரித்திரம் பூராவும் சேகரித்து வைத்திருக்கிறார். அதில அவர் சொன்ன ஒரு தகவல் முக்கியமானதாகப்பட்டது."

"என்ன தகவல்?"

"சாரங்கபாணி ஒரு ஹார்ட்பேஷண்ட், இஸ்க்கிமக் ஹார்ட் உடையவர். என்லார்ஜ்மெண்ட் உடையவர்."

"அதனால."

"அவருக்கு ஒரு ஷாக் கொடுப்போமே."

"புரியலை."

"என் கூட வா."



"என்னவோ எனக்குப் புரியலே இல்லை."

கணேஷ் டாக்டரைப் பார்க்கும்போது வழியில் தலைவலி மாத்திரை வாங்கிக்கொண்டான். "டிப்பரின் நல்ல கரையுமில்ல."

'என்ன பாஸ்! தலைவலியா?"

"ஆமாடா, தலைவலி தீரப்போவுது."

இருவரும் டாக்டர் சாரங்கபாணியின் 'லாபை' அடைந்தபோது அவர்களைப் பின்னறைக்கு அழைத்துச் சென்றார்.

"நோ மங்க்கி ட்ரிக்ஸ். சிப் எங்கே?" என்றார்.

"நிதானம் டாக்டர்! நிதானம். நண்பர்களாக வந்திருக்கிறோம். சமாதானக் கொடி காட்டி . . . ஒரு காப்பி கூட நாம் குடிக்க வேண்டாமா?"

டாக்டர் பொறுமையிழந்து மேசை மணியை அழுத்த மிருணாளினி வர " மூணு கப் காப்பி கொண்டுவா. எனக்கும். எனக்குக்கூட தலைவலியாக இருக்கிறது" என்றார். "எடு சிப்பை."

"பணம் பேசவில்லை."

"எத்தனை சொல்லு."

"நீங்கள் சொன்ன அதே விலைதான். பதினாலு லட்சம்."

"நான் மிகையாகச் சொன்னேன்."

"பின் அதன் விலை என்ன?"

"ஒரு லட்சம் பெறும். ஆஸிக்டிஸைனுக்குப் பதினெட்டு லட்சம் செலவழித்தோம். ஆனா இதில் பதினெட்டு சிப் எடுக்கலாம். இதுதான் முதலாவது."

காப்பி வந்ததும் மூவருக்கும் கோப்பையில் ஊற்றிவிட்டு மிருணாளினி சென்றாள்.

டாக்டர் காப்பியை அருந்தியபடி டிராயரிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து, "இதைப் பார், மொத்தம் ஃபவுண்டரிக்குக் கொடுத்த பண ரசீது. சிலிக்கன் ஃபவுண்டரிக்குக் கொடுத்தது."

கணேஷ் அதைப் பார்வையிட்டு "சரி, ஒரு லட்சம் சம்மதம். செக் கொடுப்பீர்களா?"

முதலில் சிப். அதன்பின் செக். என்னவோ நீ இன்னமும் பாச்சா காட்டுகிறாய் என்று நினைக்கிறேன். முதலில் தபாலில் சேர்த்தாய் என்றாய். தபாலும் இல்லை. ஓர் எழவும் இல்லை. ஆட்கள் உன் ஆபீசைத் துப்புரவாகத் தேடிவிட்டார்கள். பிறகு போலீஸை அழைத்து வந்தாய் என்னைக் கைது பண்ண. அது பலிக்காமல் புதுசாக ஒரு ட்ரிக் கொண்டுவந்திருக்கிறாய்."

"அவ்வளவு விலை உயர்ந்த பொருளை அத்தனை சுலபமாக இழப்போமா டாக்டர்?"

"பின் எடுத்துக் காட்டு."

"முதலில் இதைக் கேளுங்கள்" என்றான் கணேஷ். நிதானமாக வார்த்தை வார்த்தையாகச் சொன்னான். "டாக்டர்! நீங்கள் தற்போது சாப்பிட்ட காப்பியில் இப்போதுதான் விஷம் கலந்தேன். அதற்குள் விழுங்கிவிட்டீர்கள், பேட் லக்."

அவர் முகம் சற்று விழ சட்டென்று தன் காப்பிக் கோப்பையைப் பார்த்தார். அதன் அடிவண்டியாக இருந்த பகுதியைப் பார்த்தார், வெள்ளையாகப் பொடியாக இருந்தது.

"என்ன, இது என்ன?" என்றார் தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு.

"ஸ்டரிக்னைன் டாக்டர்! இன்னும் இரண்டு நிமிஷம்தான் உங்கள் வாழ்வு. மூச்சு அடைக்கிறதல்லவா? குட்பை டாக்டர்! தாங்ஸ் பர் தி காஃபி."

"ஏய் ஏய் இரு" என்று அவர்கள் இருவரையும் துரத்த எழுந்து பிடிக்கப் பார்த்தபோது, "வசந்த்! வா சீக்கிரம்," என்று அவர்களைப் பிடிக்கும் வாகில் வந்தவரை ஒரே ஒரு முறை தள்ளிவிட்டு, "இனிமேல் உங்களால் பேச முடியாது டாக்டர்! மூச்சு முட்டும். ரொம்ப பிரத்தியேகமான சரக்கு" என்று சொல்லிவிட்டு "வா வசந்த்" என்று வேகமாகக் கிளம்பிவிட்டான்.

டாக்டர் சாரங்கபாணி அந்த மேஜை விளிம்பைப் பிடித்து எழுந்திருக்க முயன்றவர் மறுபடி நெஞ்சைப் பிடித்துக்கொண்டு விழுந்தார்.

வெளியே விரைந்து வந்தவனிடம் வசந்த், "என்ன பாஸ்? என்னத்தைக் கலக்கினீங்க காப்பில? என்னவோ வெள்ளையா இருந்தது. நிசமாவே ஸ்ட்ரிக்னைன் பாய்ஸனா?"

"அதெல்லாம் இல்லை."

"ஆடிப்புட்டார்."

"அதுக்குத்தான் அந்த அதிர்ச்சியே! நாம் வர்றப்ப வியர்க்க ஆரம்பிச்சார் பாரு. இதுதான் முதல் கட்டம்."

"இப்ப என்ன ஆகும்ங்கறீங்க?"

"அவர் மெடிக்கல் ரிப்போர்ட்படி அவரது அத்தனை வீக்கான ஹார்ட்டுக்கு இத்தனை நேரத்துக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கணும். பார்க்கலாம்" என்றான்.

அன்றிரவு, ராஜேந்திரனிடமிருந்து போன் வந்தது.



"என்ன கணேஷ்! நீங்க டாக்டர் சாரங்கபாணியைப் பார்க்கப் போயிருந்தீங்களா சாயங்காலம்?"

"ஆமா ஏன்?"

"அப்ப என்ன ஆச்சு?"

"அவர்ட்ட சில விஷயங்கள் பேசினோம். வந்துட்டோம். ஏன், என்ன விஷயம்?"

"சாரங்கபாணி இறந்துட்டார்!"

## 41

"இறந்துட்டாரா? எப்படி ஸார்?" என்றான் கணேஷ்.

"மாஸிவ் ஹார்ட் அட்டாக். ஆனா ஆஸ்பத்திரில எனக்கு கணேஷ் விஷம் வெச்சுட்டான், விஷம் வெச்சுட்டான்னு அலறலா புகார் சொல்லிக்கிட்டுத்தான் அட்மிட் ஆனார். அப்பவே வியர்த்து ஊத்தியிருந்தாராம்."

"நானா விஷம் வெச்சேன்? என்ன விளையாடறீங்க."

"இல்லை கணேஷ்! அந்த காப்பிக் கோப்பையில் அடி வண்டியா இருந்த கரைசலையும் 'லாப்'ல கொடுத்து அனலைஸ் பண்ணிப் பார்த்துட்டோம். வெறும் ஆஸ்பிரின்தான். யு ஆர் க்ளியர். என்ன ஆச்சு?"

"அவர் ரொம்ப டென்ஷனா இருந்தார். கற்பனை பயங்கள்ளாம் ஜாஸ்தியா இருந்தது. ஆனா இறந்து போய்டுவார்னு நான் நினைக்கவே இல்லை."

"போய்ட்டார்."

போனை வைத்ததும் வசந்த், "பாஸ்! கை குடுங்க, உங்க ப்ளான் ஒர்க் அவுட் ஆயிடுச்சு."

கணேஷ் கை கொடுக்காமல், "இல்லை வசந்த்! எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. இவ்வளவு தூரம் விபரீதம் வளரும்னு நான் நினைக்கவே இல்லை."

"அதனால என்ன? ஆள் போய்ட்டான். அதான் முக்கியம்."

"ஏதோ டாக்டருக்கு ஒரு ஷாக் கொடுக்கலாம்னு ஆத்திரம் கலந்த ஆர்வத்தில் என்னவோ செய்து என்னவோ ஆயிருச்சு. நம்பவே முடியலை."

"டாக்டர் சாரங்கபாணி 'க்ளோஸ்'ங்கறிங்க. அதான் முக்கியம். அப்பாடா! பரிசோதகர்கள் எல்லாம் ஒழிஞ்சாங்கப்பா. பாஸ்!



'பொயடிக் ஜஸ்டிஸ்'னு ஒண்ணு இருக்கு பாருங்க. அதும்படி அவருடைய பயங்களே, அவருடைய பரபரப்பே, நர்வஸ்னஸ்லே அவரைக் கொன்னுடுச்சு. அதுக்கு நாம கருவியா இருந்திருக்கோம்."

"இருந்தும் இப்படி என் காரியர்ல இதுவரைக்கும் ஒருத்தருடைய மரணத்துக்குக் காரணமா இருந்ததில்லை நான்."

"எதுக்குமே முதல் தடவை இருக்கு அந்தாளு எத்தனை பெண்களை சமாதி ஆக்கியிருக்கான்? எத்தனை அரைகுறை பரிசோதனை செய்திருக்கான். சட்டப்படி அவனுக்குத் தண்டனை கிடைச்சிருக்குமா? இல்லை, பரிசு கொடுத்திருப்பாங்க பெரிய விஞ்ஞானின்னு."

"இருந்தாலும்..."

"வாங்க போய் விசாரிச்சிட்டு அனுதாபம் சொல்லிட்டு வரலாம்."

சாரங்கபாணியின் உடலை ஒரு மஹாகனி பெட்டியில் வைத்து அதன் மேல் மலர் வளையம் வைத்திருந்தார்கள். லாப் சிப்பந்திகள் அவ்வப்போது வந்து பார்த்துவிட்டு, மௌனமாக இருந்துவிட்டுப் போனார்கள்.

கணேஷ"ும் வசந்தும் ஓர் ஓரத்திலிருந்து பார்த்துக்கொண்டு நிற்க ராஜேந்திரன் வந்தார். தலை தொப்பியைக் கழற்றிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு அஞ்சலி செய்துவிட்டு அவர்களுடன் வெளியே வந்தார்.

"லாப்ல உள்ள எல்லாப் பரிசோதனைகளையும் க்ளோஸ் பண்ணும்படி ஆர்டர் வந்திச்சு. சீல் வெச்சுரப்போறம். டாக்டர் நரேந்திரநாத் அமெரிக்கா போயிர்றார். அவர் மேல கேஸ் எதுவும் இல்லை.

"அதற்கு அவரும் உடந்தைதான்."

"கணேஷ்! விவரமா சொல்லுங்க. புரியற மாதிரி அவங்க பரிசோதனைல என்ன தப்பு?"

"எளிமையா சொன்னாக்க, ஹ்யூப்ரிஸ்னு சொல்வாங்களே, மனிதன் கடவுளா நடந்துக்க முயற்சி செய்றது. சிருஷ்டி விநோதங்கள்ள கை வைக்கறது. அதான் தப்பு! ஜெனட்டிக் இன்ஜினியரிங்னு ஓர் இயலே இப்ப வந்திருக்கு. புதுசா உயிர்கள் சிருஷ்டி பண்ண முயற்சி பண்றாங்க. போக்கே சரியில்லை."

"இவங்க காட்னது பொம்மைதானே. மனித உடல்களுக்கு லேசா உசிர் கொடுத்து எலக்ட்ரானிக்ஸ் மூலம் பேச வெச்சாங்க. அதானே இவங்க பண்ணது?"

"இல்லை ராஜேந்திரன்! அவங்க செய்தது மூளைக்குள்ள ஒரு சிலிக்கன் சிப்பைப் பதிக்க வெச்சு, மூர்த்தி சொன்னாரே, அதில ஒரு லித்தியம் பாட்டரி மூலம் கரண்ட் கொடுத்து எண்ணங்களை

மாற்றப் பார்த்தாங்க. அந்தப் பரிசோதனைகளை இம்யூன் சிஸ்டம் ரிஜக்ட் பண்ணி பல பேர் பாதில போயிட்டாங்க. அரைகுறையா மேனகா மாதிரி பாதி சக்ஸஸ் ஆச்சு. மாயாவும் போயிருப்பா. ஏதோ தக்க சமயத்தில தப்பிச்சா..."

"பயங்கரங்க! கடைசில எப்படியோ ஒழிஞ்சான் அந்தாளு."

"எங்க புதைக்கப் போறாங்களாம்?"

"எங்கயாவது புதைச்சா சரி."

அவர்களை தம்புசெட்டித் தெருவில் இறக்கிவிட்டு விட்டுத்தான் ராஜேந்திரன் சென்றார்.

ஆபீசில் சுனில் காத்திருந்தான்.

"என்ன சுனில்?"

"மாயாவுக்கு இப்போது முழுக்க சரியாய்டுத்து. உங்க ரெண்டு பேருக்கும் எப்படி தாங்க்ஸ் சொல்றதுன்னே தெரியலை. அப்படி அந்தாளு ஹார்ட் அட்டாக்ல போகலைன்னா நானே அவரைத் தீர்த்துக் கட்டியிருப்பேன். அவ்வளவு கடுப்புங்க."

"ஏதோ எல்லாம் நல்லபடியா முடிஞ்சது. ஒழிஞ்சான் டாக்டர். சாரங்கபாணியாம். கலக்கிட்டானப்பா!"

"மாயாவுக்கும் எனக்கும் கல்யாணத் தேதி முடிவு செய்திருக்கோம். வர்ற வெள்ளிக்கிழமை சிம்பிளா. நீங்க ரெண்டு பேரும் வந்தாகணும்."

"நாங்க வராமயா? ரங்கநாத் எப்டி இருக்கார்?"

"தெம்பா இருக்கார். உங்க ஃபீஸ் எத்தனைன்னு கேட்டுட்டு வரச் சொன்னார்."

"சொல்றோம். தக்க சமயத்தில் சொல்றோம்!"

சுனில் சென்றதும் வசந்த், "என்ன பாஸ்! ஒரு மாதிரியா இருக்கீங்க."

"வசந்த்! ஒரு முழுமை இல்லை பாரு. அந்தாளு ஹிந்துதான்! அவனை எதுக்குப் புதைக்கணும்?"

"ஆரம்பிச்சிங்களா பாஸ்! டாக்டர் சாரங்கபாணி இறந்தாச்சு! அவர் கனோஸ்! மேலும் இந்துக்கள்ல சில ஜாதி புதைப்பாங்க. பார்த்தவங்க அத்தனை பேரும் சொன்னாங்க. அவன் செய்த பரிசோதனைகளை எல்லாம் எழுதி இரும்புப் பெட்டிக்குள்ள வெச்சு கி.பி. இரண்டாயிரத்துக்கு அப்புறம்தான் திறக்கணும்னு சொல்லியிருக்கானாம்!"

"எதுக்காகப் பெட்டி? எதுக்காகப் புதைக்கணும்."

"விடமாட்டீங்களே."

"வசந்த்! அவசரமா ராஜேந்திரனுக்கு போன் போடு.'



"என்ன பாஸ்!"

போனில் ராஜேந்திரன் கிடைத்ததும் "ராஜேந்திரன் ஒரு சந்தேகம். நீங்க சாரங்கபாணியுடைய உடலைப் பார்த்திங்களா?"

"உடலை? ஓ.எஸ். பார்த்தேன். என்ன சந்தேகம் கணேஷ்?"

"நிஜமாவே இறந்துபோயிருந்தாரா?"

"ஆமா, சந்தேகமே இல்லை."

கணேஷ் டெலிபோனை வைக்க, " என்ன பாஸ்? புதுசா கரடி விடறீங்க?"

"ஐ வாண்ட் டு பி ஷ்யூர். அவன் செய்த பரிசோதனைகள்ல எது வேணா நடக்கலாம்."

"சாப்டர் க்ளோஸ் பாஸ்! விடுங்க. பாம்பே போகணும் நாம. ஞாபகம் இருக்கா? நாரிமன் பாயிண்ட்ல அந்த ப்ராப்பர்டி கேஸை விசாரிக்கறதுக்கு."

"ஆமாடா. என்னிக்கு அது?"

"வெள்ளி. சுனில் கல்யாணத்துக்குக் காலைல போய்ட்டு உடனே ஏர்போர்ட் போக வேண்டி வரும்."

கல்யாணம் மிக எளிமையாக நடந்தது. ஓர் அம்மன் கோயிலில் மாலை மாற்றிக்கொண்டார்கள். சின்னதாகத் தாலி கட்டி ரங்கநாத், அம்மா, மாடி வீட்டுக்காரர், கணேஷ், வசந்த் மற்றும் மிருணாளினி மட்டும் ஆபீசிலிருந்து வந்திருந்தாள்.

வசந்த் அவளை அழைத்து, "மிருணா! உங்களுக்குத் தெரியவே தெரியாதா இப்படி பயங்கரமா பரிசோதனை செய்துட்டு இருந்தாங்கன்னு?"

"கொஞ்சம் கொஞ்சம்தான் ஸார் தெரியும். அந்த ரகசிய வார்டெல்லாம் தெரியவே தெரியாது. நிறைய சம்பளம் கொடுக்கறாங்களுக்காகச் சில பரிசோதனைகளுக்கு ஒப்புக்கிட்டோம்."

மாயா களைப்பாக இருந்தாலும் முகம் பிரகாசமாக இருந்தது. மெலிய ரோஜா நிறத்தில் ஸாரி அணிந்து தலையில் கனகாம்பரப் பூ வைத்திருந்தாள். சுனில் சூட் அணிந்திருந்தான். கணேஷ் அவர்களிடம் தான் கொண்டுவந்திருந்த பரிசுப் பொட்டலத்தைக் கொடுத்தான். "கங்ராட்ஸ். லாங் லைஃப்" என்றான்.

"குழந்தைகள் பிறந்தா சாரங்கபாணின்னு பேர் வெக்கலாம். இனி பயமே இல்லை."

"அய்யோ பயங்கரம் ஸார். அந்தப் பேரை மறக்கத்தான் விரும்பறேன்."

"சாரங்கபாணி செத்துட்டான். செத்தே போய்ட்டான்."

"இப்ப கூட நம்ப முடியலை ஸார், அவர் இல்லைன்னு" என்றாள் மிருணாளினி.

கல்யாணம் முடிந்த கையோடு வசந்தும் கணேஷ்-ம் பம்பாய் செல்ல ப்ளேன் ஏறுவதற்கு காமராஜ் விமான நிலையத்துக்குப் புறப்பட்டனர். ஒரு மாறுதலுக்கு ஏர் பஸ் சரியான சமயத்தில் வந்து வெயிட் லிஸ்ட் கூப்பிடும் தருவாயில் போய்ச் சேர்ந்து செக்யூரிட்டி வழியாக எஸ்கலேட்டரில் மேலே சென்று நடக்கும்போது,

"ஹலோ கணேஷ்" என்று குரல் கேட்டுத் திரும்பினால், டாக்டர் நரேந்திரநாத் புன்னகைத்தார்.

"ஹலோ டாக்டர்! பம்பாய் போறிங்களா?"

"ஆமா, அங்கிருந்து ராத்திரி ஏர் இன்டியா ஃப்ளைட்டைப் பிடிச்சு நியூயார்க் போறோம். இந்த இண்டியாவே வேண்டாம் இனிமேன்னு தீர்மானிச்சுட்டோம்.

"இட்ஸ் ஆல் ஓவர். தாங் காட்" என்றான் வசந்த்.

ஃபைபர் நாற்காலிகளில் உட்கார்ந்து அறிவிப்புக்குக் காத்திருக்கும் போது பேப்பர் கப்பில் இரண்டு காப்பி கொண்டுவந்து கணேஷின் அருகில் வந்து உட்கார்ந்தான். எதிர் வரிசையில் நரேந்திரநாத் உட்கார்ந்திருந்தார். அவர் அருகில் புதுசாக இன்னொருவர் உட்கார்ந்து தீவிரமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

அந்தப் புதியவருக்கு நாற்பது வயதிருக்கலாம். தலை கலைந்து கொஞ்சம் கொஞ்சம் முகத்தில் தெளிவான பருக்களுடன் வேகமான அங்க அசைவுகளுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"சாரங்கபாணி போனதும் புது பார்ட்னரைத் தேடிப் புடிச்சிருக்கார் போல! என்னவோ எல்லா ஆராய்ச்சியையும் அமெரிக்காலே போய் பண்ணிக்கட்டும்."

கணேஷ் "ஒண்ணு கவனிச்சியாடா" என்றான்.

"என்ன பாஸ்?"

'பயணிகள் விமானத்துக்குச் சென்று அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்' என்று அறிவிப்பு வர இருவரும் எழுந்தனர்.

"நரேந்திரநாத்துக்குப் பக்கத்தில் புதுசா இருக்காரே அவரை எங்க பாத்திருக்கம்?"

"எங்கயும் பார்த்ததில்லை பாஸ்."

"கிட்ட போகலாம் வா."

கிட்டே போனபோது, டாக்டர் நரேந்திரநாத் கணேஷை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.



"திஸ் இஸ் கணேஷ். ஃபேமஸ் லாயர்."

"தெரியும்" என்றார் அவர்.

"திஸ் இஸ் டாக்டர் சாரங்கபாணி" என்றார் அவர்.

"ரெண்டாம் சாரங்கபாணி" என்றார் அவர்.

"பாஸ்! இந்தக் குரலை எங்க நாம கேட்டிருக்கோம்?"

குரல் சாரங்கபாணியின் குரல்.